உன்னைக் கண்டதே வரமல்லவா...!

ஆர்.மகேஸ்வரி

உன்னைக் கண்டதே ஒரமல்லவா...!

1

பனியின் குளிர்ச்சியான தாலாட்டில்... அரவணைப்பில்... நீண்ட நேரம் தூங்கிவிட்டானோ என்னவோ... திடுக்கிட்டு எழுந்து... நீராடி... புத்தாடை புனைந்து... பூமிக்காதலியைக் காணப்போகும் சந்தோசத்தில் துள்ளல் நடைபோட்டான், இளம் ஆதவன்!

பனி மூடிய கம்பீரமான உயர்ந்த மலைகளும்... சிகரங்களும்... நெஞ்சை உறைய வைக்கும் நகரும் பனிக்கட்டிகளும்... பேரிரைச்சலுடன் பாய்ந்து ஓடிவரும் நதிகளும்... சலசலத்து ஓடும் சிற்றாறுகளும்... நீர் தேங்கிய

தளங்களும், குட்டைகளும்... வண்ணப் பூக்களைக் கொண்ட மைதானங்களும்... தேயிலைத் தோட்டங்களும்... காபித் தோட்டங்களும்... பைன், தேவதாரு, யூக்கலிப்டஸ் என்று கணக்கே இல்லாமல் உயர உயர மாய் வளர்ந்த மரங்களும் என 'ஹிமாச்சலப் பிரதேசம்' அந்தக் காலை வேளையில் மிக மிக ரம்யமாய், அழகாய்க் காட்சியளித்தது!

அழகே உருவான ஜிலு ஜிலு சிம்லா!

சுற்றிலும் பெரிய மதிற்சுவர் எழுப்பி... நடுவில் கம் பீரத்தோடும்... கலைநயத்தோடும்... அரண்மனையின் அத்தனை அம்சங்களும் பொருந்திய... ராஜதோரணை மில் காட்சியளித்தது, அந்த மிகப்பிரம்மாண்டமான பங்களா!

விஷ்வஜித் மாடிப்படிகளில் துள்ளிக் குதித்துக் கம்பீர மாய் இறங்கிக் கொண்டிருந்தான்.

விஷ்வஜித் இருபத்தொன்பது வயது நிரம்பிய இளம் பிசினஸ் மேன்!

இருபத்து மூன்று வயதில் தந்தையின் வர்த்தகத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டவன்!

அந்த வர்த்தகத்தைப் பன்மடங்காய்ப் பெருக்கி... வர்த்தக உலகில் செங்கோல் வீச்சும் இளவரசனாய் வலம் வருபவன்!

ஹிமாச்சலப் பிரதேசத்தின் நெம்பர் ஒன் பிசினஸ் மேன்!

இன்னும் கொஞ்ச நாட்களில் வடமாநிலங்களில் நெம்பர் ஒன் பிசினஸ் மேனாய்த் திகழ்வான், விஷ்வஜித்!

அதற்கான அனைத்து வர்த்தகம் தொடர்பான முயற்சி நடந்து கொண்டிருக்கிறது!

பலநூறு ஏக்கர்களில் தேயிலைத் தோட்டம்... காபித் தோட்டம்... ஆப்பிள் தோட்டம்... ஆரஞ்சுத் தோட்டம் என்று விரிந்து பரவிக் கிடக்கிறது!

அங்கு விளையும் தேயிலை, காபிக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஏகக் கிராக்கி!

காரணம்...?

அதன் சுவை, மணம், திடம், தரம்தான்!

ஆப்பிள், ஆரஞ்சுப் பழங்களைச் சாறு எடுத்து... பதப் படுத்தி... டின்களிலும்... அரை லிட்டர், ஒரு லிட்டர், இரண்டு லிட்டர் பேக்குகளிலும் வர்த்தகம் செய்யப்படு கிறது!

விஸ்வா ஆப்பிள் ஜூஸ், ஆரஞ்சு ஜூஸ், பெப்சி, கோக் கம்பெனிக்கு இணையாய் வெற்றிநடை போடுகிறது!

சிம்லாவின் பெரிய பைவ் ஸ்டார் ஹோட்டல்....

பெங்களூருவில் சிறிய ரக விமான சேவை...

பிலாஸ்பூரில் டூ வீலர் ஸ்பேர் பார்ட்ஸ் கம்பெனி...

உத்தரப்பிரதேசத்தில் சாப்ட்வேர் கம்பெனி...

ஹரியானா பஞ்சாப்பில் விஷ்வா ரிசார்ட்ஸ் என்று அவனுடைய வர்த்தகம் பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம்.

அடுத்ததாய்த் தற்சமயம் இமயமலை அடிவாரத்தில் ரிஷிகேஷுக்கும், கேதார்நாத்துக்கும் இடையே ஆயிரம் ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தைப் பலநூறு கோடிகள் கொடுத்து வாங்கிப் போட்டுள்ளான்.

அங்கே பெரிய அவனுடைய கனவு உலகத்தை நிர்ண யித்துக் கொண்டிருக்கிறான்! அங்கே பெரிய சுற்றுலாத் தலம் அமைப்பதுதான் அவனுடைய லட்சியமே!

கோடையில் மக்கள் குதூகலமாய் வந்து தங்கிக் கொண் டாடிவிட்டுச் செல்வதற்காய் ஒரு பெரிய நகரையே உரு வாக்கிக் கொண்டிருக்கிறான்!

அங்கே கங்கை நதி பாய்வது அவனுக்குப் பெரிய வசதி யாய்ப் போய்விட்டது!

ரிசார்ட்ஸ், ஹோட்டல், கார்டன், ஏரி, நீர்வீழ்ச்சி, சினிமா தியேட்டர் என்று உருவாகிக் கொண்டிருக்கிறது.

அதனால் காலில் சக்கரம் கட்டாத குறையாய் விஷ்வ ஜித் அலைந்து கொண்டிருக்கிறான்!

அவன் அதிகமாய்ப் பயணிப்பது ஹெலிகாப்டரில் தான். பங்களாவின் முன்புறம் ஹெலிகாப்டர் நிறுத்தும் தளம் உள்ளது.

விஷ்வஜித் ஆறடிக்கும் மேலான உயரமானவன். பரந்து விரிந்த மார்புடன், கட்டுடலுடன்... முட்டிக்குக் கீழே நீண்டு தொங்கும் மூங்கிலாய்க் கைகள் என்று ஆஜானுபாகுவாய் இருப்பான்.

வில்லாய் வளைந்த இரு புருவம்...

கூர்மையான பார்வை...

அடர்ந்த அழகான மீசை...

அழகான எந்தக் கெட்ட பழக்கமும் இல்லையென்று பறை சாற்றும் உதடுகள்...

மோவாயில் சிறிய குழி...

தலையில் கருகருவென அடர்ந்த கேசம்... என்று பேரழகனாய் இருப்பான்!

அந்தப் பேரழகனுக்கு இன்னும் மணமாகவில்லை!

பெரிய பெரிய பணக்காரர்கள்... அரசியல்வாதிகள்... சொந்த பந்தங்கள் நான், நீ என்று போட்டி போட்டுக் கொண்டு தன் பெண்ணைக் கொடுக்க முன் வருகின்றனர்.

அவன் மேல் ஆசைப்பட்டு... அவனை மயக்க முற் படும் பெண்கள் ஏராளம்!

ஆனால், அவன்தான் இன்னும் எவளிடமும் மயங்க வில்லை!

எத்தனையோ பெண்களை அவன் காண்கிறான். எந்தப் பெண்ணுமே அவனைச் சலனப்படுத்தவில்லை! சஞ்சலப்படுத்தவில்லை!

மோகம் கொள்ள வைக்கவில்லை!

அவன் உள்ளத்தைக் கவரப் போகும் அந்தக் கள்ளி யாரோ?

அவள் எங்கிருக்கிறாளோ...?

என்ன செய்து கொண்டிருக்கிறாளோ...?

அந்தப் பேரழகனைக் கவர ஒரு பேரழகி பிறந்திருக் கிறாளோ...? அல்லது இல்லையோ...?

அவனுடைய தாய் சிவரஞ்சனிக்கு அவன் திருமண விஷயத்தில் பெரும் கவலை!

தன் மகன் படிப்பில், வர்த்தகத்தில் கெட்டிக்காரனாய் இருக்கிறான்! வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப் பதில் மட்டும் கெட்டிக்காரனாய் இல்லாமல், காட்டும் பெண்களையெல்லாம்... முகம் சுழித்து... 'எனக்குப் பிடிக்கவில்லையம்மா!' என்று கூறுவதே அவருக்குப் பெரும் துன்பமாய் இருக்கிறது.

அவனுடைய தந்தை ரவிவர்மா, தாய் சிவரஞ்சனி இருவரும் காதல் மணம் புரிந்தவர்கள்!

ரவிவர்மா ஹிமாச்சலப் பிரதேசத்தில் வாழ்ந்த ஒரு சிற்றரசன் பரம்பரையில், வம்சத்தில் பிறந்தவர்.

ரவிவர்மாவின் தந்தை சிம்லாவிலேயே பெரும் கோடீஸ்வரர்!

அவருக்குத் தமிழ்நாடு, தமிழ்நாட்டின் பண்பாடு, ஒழுக்கம், கலாச்சாரம், கலை, இலக்கியம், கல்வி என்று அத்தனையும் பிடிக்கும். தமிழ்மொழி மீது பெரும் மோகம் என்றுகூடச் சொல்லலாம்!

அதனால் ரவிவர்மாவை ஐந்தாம் வகுப்புக்கு மேல் சென்னையில் உள்ள தரமான பள்ளியில் சேர்த்துப் படிக்க வைத்தார்!

அடுத்ததாய்க் கல்லூரிப் படிப்பையும் அங்கேயே ரவிவர்மா தொடர்ந்தார்.

கல்லூரியில் சிவரஞ்சனி என்ற அழகி அவனைப் பெரிதும் கவர்ந்து விட்டாள்!

சிவரஞ்சனிக்கும் ரவிவர்மாவைப் பிடித்துவிட இருவரிடையே காதல் முளைவிட்டு... தளிர்விட்டு... மொட்டுவிட்டு... மலர்ந்து மணம் வீசியது!

ஒரு வட இந்தியன், தென்னிந்தியப் பெண்ணை நேசிக்க... ரவிவர்மாவின் பெற்றோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ரவிவர்மா தனது கொண்ட கொள்கையில் பிடிவாதமாய் இருக்க... பெற்றோர்களால் ஒன்றுமே செய்ய இயலவில்லை!

தவமாய்த் தவமிருந்து பெற்ற மகனின் விருப்பத்திற்கே பெரியவர்கள் பணிந்துவிட...

ரவிவர்மா - சிவரஞ்சனியின் திருமணம் கோலாகலமாய் நடந்தது!

இருவரின் சந்தோஷமான வாழ்க்கையில் மலர்ந்தவன் தான், விஷ்வஜித்!

விஷ்வஜித்தும் சென்னையில்... பாட்டி வீட்டில் தங்கிப் பள்ளியிறுதிவரை படித்தான்.

வர்த்தகம் சம்பந்தமான படிப்புப் படிக்க வெளிநாடு சென்றான்.

அருமையாகப் படித்துப் பட்டம் பெற்றான்!

அவன் படிப்பு முடிந்து சிம்லாவுக்கு வந்த சமயம்... தந்தை ரவிவர்மாவின் உடல் நிலை சீர் கெட்டது!

தந்தையின் வர்த்தகத்தை ஏற்று நடத்த வேண்டிய கட்டாயம், சூழ்நிலை ஏற்பட... அந்தச் சிறு வயதிலேயே இன்முகத்துடன் அத்தனை பிசினஸ்ஸையும் ஏற்று நடத்தினான்.

அவனுடைய பி.ஏ. அவனுடன் சென்னையில் சிறு வயது முதற்கொண்டு படித்த அஸ்வின்தான்!

அஸ்வின் தற்சமயம் ஊரில் இல்லை!

அவன் மனைவி தாரிகாவிற்கு இது ஏழாம் மாதம்.

வளைகாப்பு வைபவத்திற்காக இருவரும் சென்னைக்குச் சென்றுள்ளார்கள்!

அஸ்வின் தாரிகாவை நேசித்தான்!

தாரிகாவின் வீட்டில் அவர்கள் காதலுக்குப் பெரும் எதிர்ப்பு!

காரணம்...?

அஸ்வின் வேறு ஜாதி!

அடுத்ததாய்ச் சரியான வேலையில்லை என்ற கார
ணத்தைக் காட்டி மறுத்தனர், தாரிகாவின் பெற்றோர்!

அஸ்வின் அந்த சமயம் சிம்லாவில் உள்ள நண்பன்
விஷ்வஜித்துடன் தொடர்பு கொண்டான்!

தனது நேசத்திற்கு ஏற்படும் தடைகளைக் கூறிக்
கதறியழுதான்!

உடனே விஷ்வா சென்னைக்குப் புறப்பட்டு வந்தான்!

தாரிகாவின் தகப்பனாரிடம் அஸ்வினின் ஒழுக்கம்,
குணம், மனம் பற்றிப் பேசினான்!

அஸ்வினுக்குத் தன்னுடைய கம்பெனியிலேயே நல்ல
வேலை போட்டு... நல்ல சம்பளம் கொடுப்பதாய் வாக்குக்
கொடுத்தான்.

விஷ்வஜித்தின் விளக்கம், தாரிகாவின் பெற்றோர்
களுக்குப் பிடித்துவிட்டது!

உடனே திருமணத்திற்குச் சம்மதம் தெரிவித்தனர்.

திருமணம் முடித்த கையோடு தாரிகா - அஸ்வின்
ஜோடி சிம்லாவிற்கு வந்துவிட்டது!

விஷ்வாவிடம் அஸ்வின் மூன்று வருடங்களாய்
வேலை பார்க்கிறான்!

அஸ்வின் வந்த பின்னர் விஷ்வாவின் வேலைப்
பளுவும் கொஞ்சம் குறைந்தது!

அஸ்வின் ஊழியனாய் வேலை செய்யாமல் உற்ற
நண்பனாய்... சகோதரனாய் அவனோடு கை கோர்த்து
வேலை செய்தான்!

விஷ்வாவும் மளமளவென இன்னும் முன்னேறினான்.

சிவரஞ்சனி தாரிகாவைத் தன் மகளைப் போலப்
பாவித்து அன்பு காட்டினார்.

'குழந்தை இப்போது வேண்டாம்!' என்று கட்டுப்பாட்
டுடன் இருந்த அஸ்வின் - தாரிகா ஜோடிக்கு சிவரஞ்
சனி நல்ல புத்திமதிகளைக் கூறினார்.

சிவரஞ்சனியின் புத்திமதியை ஏற்றுக் கட்டுப்பாடு
களை விலக்க... உடனே தாரிகா கர்ப்பமுற்றாள்!

சிவரஞ்சனி தாரிகாவைக் கீழே விடாமல் தாங்கு தாங்
கென்று தாங்கினார்!

வேறு பெண்ணையே இந்த அளவு பார்த்துக் கொள்
ளும் சிவரஞ்சனி அம்மாள்... தன் மருமகளை எப்படிப்
பார்த்துக் கொள்வார்...!

சிவரஞ்சனிக்கு வரப்போகும் மருமகள் மேல் கொள்ளை
ஆசை!

தன் மகன் ஜாடையில் பிறக்கப்போகும் பேரப்பிள்ளை
யின் மேல் இப்போதே அளவு கடந்த பிரியம் வைத்திருக்
கிறார்.

ரவிவர்மாவின் சொந்தத்திலும்... சிவரஞ்சனியின்
சொந்தத்திலும்... எத்தனையோ அழகுப் பெண்கள் கையில்
மாலையை வைத்துக் கொண்டு காத்திருக்கிறார்கள்.

ஆனால், அவர்களில் எந்தப் பெண்ணையும் விஷ்வ
ஜித்துக்குப் பிடிக்கவில்லை!

அவன் மனதில் தனது வருங்கால மனைவியைப்
பற்றிப் பெரிய கனவு உண்டு! கற்பனையுண்டு!

அவனுடைய கற்பனைத் தேவதையின் சிறு ஜாடை
கூட இல்லை, அவன் பார்க்கும் பெண்களில்!

பார்த்த நொடியே...
பார்த்த கணமே...
பார்த்த நிமிடமே...
'இவள் தான்... இவள்தான்... உன் தேவதை!' என்று அவனுடைய இதயம் எவரையுமே கைகாட்டவில்லை!
அவனுடைய கற்பனைத் தேவதைப் பெண்களிலே போழகி...! எழிலழகி...!
கொல்லுகின்ற விழியழகி...!
இளந்தளிர் மேனியழகி...!
அவள் மேனியெங்கும் நாணம் கொட்டிக் கிடக்கும்..!
அவள் முகம் முழுக்கப் புன்னகை பரவிக் கிடக்கும்!
இதயம் முழுக்க அன்பு நிரம்பி வழியும்...!
சமீபமாய்...

விஷ்வஜித் நாள் முழுக்க உழைத்து... களைத்து... விழி மூடும் வேளையில்... அந்த அழகு தேவதை... அவன் கனவில் வந்து... அவனை மடியில் போட்டு... தட்டித் தாலாட்டுவாள்...!

இப்படி ஒரு கனவும்... கனவுத் தேவதையும்... ஏன் அவன் கனவுகளில் கால் பதிக்கிறாள் என்று யோசிப்பான்!

ஆனால், அந்தக் கனவு அவனுக்கு மிகமிகப் பிடித்திருக்கிறது!

அதனால் விழித்திருக்கும் வேளையை விட, விழி மூடி உறங்கும் வேளையே ரொம்பப் பிடிக்கும்!

கற்பனைத் தேவதையோடு... கனவுகளில் சஞ்சரித்து... விஷ்வஜித் வாழ்ந்து கொண்டிருக்கிறான்!

அஸ்வின் - தாரிகா சென்னை சென்றுள்ளனர்.

அஸ்வின் தனது மனைவி தாரிகாவின் வளைகாப்பு விழாவிற்குக் கட்டாயம் வரவேண்டும் என்று விஷ்வஜித்திடம் கூறிவிட்டுச் சென்றிருக்கிறான்.

ஆனால், அவன் போக முடியாததுபோல, ஒவ்வொரு வேலையாய் வந்து கொண்டிருக்கிறது.

தாய் சிவரஞ்சனியைச் சென்னைக்கு அனுப்பி விட்டு... விஷ்வா வேலையைப் பார்க்கலாம் என்றிருக்கிறான்.

அஸ்வின் வந்த பிறகு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம் என்ற எண்ணத்துடன் இருக்கிறான், விஷ்வஜித்!

விஷ்வஜித் டைனிங் டேபிளுக்கு வந்து அமர... சிவரஞ்சனி மகனுக்குப் புன்முறுவலுடன் இட்லி, பொங்கல் வைத்து... சட்னி, சாம்பார் ஊற்றினார்.

அங்கே காலை, மதியம் தமிழ்நாட்டு உணவு வகைகள்தான் சமைக்கப்படும். இரவு மட்டும்தான் வடநாட்டு உணவான சப்பாத்தி ரொட்டி என்று சமைக்கப்படும்.

விஷ்வா இட்லியை விண்டு சாப்பிடத் தொடங்க...

''விஷ்வா... நாளைக்கு தாரிகா வளைகாப்பு விழாவுக்குச் சென்னை போறோம்தானே...?''

சிவரஞ்சனி கேட்க...

''போறோம் இல்ல, போறீங்க...!''

விஷ்வஜித் அழுத்தம் திருத்தமாய்ச் சொன்னான்.

''என்ன சொல்றே, விஷ்வா...?''

''நீங்க போயிட்டு வாங்கம்மா!'' என்று விஷ்வா தாயிடம் கூற...

"ஏன்...? நீ இல்லாமல் எப்படி விஷ்வா...?" என்று சிவரஞ்சனி கேட்க.

"நாளைக்கு ஒரு முக்கியமான பிஸினஸ் டீல் இருக்கும்மா! ஆஸ்திரேலியா கம்பெனியோட ஒரு ஒப்பந்தம் போடணும்மா!"

"அதெல்லாம் பிறகு பார்க்கலாம்!"

"ரொம்ப கஷ்டம்மா!"

"அங்கே போன் செய்து... அந்த ஒப்பந்தத்தைத் தள்ளி வைக்கக் கூடாதா...?"

"அது பெரிய கம்பெனிம்மா! நம்ம டூ வீலர் பார்ட்ஸ்க்கு அங்கே நல்ல வரவேற்பாம்! அத்தனையும் நாங்களே அள்ளிட்டுப் போயிடறோம்ன்னு சொல்றான்! நாளைக்கு வந்து, கையெழுத்துப் போட்டு, ஒப்பந்தம் செய்துக்கலாம்ன்னு சொல்றான். நான் என்னம்மா செய்யட்டும்?"

"அஸ்வின் கோபிச்சிக்குவான்!"

"அஸ்வினுக்கு போன் செய்து தகவல் சொல்லிடறேன்!"

"இது சரியில்லே, விஷ்வா...!" என்று சிவரஞ்சனி கோபமாய்ச் சொல்ல...

"அம்மா... அவன் என்னைப் புரிந்து கொள்வான்!"

"அவன் ஒரு ஊழியன்னா கோபிச்சிக்க மாட்டான். அஸ்வின் உன்னிடம் ஊழியன் போலவா வேலை செய்யறான்? நட்போட... சகோதரத்துவ உணர்வோட... அர்ப்பணிப்பு உணர்வோட இல்லையா வேலை செய்யறான்! உன் அசுர வளர்ச்சியில் அவனுக்கும் முக்கியப் பங்குண்டு. தெரியுமா?"

சிவரஞ்சனி சீறலோடு கேட்க...

"சத்தியமா தெரியும்மா! நேற்றுதான் திடீர்ன்னு போன் வந்தது. ஆஸ்திரேலியாவுல இருந்து. மறுக்க முடியலேம்மா!"

விஷ்வஜித் சோகமாய்ச் சொல்ல...

"நீ திரும்ப போன் செய்து ஆஸ்திரேலியாவுக்கு விஷயத்தைச் சொன்னால் அந்த கம்பெனிக்காரன் கேட்பானா...? மாட்டானா...?"

சிவரஞ்சனி காட்டமாய்க் கேட்டார்.

"கேட்பான்ம்மா!"

"அப்போ நாளைய பிசினஸ்ஸை... அடுத்த நாள் தள்ளிப்போடு! என்னைக் கோபப்படுத்தாதே, விஷ்வா!"

அம்மாவின் வேகத்தைக் கண்டு, கோபத்தைக் கண்டு விஷ்வஜித் இறங்கி வந்தான்.

"சரி, செய்யறேம்மா!"

"நாளைக்குப் போய் உடனே திரும்பறதை விட... இன்று மாலையே புறப்படலாம்! நாம் ஒரு நாள் முன்ன வந்ததை எண்ணி தாரிகா மகிழ்ந்து போவாள்!"

"உங்களுக்கு வேற வேலையில்லை! நான் அப்படியாம்மா...? நீங்க வேணா இன்று மாலையே கிளம்புங்க! நான் நாளைக் காலை பதினோரு மணிக்கு வரேன்! பங்ஷன் பன்னிரண்டு மணிக்குதானே? நான் ஷார்ப்பா வந்துடறேன்!"

"நீ பேசறது சரியா, விஷ்வா?"

"துணைக்கு அப்பாவைக் கூட்டிட்டுப் போங்க!"

"அப்பாவோட உடல்நிலை அதுக்கு ஒத்துக்குமா? அப்பாவுக்கு ரெண்டாவது ஹார்ட் ஆபரேஷன் செய்து ஓய்வுல இருக்கார். அவரை அவ்வளவு தூரம் இழுத் தடிப்பது நல்லதா, விஷ்வா...?"

சிவரஞ்சனி கண்ணீரோடு... விஷ்வஜித்தைப் பார்த்துக் கேட்க... அவன் மனம் சட்டென்று நெகிழ்ந்தது.

"சரி... சரி... சின்னப் பிள்ளை போல என்ன இது அழுகை...? இன்று மாலை நீயும், நானும் கிளம்பணும், அவ்வளவுதானே...?"

"ம்..."

"சரி. கிளம்பிடலாம். சரியா? ரெடியா இருங்கம்மா!"

சிவரஞ்சனி கண்ணீரோடு புன்னகைக்க...

சட்டென்று விஷ்வஜித் தாயை இழுத்து, அணைத்து... கண்ணீர் வழியும் கன்னங்களில் அழுந்த முத்தமிட்டு விட்டு...

"ஆஹா... என்ன சுவை! இந்தச் சுவைக்கு உலகத்தில் ஈடானது எதுவுமே இல்லைம்மா!" என்று ரசித்துச் சொல்ல...

"இப்போ இந்த தாயை முத்தமிட்டால் இனிக்கும்தான்! உனக்குத் திருமணமாகி... உன்னுடையவள் வந்த பின்னர்... என்னை முத்தமிட்டால் எப்படி இருக்கும், தெரியுமா?"

"எப்படி இருக்கும்?"

விஷ்வா வில்லாய் வளைந்த புருவத்தை நெரித்துக் கேட்க...

"பயங்கரக் கசப்பாய் இருக்கும்!"

சிவரஞ்சனி சொல்லிவிட்டுச் சிரிக்க...

"ஏய் ஸ்வீட்டி... என்ன பேசறே...?" அவரின் முகத்தை இரு கைகளிலும் தாங்கிக் கேட்டான்.

"சரியாத்தானே பேசறேன், விஷ்வா!"

"ம்கூம்! தப்பா பேசறீங்கம்மா! என் தாய் முதல்ல! அப்புறம்தான் எல்லாமே! சரியா...?"

என்று குறும்பாய்க் கண் சிமிட்டிய விஷ்வஜித்... மீண்டும் தாயை அணைத்து, முத்தமிட்டு விட்டு, விலகிச் சென்றான்.

மகனின் மிதமிஞ்சிய பாசத்தைக் கண்டு அந்தத் தாயின் நெஞ்சு விம்மியது!

2

மாலை...!

காற்றோடு... பனியும், குளிரும் கை கோர்த்து... கடந்து செல்பவர்களின் மேனியைத் தொட்டு, தழுவி... சில்மிஷம் செய்து கடந்து சென்றது!

விஷ்வஜித் பணிமுடித்து... பங்களாவிற்குள் நுழைந்தான்!

தாயைத் தேடினான்!

ஹாலில் இல்லாமல் போக... மாடிப்படி ஏறி... சிவரஞ்சனியின் அறைக்கு வந்தான்.

சிவரஞ்சனியோ அவருடைய அறையில் பெரிய கம்பளிப் போர்வையை இழுத்துப் போர்த்துக் கொண்டு படுத்திருந்தார்

பக்கத்தில் கவலையோடு ரவிவர்மா அமர்ந்திருந்தார். படுக்கையில் தாயைக் கண்டு பதறிப் போனான், விஷ்வஜித்.

"என்னப்பா? ஏன்? அம்மாவுக்கு என்ன?"

"மதியத்திலிருந்து திடீர்ன்னு பீவர்ப்பா!"

ரவிவர்மா கவலையோடு கூறினார்.

"ஏன் எனக்குச் சொல்லல?"

"சாதாரண சுரத்திற்கு உன்னைக் கலவரப்படுத்த வேண்டாம்ன்னு சிவரஞ்சனி என்னிடம் கேட்டுட்டாப்பா! அதான் சொல்லலே, விஷ்வா!"

"என்னப்பா நீங்க? ச்சே! சரியில்லே நீங்க!" என்று சீறிய விஷ்வஜித்...

"டாக்டர்க்கு போன் செய்தீங்களா? டாக்டர் வந்து ட்ரீட்மெண்ட் கொடுத்தாரா?"

"உடனே போன் செய்து வரவழைச்சேன், விஷ்வா! டாக்டர் வந்து ஊசி போட்டு, மருந்து மாத்திரை கொடுத்து இருக்கார்! இப்போ பரவாயில்லை! மருந்து உபயத்தால் அசந்து தூங்கறா!"

விஷ்வஜித் தாயின் அருகில் கவலையோடு அமர்ந்தான்!

நெற்றி, கன்னம், கழுத்து என்று தொட்டுப் பார்த்தான்!

தந்தை ரவிவர்மா சொன்னதுபோலக் காய்ச்சல் குறைந்திருந்தது!

விஷ்வஜித்தின் மனம் லேசாய்ச் சாந்தமடைந்தது!

மகனின் பாசமான தொடுகையால் சிவரஞ்சனிக்கு விழிப்பு வந்தது.

கண் திறந்து பார்க்க... மகன் கவலையோடு அமர்ந்திருந்தது கண்டு...

"இப்போ பரவாயில்லை, விஷ்வா! இது வெறும் பீவர்தான்! இதுக்கு ஏன் கவலைப்படறே?"

சிவரஞ்சனி கேட்கவும்...

"உங்களுக்கு ஒண்ணுன்னால் எனக்குத் தாங்கலேம்மா!"

கண்களில் கண்ணீர் பளபளக்க விஷ்வஜித் கூற... தாய் நெகிழ்ந்து அவன் கையைப் பாசமாய்ப் பற்றிக் கொண்டார்.

"சரி. நீ குளிச்சிட்டு ரெடியாகு, விஷ்வா! சென்னைக்குக் கிளம்பலாம்!"

சிவரஞ்சனி கூறவும்...

"அதெல்லாம் வேண்டாம்! உங்க உடம்பைப் பத்திரமா பார்த்துக்கங்க! நாளை நான் மட்டும் போயிட்டு வந்துடறேன்!"

"அதெல்லாம் சரி வராது, விஷ்வா! அஸ்வின், தாரிகா இரண்டு பேரும் ஏமாந்துடுவாங்க, தெரியுமா?"

"உடம்பு சரியில்லாத உங்களை அவ்வளவு தூரம் இழுத்தடிக்க நான் விரும்பலேம்மா!"

"நீ பேசறது சரியில்லே, விஷ்வா!"

"வேண்டும்ன்னால் தாரிகா இங்கே வந்த பிறகு... அமர்க்களமா உங்க முன்னாடி ஒரு வளைகாப்பு விழாவை நடத்திடலாம். என்ன?"

"இல்ல விஷ்வா... நாம போகலாம்!"

"சும்மா இருங்கம்மா! சொன்னதைக் கேளுங்க!" என்று அதட்டினான்.

"சரி... நீ சொல்றாப்போலவே கேட்கறேன்! ஆனால் ஒரு நிபந்தனை, விஷ்வா!"

"என்னம்மா?"

"நீ இப்போ கிளம்பணும்!"

"அங்கே போய் நைட் என்ன செய்யப்போறேன்?"

"விஷ்வா... எங்க ஊர்ல போய்த் தூங்கிப் பார்! நிம்மதியா தூக்கம் வரும்!"

"இன்னும் உங்க ஊர் பற்றிய பெருமை பிடிபடலே, இல்லையா?"

விஷ்வஜித் நக்கலாய்க் கூறிச் சிரிக்கவும்...

"எங்க ஊர்போல காலநிலை, தட்ப, வெப்பம் இங்கே வருமா...? எந்த நேரம் பாரு ஸ்வெட்டர், குல்லா போர்வை இல்லாமல் இருக்க முடியுதா? இங்கே பாழாய்ப்போன குளிரை இல்ல கட்டிட்டு அழறோம்!"

சிவரஞ்சனி குறும்போடு பழித்துக்காட்ட...

"அங்கே பாழாய்ப்போன வெயிலை இல்ல கட்டிட்டு அலையறாங்க, மக்கள்!"

விஷ்வஜித்தும் தாயைப்போலக் குறும்போடு பழித்துக் காட்டிச் சிரித்தான்.

"அதெல்லாம் இல்லை. ஏப்ரல், மே, ஜூன் இந்த மூன்று மாதம்தான் வெப்பம் சுழன்று வீசும்! மற்ற மாதத்தில் சென்னையில வாழறதுக்கு அருமையா இருக்கும்! தெரியுமா?"

"அப்படி ஒரு அருமையான ஊரிலேயே ஒரு மாப்பிள்ளையைத் தேடிட்டு இருக்காளாம் இவ..."

விஷ்வஜித் நக்கலாய்க் கேட்க...

"ஏய் விஷ்வா... வாய்க் கொழுப்பு அதிகம்தான் உனக்கு!" சிவரஞ்சனி சுட்டுவிரல் நீட்டிச் சொல்ல...

"எதுக்கு சிம்லா மாப்பிள்ளையைச் சுத்திச் சுத்தி வந்து வளைச்சிப் போடணும்?"

விஷ்வா மிதமிஞ்சிய குறும்போடு கேட்க...

"படவா... இரு, உன்னை என்ன செய்யறேன் பார்!"

சிவரஞ்சனி போர்வையை உதறி எழுந்து உட்கார...

விஷ்வஜித் அம்மாவுக்குப் பயந்தவன் போல நடித்து அறைக்குள் ஓட...

சிவரஞ்சனி அவனைத் துரத்த...

அந்தக் காட்சி ரம்யமாய் இருக்க... ரவிவர்மா ரசித்துப் பார்த்தார்.

விஷ்வஜித்தைத் துரத்திப் பிடித்த சிவரஞ்சனி...

"விளையாடினது போதும், விஷ்வா! மூச்சு வாங்குது, விஷ்வா! நீ போய்க் குளிச்சிட்டு வா, விஷ்வா!"

"சரிம்மா..." என்றான்.

"நான் உனக்கு நாளைக்கு உடுத்திக்க ட்ரஸ் எடுத்துப் பெட்டியில அடுக்கறேன்!"

"சிரமப்படாதீங்கம்மா! நான் பார்த்துக்கிறேன்!"

"இதில் என்ன சிரமம்? நீ போய்க் குளிச்சிட்டு வா! லைட்டா டிபன் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பு!"

"சரிம்மா!"

"நம்ம விமானம் வந்துடிச்சா?"

"ம்..."

"அப்போ போய் நீ குளிச்சிட்டு வா, விஷ்வா!" சிவரஞ்சனி கூற...

விஷ்வஜித் குளியலறை நோக்கி நடந்தான்.

மதியமே அவனுடைய விஷ்வா ஏர்லைன்ஸுக்கு போன் செய்ய... சிறிய ரக விமானம் பெங்களூருவிலிருந்து சிம்லாவிற்கு வந்து காத்திருக்கிறது.

காரில் விமான நிலையம் வரை போய்... விமானம் ஏறி விட்டான்.

சென்னையில் அந்தச் சிறிய மாடி வீட்டில் உறவினர்கள் உண்டு முடித்து... அங்கிருந்த அறைகளில் உறங்கி விட்டனர்.

அஸ்வின், தாரிகா நல்ல நித்திரையில் இருந்தனர்.

விஷ்வஜித் அவர்களுக்கு இன்ப அதிர்ச்சி தருவதற்காக... சொல்லாமல், கொள்ளாமல் வந்து விமானத்திலிருந்து இறங்கி... விமான நிலையத்திலிருந்து காரில் பயணப்பட்டு... தாரிகாவின் வீட்டை அடைந்தான்.

சிறிய பெட்டியோடு போய் காலிங் பெல்லை அழுத்தினான்.

சற்று நேரத்தில் ஹாலில் விளக்கெரிந்தது!

கதவு திறந்தது!

அடுத்த நிமிடம் அவனை இன்பத்தில் ஆழ்த்தியது!

திறந்த கதவின் உட்புறம்... வானத்திலிருந்து இறங்கி வந்த தேவதையாய்... அவனுடைய கனவுத் தேவதை... இளந்தளிர் எழில் மேனியாள்... வேல் போலும் கூர் விழியாள்... கற்பனை நாயகி... முன்னெற்றியில் சுருள்

சுருளாய்ப் பூ முகத்தில் முடிக்கற்றைகள் புரண்டு அழகு செய்ய... நிலவாய் ஜொலித்த முகத்துடன் பேரம்சமாய் நின்றிருக்க...

விஷ்வஜித் விழிகளை விரித்து... ஆச்சரியத்துடன் உள்வாங்கிக் கொண்டு நிற்க...

"ஹலோ... யார் சார் நீங்க...?"

அவள் குரல் குயிலின் குரலைவிட இனிமையாய் இதயத்தில் இறங்கியது!

அவன் பதில் சொல்லாமல்... அவள் கண்ணோடு கண் நோக்கிக் கொண்டிருந்தான்.

"நாளைய பங்ஷனுக்கு வந்திருக்கீங்களா...?"

அவள் சலிப்புடன் கேட்டாள்.

அவனோ... அவள் முக அழகை ரசித்துப் பருகிக் கொண்டு நிற்க...

"பெரியப்பாவுக்குத் தெரிஞ்சவங்களா, நீங்க?"

"....."

"அல்லது பெரியம்மா வழி சொந்தமா...?"

"....."

"அஸ்வின் அத்தானுக்குத் தெரிஞ்சவங்களா...? இல்ல, எங்க தாரிகா அக்காவுக்குத் தெரிஞ்சவங்களா...?"

அவனிடமிருந்து எந்தப் பதிலும் வராமல் போக... அவன் முன்பு விரலைச் சொடுக்கிக் கேட்க...

"ம்... என்ன கேட்டீங்க...?" என்று அவன் சின்னச் சிரிப்போடு கேட்க...

"சரியாப் போச்சு போங்க! என்ன, தூக்கக் கலக்கத்துல கிளம்பி வந்தீங்களா, என்ன? ம்?"

சிப்பி இதழ் பிரித்து... அழகாய்க் கேட்கும் அவளையே விழி யெடுக்காமல் பார்த்துக் கொண்டிருக்க...

''அஸ்வின் அத்தானுக்குத் தெரிஞ்சவங்களா, நீங்க?''

''ம்...''

''அவருக்கு நீங்க?''

''நண்பன்!''

''அப்படியா...?''

''அவனுடைய முதலாளியும்கூட!''

விஷ்வஜித் கூறிவிட்டு அவள் முகத்தைப் பார்க்க... அந்த அழகிய முகம் கலவரத்தில் லேசாய்ச் சிவந்தது.

''ஓ... ஸாரி... ஸாரி சார்... என்னை மன்னிக்க வேண்டுகிறேன், சார்!''

''இட்ஸ் ஓ.கே.ம்மா!''

''உள்ள வாங்க, சார்! உட்காருங்க, சார்! அத்தானைக் கூட்டிட்டு வரேன்!'' என்றவள் உள்ளே ஓடினாள்.

அடுத்த நிமிடம் அஸ்வின், தாரிகா பெரிய வயிற்றைத் தூக்கிக் கொண்டும்...

தாரிகாவின் தந்தை சீனுவாசன், தாய் சுமத்திரா என்று ஓடி வந்தனர்.

அவனை மரியாதையுடன் வரவேற்றனர்!

வீடு பரபரப்பானது!

''ஏய் விஷ்வா... என்னடா இப்படி ஒரு இனிப்பான செய்தியைத் தரே? விஷ்வா... நீ... நீதானா...? இது ஒண்ணும் பொய்யில்லையே? நிஜம்தானே...?''

என்ற அஸ்வின் ஓடிவந்து விஷ்வஜித்தை அணைத்துக் கொண்டான்.

''ஏய் தாரிகா... நீ உன் வயிற்றில் வளரும் குட்டிக் குழந்தை... இரண்டு பேரும் நலமா...?''

விஷ்வஜித் கேட்க... தாரிகா வெட்கத்துடன் தலை குனிந்தாள். பின்...

''ம்...'' என்று லேசாய்த் தலையாட்டி வைத்தாள்.

''சாப்பிட்டையா, விஷ்வா...?''

அஸ்வின் பாசத்துடன் கேட்டான்.

''இன்னும் இல்லடா, பயங்கரப் பசிடா!''

''ஐயோ... நீ பசி தாங்க மாட்டீயேடா, விஷ்வா.'' அஸ்வின் சொல்ல...

''சாப்பிட ஏதாவது கொடுங்கம்மா!'' என்று சுமத்திராவைப் பார்த்து விஷ்வஜித் பரிதாபமாய்க் கேட்க...

''ஐயோ! எல்லாம் தீர்ந்து போச்சே! தோசை மாவு இருக்கு! இருங்க. சட்னி, சாம்பார்ன்னு நொடியில செய்துடறேன்!''

சுமத்திரா பரபரப்பாகினாள்.

''அம்மா... சட்னி, சாம்பார்ன்னு செய்யறதுக்குள்ளே பெருங்குடல் சிறுகுடலைச் சாப்பிட்டு விடும். அதனால் பொடி இருந்தா கொண்டுட்டு வாங்க. தோசைக்குத் தொட்டுக்கறேன்!''

''அவன் பேச்சைக் கேட்க வேண்டாம், அத்தை! ஒரு சட்னியாவது செய்து எடுத்துட்டு வாங்க!''

''ஜோஷிதா... போய்த் தோசை செய்து எடுத்துட்டு வாம்மா! எங்க ஜோஷிதா அவ்வளவு பிரமாதமா தோசை சுடுவா, தம்பி!''

சுமத்திரா பெருமையாய் ஜோஷிதாவைச் சொல்ல... மறு வார்த்தை பேசாமல் அந்த தேவதை இன்முகத்தோடு சென்றதைக் கண்களால் ஆராய்ந்தான், விஷ்வஜித்.

பரஸ்பர நலம் விசாரித்தார்கள்!

தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள், பெரியவர்கள்.

சிவாஞ்சனி அம்மாள் வராததற்காக வருத்தம் தெரிவித்தான், அஸ்வின்.

விஷ்வஜித் தாயின் உடல்நிலை சீர்கெட்டதைக் கூற... அஸ்வின், தாரிகா சமாதானமானார்கள்.

''தாரிகா... நீ போய்ப் படும்மா!''

''இருக்கட்டுங்க!''

''சொன்னாக் கேள்! நீ போய்ப் படும்மா! நேரம் கெட்ட நேரத்துல விழிச்சிருப்பது உனக்கும், உன் வயிற்றில் இருக்கும் குட்டிக் குழந்தைக்கும் ஆகாது. சார், அம்மா, நீங்களும் போய்ப் படுங்க! காலையில நிறைய வேலையிருக்கும் இல்லையா? நான் தப்பா எடுத்துக்க மாட்டேன்!''

தயங்கி நின்ற தாரிகாவைப் பார்த்து...

''தாரு... சொன்னால் கேளும்மா! போ...'' என்று விஷ்வஜித் அதட்ட... மூவரும் சென்றார்கள்.

''யார்டா இந்த ஜோஷிதா...?''

விஷ்வஜித் அஸ்வினைப் பார்த்து ஆர்வமாய்க் கேட்டான்.

''நானே இந்த பங்ஷன்லதான் முதன் முதலா பார்க்கறேன், விஷ்வா!''

''ஓ...''

''நம்ம தாருவுக்குத் தூரத்து உறவாம்! தங்கை முறையாம்! ஜோஷிதாவுக்கு ஒரு பாட்டியைத் தவிர முக்கியமான சொந்தம்ன்னு சொல்லிக்கிற அளவு யாரும் இல்லையாம்!''

''என்ன சொல்றே, அஸ்வின்?''

''ம்... பெற்றோர்கள் இவளுடைய சிறு வயதிலேயே ஆக்ஸிடெண்ட்ல இறந்துட்டாங்களாம்!''

''பாவமே...''

''பெற்றோர் இல்லாமல் அநாதையான வாழ்க்கை பெரும் வேதனை இல்லையா, விஷ்வா?''

''ஆமாம்டா, அஸ்வின்!''

விஷ்வஜித் ஜோஷிதாவின் நிலையை எண்ணி வருந்தினான்.

'ஜோஷிதா... ஜோஷி... ஜோ...'

'எவ்வளவு இனிமையான பெயர்!'

'எப்படி அழைத்தாலும் தேனாய்த் தித்திக்கும்... தென்றலாய்த் தாலாட்டும் பெயர்!'

விஷ்வாவின் நெஞ்சில் அவள் பெயர் பனியின் குளிர்ச்சியாய் ஜில்லிட்டது!

கொஞ்ச நேரத்தில் அவன் கனவுத் தேவதை... நெய் வாசனை கமகமக்க... முறுகலாய்... சிவந்த நிறத்தில் தோசையும், சுவையான தேங்காய் சட்னியும் கொண்டு வந்து... அவன் முன்பு வைத்தாள்.

விஷ்வஜித் அளவுச் சாப்பாட்டுக்காரன்! அதுதான் உடலைக் கட்டுக்கோப்புடன் வைத்திருக்கிறான்!

ஆனால், இன்று ஜோஷிதாவின் கைப் பக்குவத்தில் தயாரான தோசையை ஐந்திற்கு மேல் சாப்பிட்டு முடித் தான்.

"உங்க தோசை, சட்னி வெகு பிரமாதம்! ரொம்ப நன் றிம்மா!" என்ற விஷ்வஜித்... ஜோஷிதாவை விழிகளால் விழுங்க...

விஷ்வஜித்தின் இந்தப் புதிய பார்வைப் பரிமாணத்தின் அர்த்தம் தெரியாமல் விழித்தான், அஸ்வின்.

சென்னை வரும்போதெல்லாம் ஹோட்டல் தாஜில் தான் தங்குவான், விஷ்வஜித். ரெகுலராய் அறை எண் 101ஐ புக் செய்து வைத்திருக்கிறான். மாதமானால் தாஜ் ஹோட்டலுக்கு செக் அனுப்பி விடுவான்.

"கிளம்பலாமா, விஷ்வா?"

அஸ்வின் கேட்க...

"எங்கே?"

"ஹோட்டல் தாஜ்க்கு!"

'ஓ... நோ... என் தேவதை இங்கிருக்கும் போது... நான் மட்டும் தனியாளாய் ஹோட்டல் தாஜில் தங்குவதா?'

ஜோஷிதாவின் அருகாமையில் இருப்பதே பேரானந்த மாய் இருந்தது!

விஷ்வஜித் அதைக் கெடுத்துக் கொள்ள விரும்ப வில்லை!

"இங்கேயே ஒரு அறையில் படுத்துக்கிறேன், அஸ்வின்!"

"ஏய் விஷ்வா... நீ... நீயா...? இங்கேயா...? இடியட்... விளையாடறீயா என்ன...?" என்று ஆச்சரியத்துடனும்... கொஞ்சம் கோபத்துடனும் அஸ்வின் கேட்டான்.

"விளையாடலே, அஸ்வின்! நிஜமாத்தான் சொல் றேன். ஏதாவது அறையிருந்தால் ஒதுக்கிக் கொடுடா! சின்ன அறையாய் இருந்தால்கூடப் போதும்!"

"உனக்கு இங்கே வசதி பத்தாது! என்னடா பேசறே? இன்று கூட தூங்கிடலாம்! நாளைக் காலை குளித்து, உடுத்தன்னு நீ ரொம்பக் கஷ்டப்படுவே!"

"அதெல்லாம் அட்ஜஸ்ட் பண்ணிக்கிறேன், அஸ்வின்!"

"இல்ல... வேண்டாம்! முதல்ல எழுந்திரு!" என்று விஷ்வஜித் கையைப் பற்றி அஸ்வின் இழுத்தான்.

"நான் இங்கே தங்குவதில் உனக்கென்ன கஷ்டம்? இடைஞ்சல்?" என்று கோபத்துடன் முகம் சுழித்துக் கேட்க...

"நீ போய் இந்தச் சின்ன வீட்டுல... இளவரசன் கணக்காய் வாழ்பவன் நீ!"

"எங்கே படுக்கட்டும்? இடத்தைக் காட்டு! இல்லேன் னால் இந்த சோபாவிலே நீட்டிப் படுத்துக்குவேன்!" என்று மிரட்டிவிட்டு... கால் நீட்டி சோபாவில் படுக்கப் போ...

அதற்கு மேல் மறுக்க முடியாமல்... அஸ்வினும், தாரி காவும் தங்கியிருந்த அறையில் தங்க வைத்துவிட்டு... மாமனார், மாமியார் படுத்திருந்த அறைக்கு மனைவியை அழைத்துக் கொண்டு சென்று விட்டான், அஸ்வின்.

அதன் பின்னர் விளக்கை அணைத்துவிட்டு, விடி விளக்கைப் போட்டுவிட்டு ஜோஷிதா ஹாலில் படுத் திருந்த பாட்டியின் அருகில் போய்ப் படுத்தாள்.

ஜோஷிதா படுத்தவுடன் நிம்மதியாய் உறங்கி விட் டாள், விஷ்வஜித்தின் உறக்கத்தைப் பறித்துக் கொண்டு!

விஷ்வஜித் படுக்கையில் விழுந்தான்!

நாள் எல்லாம் உழைத்த உழைப்பும்... செய்த பயணத்தின் அலுப்பும்... உடலில் விஞ்சி நின்றாலும்... ஜோஷிதாவைக் கண்ட நொடியிலிருந்து... அவனுடைய மனம் விழித்து... சிறகு விரித்து... விண்ணை முட்டிப் பறந்தது.

இத்தனை நாட்களும் கனவுகளில் கண் சிமிட்டி வந்தவள்...

முல்லைப் பல்வரிசையைக் காட்டி மோகனமாய்ப் புன்னகையை வீசியவள்...

மல்லிகை மடியில் போட்டு, அவனைத் தட்டித் தாலாட்டுப் பாடியவள்...

நேரில் நின்று... நெஞ்சம் நெகிழ வைத்த விநாடி... விவரிக்க முடியாத ஆனந்தத்தில் மூழ்கினான். முத்துக் குளித்தான்!

அவன் இதயம்... அவனைத் தனியே தவிக்க விட்டு விட்டு... அவளிடம் போய்த் தஞ்சம் புகுந்து விட்டது!

அவன் இதயத்தைத் திருடிய கள்ளி, ஜோஷிதா!

அவன் சிந்தனையைச் சிதற அடித்த சிற்பம், ஜோஷிதா!

அவன் உயிரைக் கரைத்த உதய நிலவு, ஜோஷிதா!

அவன் எண்ணத்தை ஆக்டோபஸாய் ஆட்கொண்ட எழிலரசி, ஜோஷிதா!

அவன் அன்பு கொண்ட உள்ளத்தை அடிமைப்படுத்திய அதிபோராழகி, ஜோஷிதா!

அவன் நெஞ்சினில் காதல் விதையை விதைத்த வித்தகி, ஜோஷிதா!

மனம் அவளைப் பார்த்த நிமிடமே சூடாகிப் போனது!

உடலில் சட்டென்று தீப்பற்றிக் கொண்ட உணர்வு!

இத்தனை நாட்கள் நான் புரிந்த தவத்தினை மெச்சி... என்னுடைய கனவுப் பெண்ணை... கற்பனை நாயகியை நேரில் கொண்டு வந்து... ஜோஷிதாவின் உருவில் நிறுத்தி விட்டான், இறைவன்!

கடைசியில் என் இதயம் கவர்ந்தவள் தமிழ்நாட்டில் தான் இருக்கிறாள்!

இது தெரியாமல் அவள் எங்கிருக்கிறாளோ...?

பிறந்தாளோ... இல்லையோ... என்று தவித்துக் கலங்கிப் போய் இருக்கிறேனே!

ஜோஷிம்மா...

என் கண்ணே...

என் கண்ணின் மணியே...

என் உயிரின் ஓவியமே...

ஏன் என் கண்ணில் படாமல் மறைந்திருந்து வேடிக்கை காட்டினாய்...?

இனி நான் உன்னைப் பிரிய மாட்டேன்!

என் விருப்பத்தை உன்னிடம் தெரிவித்து... உடனே என் காதல் மனைவியாய் ஆக்கிக் கொள்ளப் போகிறேன்!

அம்மாவிடம் இந்த விஷயத்தைச் சொன்னால் விண்ணுக்கும் மண்ணுக்கும் எகிறி எகிறிக் குதிப்பார்!

அப்பாவிடம் சொன்னால் உடலும், உள்ளமும் மலரச் சந்தோசப்படுவாரே!

விஷ்வஜித் படுக்கையில் இருந்து எழுந்தமர்ந்தான்!

உடனே ஜோஷிதாவைப் பார்க்க வேண்டும் என்று ஆவல் பொங்கியது!

திறந்திருந்த ஜன்னலின் அருகில் வந்து நின்றான்.

ஹாலில் பாட்டியோடு அழகாய் உறங்கிக் கொண்டிருந்த ஜோஷிதா... மஞ்சள் விடிவிளக்கின் வெளிச்சத்தில் பாலாய்... பளிங்காய்... பதுமையாய்த் தெரிந்தாள்.

ஜோஷிதா ஒருக்களித்து உடலைக் குறுக்கிப் படுத்திருந்தாள்.

சேலை அவளின் உடலைத் தழுவியிருக்க... அவளின் சின்ன இளமஞ்சள் இடுப்பு கவர்ச்சியாய்த் தெரிந்தது!

அந்தப் பிரதேசம் அவனுக்குப் போதையூட்டியது!

தூக்கத்தில் கூட அவளின் முகம் புன்சிரிப்பைச் சிந்திக் கொண்டிருந்தது.

முழுமதியாய் ஜொலித்த அவள் முகத்தைக் கைகளில் ஏந்தி முத்தமிட ஆசை வந்தது!

அவளை முத்தமிட்டால் எத்தனை தித்திக்கும்?

எவ்வளவு ஆனந்தம் உடலில் பெருக்கெடுத்து ஓடும்?

அவளைக் கட்டிக் கொண்டால் பஞ்சுப் பொதியாய்... பூவிதழின் மென்மையாய் இருக்குமா?

ஒருநாள்கூட இப்படியெல்லாம் தேடிச் சுகத்தைப் பற்றி விஷ்வஜித் சிந்தித்துப் பார்க்கவில்லை!

முதன் முதலாய் அவனுள் சலனம்...! சஞ்சலம்...! மயக்கம்...!

அவனைச் சலனப்படுத்திய தேவதை, ஜோஷிதா!

அவனைச் சஞ்சலப்படுத்திய ரதிதேவி, ஜோஷிதா!

முதன் முதலாய் அவனுள் பூவாய்க் காதல் உணர்வுகளை... காம உணர்வுகளை மலரச் செய்தவள், ஜோஷிதா!

இனி, ஜோஷிதா இல்லையேல் விஷ்வா இல்லை!

ஜோஷி... ஜோஷிம்மா... உன்னை என் உயிராய் நேசிக்கிறேனே... அது உனக்குத் தெரியுமா, என் செல்லமே?

அவன் நெஞ்சில் அவள் மேலான அன்பு அலையலையாய்ப் பொங்கிப் பொங்கிப் பிரவாகமெடுத்து ஓடியது!

விடிய விடிய ஜன்னலருகே நின்ற காலில் நின்று... அவன் இதய தேவதையைத் தரிசித்துக் கொண்டிருந்தான்!

விஷ்வஜித்துக்குத் தன்னையே நினைத்து ஆச்சரியமாய் இருந்தது!

தான் எத்தனை பெரிய பிசினஸ் மேன்! அறியாச் சிறுவனாய் ஒரு பெண்ணுக்கு உருகுகிறோமே என்று நினைக்கும்போது அவனுக்கே வெட்கமாய் இருந்தது!

பெரிய பிசினஸ் மேனானாலும்... சாதாரணக் கூலியானாலும்... இதயத்துள் காதல் புகுந்து விட்டால்... எல்லோருக்கும் உணர்வு ஒன்றுதான் என்று தற்போதுதான் புரிந்தது!

விடிய விடிய விழிகளால் ஜோஷிதாவை நின்ற காலில் தரிசித்துக் கொண்டிருந்தவனுக்கு... விடியற்காலையில் இன்பமாய்த் தூக்கம் இமைகளைச் சொக்க... கட்டிலில் வந்து படுத்தான்.

சுகமாய்த் தூக்கம் அவனைத் தன் மடியில் போட்டுத் தாலாட்டியது!

விஷ்வஜித் நிம்மதியாய் இமை மூடி உறங்கினான்!

இனி, அவனால் நிம்மதியாய் உறங்க முடியாது எனத் தெரியாமல்!

3

மறுநாள்...

விடியற்காலையில் அந்தச் சிறிய வீடே பரபரப்பாக இருந்தது!

விருந்தினர் இருபது பேராவது அங்கிருந்தனர்.

அனைவரும் குளித்து, உடுத்தி, காலை உணவு உண்டு என்று அமளி துமளியாய் இருந்தது.

அஸ்வின் எழுந்து மண்டபத்திற்குப் போய் விட்டான். மதிய உணவிற்குத் தேவையான ஏற்பாடுகளை... சமையல்காரர்களை வைத்து முடுக்கி விட்டுக் கொண்டிருந்தான்.

நீண்ட நேரம் விஷ்வஜித் உறங்கிக் கொண்டிருந்தான்.

அது அறிந்த தாரிகா... ஜோஷிதாவை அழைத்தாள்.

''ஜோஷிதா... விஷ்வா எழுந்துட்டாரா... இல்லையான்னு பாருடி! ராத்திரி அவ்வளவு தூரம் ப்ளைட்ல பயணம் செய்து வந்த அலுப்பில்... களைத்து உறங்கினாலும் உறங்கலாம்! கொஞ்சம் காபியோட போய் எழுப்பேன்!''

தாரிகா ஜோஷிதாவிடம் கெஞ்சினாள்.

''நானா...?''

''ம்...''

''போங்கக்கா! நீங்க போய் எழுப்புங்க!''

''நான் காபியைத் தூக்கிட்டுப் போய் நின்னால்... உன்னை யார் இந்த வேலையெல்லாம் செய்யச் சொன்னதுன்னு கத்தினாலும் கத்துவார்டி!''

ஜோஷிதா அமைதியாய்த் தாரிகாவைப் பார்த்துக் கொண்டிருக்க...

''அவர் எவ்வளவு பெரிய பணக்காரர் தெரியுமா...? இளவரசன் கணக்காய் அங்கே இருப்பார்! இங்கே... இந்த இடத்தில் தங்குவதற்கு எப்படித்தான் மனம் ஒப்பியதோ!''

''நட்புக்காக இதுகூட செய்யலைன்னால்... அவர் என்ன பெரிய தோழன்?''

ஜோஷிதா துடுக்காய்க் கேட்டாள்.

''தோழன் மட்டுமில்லே, ஜோஷிதா! மாசமானால் லட்ச ரூபாயை அவிழ்க்கிற முதலாளியும் கூட! நினைவு வச்சிக்கடி!''

தாரிகா பெருமையாய்ச் சொன்னாள்.

''நாம எங்கே போறமோ... அந்த இடத்துக்குத் தக்கது போல மாறணும்! நம்மைப் பொருத்திக்கணும்! கிராமத்துல கூட ஒரு வசனம் சொல்லுவாங்களே... பாம்பு சாப்பிடற ஊருக்குப் போனால் நடுத் துண்டு நமக்குன்னு!''

''ஏய்... ஏய்... காலையிலே என்னை வாமிட் எடுக்க வைக்காதேடி, ஜோஷிதா! எங்க விஷ்வஜித் இளவரசன் பற்றி அரிச்சுவடிகூடத் தெரியாதவள், நீ!''

''என்ன பெரிய இளவரசன்! ரொம்ப அவர் புகழ்பாடறே! இன்னும் கொஞ்ச நேரத்தில் என் காது தீப்பற்றிக்

கொள்ளலாம்! அதனால் உன் இளவரசன் புகழை நிறுத்துங்க! காபியோட போறேன்!'' என்று மலர்ந்தவள்...

அருமையான காபியோடு அவனறைக்குச் சென்றாள்.

விஷ்வஜித் ஆழ்ந்த நித்திரையில் வசீகரமாய் இதழ் விரித்துப் புன்னகைத்துக் கொண்டிருந்தான்.

''என்னங்க... என்னங்க...''

என்ற ஜோஷிதாவின் இனிமையான அழைப்புக்குரல் கேட்க...

விஷ்வஜித் மெல்லக் கண் விழித்தான்.

அழகான குண்டு முகம்... பிறை நெற்றி... வில்லாய் வளைந்த புருவங்கள்... கூர்மையான நாசி... பனியின் குளிர்ச்சியோடு கூடிய குவளை மலர்க் கண்கள்... கதுப்புக் கன்னங்கள்... அனிச்ச மலரின் மென்மையோடு கூடிய மேனி... என்று அழகாய்... குளித்து... பட்டுச்சேலை உடுத்தி... கண்களுக்கு உறுத்தாத வண்ணம் சிறுசிறு நகைகள் அணிந்து... ரதியாய் நின்ற ஜோஷிதாவைக் கண்டவன்...

கைகள் இரண்டையும் விரித்து... அவளை அணைக்க வருபவன் போல எழ...

ஜோஷிதா பதற...

சூழ்நிலையின் தாக்கம் உணர்ந்து... உணர்வுகளைச் சட்டென்று கட்டுப்படுத்தினான், விஷ்வஜித்.

ஜோஷிதாவிற்கு அவனின் செயல் கண்டு பயங்கர அதிர்ச்சி!

குப்பென்று நிமிடத்தில் வியர்த்து விட்டது!

அவன் அவ்வாறு கைகளை விரித்து எழக் காரணம்...?

கனவில் இருவரும் சண்டையிட்டு... ஜோஷிதா அவனிடம் ஊடல் கொள்ள... விஷ்வஜித் அன்புடன் கெஞ்சிக் கொஞ்சி அவளின் ஊடலைத் தீர்த்துக் கூட வேண்டிய சமயம்... நிஜ ஜோஷிதா வந்து எழுப்ப... கனவுக்கும், நிஜத்துக்கும் வித்தியாசம் தெரியாமல்... தூக்கக் கலக்கத்தில்... விஷ்வஜித் அப்படி ஒரு செயலைச் செய்து விட்டான்!

அவள் நீட்டிய காபியைத் தலைகுனிந்தவாறே நன்றி சொல்லி வாங்கிக் கொண்டான், விஷ்வஜித்.

ஜோஷிதாவோ பொங்கி வழியும் வியர்வையோடு அவ்விடம் விட்டு அகன்றாள்.

காலை பதினோரு மணி!

மண்டபம் வீட்டிற்கு அருகிலேயே இருந்தது!

மண்டபத்திற்குச் சுற்றத்தார், உறவினர், நண்பர்கள் என்று வரத் தொடங்கினர்.

ஜோஷிதா... பட்டுச் சேலை சரசரக்க... மயில் தோகையாய் நீண்டு இடைவரை தொங்கிய ஜடையசைய... இளம் சிற்றிடை நாட்டியமாட... அங்குமிங்கும் வானத்துத் தேவதையாய் நடந்து கொண்டிருந்தாள்.

விஷ்வஜித் பழைய நண்பர்களான ராஜா, ரமேஷோடு அமர்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

அவன் பேச்சுத்தான் அவர்களிடம் இருந்ததே தவிர... அவன் நினைப்பு, எண்ணம், பார்வை அத்தனையும் ஜோஷிதாவையே சுற்றிச் சுழன்று கொண்டிருந்தது!

அவளை எவ்வளவு நேரம் பார்த்தாலும் அலுக்க வில்லை!

அவளை எந்தக் கோணத்தில் பார்த்தாலும்... அவளின் பேரழகு குறையவில்லை!

இனிமையான புன்னகையுடனே எல்லோரிடமும் பேசிக் கொண்டிருந்தாள்.

ரமேஷ் போட்டோகிராபர் தொழில் செய்பவன்!

ராஜா பெங்களூருவில் விளம்பரக் கம்பெனி வைத் திருப்பவன்!

பன்னிரண்டாம் வகுப்பு வரை விஷ்வஜித்தோடு படித்தவர்கள். நீண்ட நாட்களுக்குப் பிறகு இந்த விழா வில் சந்தித்துக் கொள்கிறார்கள்.

''என்ன மச்சி... உன் பார்வை தினுசா இருக்கே! பேச்சு மட்டும்தான் எங்களிடம் இருக்கு! உன் விழிப்பார்வை அந்தப் பெண்ணிடமே சுற்றிச் சுழல்கிறதே... என்ன விஷயம்?'' என்று போட்டோகிராபர் நண்பன் ரமேஷ் கேட்டான்.

''ஏய் ரமேஷ்... சும்மா இருடா! அதெல்லாம் ஒண்ணு மில்லே!''

என்று விஷ்வஜித் மூடி மறைக்க...

''என்ன, பெண்ணைப் பிடிச்சிருக்கா?''

ராஜா கேட்டான்.

''ராஜா! நீ சும்மாயிருக்க மாட்டாயா?'' என்று விஷ்வ ஜித் அதட்ட...

''பெண் தேவதைதானே...! என்ன அழகு! இப்படி ஒரு உறவுப் பெண் நம்ம அஸ்வினுக்கு இருப்பான்னு எங்களுக்கெல்லாம் முன்னமே தெரியாதே! என்னடா அவங்க எங்களுக்கெல்லாம் அண்ணிதானே...?'' ரமேஷ் கேட்க...

விஷ்வஜித் மவுனமாய் இருக்க...

''இல்லையா...? அப்போ அவங்களை நாங்களும் சைட் அடிக்கலாமா...?''

''லுக் விடலாமா...?''

''தூண்டில் போடலாமா...?''

''கிடைக்கறாங்களான்னு ட்ரை பண்ணிப் பார்க்கட்டுமா?''

''நாங்களும் லவ் அப்ளிகேஷன் கொடுக்கலாம் தானே...? உனக்கு எந்த வித வருத்தமும் இருக்காதுதானே...?''

ராஜாவும், ரமேஷும் மாறி மாறிக் கேட்க...

விஷ்வஜித்திற்குக் கண்மண் தெரியாமல் கோபம் வந்து விட்டது.

''ஏய்...'' என்று சீறினான்.

''அப்போ அவங்களை உனக்கு ரெம்பப் பிடிச்சிருக்கு. சரியா...?''

''நீ அவங்களை விரும்பறே... அப்படித்தானே?''

இருவரும் மாறி மாறிக் கேட்க...

''யெஸ்! ஐ லவ் ஹெர்!'' என்று உண்மையை ஒத்துக் கொள்ள...

''காதலை எப்போ சொல்லப் போறே, விஷ்வா? நீ விரும்பற விஷயம் அஸ்வின், தாரிகாவிற்குத் தெரியுமா?''

''ம்கூம்...''

விஷ்வஜித் தலையாட்டினான்

''அவங்க மூலமா உன் காதலைச் சொல்லேன்!''

''நோடா...!''

"ஏன்?"

"அந்தக் காலத்துக் காதலுக்குத்தான் தூது வேண்டும்! இந்தக் காலத்துக் காதலுக்குத் தூதுவோ... இடையாளோ... தேவையில்லை! கண்ணோடு கண் நோக்கி... காதலைத் தெரிவிக்கப் போறேன்! யெஸ் சொன்னால் எல்லோருக் கும் தெரிவிப்பேன்! இல்லேன்னால் இந்த விஷயம் நம் மோடே புதைஞ்சி போகட்டும்!"

விஷ்வஜித் சொல்ல...

"உன்னைப் போய் எந்தப் பெண்ணாவது மறுப்பாளா...? உன் அழகு, அறிவு, தொழில், குடும்பம் அனைத்தும் தெரிந்தால் எவளாவது மறுப்பாளா...? குருடிகூட அந்தக் காரியத்தைச் செய்ய மாட்டாள்."

ராஜா சொன்னான்.

"அதனால் பயப்படாதே, விஷ்வா! சமயம் கிடைக் கும்போது காதலைச் சொல்லிவிடு!"

ரமேஷ் அறிவுறுத்தினான்.

"கட்டாயமா, நிச்சயமா, ரமேஷ்!" என்றான் விஷ்வ ஜித்.

மண்டபத்தில் அமர்ந்திருந்தவர்களுக்கு ஜோஷிதாவும், சில தோழிகளும் ட்ரேயில் குளிர்பானத்தை வைத்துக் கொண்டு விநியோகித்தனர்.

காலைச் சம்பவத்திற்குப் பிறகு ஜோஷிதாவிற்கு விஷ்வ ஜித்தைக் காணக் கூசியது!

அவன் கண்ணும்... இவள் கண்ணும் கலக்கும்போது வெட்கம் பிடுங்கித் தின்னும்!

சட்டென்று தலை தாழ்த்திக் கொள்வாள், ஜோஷிதா.

யாரையாவது புன்னகையோடு நோக்கி வரவேற்று விட்டு அவனைக் கண்ணுறும் போது... ஜோஷிதாவின் இதழ்களில் பூத்திருக்கும் புன்னகை எங்கோ ஓடி ஒளிந்து கொள்ளும்!

அவள் செயலைக் கண்டு விஷ்வாவின் நெஞ்சில் ஆழ்ந்த யோசனை நிலவியது.

அவளையே அவன் பார்த்திருக்க...

அவன் பார்வை ஏற்படுத்திய தாக்கத்தில்... குளிர்பானத் தோடு அருகில் வந்தவள்... கால்கள் தடுமாறி... கைகள் நடுங்க... ட்ரேயில் இருந்த டம்ளரில் இருந்த அத்தனை பேண்டா பானமும் அவன் மேல் கொட்டி விட்டது.

விஷ்வஜித்தின் உடை முழுக்க ஆரஞ்சு நிறமாய் மாறி விட்டது!

ஜோஷிதா பயத்தில் பதறி... அவன் மேல் கொட்டிய குளிர்பானத்தைக் கைக் குட்டையால் துடைக்க ஒரு அடி எடுத்து வைக்க... தரையில் இருந்த ஈரம் வழுக்க... பின் புறமாய்ச் சரிய இருந்தவளைக் கண்ணிமைக்கும் நேரத் தில்... இழுத்து இறுக்கிக் கொண்டான், விஷ்வஜித்.

அவள் மேனி தந்த சுகத்தில் அவளை விஷ்வஜித் இன்னும் இறுக்கிக் கொண்டான்!

அத்தனை பேரின் பார்வையும் அவர்கள் மேல் படிந்தது!

வேற்று ஆடவனைத் தொட்டு அறியாத ஜோஷிதா... விழிகளில் அச்சம் குடி கொள்ள... பதறிப் போனாள்!

அவனிடமிருந்து விடுபட உடலை அசைத்தாள்.

அவளின் போராட்டம் உணர்ந்து... சூழ்நிலை உணர்ந்து... அவளை மாலையாய் இறுக்கிய கைகளை விடுவித்தான், விஷ்வஜித்.

ஜோஷிதா... அடுத்த நொடி துள்ளிக் கொண்டு மானாய் ஓடினாள்.

விஷ்வஜித்தின் கோலம் கண்டு அஸ்வின் ஓடி வந்தான்.

''ஸாரி... ஸாரிடா, விஷ்வா!'' என்று மன்னிப்புக் கேட்டான்.

அருகில் இருந்த துணிக்கடைக்கு போன் செய்தான்.

பத்தாவது நிமிடம் விலையுயர்ந்த கோட்டும், சூட்டும் வந்து சேர்ந்தது!

மாடியறையில் விஷ்வஜித் உடைமாற்றிக் கொண்டு வர...

உறவினர்கள் ஜோஷிதாவிடம் சத்தம் போட்டதால்... விஷ்வஜித்தைத் தேடி மன்னிப்புக் கேட்டுக் கொள்ள... அவனைத் தேடி மாடியறை வாயிலுக்கு வர...

உடையணிந்து வெளியே வந்த விஷ்வஜித்... அவளை ஆச்சரியமாய் நோக்கினான்.

''என்னை மன்னிக்க வேண்டுகிறேன் சார்!'' என்று ஜோஷிதா கையெடுத்து வணங்க...

''இட்ஸ் ஓ.கே. ஜோஷிதா!''

விஷ்வஜித் சாதாரணமாய்க் கூறினான்.

அவள் ஆச்சரியமாகி... கலக்கம் தீர்ந்து... இதழ்களில் மெல்லிய சிரிப்பு படர... அவ்விடம் விட்டு அகன்றாள்.

தாரிகா சர்வ அலங்காரத்துடன் அம்சமாய் இருந்தாள்.

தாரிகா மேடையில் அமர்த்தப்பட்டாள்!

உறவுப் பெண்கள் தாரிகாவிற்கு நலுங்கு வைத்தனர்.

வளையல் போட்டனர்.

அஸ்வின் ஆசையாசையாய் மனைவியை விழி எடுக்காமல் நோக்கிக் கொண்டிருந்தான்.

வைபவம் முடிந்து ஒவ்வொருவராய் மேடையேறி... தங்களுடைய பரிசுகளைத் தாரிகாவிற்குக் கொடுத்தனர்.

வீடியோவும், கேமராவும் அதனைப் படம் எடுத்தன.

ஜோஷிதா தாரிகா அருகிலேயே நின்றிருந்தாள்.

விஷ்வஜித் மேடையேறித் தாரிகாவின் பக்கத்தில் நின்ற ஜோஷிதாவின் அருகில் போய் நின்றான்.

பைக்குள் கையை விட்டுச் சிறு பார்சலை எடுத்துப் பிரித்தான்.

கல்லு கல்லாய், கெட்டியாய்... ஐந்து ஐந்து பவுனில் செய்த நான்கு வளையல்கள் பளிச்சிட்டன!

டிசைன் நெஞ்சையள்ளும் விதமாய் இருந்தது!

அவனுடைய தாய் சிவரஞ்சனி தாரிகாவிற்கு ஆசையாசையாய் எடுத்துக் கொடுத்து அனுப்பியிருக்கிறார்.

''ஜோஷிதா... இதை என் சார்பா... இல்ல... இல்ல... நம் சார்பா தாரிகாவிற்குப் போட்டு விடுகிறாயா...?''

ஜோஷிதாவின் அருகில் நின்று குறும்பாய்க் கண் சிமிட்டி மெல்ல விஷ்வஜித் அவள் காதருகே கேட்க...

ஜோஷிதாவினுள் சட்டென்று எரிமலையாய்க் கோபம் பொங்கிப் பெருகியது!

அவனை விழிகளால் சுட்டெரித்தாள்.

ஜோஷிதாவின் கையை உரிமையுடன் பிடித்தான்.

''இந்தா போட்டுவிடு, பியூட்டி!''

அவள் கையில் வளையல்களைத் திணிக்க... அவளால் அத்தனை பேர் முன்னிலையில் மறுக்க முடியவில்லை.

கோபத்தை அடக்கினாள்.

மெல்லப் புன்முறுவலோடு வளையலைத் தாரிகாவிற் குப் போட்டுவிட்டு வந்து அவள் நிற்க...

விஷ்வஜித்தும் அவளருகே ஒட்டி நிற்க...

கேமரா நிறைய முறை கண் சிமிட்டியது!

"நான் உன்னோட கொஞ்சம் பேசணும், ஜோஷிதா. மண்டபத்தின் பின்புறம் வந்து சேர்!"

கட்டளையாய் அவள் காதுகளில் விஷ்வா கிசுகிசுக்க...

அவள் அவன் முகம் நோக்கிக் கடுமையாய் முறைக்க...

"என்ன பேசணும்?"

"பேசணும்!"

"நீங்க யார்? முன்னே பின்னே பழகாதவங்க கூப்பிட்டா யெல்லாம் வர முடியாது!"

"நீ வர்லேன்னால் உன்னை நாலுபேர் பார்க்கத் தூக்கிக் கொண்டு போக வேண்டி வரும்!"

விஷ்வஜித் கடுமையாய் மிரட்டினான்.

"நீங்க ரொம்ப ஓவராய்ப் போறீங்க!"

ஜோஷிதா பல்லிடுக்கில் மிரட்டினாள்.

"இதுவே ஓவர்ன்னா... நம்மிடையே நிறைய இருக்கே! அதையெல்லாம் சொன்னால் நீ என்ன சொல்வாய்?"

இரட்டை அர்த்த வசனம் ஒலிக்கப் பேசியவன்... பின்னர்...

"நான் முன்னே போறேன்! நீ பின்னே வா!"

விஷ்வஜித் கூறிவிட்டு நகர்ந்தான்!

ஜோஷிதா சிலையாய் நின்று விட்டாள்!

'போவதா...? வேண்டாமா...?' என்று அவளுள் பெரும் கேள்வி எழுந்து மிரட்டியது!

4

மண்டபத்தின் பின்புறம் அழகான பூங்கா ஒன்று உள்ளது!

பூங்காவின் மத்தியில் பெரிய அளவில் குல்மொஹர் மரம் நிழலை வாரி வள்ளலாய்க் கொடுத்துக் கொண் டிருந்தது!

அதன் அடியில் சுற்றி சிமெண்ட் பெஞ்சுகள் வரிசை யாய்ப் போடப்பட்டிருந்தன!

அந்த பெஞ்சில் வந்து அமர்ந்தான், விஷ்வஜித்.

குளிர்ச்சியான நிழலும்... காற்றும் சுழன்று வீச ஏக சுகமாய் இருந்தது, விஷ்வஜித்துக்கு!

அப்படியே ஜோஷிதாவை இங்கே உட்கார வைத்து... அவள் மடிமீது தலை வைத்துப் படுத்துக் கொண்டால் எவ்வளவு இன்பமாய் இருக்கும்!

அவளும் விஷ்வஜித்தைத் தட்டித் தாலாட்டி... இனிமை யான பாரதியார் பாடலைப் பாடினால் எத்தனை ஏகாந்த மாய் இருக்கும்?

நினைப்பே சர்க்கரையாய் இனித்தது!

நிஜமென்றால் அமிர்தமாய்ச் சுவைக்குமல்லவா...?

விஷ்வஜித் வந்து சரியாய் இருபது நிமிடமாகிறது.

ஜோஷிதா வருவாளா...? மாட்டாளா?

அந்தக் கேள்வி அவனுள் வண்டாய்க் குடைந்தது.

அவள் வரவுக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தான்!

ஜோஷிதாதான் வந்தபாடில்லை!

இருபது...

இருபத்தைந்து...

முப்பது...

என்று நிமிடங்கள்தான் கரைந்தன!

அவனுள் இருந்த நம்பிக்கையும் கரைந்தது!

ப்ராமான மனதுடன் எழுந்து கிளம்ப ஆயத்தமான போதுதான்...

ஜோஷிதா எரிச்சலோடு முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு வந்து நின்றாள்.

அவளைப் பார்த்து விஷ்வஜித் வசீகரமான புன்னகை ஒன்றை வீசினான்.

''குட்... வா... வந்து இப்படி உட்கார்! அநியாயத்துக்கு என்னை அரைமணி நேரம் காக்க வைத்து விட்டாயே, ஜோஷிதா!''

விஷ்வஜித் குறைப்பட்டுக் கொண்டான்.

''எதுக்காக என்னை வரச் சொல்லணும்? எதுக்காக எனக்காகக் காத்திருக்கணும்?''

ஜோஷிதா கோபத்தோடு சீறினாள்.

''முதல்ல உட்கார், ஜோஷிம்மா.''

விஷ்வஜித் அக்கறையாய்க் கூறினான்.

''யாரைப் பற்றி பேசணும்? எங்க அத்தான் அஸ்வின் பற்றியா...? அல்லது எங்க அக்கா தாரிகா பற்றியா...?''

''ம்கூம்!''

விஷ்வஜித் பலமாய்த் தலையாட்டினான்.

''பின்னே...?''

நெற்றி சுருக்கி... புருவம் உயர்த்திக் கேட்டாள், ஜோஷிதா.

''என்னைப் பற்றி!''

''உங்களைப் பற்றி எதுக்காக என்னிடம் சொல்லணும்...? நானும் எதுக்காகத் தெரிஞ்சுக்கணும்...? இது எனக்குத் தேவையில்லாத விஷயம்!''

ஜோஷிதா முகத்தைக் கடுப்பாக்கிக் கொண்டு வெறுப் போடு சொன்னாள்.

''உனக்குத் தேவைதான்!''

''வேற்று மனிதர்கள் பற்றிய விஷயத்தை நான் அறிந்து கொள்ள விரும்புவதில்லை!''

ஜோஷிதா அலட்சியத்தோடு சொல்லியும் விஷ்வஜித் தொடர்ந்தான்.

''என்னோட ஊர் சிம்லா!''

''சரி...''

''அப்பா அந்த ஊர்க்காரர்!''

''ம்...''

''அம்மா இந்தச் சென்னைதான்! நான் படித்ததும் சென்னையில்தான்! பாட்டி வீட்டில் தங்கித்தான்! அப்பா வுக்கு உடல்நலம் பாதிக்க... அப்பாவின் தொழிலை ஏற்று நடத்த வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது!''

''இது எனக்குத் தேவையான விஷயமா, சார்? ஏன் சார் இப்படி இதுநாள் வரை அறிமுகமே இல்லாத பெண்ணை அழைத்து... இப்படிக் கண்டபடி உளறுகிறீர்கள்...?''

ஜோஷிதா சீறலோடு கேட்டாள்.

பல நூறு ஏக்கர்களில் காபித் தோட்டம், தேயிலைத் தோட்டம், ஆப்பிள் தோட்டம், ஆரஞ்சுத் தோட்டம்ன்னு இருக்கு!''

''இருக்கட்டுமே!''

ஜோஷிதாவிடமிருந்து அலட்சியமாய்ப் பதில் வந்தது.

டூவீலர் ஸ்பேர் பார்ட்ஸ் கம்பெனி, ஓட்டல், ரிசார்ட்ஸ்ன்னு ஏகப்பட்ட சொத்திருக்கு!''

'ம்! அப்புறம்?'

ஜோஷிதா ஏளனமாய்க் கேட்டாள்.

விஷ்வஜித்துக்குக் கோபம் பீறிக் கொண்டு வந்தது. அதை அடக்கிக் கொண்டு...

''பெங்களூருவில் 'விஷ்வா ஏர்லைன்ஸ் சேவை' இருக்கு!''

''ம்...! அப்புறம்...?''

''இமயமலை அடிவாரத்தில் ஆயிரம் ஏக்கருக்கும் மேல் சமீபமாய் வாங்கிப்போட்டு ஹோட்டல், ரிசார்ட்ஸ், பூங்கா, ஏரி, நீர்வீழ்ச்சி, சினிமா தியேட்டர், கோயில் என்று கட்டிக் கோடைச் சுற்றுலாத் தலமாக... ஒரு

சொர்க்கபுரியை அமைக்கும் வேலை நடந்துட்டு இருக்கு!

''வெரி இன்ட்ரஸ்டிங்! மேலே சொல்லுங்க!''

''லட்சத் தீவு அல்லது அந்தமான் நிக்கோபார் தீவு களில் ஒரு தீவைக் குத்தகைக்கு எடுத்து அங்கேயும் சுற்றுலாத் தலம் அமைக்கப் போகிறேன்!''

''நல்ல வருமானம் உள்ள தொழில்களாய்த்தான் தேர்ந்தெடுத்துச் செய்கிறீர்கள்! வெல்டன்! கீப் இட் அப்! மேலே சொல்லுங்க.''

ஜோஷிதா இப்படிக் கேட்க... விஷ்வஜித் முறைக்க...

''ரியலி சார்! இது உண்மையான பாராட்டுதான்! இது நேரம் வரை கிண்டலாய்த்தான் கேட்டுட்டு இருந்தேன்! இப்போ உங்க மேலே மதிப்பு வந்து விட்டது. சொல் லுங்க, சார். அப்புறம்...?''

ஜோஷிதா அவனைப் பாராட்டி, ஊக்குவிக்க...

''சிம்லாவுல ஒரு மெடிக்கல் கல்லூரி கட்டுகிறேன்! இந்தியாவுல இருக்கற ஏழை மாணவர்கள் மாநிலம் வாரி யாகப் பயன்பெறும் வகையில் தகுதி, திறமை, மதிப் பெண் அடிப்படையில் தேர்வு செய்து நோ ஃபீஸ்... நோ டொனேஷன் என்றும்... புத்தகம், இருப்பிடம், உணவு, உடை எல்லாம் இலவசமாகவே கொடுத்து... சேவை யுள்ளம் கொண்ட மருத்துவர்களை உருவாக்கி... இந்த இந்தியாவுக்கு வழங்கப் போகிறேன்!''

விஷ்வஜித்தின் பேச்சில் சுவாரசியமான ஜோஷிதா...

''அப்படியே ஒவ்வொரு மாநிலத் தலைநகரிலும் ஆஸ்பத்திரியைக் கட்டி... இங்கு பயிலும் டாக்டர்களை

நியமித்து... நீங்களே சம்பளம் கொடுத்து... இல்லாத மக்களுக்குத் தரமான இலவச சிகிச்சையைக் கொடுக்க லாமே!''

ஜோஷிதா கூற... விஷ்வஜித் ஆச்சரியமாகி...

''ஓ... பைன் ஜோஷி... தாங்க்யூ... தாங்க்யூம்மா... உன் செய்திக்கு!''

ஜோஷிதாவின் கையைப் பற்றிக் குலுக்கினான். அவள் கைகளைக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

நாகுக்காய் அவன் கைகளிலிருந்து தன் கையை உரு விக் கொண்டாள், ஜோஷிதா.

''ரொம்ப அருமையான திட்டம்! நீ அழகான பெண் மட்டுமில்லே... புத்திக் கூர்மையானவளும்தான்!

விஷ்வஜித் அளவுக்கதிகமாய்ப் பாராட்டவும்...

''உங்க பாராட்டுக்காக இதை நான் சொல்லலே! நிறையப் பணம் இருக்குன்னு சொல்றீங்க! அதைக் கணக்குப் பார்க்காமல் இலவச சேவை செய்ய என் மூலமா ஒரு சின்ன ஐடியாதான்!''

''இல்லாதவங்களுக்குத் திருமண உதவித் தொகை செய்யறேன்!''

''ம்...''

''மருத்துவ உதவித் தொகை...''

''சரி...''

''படிப்புக்கு உதவித் தொகை...''

''ரொம்ப ரொம்ப, நல்ல நல்ல விஷயமா, சேவையா தேடிப்பிடிச்சி செய்யறீங்க, சார்! வெரிகுட்!''

''நான் அழகன்...''

''அதை யாராலும் மறுக்கவே முடியாது! அழகன்னு சொல்றதைவிட பேரழகன்னே சொல்லலாம்!''

ஜோஷிதா இயல்பாய்க் கூற... விஷ்வஜித் இறக்கை கட்டி வானில் பறந்தான்.

''அறிவுள்ளவன்...''

''யெஸ்...''

''திறமையுள்ளவன்...''

''கண்டிப்பா தெரியுது... உங்க பேச்சிலிருந்து!''

''எதிலும் வெற்றி வாகையே சூடியவன்!''

இப்படி எதற்குச் சொல்கிறான் என்று புரியாமல்... ஜோஷிதா அவனை ஆழமாய்ப் பார்க்க...

''அனைத்துத் திறமையும் ஒருங்கிணைந்த நான்...''

இந்த இடத்தில் விஷ்வஜித் தயங்கி நிறுத்தினான்.

''நீங்க...?''

ஜோஷிதா கேட்டு அவனைக் கூர்மையுடன் பார்த்து...

''உன்னை உயிருக்குயிரா நேசிக்கிறேன், ஜோஷிதா!''

விஷ்வஜித் உயிரில் கலந்த... உணர்வு பூர்வமான வார்த்தைகளைக் கோர்த்துச் சொல்லிவிட்டு... அவள் கண்களைச் சந்திக்க...

ஜோஷிதாவின் குவளை மலர்க் கண்களில் சட்டென்று அச்சம் குடிகொண்டது!

''ஆமாம்... ஜோஷிதா! நான் உன்னைச் சுவாசிக்கிறேன்!''

''விளையாடறீங்களா...?''

''உன்னைக் கண்ட நொடியே...''

''ஏதாவது உளறாதீங்க சார்!''

''எங்க குடும்பம் சிற்றரசர்கள் வழிவந்த குடும்பம்!''

''அதுக்காக நான் உங்களை நேசிக்கணுமா...?''

''என்னிடம் என்ன குறை?''

''குறை எதுவும் இல்லைதான்!''

''அல்லது நீ யாரையாவது நேசிக்கிறாயா...?''

விஷ்வஜித் லேசான சந்தேகத்துடன் கேட்க...

''ச்சே... ச்சே... வாயைக் கழுவுங்க சார்!''

ஜோஷிதா எரிமலையின் சீற்றத்தோடு கூறினாள்.

''அப்புறமென்ன...? என்னை நேசிப்பதுதானே...? நெஞ்சில் சுமப்பதுதானே...?''

''ஐயோ...''

ஜோஷிதா அருவருப்பான சொல்லைக் கேட்டாற் போலக் காதைப் பொத்திக் கொண்டாள்.

''என்னை நீ... இப்போ நேசிக்க வேண்டாம்! முறைப்படி என் பெற்றோரை அழைத்து வந்து... பெண் கேட்டு உன்னை மணந்து மனைவியாக்கிக் கொள்கிறேன்! அப்போது என்னைக் காதலித்தால் கூடப் போதும்!''

விஷ்வஜித் சர்வசாதாரணமாய்க் கூறினான்.

''இப்படிக் கூற உங்களுக்கு வெட்கமா இல்லையா...?''

''எதுக்கு வெட்கப்படணும்...? உன் கையைப் பிடித்து இழுத்தேனா...?''

''ச்சே...''

''அல்லது உன்னைக் கற்பழித்து ஏமாற்றினேனா...?''

''ஐயோ...''

''முறைப்படி பெண் கேட்டு, மணந்து, உன்னை மனைவியாக்கிக் கொள்கிறேன் என்பது சட்டப்படி குற்றமா...?''

விழிகளில் நெருப்பை மூட்டி ஜோஷிதா முறைத்தாள்.

''ஊரில் உலகில் நடக்காததா...? எவ்வளவு டீசண்டாய் என் காதலைத் தெரிவிக்கிறேன்! ஏற்றுக் கொள்ள மறுக்கிறாயே, பெண்ணே!''

விஷ்வஜித் கெஞ்சலோடு முடித்தான்.

''உங்களை என்னால் திருமணம் செய்து கொள்ள முடியாது!''

ஜோஷிதாவிடமிருந்து பட்டென்று பதில் வந்தது.

''ஏன்...? நீ ஆணும் இல்லாத, பெண்ணும் இல்லாத திருநங்கையா என்ன?'' என்று கூர்மையாகக் கேட்க...

''ஐயோ... ஏன் இப்படிக் கொல்றீங்க...? என்னை விரும்பக் காரணமென்ன...?''

''நீ என்னை மறுக்கக் காரணமென்ன...?''

விஷ்வஜித் அவளைப் போலவே கேட்டான். பின்னர்...

''காதலும் இல்லை... பெற்றவர்களின் எதிர்ப்பும் இருக்காது. அப்புறம் ஏன்...?''

''ஏன்.. ஏன்னா... ஏற்கெனவே ஒருத்தரோட எனக்கு நிச்சயமாயிடிச்சி!''

என்று ஜோஷிதா மெல்லக் கூறவும்...

விஷ்வஜித் தலையில் நெருப்பு விழுந்த கணக்காய்த் துடிதுடித்தான்.

''பொய் சொல்லாதே. ஜோஷிதா!''

''நிஜம் சார்!''

''என்னை மறுக்க இப்படி ஒரு பொய்யான காரணத் தைக் கற்பிக்காதே. ஜோஷிதா! வேண்டாம், ஜோஷிதா!'' விஷ்வஜித் கொஞ்சம் கடுமையாய்க் கூறினான்.

''சத்தியமா... நிஜமா சொல்றேங்க! என் ஊர் விழுப் புரம். பக்கத்துல திண்டிவனம்தான் மாப்பிள்ளையின் ஊர். அவர் பேர் ஈஸ்வர்...

பெங்களூருவில் இஞ்ஜினியரா தனியார் கம்பெனி யில வேலை பார்க்கிறார்!

என் பாட்டியைக்கூட கேளுங்க. உண்மையைச் சொல் வாங்க!

இன்னும் மூன்று மாதத்தில் திருமணம் தெரியுமா?''

ஜோஷிதா பொறுமையாய்ச் சொல்ல...

விஷ்வஜித் அதிகப்படியான ஆத்திரத்தில் பேசாமல் இருக்க...

''அட்ரஸ் கொடுத்துட்டுப் போங்க! பத்திரிகை அனுப்ப றேன்! திருமணத்துக்கு அஸ்வின் அத்தானோட வாங்க! மனதார வாழ்த்திட்டுப் போங்க, நான் நல்லாயிருக் கணும்ன்னு!''

விஷ்வஜித்துக்குப் பெரும் சீற்றம் பொங்கி விட்டது.

''ஏய்... ஏய்... நிறுத்துடி!'' என்று கத்தினான்.

''என்னைக் கொல்லாதேடி... என்னைக் கொல்லா தேடி... என்னால் தாங்க முடியலே...''

வேகமாய்க் கத்தியவன் அடுத்த நொடி தழுதழுத்த குரலில் கூற...

''உங்களைக் கவரும்படி நான் எதுவுமே செய்யலையே! என்னிடம் எது உங்களுக்குப் பிடிச்சது? ம்...?''

ஜோஷிதா மெல்லக் கேட்டாள்.

''சொல்லத் தெரியலே, ஜோஷிதா! ஆனால் உன்னைப் பார்த்தவுடன் மயங்கிட்டேன்...!

உன் துணை... உன் இணை... உன்னவள்... உனக்காகப் பிறந்தவள்ன்னு... என் மனம் உன்னைக் கை காட்டி விட்டது!...

உன்னோடு சமீபமாய்க் கனவுகளில் காதல் மொழி பேசி யிருக்கிறேன்! கற்பனையில் கட்டிக் கொண்டிருக்கிறேன்!

நீயும், நானும் மணந்து இன்பமாய் வாழ்கிறோம்! அதன் விளைவாய் இரு குழந்தைகள்கூடக் கட்டித்தங்க மாய் நீ பெற்றுச் சீராட்டுகிறாய்!''

அவன் கண்கள் மினுமினுக்கச் சொல்லிக் கொண்டு போக...

''ஸ்டாப் இட் ஐ சே!''

ஜோஷிதா கத்தினாள்.

''நிஜம் ஜோஷிம்மா...''

''நீங்க பேசாதீங்க...''

''உன்னோடு கனவுகளில் கைகோர்த்து இருக்கிறேன்! காலம் காலமாய்... ஜென்ம ஜென்மமாய் நாம் வாழ்ந்து வருகிறோம்!''

''என்ன உளறல்?''

''அழகான முகம், கண், காது, மூக்கு, இதழ், உருவம் என்று கனவில் வந்து என்னை ஒரு பெண் தாலாட்டி

னாள். மடியில் போட்டுக் கொஞ்சினாள். அவளோடு சமீபமாய் வாழ்ந்தேன். ஜோஷிதா!

நேற்று இரவு நிஜத்தில்... என் கனவுப் பெண், கற்பனை நாயகியை நேரில் கண்டேன்! அது வேறு யாருமல்ல, நீ... நீதான்!''

''பெரிய பிஸினஸ் மேன்னு சொல்றீங்க! இவ்வளவு பெரிய திறமைசாலி, புத்திக் கூர்மையானவர் இப்படிக் கனவு, கற்பனைன்னு உளறறீங்களே! உங்களுக்கே இப்படி, வெட்கம், மானம்ன்னு இல்லாம உளறுறோம்னு தெரியலையா, மாஸ்டர் விஷ்வஜித்?''

''ஜோஷிதா...''

''என்னால் உங்களை மனக்க முடியாது!''

''பெரியோர்கள் பார்த்து நிச்சயம் பண்ணியதால் தானே...?''

''.....''

''மணவறை வரை வந்து நின்ற திருமணங்கள் எவ்வளவோ! மாறிய ஜோடிகள் எத்தனையோ...!

வெறும் நிச்சயதார்த்தம் என்ற சடங்குக்கு இப்படிப் பெரும் மதிப்புக் கொடுக்கிறாயே, பெண்ணே...

என் மனதிற்கு மதிப்புக் கொடுக்கவில்லையே, ஜோஷிம்மா! ப்ளீஸ் ஜோஷிம்மா...''

''பிடிக்கலேன்னு சொல்ற பெண்ணிடம் இப்படி அசிங்கமா கெஞ்சறீங்களே...?''

ஜோஷிதா கொஞ்சம் காரமாய்க் கேட்டாள்.

''ஏய் ஜோஷி... எனக்கு அழகில்லையா...? அறிவில்லையா...? இல்லே... சொத்து, சுகமில்லையா...?''

''பண்பாடு இல்லே... பாரதத்தின் பண்பாடு தெரியாத காட்டுமிராண்டி நீங்க...!''

ஜோஷிதா குற்றம் சாட்ட... விஷ்வஜித் அதிர்ச்சியுடன் அவளை நோக்கினான்.

''ஏற்கெனவே ஒருத்தனுக்கு நிச்சயமானவன்னு விளக்கமா... விபரமா... சொல்றேன்! மீண்டும் இப்படி வற்புறுத்தறீங்களே!''

''உன் பாட்டிகிட்டே நான் பேசறேன்!''

''வேண்டாம்...! பணக்காரன் வந்ததும்... பல்லிளிச்சிகிட்டு மனசை மாத்திக்கிற பெண்ணில்லே, நான்!''

''இந்த அற்புதமான குணமும்தான் என்னை இன்னும் ஆழமா நேசிக்க வைக்குது!''

''எப்படி வரும் உங்க மேல காதல்...? ம்...? சொல்லுங்க...? ஏற்கெனவே ஒருத்தரோட நிச்சயமாயிடிச்சி! ஒரு பெண்ணுக்கு நிச்சயம் என்பது பாதித் திருமணம் முடிஞ்சாப்போல! அப்படிப்பட்ட என்னைத் தனியே வரச் சொல்லி இப்படிக் கண்டபடி பேசறீங்களே!

ஒழுக்கம்ன்னா தெரியுமா...? தெரியாதா...?

பள்ளியிறுதிவரை தமிழ்நாட்டுல படிச்சேன்னு சொல்றீங்க! எங்க தமிழ்நாட்டின் பண்பாட்டைக் கொஞ்சம்கூட கத்துட்டுப் போகலையா, மிஸ்டர் விஷ்வா...?''

''ஜோஷிதா... ஈஸ்வர்கிட்டே நான் பேசட்டுமா...?''

விஷ்வஜித் மீண்டும் கெஞ்சலோடு கேட்க...

''உடனுக்குடன் மனதை மாத்திக்கிற பெண்ணில்லே, நான்! இந்த விஷயத்தை இதோட விட்டுடுங்க! என் புருஷன்னா அது ஈஸ்வர்தான்!''

விஷ்வஜித் சட்டென்று அவள் கைப்பற்றினான்.

"ஜோஷி... ஜோஷிம்மா... என்னைப் புரிஞ்சிக்கோடா! என் மனதை அறிஞ்சிக்கோடா...!

உன்னை என் உயிராய்... உணர்வாய்... சுவாசமாய் நேசிக்கிறேன், கண்ணே!

என்னை ஏமாற்றி விடாதே, ஜோஷிம்மா!

என்னால் அதைத் தாங்க முடியாது!"

"விடுங்க! கையை விடுங்க! ஏன் இப்படி அநாகரிகமா நடந்துகிறீங்க...?

பெரிய பிசினஸ் மேன் இப்படிக் காலிப்பயலாய்... களவாணிப் பயலாய் நடந்துக்கலாமா...?"

ஜோஷிதா கையை உதற...

விஷ்வஜித் அந்தக் கைகளை விடாமல்... தன் நெஞ்சில் வைத்துக் கொண்டான்.

"இப்படித் தரம் தாழ்ந்து கெஞ்சறீங்களே... நடந்துக்கிறீங்களே... இந்தச் செயல் உங்களுக்கு வெட்கமா தெரியலே...? அவமானமா தெரியலே...?"

"நேசிக்கிற பெண்ணிடம் கெஞ்சுவதில் என்ன வெட்கம்...? எங்கிருந்து மானம் போகுது? ம்...? நீ ராணி மாதிரி வாழ வேண்டியவள்! போயும் போயும் ஒரு மாதச் சம்பளக்காரனைத்தான் கட்டிக் கொள்வேன் என்று பிடிவாதம் பிடிக்கிறாயே!"

அவள் மௌனமாய் முறைக்க...

"உன்னை மணக்க இன்னும் என்ன தகுதிகள் எனக்கு வேண்டும்?"

"எல்லாத் தகுதியும் இருக்கு! ஆனால், நீங்க வந்தது லேட்! உங்களுக்கு என்னைவிட அந்தஸ்தில், படிப்பில் உயர்ந்த பெண் கிடைப்பாள்!"

"எனக்கு நீதான் வேண்டும்!"

விஷ்வஜித் பட்டென்று சொன்னான்.

"நான் என்ன பொன்னா... பொருளா... விலை கொடுத்து வாங்கி அனுபவிக்க...? ம்...? நான் பெண் சார்!

உயிரும், உடலுமாய்... ரத்தமும், சதையுமான பெண்! எனக்குன்னு ஒரு மனதிருக்கு! எனக்குன்னு ஒரு ஒழுக்கம் இருக்கு! பண்பாடு இருக்கு! அதன் வரம்பை மீற மாட்டேன்!"

"என்னை மணந்தால் இளவரசி, நீ! இந்த இளவரசனின் மனைவியாக எத்தனையோ பேர் தவம் இருக்காளுங்க! நீ என் இருப்பிடம் வந்து பார்!"

விஷ்வஜித் நிமிர்வாய்க் கூறினான்.

"தவம் இருக்கறவளில் ஒருத்தியைக் கட்டிக் கொள்ள வேண்டியதுதானே?"

ஜோஷிதா திமிராய்க் கூறினாள்.

"உனக்கு ஒரு மனதிருக்கும்போது எனக்கும் ஒரு மனதிருக்கும் இல்லையா, ஜோஷிதா...?"

"ம்...!" என்று உதடு பிதுக்கித் தலையாட்ட...

"அந்த மன கர்ப்பக் கிருகத்தில் குடியிருப்பவள், நீதான்!"

"நேற்றுப் பார்த்த பெண்ணிடம் இன்று இப்படிப் பைத்தியமா உளறுகிறீங்களே, சார்!"

"நான் உன்னை ஜென்மா ஜென்மமாய்ப் பார்த்திருக்கிறேன், ஜோ!"

விஷ்வஜித் உருகலோடு சொல்ல...

"நீங்க சிம்லாவுக்குப் போனால் எதுக்கும் ஒரு மனநல மருத்துவரைப் பார்த்துடுங்க, சார்! பைத்தியம் முத்திடுறதுக்குள்ள ட்ரீட்மென்ட் எடுத்துக்கங்க, சார்! ப்ளீஸ்..."

ஜோஷிதா நக்கலாய்க் கூற...

"என்ன கிண்டலா...?"

"நான் சீரியஸா அட்வைஸ் பண்றேன், சார்!"

"உன் அட்வைஸைத் தூக்கிக் குப்பைத் தொட்டியில் போடு!"

நான் இப்போ தனி விமானம் எடுத்துட்டு வந்திருக்கேன்! உன் பயணமும் ஹெலிகாப்டர், விமானம், கப்பல், கார்ன்னு இருக்கும்!

கண்முன்னே ரோஜாக்களால் ஆன பாதை விரியும் போது முள் பாதையில்தான் பயணிப்பேன் என்று சொல்லுகிறாயே, ஜோஷிம்மா!"

"முள்பாதையானாலும் சந்தோசமாய் பயணிக்க... நான் காத்திருக்கும்போது உங்களுக்கு ஏன் கவலை?"

ஜோஷிதா அலட்சியமாய்ச் சொன்னாள்.

"முடிவாய் என்னதான் சொல்ல வரே?"

"சந்தோசமா போயிட்டு வாங்கன்னு சொல்றேன்!"

"நீ எனக்கு வேண்டும்!"

"சத்தியமா கிடைக்க மாட்டேன்!"

"நான் உன்னை நெஞ்சார நேசிக்கிறேன்!"

ஜோஷிதா முகத்தை அலட்சியமாய் வேறு புறம் திருப்பினாள்.

"என் நேசம் நிஜமானால்... என் நேசமே உன்னை என்னிடம் கொண்டு வந்து சேர்க்கும்!"

"ஆஹா... அற்புதமான கற்பனை!"

"என் தவம் உண்மையானால்... நீ எனக்குக் கிடைப்பாய்... என் காதலியாய், என் காதல் மனைவியாய்!"

"கட்டாயம் அது மட்டும் இந்த ஜென்மத்தில் நடக்காது!"

ஜோஷிதா சொல்லிவிட்டு இகழ்ச்சியாய்ச் சிரித்தாள்!

அந்த சிரிப்பு விஷ்வஜித்துக்குக் கடும் சீற்றத்தை உண்டு பண்ணியது!

கொஞ்ச நேரத்தில் ஜோஷிதா விறுவிறுவென மண்டபத்தை நோக்கி நடந்தாள்!

விஷ்வஜித் சீற்றம் குறைந்து... பெரும் சோகத்திற்கு உள்ளானான்!

அப்படியே செய்து வைத்த சிற்பமாய் நின்று விட்டான்!

5

விஷ்வஜித் கவலை தோய்ந்த முகத்துடன்... தாங்க முடியாத மனவலியுடன்... அப்படியே பெஞ்சில் சாய்ந்து விட்டான்!

அண்ணாந்து நிர்மலமான வானத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான்!

இதுவரை ஏற்படாத புது அனுபவம்... புத்தம் புதிதாய்த் தோல்வி என்று அவனைப் பெரும் புயலாய்ப் புரட்டிப் போட்டு... வேடிக்கை பார்த்தது!

அதன் விளைவாய் அவன் மனம் சில்லுச் சில்லாய் உடைந்து விட்டது!

அவன் கண்டதும், பார்த்ததும்... எங்கும் வெற்றிதான்! படிப்பிலாகட்டும்... தொழிலிலாகட்டும். இதுநாள் வரை வெற்றிக் கனியையே ருசித்தவன், விஷ்வஜித்.

'தோல்வி என்றால் என்ன?'

'அது எப்படி இருக்கும்?'

'அது எப்படிப்பட்ட தாக்கத்தை அளிக்கும்?'

'அது எப்படிப்பட்ட மனவலியைக் கொடுக்கும்?'

- என்றெல்லாம் அறியாதவன், விஷ்வஜித்.

வெற்றி, இன்பம் என்று இது நாள்வரை கண்டவனுக்கு... அதன் மறுபக்கமான தோல்வி, துன்பம் என்பதே தெரியாது!

அப்படியே வளர்ந்து விட்டவனும் கூட!

விஷ்வஜித் என்றால் அவன் மாநிலத்தில் எத்தனை மதிப்பு... எத்தனை மரியாதையைத் தருவார்கள்... மக்களாகட்டும், அரசியல்வாதிகளாகட்டும், அவன் பணியாளர்களாகட்டும்!

அப்படிப்பட்ட ஒருவனை ஒரு பெண் நிராகரித்தல் என்பது எவ்வளவு பெரிய வெட்கக் கேடு! எவ்வளவு பெரிய இழுக்கு!

ஒரு பெண்ணால் மறுக்கப்படுதல்... எவ்வளவு பெரிய துன்பம்!

எவ்வளவு பெரிய வேதனை!

எத்தனை பெரிய மான அவமானத்திற்குரிய செய்தி!

பெரிய மலையை வாங்க முடிந்தவனால்... ஜோஷிதாவின் சின்ன இதயத்தைத் தன் வசப்படுத்த முடியவில்லையே!

எல்லாவற்றிலும் பெற்ற வெற்றிகளெல்லாம்... பெரிய வெற்றியாய் அவனுக்குத் தெரியவில்லை!

காதலில் வெற்றி பெற முடியாததுதான் பெரிய தோல்வியாய்... துயரமாய்... துடிதுடிப்பாய்த் தெரிந்தது!

காதல் அவ்வளவு கடினமானதா...?

அல்லது எனக்கும் காதலுக்கும் ராசியில்லையா...?

ஒருவேளை அவளுக்கு மாப்பிள்ளை பார்த்து நிச்சயிக்கப்படாமல் இருந்திருந்தால்... விஸ்வஜித்தின் காதலை ஏற்றிருப்பாளா...?

காதல் மனைவியாக ஜோஷிதா சம்மதித்திருப்பாளா...?

எவ்வளவு சொத்துக்கள்...!

எவ்வளவு தொழில்கள்...!

எத்தனை பங்களாக்கள், அரண்மனைகள்...!

நான் எத்தகைய அழகுப் பேரழகன்...!

கடைசியில் பாரதப் பண்பாட்டையும், ஒழுக்கத்தையும் காரணம் காட்டி மறுத்து விட்டாளே!

அவளுள் நான் சிறு சலனத்தைக்கூட ஏற்படுத்தி இருக்க மாட்டேனா...?

எந்த மாதிரிப் பெண், அவள்?

மட்டியா...?

மடைச்சியா...?

அறிவிலியா...?

இல்லையில்லை... பணத்துக்காகப் பண்பாட்டை மறக்கும் பெண்ணில்லை, அவள்!

போற்றப்பட வேண்டிய பெண், அவள்!

பொக்கிஷமாய்க் காக்கப்பட வேண்டிய பெண், அவள்!

தெய்வமாய் வணங்க வேண்டிய பெண், அவள்!

பணத்துக்காகப் பல்லிளிக்கும் பெண்கள்...!

பணத்துக்காக உடலையே விற்கும் பெண்கள்...!

பணத்துக்காகக் காதலித்தவனை மறந்து அடுத்தவனை மணக்கும் பெண்கள்...!

பணத்துக்காகப் பெற்ற குழந்தைகளையும், கணவனையும் விட்டுவிட்டு... பணக்காரன் கிடைத்தால் வளைத்துப் போட்டு அவனோடு ஓடிப்போகும் கல்யாணமான சில பெண்கள்...!

இப்படி ரகரகமாய்ப் பெண்களைப் பார்த்த அவனுக்கு ஜோஷிதாவின் பேராசையற்ற உள்ளம் ரொம்பவே பிடித்திருக்கிறது!

ஆசையை ஒழித்த அவளின் அன்பு இதயத்தை அவனுக்கு மிகமிகப் பிடித்திருக்கிறது!

ஆசையே துன்பத்திற்குக் காரணம்... ஆசையை ஒழித்தால் துன்பமின்றி வாழலாம் என்ற புத்த பெருமானின் வழித்தோன்றலா, இந்த ஜோஷிதா...?

ஈஸ்வரின் உள்ளத்திற்கு மதிப்பளிக்கும் இந்த ஜோஷிதா... உயிர்களிடத்து அன்பு வேண்டும் என்று கூறிய வள்ளலாரின் பரம்பரையில் வந்தவளா...?

பெண்ணே...

பேரழகே...

என் கண்ணே...

என் கண்ணின் மணியே...

என்னவளே...

என்னில் நுழைந்தவளே...

உன்னை எண்ணி எண்ணி வியக்கிறேனடி, சகியே!

உன் அலாதியான... உன் அன்பு நெஞ்சில் கரைந்து காணாமல் போகத் துடிக்கிறேனடி... என் செல்லமே!

உன்னை நினைத்து நினைத்து என் நெஞ்சம் நெகிழ்கிறதடி... என் நித்திலமே!

உன் மேலான பிரியம் மேலும் மேலும் கூடிக் கொண்டே போவதால்... என்னால் என் மனப் பாரத்தைத் தாங்க முடியவில்லையடி... என் சித்திரப் பாவையே!

நேசிக்கிறேனடி!

உன்னை என் நெஞ்சார... இதய பூர்வமாய்ப் பூஜிக்கிறேனடி!

உன்னையன்றி இனி எந்தப் பெண்ணையும் ஏறெடுத்தும் பாரேன்!

இந்தப் பிறவி முழுக்க உன் நினைவுகளில் மூழ்கி... உன் நெஞ்சோடு, நினைவுகளோடு வாழ்ந்து விடுவேன்!

உன்னைக் கண்ட நொடியே பிறவிப் பலனை முழுவதும் துய்த்து விட்டேன், கண்மணி!

மறு பிறவியிலாவது என் மனைவியாவாயா, என் மாணிக்கமே?

மாறமாட்டாய்தானே...?

அப்போது நான் உன்னை முதன் முதலில் சந்திக்க வேண்டும்!

சந்தித்துக் காதல் கொள்ள வேண்டும்!

ஷாஜகான், மும்தாஜின் மேல் வைத்த காதலைவிட என் காதல் சிறந்தது! என் காதல் பின்னாளில் சரித்திரமாய் மாறும்!

விஷ்வஜித்தின் மூடிய விழிகளில் இருந்து கண்ணீர்த் துளிகள் கன்னத்தில் உடைந்து சிதறின.

காலடி ஓசை செவிகளில் கேட்டது!

விஷ்வஜித் உஷாரானான்!

விழிகளில் வழிந்த நீரைத் துடைத்தான்!

உள்ளுக்குள் பொங்கிய உணர்வுகளை நெஞ்சுக் குழிக்குள் புதைத்தான்!

அருகில் வந்து நின்ற ரமேஷ், ராஜாவைப் பார்த்தான்.

இதழ் விரித்துப் புன்னகைக்க முயற்சித்தான்!

ஆனால் முடியவில்லை!

"என்னடா அண்ணி வந்தாங்க போல?" ரமேஷ் கேட்டான்.

"ஆமாடா!"

விஷ்வஜித் சுரத்தே இல்லாமல் வாடிய முகத்துடன் சொன்னான்.

"பேசினியா...?"

"ம்கூம்!"

விஷ்வஜித் பொய் சொன்னான்.

"ஏன்...?"

"அவள் முகம் பார்த்துப் பேசத் தைரியம் வாலே! அவளிடம் என் நேசத்தை, நெஞ்சத்தின் ஆசையை உடைச்சிக் காட்டப் போறேன்னு தைரியமா சொல்லிட்டு வந்தேன். ஆனால் அவள் முகத்தைப் பார்த்ததும்... எங்கிட்ட இருந்த தைரியம் எல்லாம் எங்கே ஓடி ஒளிஞ்சதோ தெரியலே! பேச முடியலே!"

"பொய் சொல்லாதே, விஷ்வா! உன் முகமும், கண்களும் ஏன் ஒரு மாதிரி இருக்கு? என்ன நடந்தது சொல்லு, விஷ்வா? முகம் மனதைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி!"

ராஜா கோபமாய்ச் சீறினான்.

"உன்னை இது நாள்வரை இப்படி வாடிச் சோர்ந்து பார்த்ததில்லே! கண்ணும் கலங்கித்தான் இருக்கு!

உண்மையைச் சொல்... ஜோஷிதா கிட்ட நீ உன் காதலை வெளிப்படுத்தினப்போ... என்ன பதில் சொன்னாள்?"

ரமேஷ் சீற்றத்துடன் வெடித்தான்.

"மறுத்துட்டாளா...? சொல்லு, விஷ்வா..." ராஜா விஷ்வாவின் அருகில் அமர்ந்து, தலை கோதிப் பாசத்துடன் கேட்க...

அதற்கு மேல் தாங்க முடியாத விஷ்வா...

"ஆமாடா!" என்றான்.

ஜோஷிதாவுக்கும், தனக்கும் நடந்த உரையாடல்களை வரி விடாமல் இருவரிடமும் ஒப்பித்தான்.

''ச்சே... என்ன பெண் அவள்...!''

''காலடியில் சொர்க்கம் வந்து வழி மறிக்கும்போது... அந்தச் சொர்க்கத்தை எட்டி உதைத்துவிட்டு... நீண்ட தூரம் நடந்து... நரகத்திற்குப் போகப் போறேன்னு சொல்லி யிருக்காளே!''

''நிஜமாகவே அவள் நல்ல சிந்தனையோட இருக்கற பெண்ணா தெரியலே!''

''அவள் ஏதாவது அரைக் கிறுக்கியாத்தான் கட்டாயம் இருக்கும்ன்னு தோன்றுது!''

''உன் தகுதிக்கு அவள் ஈடாக மாட்டாள், விஷ்வா!''

''உன் அந்தஸ்துக்கும், திறமைக்கும், வசதிக்கும் அவளை மனசால நினைக்கறதே அருவருப்பு, தெரியுமா...?''

''அவளைப் போய் நீ காதலிக்கிறேன்னு சொல்றதும், கெஞ்சினேன் மறுத்துட்டான்னு அழறதும், துன்பப் படறதும், துயரப் படறதும் கேலிக் கூத்தாதான் இருக்கு!''

''அஸ்வின்கிட்ட அவளைப் பற்றி விசாரிச்சேன்! ஏதோ ட்ராவல் ஏஜென்சியில் மூன்றாயிரம், நாலாயிரம் ரூபாய்க்கோ வேலையில இருக்காளாம்!''

''படிப்பு வெறும் பிளஸ் டூ தானாம்!''

''பி.ஏ. படிக்க ஆசையாசையா கல்லூரியில சேர்ந் தாளாம்! ஆனால் கல்லூரிக்கு பீஸ் கட்டிப் பாட்டியால படிக்க வைக்க முடியாமல் போயிடிச்சாம்! அதனால் படிப்பைப் பாதியிலே விட்டுட்டு வந்துட்டாளாம்!''

''இப்போ வேலை பார்த்துட்டே... சிதம்பரம் அண்ணா மலை யுனிவர்சிட்டியில, தொலைதூரக் கல்வி இயக்ககத் துல சேர்ந்து... பி.ஏ. படிப்பை கரஸ்ல படிக்கறாளாம்!''

''ஈஸ்வர் அவள் அழகுல மயங்கிப் பெண் கேட்டு வந்தவனாம்! ஈஸ்வர் வீட்டுல இவள் வேண்டாம்ன்னு பயங்கர எதிர்ப்பாம்!''

இருவரும் மாறி மாறிச் சொல்லிக் கொண்டு வர... இடைமறித்தான், விஷ்வஜித்.

''ஏன்...?''

சட்டென்று அந்தக் கேள்வியைக் கேட்டான்.

''அவன் படிப்புக்குத் தகுந்தாற்போல இவளால் அவ னுக்கு வரதட்சிணை கொடுத்து மணந்துக்க முடியுமா? நிறையப் பவுனும், டூ வீலர், போர் வீலர்ன்னும் அவள் பாட்டியால வாங்கித் தர முடியுமா...?''

ஈஸ்வர் குடும்பம் பேராசை பிடிச்ச குடும்பமாம்!

அதனால் வேண்டாம்ன்னு மறுத்துட்டாங்களாம்!

ஈஸ்வர்தான் இந்தப் பெண்ணே வேண்டும்ன்னு பிடிவாதம் பிடித்தானாம்!

சம்பாதிக்கிற ஒத்தப் பையனின் பேச்சை எதிர்த்துட் டால் எதிர்காலம் பாழாப் போயிடும்ன்னும் வருமானம் தன் கைக்கு வராதுன்னும் பயந்து அவன் அம்மா அரை மனதாய் ஒத்துட்டாளாம்!'' ராஜா சொல்லி முடிக்கவும்...

''இப்படிப்பட்ட எந்தத் தகுதியுமே இல்லாத பெண்ணை உன் மனம் நினைத்ததே! நாடியதே!''

ரமேஷ் இழிவாய்ச் சொல்லி முடிக்கவும்... விஷ்வஜித் துக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது.

''ஏய் ரமேஷ் நிறுத்துடா...! இதுக்கு மேலே ஒரு வார்த்தை அவளைப் பற்றிப் பேசாதே!...

பெண்ணின் பணம், படிப்பு, சொந்த பந்தம்ன்னு பார்த்து அவளை எடை போடக் கூடாது!

அவளுடைய குணம், மனம், பண்பாடு, ஒழுக்கம் பார்த்துதான் எடை போடணும்!

ஜோஷிதா சொத்து, சுகத்துல வேண்டுமானால் ஏழையா இருக்கலாம்!

ஆனால், நல்ல மனசுல, பண்பாட்டுல, ஒழுக்கத்துல அவள் பணக்காரிடா! குணத்துல பாசக்காரிடா...! சிறந்தவள்டா...!

பணக்காரி சிறந்தவளா...? இல்ல பாசக்காரி சிறந்தவளா...?

அந்த வேறுபாடுகூட தெரியாமல் எதுக்கு என் ஜோஷிதாவை மட்டமா எடைபோடறே...?''

விஷ்வஜித் கோபத்தோடு ரமேஷ்க்கு விளக்கவும்... ராஜா சொன்னான்.

''இத்தனை நல்ல மனதுக்காரனைப் போய் குருடியாட்டம் நிராகரிக்கிறாளே! மனதை ஒடிய வைக்கிறாளே! சரி விஷ்வா... அவளை விட்டுத் தள்ளுடா! இவளைவிட எல்லாவற்றிலும் சிறந்த பெண் உனக்கு மனைவியாக வாய்ப்பாள்!''

''என் ஜோஷிதாவைத் தவிர... இந்தப் பிறவியில வேற எந்தப் பெண்ணையும் நினைத்துக்கூடப் பார்க்க மாட்டேன்!

எனக்குத் திருமணம் என்று ஒன்று நடந்தால் அது என் ஜோஷிம்மாவோடுதான்!''

விஷ்வஜித் முடிவாய்ச் சொல்ல... இருவரும் மிரண்டு விட்டனர்.

''என்ன உளறல்...? அவள்தான் வேறு ஒருவனை மணக்கப் போறாளே...!''

ராஜா கோபமாய்க் கேட்க...

''அவளை நினைச்சிட்டே சன்னியாசியா வாழ்ந்துடுவேன்!''

''டேய்... டேய்... மடையா.. மடையா... மாற்றான் பெண்டாட்டியை நினைக்கறது தப்புன்னு தெரியாதவனா...?''

''ஈஸ்வர் மனைவி ஜோஷிதாவை நினைக்கவே மாட்டேன்!''

''அப்புறம்...?''

''என் நெஞ்சிலும்... என் உயிரிலும்... கற்பனையிலும்... கனவிலும் கலந்துவிட்ட என் கனவுத் தேவதை ஜோஷிதாவைத்தான் நினைப்பேன்!''

''விஷ்வா... விஷ்வா...''

''அவளோடு கனவுகளில் குடும்பம் நடத்தி... கற்பனையில் இப்பிறவி முழுக்க வாழ்ந்து விடுவேன்!''

''நீயொன்னும் வயோதிகனில்லே... வாலிபன்! உள்ளத்தை அடக்க முடியும்! ஆனால் உடலையும், உணர்வையும் உன்னால் அடக்க முடியுமா, விஷ்வா...? இது போல ஒரு முடிவு உனக்குத் தேவையா விஷ்வா? அவளை மறடா விஷ்வா, சிம்லாவுக்குப் போய்...''

''என் உடம்பையும்... என் உடம்பில் பூக்கும் உணர்வுகளையும்... எனக்கு அவள் மேல் தோன்றிய காதல் அடக்கிவிடும்!''

விஷ்வஜித் இவ்வாறு கூற...

ராஜா அவனை இறுக்கிக் கட்டிக் கொண்டான்.

''நிஜமாகவே உன் காதலை எண்ணி வியக்கிறேன், விஷ்வா...

உன் காதல் கொண்ட இதயத்தைக் கண்டு பெருமைப்படுகிறேன், விஷ்வா!

உன்னை என் நண்பன்னு சொல்லிக்கிறதே, எனக்குப் பெருமைதான்டா!

உன்னை என் நண்பனா அடைஞ்சது... எப்பேர்ப்பட்ட பேறு தெரியுமா...? எப்பேர்ப்பட்ட வரம் தெரியுமா...?''

ரமேஷ் உணர்ச்சி மிகுதியில் அவனைத் தட்டிக் கொடுத்துச் சொன்னான்.

''உன் காதலைக் கண்டு... காதலே உன்னைக் காதலிக்கும், விஷ்வா!

உன் நேசம் நிஜமானால்... ஏதாவது ஒரு விதத்தில் உனக்கு ஜோஷிதா கிடைப்பாடா!''

''உன் காதல் நிறைவேற இறைவனை என்றும் பிரார்த்தித்து இருப்போம், விஷ்வா!''

ராஜா கூறி முடிக்கவும்... அஸ்வின் வேக நடையுடன் அங்கு வந்து சேரவும் சரியாய் இருந்தது.

''ஏய் விஷ்வா... என்ன இங்கே வந்து உட்கார்ந்துட்டே!'' என்று விஷ்வாவைப் பார்த்துக் கேட்டவன்...

''ஏய் மடையன்களா... விஷ்வாவை அழைத்து வாங்கடான்னு விரட்டினால்... நீங்களும் இங்கே வந்து நீட்டி உட்கார்ந்துட்டீங்க! சாப்பிட இலை போட்டாச்சி! விஷ்வா... நேரமாச்சி. சாப்பிட வாடா!''

அஸ்வின் தோள்பற்றி எழுப்ப... மறுக்க முடியாமல் அவனோடு சென்றான். பின்னாடியே ராஜாவும், ரமேஷும் சென்றனர்.

விஷ்வா கை கழுவிக் கொண்டு அமர்ந்தான். அவனுக்கு வலப்புறம் அஸ்வின், தாரிகா உட்கார்ந்தனர்.

இடப்புறம் ரமேஷ், ராஜா உட்கார்ந்தனர்.

அவர்களின் சொந்தப் பெண்களே பந்தி பரிமாறினார்கள்!

அவர்களில் ஒருத்தியாய் ஜோஷிதாவும் நின்றிருந்தாள், கையில் இனிப்பு அடங்கிய தட்டுடன்!

உணவு தொண்டையில் இறங்க மறுத்தது, விஷ்வாவுக்கு.

இரவு... ஜோஷிதா என்னவள் என்று உண்டதில் கணக்கு இல்லாமல் உள்ளிறங்கியது!

உரிமையுள்ளவள், எனக்காகவே பிறந்தவள் என்ற ஜோஷிதா இப்போது மாற்றானுக்கு மாலையிடப் போகிறவள் என்று நினைக்கும்போது நெஞ்சம் இரும்பாய், பாறாங்கல்லாய்க் கனத்தது!

தொண்டையில் பிடி உணவு கூட இறங்க மறுத்தது!

உணவைக் கைகளால் கிண்டிக் கொண்டிருந்தான்!

அவனுக்குக் கசப்பைக் கொடுத்துவிட்டு இனிப்போடு வந்த ஜோஷிதாவைக் காணக் கண்கள் கரித்தன.

'நீயொரு ஆண்! கண்கள் கலங்கலாமா...?''

அவன் மனம் அறிவுறுத்தியது.

காதல் தோல்வி என்று வந்துவிட்டால் ஆண், பெண் என்ற வித்தியாசத்தை எப்படிக் கண்களும், கண்ணீரும் அறியும்?

விஷ்வஜித்தின் தோற்றம் கண்டு ஜோஷிதாவிற்கே ஒரு மாதிரி இருந்தது.

''என்ன விஷ்வா...? ஏன்டா...?''

அஸ்வின் அக்கறையாய்க் கேட்டான்.

''என்னங்க.. உணவின் சுவை பிடிக்கவில்லையா, என்ன?''

தாரிகா அன்புடன் கேட்டாள்.

''இல்லம்மா! வயிறு பசிக்கலே! ஸாரிம்மா... ஸாரிடா, அஸ்வின்!''

என்று சொன்ன விஷ்வஜித் எழுந்து கை கழுவப் போனான்.

இலையில் வைத்த அத்தனை உணவு வகைகளும் அப்படியே இருப்பதைக் கண்டாள், ஜோஷிதா!

அவனின் இந்தச் செயலுக்குத் தான்தான், தன்னுடைய பேச்சுதான் காரணம் என்று அறிந்தாள், ஜோஷிதா!

மனதில் பெரிய ராட்சச முள் ஒன்று குத்தி... மனத்தை ரணப்படுத்திச் சிரித்தது!

மூன்று மணி வாக்கில் விஷ்வா கிளம்புவதாய்க் கூறினான்.

''விஷ்வா... வீட்டுக்கு மீண்டும் வந்துவிட்டு... மாலை கிளம்பிச் செல்லக் கூடாதா...?''

அஸ்வின்தான் கேட்டான்.

''இல்ல அஸ்வின்! அங்கே போட்டது போட்டபடி கிடக்கும்ன்னு உனக்கே தெரியும்தானே...?''

''ம்...''

''ஆஸ்திரேலியன் வேற வந்து காத்திருப்பான்!''

''ஆமா!''

''அவனை நாளைக்குச் சந்தித்து ஒப்பந்தம் போடணும்! அம்மா உடல்நிலை எப்படி இருக்குன்னு தெரியலே! நேற்று பீவரோட அவங்களை விட்டுட்டு வந்திருக்கேன்!''

''அதெல்லாம் அப்பா பார்த்துப்பார்!''

''பார்த்துப்பார்தான்! அதுகூட இப்போ பெரிய விஷயமில்லே! வானில் லேசாக மேக மூட்டமா இருக்கு! கார் பயணம் என்றால் பரவாயில்லே! ஆனால், இது விமானப் பயணமில்லையா...? பொழுதோட போனால் நல்லதில்லையா...? வானிலை மோசமாகறதுக்குள்ளே கிளம்பறேன், அஸ்வின்!''

''சரிடா!'' என்றான், அஸ்வின்.

''அம்மாவைக் கேட்டதா சொல்லுங்க, விஷ்வா!''

''சரிம்மா தாரிகா! நீயும் உடனே புறப்பட்டு வாம்மா! அம்மா உன் பிரிவைத் தாங்க மாட்டாங்க! பிரசவத்தை அங்கே வச்சிக்கலாம்!

உன் பெற்றோர்களையும் கூட்டிட்டே வந்துடுங்க! சரியா, தாரிகா?''

''ம்...!''

தாரிகா பலமாய்த் தலையாட்டினாள்.

விஷ்வஜித் கிளம்பினான்.

சட்டென்று நின்றான். அஸ்வினைப் பார்த்துச் சொன்னான்.

''அஸ்வின்... இரவு உணவிட்டாங்க இல்லையா... ஜோஷிதா?''

''ஆமா... அவளுக்கென்ன?''

"அவங்களுக்கு ஒரு நன்றி சொல்லிப் புறப்படறேனே!"

"செய், விஷ்வா!"

மண்டபத்தின் பின் கட்டில் ஜோஷிதா தனியே அமர்ந் திருந்தாள்.

விஷ்வஜித் உணவு உண்ணாதது அவளுக்குக் கஷ்ட மாய்ப் போய்விட்டது. அதை எண்ணி வருத்தமுடன் அமர்ந்திருந்தாள்.

அவளருகே விஷ்வா வர...

இதுவரை அவனை எண்ணி மென்மையாய் நிராகரிப் பைச் சொல்லியிருக்கலாமே என்று வருந்திக் கொண் டிருந்த ஜோஷிதாவினுள்... அருகே வந்த விஷ்வஜித்தைக் கண்டதும் எரிமலை லாவாவாய்க் கோபம் பொங்கியது.

"ஜோஷிதா..." என்று மேலே பேசப் போனவனைக் கையமர்த்தினாள்.

"அதான் என் மறுப்பைச் சொல்லிட்டேனே, மிஸ்டர் விஷ்வஜித்!"

ஜோஷிதா கோபமாய்ச் சொல்ல... விஷ்வஜித் புரி யாமல் முழிக்க... மீண்டும் அவளே தொடர்ந்தாள்.

"ஒருமுறை சொன்னால் புரிஞ்சிக்க மாட்டீங்களா...? ஏன் சார் மீண்டும் மீண்டும் திருமணம் நிச்சயித்த பெண்ணுக்குத் தொல்லை கொடுக்கறீங்க?...

காதல் கெஞ்சிப் பெறுவதோ... கேட்டுப் பெறுவதோ அல்லன்னு தெரியாத முட்டாளா நீங்க...?

காதல் என்பது இரு மனதில் பொங்கும் அன்பு... ஆசை! பெரும் வரம்!

சட்டென்று இயல்பாய்... இயற்கையாய்... நொடிப் பொழுதில் காட்டுப் பூக்களாய்... இதயமெல்லாம் பூத்துக் குலுங்கும் செயல் அது!...

காதல் ஒருவழிப் பாதையல்ல! அது இருவழிப் பாதை! கண்ணும் கண்ணும் கலந்து... நெஞ்சும் நெஞ்சும் கட் டுண்டு... உயிரும் உயிரும் கலந்து... கரைந்து சுடர் விடும் தீபம்தான் நேசம்!

அந்த நேச மழையில் இரு நெஞ்சமும் நனைய வேண் டும்! உங்களிடம் ஏற்பட்டு உள்ள காதல் கைக்கிளைக் காதல்! கைக்கிளைக் காதல் உவர் நிலத்தைப் போன்றது! எதற்குமே பயன்படாத உப்பு நீரைப் போன்றது! பாலை வனப் பரப்பைப் போன்றது! கள்ளியின் கனியைப் போன்றது!

யாராவது உவர் நிலத்திற்கும்... உப்பு நீருக்கும் பாலை வனத்திற்கும்... கள்ளியின் கனிக்கும் ஆசைப்படுவார் களா...? அதுபோல்தான் கைக்கிளைக் காதல் பயனற்றது! வாழ்க்கைக்கு உதவாதது!

என்னை நினைக்கக் கூடாது, மிஸ்டர் விஷ்வா!

உங்களுடையவள் நானல்ல...! உங்களுக்காக ஒருத்தி எங்கோ பிறந்து... வளர்ந்து... கையில் மாலையோடு காத் திருப்பாள், உங்கள் கழுத்தில் சூட! அவளை விரைவில் காணுவீர்கள்!"

என்று கோப ஆவேசமாய் ஜோஷிதா முடித்தாள்.

"ஹலோ மிஸ்... இவ்வளவுதானா...? இன்னும் பேச வேண்டியது ஏதாவது இருக்கா...? எனக்கும் காதல் கெஞ்சிப் பெறும்... கேட்டுப் பெறும் பிச்சைப் பொரு ளன்று என்று தெரியும்! காதல் வரமென்றும் தெரியும்!

கைக்கிளைக் காதலை நானுமே அறிவேன்! எனக்கும் கொஞ்சம் இலக்கியங்கள் தெரியும். குறுந்தொகை, நற்றிணை, பத்துப்பாட்டு, எட்டுத் தொகை என்று...!

''என் காதல் கைக்கிளைக் காதல்தான் என்று எனக்குமே தெரியும்! அத்தனை முட்டாள் நானல்ல. மிஸ் ஜோஷிதா! இப்போ... இங்கே... நான் உங்களிடம் வந்தது... எதாவது தவறாய்ப் பேசியிருந்தால்... உங்கள் மனம் வருந்தும்படி... புண்படும்படி பேசியிருந்தால் மன்னிப்புக் கோரவும்... விடை பெறவும்... உங்கள் மண வாழ்க்கைக்கு 'ஆல் த பெஸ்ட்' சொல்லவும் தான்! நான் வருகிறேன், ஜோஷிதா!''

விஷ்வஜித் கூறி முடிக்க...

''ஸாரி... ஸாரிங்க, சார்!''

ஜோஷிதா இதயபூர்வமாய்க் கையெடுத்து வணங்கி மன்னிப்பைக் கோரினாள்.

அவளை விழிகளால் ஆழ்ந்து ஸ்பரிசித்துக் கொண்டு சென்றான், விஷ்வஜித்!

காரில் ஏறும் சமயம்தான் ரமேஷ் அங்கே இல்லாதது தெரிந்தது.

''ரமேஷ்... எங்கேடா, அஸ்வின்?''

விஷ்வஜித் கேட்டான்.

ரமேஷ் எதிர்ப்புறமிருந்து ஓடிவந்து விஷ்வஜித்தின் கைகளில் ஒரு கவரைத் திணித்தான்.

அதை வாங்கிக் கொண்ட விஷ்வஜித்...

''பை ரமேஷ்...'' என்று சொல்ல...

கார் கிளம்பியது.

அவர்களின் உருவம் கண்களுக்கு மறைந்ததும்... கவரில் என்ன இருக்கிறது என்று ஆர்வம் பொங்க... கவரைப் பிரித்தான், விஷ்வஜித்.

ஜோஷிதா குளிர் பானத்தோடு விஷ்வஜித்தின் அருகில் வந்தது...

ஜோஷிதா அவன் மேல் தடுக்கி விழுந்தது...

அவன்... அவளைத் தாவி அணைத்தது...

ஜோஷிதாவின் கைகளில் வளையல்களை வலுக் கட்டாயமாய்த் திணித்தது...

ஜோஷிதாவோடு ஒட்டிக் கொண்டு நின்றது.

என்று விதவிதமான போஸ்களில் ஜோஷிதாவும், தானும் இருந்த போட்டோக்களைப் பார்த்து ஆனந்தக் கூத்தாடினான், விஷ்வஜித்!

6

மலைச் சிகரங்கள்... மரங்கள்... புல்வெளிகள்... பங்களாக்கள் அனைத்தும் பனி உடை உடுத்தி... குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தன.

காதலனின் வரவுக்காய்க் காத்திருக்கும் கன்னியாய் ஆதவனின் வரவுக்காய்க் காத்திருந்த, இனிய இளங்காலைப் பொழுது!

தோட்டத்து மலர்கள் மலர்ந்து பிரகாசிக்க... பனி அதனை ஆசையுடன் ஆரத் தழுவி முத்தமிட்டுக் கொண்டிருந்தது!

பங்களாவின் முன்புறம், பின்புறம் விதவிதமான மலர்ச் செடிகளால் அலங்கரிக்கப்பட்டு நந்தவனமாய்க் காட்சியளித்தது!

விஷ்வஜித் ஜோஷிதாவின் நினைவில் இரவு முழுக்க கொட்டக் கொட்ட விழித்திருந்து விட்டு... விடியற் காலையில்தான் உறங்கினான்.

இதுவே தினந்தோறும் வாடிக்கையானது!

அவனிடம் ஏற்பட்ட மாற்றம் அனைவரையும் கண் காணிக்க வைத்தது!

சரியாய் உண்ணாமல்....

சரியாய் உறங்காமல்...

வெட்ட வெளியை வெறித்துக் கொண்டும்...

தனிமையை நாடிப் பெருமூச்சு விட்டுக் கொண்டும்... இருக்கும் மகன் விஷ்வஜித்தைச் சிவரஞ்சனி கவனிக்கத் தவறவில்லை!

விஷ்வஜித் வந்த கொஞ்ச நாளிலேயே தாரிகாவும், அஸ்வினும் வந்து சேர்ந்தனர்.

விஷ்வஜித்தின் வேலைப் பளுவை அஸ்வின் வந்து குறைத்திருந்தாலும்... இதயத்தில் ஏற்றிய காதல் பளு அவனை நிம்மதியாய் இருக்கவிடாமல் மூச்சுக்காற்றுக் காய்த் தவிக்க வைத்தது!

பிடி உணவு இறங்கவில்லை!

உடற்பயிற்சி செய்யவில்லை!

பார்ட்டி, கொண்டாட்டம் என்று கலந்து கொள்ள விரும்பவில்லை!

காலையில் எழுந்து தொழிற்சாலைகளுக்குச் செல்வான்!

இரவு வரை வேலையை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வான்! வேலை செய்யும் பொழுது ஜோஷிதாவின் நினைவுகள் அவனை நெருங்காது.

அதனாலேயே அதிகப்படியான வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தான்.

மற்ற நேரங்களில் எதைப் பார்த்தாலும் ஜோஷிதாவாய்த் தெரிந்தது! யாரைப் பார்த்தாலும் ஜோஷிதாவாய்த் தெரிந்தது!

ஆபீஸில் ஒருநாள்...

அவன் ஊழியை ஒருத்தியில் ஜோஷிதா தெரிய... அவனை மறந்து... அவளைப் பார்த்து.. லேசாய் மலர்ச்சியோடு புன்னகையைச் சிந்திவிட்டான்!

அவ்வளவுதான். மறுநாள் அவனிடம் ஒரு லட்டரை நீட்டிவிட்டாள், அந்த ஊழியை!

'அன்பே... ஆருயிரே... உங்களின் பார்வை ஒரு வரமாய்க் கிடைக்காதா என்று ஏங்கிய எனக்கு... நேற்று அந்த வரம் கிடைக்க மகிழ்ந்து போனேன், இதயமே! உங்களின் மேலான என் காதலை..

நெஞ்சுக்குள் பொத்திப் பொத்திப் பத்திரமாய்ப் பாது காத்து வருகிறேன். உங்களிடம் என் நேசத்தை விவரிக்க கால நேரம் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு... உங்களின் மலர்ச்சியான புன்னகை... மந்திர நம்பிக்கையைக் கொடுத்து விட்டது! அதன் விளைவுதான் இந்த அன்புக் கடிதம்!'

அவள் இவ்வாறு கடித உரையை முடித்திருந்தாள்.

அவள் மேல் அவனுக்குக் கோபம் வரவில்லை!

மாறாக, அவன் மேலேயே கடும் கோபம் வந்தது!

அப்படியென்ன மனம்... மண்ணாங்கட்டி...!

யாரைப் பார்த்தாலும் ஜோஷிதாவாய் நினைத்து இப்படிப் பழிவாங்குகிறது!

மனம் கட்டுத்தறியைப் பிய்த்துக் கொண்டு ஓடும் கன்றாய் ஜோஷிதாவின் நினைவில் சுற்றிச் சுழல...

கஷ்டப்பட்டு... கடும் முயற்சி செய்து... பலமான பெரிய கயிறு கொண்டு கட்டி... தன் வசப்படுத்தினான்.

அதன் பிறகு மனம் வாலைச் சுருட்டிக் கொண்டு சொன்னபடி கேட்டது!

அவன் டைனிங் ஹால் வர... அம்மா பரிமாறினாள்.

முகத்தில் சிறு மலர்ச்சியில்லாமல் வாடி... கடமைக்காய் டிபனை மெல்ல விழுங்கும் விஷ்வஜித்திடம் சிவரஞ்சனி கேட்டார்.

''விஷ்வா... உனக்கு என்னப்பா ஆச்சி...? ஏன் இப்படி இருக்கே?''

''எப்படிம்மா...?''

''கடந்த ஒரு மாதத்திற்கு மேலாய் நீ சரியில்லே, விஷ்வா.. என்ன விஷயம்...? ஏதாவது தொழில் தொடர்பான பிரச்சனையா...? தொழிலாளர்கள் பிரச்சனை செய்யறாங்களாப்பா...?''

''அதெல்லாம் இல்லேம்மா!''

''வியாபாரத்துல ஏதாவது நஷ்டமா...?''

''இல்லம்மா!''

''பின்னே ஏன் உன் முகமே சரியில்லை?''

''எதுவும் இல்லேம்மா!''

''நான் நம்ப மாட்டேன், விஷ்வா! துறுதுறுன்னு இருப்பே! உன் முகம் எப்போதும் சூரியகாந்தியாய் மலர்ந்திருக்கும்! சந்தோசமா, ஏதாவது கிண்டலடிச்சிட்டே இருப்பே!

வளர்ந்துட்டோம்கிற நினைப்பு கூட இல்லாமல் இந்த அம்மாவை அடிக்கடி கட்டிக் கொண்டு சின்னப் பிள்ளையா முத்தமிடுவே! அதெல்லாம் இப்போ இல்லை! உள்ளிருந்து எதுவோ உன்னை உருக்குலைய வைக்குது! அது எது கண்ணா...?''

சிவரஞ்சனி அவன் தோளைத் தொட்டு... தலைமுடியைக் கோதி... பாசத்துடன் கேட்டார்.

''நீங்களா ஏதாவது கற்பனை பண்ணிக்காதீங்கம்மா!''

''சரியா நீ சாப்பிடறதில்லே!'' என்று குற்றம் சாட்டினார்.

''நான் சாப்பிடறேன்தான்!'' மறுத்தான், விஷ்வஜித்.

''சரியா நீ உறங்கறதில்லே!''

''நான் நிம்மதியாத்தான் உறங்கறேன்!''

''எனக்குத் தெரியாதுன்னு நினைக்காதே! நடுராத்திரி வரை பால்கனியில் கால் கடுக்க நிற்கறே! மழையோ கொட்டற பனியோ - இறங்கி நனையறே... தோட்டத்தில் நெடுநேரம் உலாவறே! பார்ட்டி, விழாக்களிலே சந்தோசமா கலந்துக்க மாட்டேங்கிற. எல்லாம் என்ன? நம்ம அஸ்வின் வீட்டு விசேஷத்திற்குப் போயிட்டு வந்ததிலிருந்து நீ சரியில்லே!''

''நீங்க என்ன சொல்ல வரீங்க? எதுக்கும் எதுக்கும் முடிச்சிப் போடறீங்க?''

''கண்டிப்பா சொல்வேன், விஷ்வா! நீ சென்னை போயிட்டுத் திரும்பியதிலிருந்து சரியில்லே, தெரியுமா..?''

''உங்களுக்குக் கற்பனை வளம் ஜாஸ்தி! அருமையா கதை, கவிதைன்னு எழுதிப் பிரசுரிக்கலாம்!''

''அபிஷியலா ஏதாவது பிரச்சனையைச் சந்திக்கிறீயா...?''

''ம்கூம்!''

''போட்டி கம்பெனிக்காரன் நம்ம பேர் கெடறாப்போல ஏதாவது செய்யறானா...? டார்ச்சர் கொடுக்கறானா?''

''ச்சே... ச்சே... உன் பிள்ளை தொழில்ல புலி தெரியுமா...?''

விஷ்வஜித் சிரித்தான். மீண்டும் தொடர்ந்தான்.

''நீங்க அநாவசியமா இந்தச் சின்ன மண்டையைப் போட்டுக் குழப்பிக்காதேங்கம்மா!''

என்று அருகில் இருந்த அம்மாவை இடது கையால் பற்ற... சிவராஞ்சனி அன்பு மேலிட அருகில் நகர்ந்து மகனைக் கட்டிக் கொண்டார்.

''பொங்கல் நல்லாயிருக்கா, விஷ்வா...?''

''ம்!''

''இன்னும் கொஞ்சம் வைக்கட்டுமா...?''

''போதும்மா! வயிறு ஃபுல்லாயிடிச்சி!''

விஷ்வஜித் தட்டில் கை கழுவிக் கொண்டான்.

தாயின் முந்தானையைப் பற்றிக் கையைத் துடைத்துக் கொண்டான்.

''இது நிரந்தரமில்லே, விஷ்வா குட்டி! நானெல்லாம் பீபி, ஷுகர்ன்னு நோய்க்காரி, தெரியுமா?''

''அதனால...?''

''உன்னை நெஞ்சுக்குள்ளே பொத்திப் பொத்திப் பெட்டகமாய்ப் பாதுகாத்துக் கொள்ள உரிமையுடைய ஒருத்தி கூடிய சீக்கிரமே வரணும், இந்த பங்களாவுக்கு! உனக்குச் சீக்கிரமே திருமணத்தை முடிக்கணும்!''

'ஜோஷிதா இல்லாமல் திருமணமா...?'

'அது மட்டும் இந்தப் பிறவியில் நடக்காது!'

விஷ்வஜித் மனதிற்குள் நினைத்துக் கொண்டான்.

''அப்பா உன்னைத் திருமணக் கோலத்தில் பார்க்கணும்ன்னு ஆசைப்படறார்!

உன்னை மனைவி, குழந்தைன்னு பார்த்துட்டு செத்துப் போகணும்ன்னு நேற்றுகூடப் புலம்பறார், விஷ்வா!''

''அவருக்கு வேற வேலையில்லையாம்மா...?''

''அவர் உடம்போட கண்டிஷன் தெரியுமில்லே! ஹார்ட்ல ரெண்டு ஆபரேஷன் நடந்திருக்கு!''

''அப்பாவுக்கு ஒண்ணும் ஆகாது! அவர் நூறு வயது வரை உன் தொல்லையில் இருந்து விடுபட முடியாமல் வாழ்வார்!''

''ஏய் படவா... உனக்கு ஆனாலும் வாய் ரொம்ப நீளம்தான்டா, விஷ்வா!''

''தாயைப் போலத்தானே பிள்ளையும் இருக்குமாம்!''

''ஏய்... ஏய்... எங்கே நழுவறே? சொல்லிட்டுப் போ, குட்டி... பொண்ணு பார்க்கவா...?''

''வேண்டாம்!''

''ஏன் நீயே பார்க்கப் போறீயா...? இல்ல, பார்த்து வச்சிட்டையா...?''

''ஆபீஸ்க்கு நேரமாச்சி!''

''ஆகட்டும்! ஒண்ணுல ரெண்டு சொல்லிட்டுப் போ! பொண்ணு பார்க்கலாமா...?''

''தோ... அஸ்வினே வந்துட்டான். நான் வரேம்மா!'' என்று எழுந்து நடக்க...

''ஏய் விஷ்வா... பெற்றோர்களை சந்தோஷமா வச்சிக்க வேண்டியது பிள்ளைகளோட கடமை, தெரியுமா...?''

அம்மா வாடிய முகத்துடன் சொல்லவும்...

''உங்களுக்கு சந்தோசத்திற்கு என்ன குறைச்சல்...?''

''ம்க்கும்! இங்கே பெரிய சந்தோசம் வாழுது! சந்தோசம்ங்கிறது நீ நினைக்கற சொத்து, பணம், நகை, தொழில், அந்தஸ்துல வரது இல்லை! பிரியமான பிணைப்புகளில் வரக்கூடியது! எனக்கு இன்னும் ஒரு வருஷத்துக்குள்ளே மருமகள் வரணும்! இன்னும் ரெண்டு வருஷத்துக்குள்ளே கட்டாயமாய்ப் பேரப்பிள்ளை என் மடியில புரளணும்!''

சிவராஞ்சனி கட்டளையான குரலில் கூறினார்.

''நீங்க சரின்னு சொல்லுங்க! நாளைக்கே போய் அநாதையாஸ்ரமத்துல எத்தனை குழந்தைங்க வாடிட்டு இருக்கு! அதுல ரெண்டைத் தத்து எடுத்துட்டு வந்து கொடுக்கறேன்! அதுங்களை என் குழந்தையா நினைச்சி கொஞ்சுங்க! அநாதைக் குழந்தைகளுக்கு வாழ்வு கொடுத்த புண்ணியமும் கிடைக்கும்!''

''ரெண்டு என்ன நூறுகூட கொண்டு வா. வளர்க்கறேன். ஆனால், எனக்கு உன் உயிரில் கலந்த ஜீவன் வேண்டும்!''

''நடக்கறப்போ நடக்கும். கவலைப்படாமல் இருங்க!''

''நீயே சொல்லு அஸ்வின்! விஷ்வா ஏன் இப்படி எங்களைப் பழிவாங்கறான்! இதையெல்லாம் கேட்க மாட்டாயா? அப்புறம் எதுக்கு நண்பன்னு இருக்கே? நீ மட்டும் திருமணம் செய்து மனைவியோட வாழ்ந்தா போதுமா...? அவன் வாழ வேண்டாமா...? இதை யெல்லாம் எடுத்துச் சொல்ல மாட்டாயா, அஸ்வின்?

சிவரஞ்சனி அம்மாள் உரத்த குரலில் அஸ்வினைப் பார்த்துக் கேட்க...

''சொல்றேம்மா!''

அஸ்வின் கூறினான்.

''விஷ்வா... சென்னை வந்து திரும்பினதிலிருந்து சரியில்லே! கவனிச்சியா...?''

''ம்...''

''அவனை அதுபற்றிக் கேட்டாயா...?''

''இல்லேம்மா!''

''என்ன நண்பன் நீ? உலகத்திலே புனிதமானது நல்ல நண்பர்களோட நட்புன்னு விதவிதமா படமெடுக் கறானுங்க, சினிமாக்காரனுங்க!

''பந்த பாசத்தைவிட நட்பு சிறந்ததுன்னு பட்டிமன்றத் துல பேசறாங்க! அப்படிப்பட்ட போற்றுதலுக்குரிய நட்புக்கும், நண்பனுக்கும் நீ என்ன செய்திருக்கே? ஒரு திருமணம் செய்துக்கச் சொல்லி அறிவுறுத்த வேண்டாமா...?''

''சொன்னேம்மா! அது ஒண்ணுல மட்டும் விஷ்வா என் பேச்சை, உங்க பேச்சைக் கேட்க மாட்டேங்கிறான்!''

''டேய் அஸ்வின்... நேரமாச்சி! வரலையா, என்ன? நான் உன்னை விட்டுட்டுப் போயிடுவேன்!'' விஷ்வா கத்தினான்.

''நான் விஷ்வாவுக்கு அறிவுறுத்தறேம்மா!''

''அவனுக்கு என்ன பிரச்சனைன்னு கேளு!''

''சரிம்மா... வரேம்மா!''

சிவரஞ்சனி அம்மாளிடம் இருந்து விடைபெற்று, விஷ்வாவின் பின்னே ஓடினான், அஸ்வின்.

அஸ்வின் - தாரிகா வசிப்பது... அவர்களின் பங்களா விற்குப் பின்புறம் உள்ள பெரிய கெஸ்ட் ஹவுஸில்தான்! தாரிகா அஸ்வின் ஆபீஸ் கிளம்பிய பிறகு சிவரஞ்சனி யுடன்தான் நாள் முழுக்க இருப்பாள்.

கார் கிளம்பியது.

''என்ன விஷ்வா... அம்மா கஷ்டப்படறாங்களே...! உனக்குக் கொஞ்சம் கூட மனசு இரங்கலையா...?

''உன் மனசுக்குள்ள என்ன ரகசியம் புதைஞ்சிருக்கு? அதை என்னிடம் கூடச் சொல்லக் கூடாதா, விஷ்வா?''

''எதுவும் இருந்தால்தானே சொல்வதற்கு?''

''இது சரியில்லே, விஷ்வா! ஏதோ ஒரு விஷயத்தை உன்னுள்ளே பேட்டு உருகிட்டு, மருகிட்டு இருக்கே! இல் லேன்னு மட்டும் பொய் சொல்லாதே விஷ்வா! சொல்... உனது இந்த நிலைக்குக் காரணம்... ஏதாவது பெண்ணா?

விஷ்வஜித்திற்குச் சொல்லிவிடலாமா என்று தோன்றியது. மறுநிமிடம் சொல்ல வேண்டாம் என்று மனசு உள்ளிருந்து தடுத்து அணைபோட்டது!

''நிஜமாவே நீ என்னை நண்பனா நினைச்சா மறைக்காமல் சொல்லிடு, விஷ்வா!''

''.....''

''வளைகாப்புக்கு வந்ததிலிருந்து நீ சரியில்லே! உன் சஞ்சலத்துக்குக் காரணம்... பட்டுப் பாவாடையில், துள்ளித் திரிந்தாளே என் அத்தை மகள் நீனா, அவளா...?''

''ச்சே...!'' என்று முகம் சுழித்தான், விஷ்வஜித்.

''மார்டன் ட்ரஸ்ல அலைஞ்சாளே, தாரிகாவோட ப்ரண்ட் மாலதி... அவளா...?''

''ச்சே... அந்தச் சப்பை மூஞ்சிக்காரியை யாருடா திரும்பிப் பாப்பா...? உடம்பு மட்டும் மப்பும் மந்தாரமா இருந்தா போதுமா...? முகத்துல ஒரு களை, அம்சம் வேண்டாமா...?''

விஷ்வஜித் அழகான விளக்கம் கொடுக்க... அஸ்வின் சந்தேகமானான்.

''அப்போ யார்...?''

''.....''

''யாரோ ஒரு கள்ளி உன்னைச் சலனப் படுத்தி யிருக்கா...? அதைத்தான் மனசுல போட்டுக் குழம்பிட்டு நடமாடறே...? சரியா...? உன் உள்ளத்தைக் கவர்ந்த... அந்தக் கள்ளி யார்? ம்...?''

அஸ்வின் நெற்றியைச் சுருக்கிக் கேட்க...

இதற்கு மேல் மறைக்க முடியாமல்....

''ஜோஷிதா...'' என்று விஷ்வஜித் பட்டென்று கூற...

''ஏய் நிஜமா... நிஜமா... நீ கூட ஒரு பெண்ணிடம் மயங்கிப் போய் இருக்காயே! நம்பவே முடியலையே! அதுவும் எங்க ஜோஷிதா உன் உள்ளத்தைக் கவர்ந்துட்

டாங்கிறது எவ்வளவு பெரிய விஷயம்! இதுக்குதான் காதலுக்குக் கண்ணில்லேன்னு சொன்னாங்களா...?''

''ஏன் அவளுக்கென்ன குறைச்சல்...?''

''சொந்தம் பந்தம்ன்னு யாருமே இல்லை! தாரிகா கூட தூரத்துச் சொந்தம்தான்! பாட்டியோட பராமரிப்புல வளரும் அநாதை அவள்! படிப்புகூட சரியான படிப்பில்லே! கரஸ்ல பி.ஏ. ஹிஸ்டரி படிக்கறாளாம்! உன் படிப்பு, அந்தஸ்துக்கு இணையானவளும் இல்லை! அப்படிப்பட்டவளைப் போய்ப் பிடிச்சிருக்குன்னு சொல்றையே...?''

''காதல் ஜாதி, மதம், சொத்து, சுகம், அந்தஸ்து, படிப்பு பார்த்து வருவதில்லே!''

''காதலா...''

''ம்...''

''என்னடா உளர்றே...? ஏற்கெனவே அவளை ஒருத்தனுக்குப் பிடிச்சிப் போக... நிச்சயதார்த்த விழா நடந்து... திருமண ஏற்பாடு தடபுடலா நடந்துட்டு இருக்கு! இப்போ போய் அவளைக் காதலிக்கறேன்னு சொல்றீயே! வளைகாப்புக்கு வந்தப்பவே என் அத்தை, மாமாகிட்ட சொல்லியிருந்தால்... அவங்க ஜோஷிதாவிடமும், பாட்டியிடமும் பேசியிருப்பாங்க, இல்லையா...?''

''பேசினேன்.''

விஷ்வஜித் மொட்டையாய்ச் சொல்ல...

''யாரிடம்...?''

''ஜோஷிதாவிடம்!''

''அடப்பாவி... பேசினியா...? என்ன சொன்னாள்?'' அஸ்வின் ஆச்சரியத்துடன் அவசரமாய்க் கேட்க...

''மறுத்துட்டாள்!'' என்று விஷ்வஜித் சோகமாய்ச் சொன்னான்.

''ஷிட்! அவள் ஒரு பிழைக்கத் தெரியாதவள்!''

அஸ்வின் முகமெங்கும் சட்டென்று கோபம் கொப்புளித்தது. அந்தக் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டு மீண்டும் தொடர்ந்தான்.

''உன்னைப் போய் மறுக்க அவளுக்கு எப்படி மனசு வந்ததோ! நீ அப்போதே... சென்னையில் எங்களிடம் சொல்லியிருந்தால்... அவளிடம் பேசி இருக்கலாம்! சம்மதமும் வாங்கியிருக்கலாம்! அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ளாமல் விட்டுட்டையேடா!''

அஸ்வின் உண்மையான வருத்தத்துடன் சொன்னான்.

''காசு, பணம், சொத்து, சுகத்துக்காக மனசு மாறும் பெண்ணில்லேன்னு என்னிடம் சொல்லி விட்டாள்! அதையேதான் உங்களிடமும் சொல்லி மறுத்து இருப்பாள்!''

விஷ்வஜித் கூற...

''இப்போ என்ன விஷ்வா செய்யட்டும்? அத்தை, மாமாவிடம் விஷயத்தைச் சொல்லிக் கேட்கச் சொல்லட்டுமா...?''

''அதெல்லாம் வேண்டாம், அஸ்வின்!''

''ஏன், விஷ்வா?''

''அவ சொல்வது போல... திருமணம் நிச்சயமான பெண்ணை வற்புறுத்துவது... எந்த வகையில் நியாயமாகும்? ம்...? அது முறையும் இல்லையே!''

''இப்படியெல்லாம் நியாயம் பார்ப்பவன்... எதுக்காக அவளையே நினைச்சுட்டு இருக்கணும்? உன் உடம்பை

வருத்திக்கணும்! கூடவே மனசையும் வருத்தி, நிம்மதியை இழந்து வாழணும்? ம்...''

அஸ்வின் விஷ்வஜித்தை வார்த்தைகளாலும், கேள்விகளாலும் மடக்கியவன் பின் தொடர்ந்தான்.

''அவள் நினைப்பைத் தூக்கிக் குப்பைத் தொட்டியிலே போடு! இயல்புக்கு வா! உனக்காக இந்த ஹிமாச்சல் மாநிலத்திலேயும், ஏன் இந்திய மாநிலங்கள் முழுவதிலேயும் ஏராளமான ராஜகுமாரிகள் காத்திருக்காங்க! அதில் ஒருத்தியை மணந்து இன்பமா வாழு, விஷ்வா!''

''என் ராஜகுமாரி, ஜோஷிதாதான்!''

விஷ்வஜித் அழுத்தம் திருத்தமாய்ச் சொல்லவும்...

அஸ்வினுக்குப் பயங்கரக் கோபம் வந்தது.

''நீ பேசறது சரியில்லே, விஷ்வா!''

''.....''

''அப்போ உன் எதிர்காலம்...? உன் எதிர்கால இல் வாழ்க்கை...?''

மௌனமாய் இருந்த விஷ்வஜித் வாய் மலர்ந்தான்.

''இப்போது போலத் தொழில்... அம்மா... அப்பா... உன்னைப்போல உயிர் நண்பர்கள்... தொழிலாளிகள்... பொதுச் சேவைன்னு என் காலத்தை ஓட்டிடுவேன்! திருமணம், மனைவி, குழந்தைன்னு இருந்த கனவுகளும், கற்பனைகளும் என்னுள்ளே பொசுக்கப்பட்டு விட்டன!''

விஷ்வஜித் வாடிய முகத்துடன் சொல்லவும்...

''ஏய், விளையாடறீயா, விஷ்வா...?''

''உன்கிட்ட போய் விளையாடுவேனா, அஸ்வின்? சீரியஸாதான் சொல்றேன்!''

"அழகானது... அர்த்தமுள்ளது... மதிப்பு மிக்கது, இந்த மனிதப் பிறவி!"

"ஆமா... யார் இல்லேன்னு சொன்னா?"

"கேவலம் காதலைச் சொல்லி... மனிதப்பிறவியை மரிக்கச் செய்யப் பார்க்கிறாயே, விஷ்வா!

இது சரியில்லே, விஷ்வா!

அவளை மறடா! அதுதான் உனக்கும், உன் எதிர் காலத்துக்கும் நல்லது!

கண்டதும் காதல்ன்னு சொல்றதெல்லாம் உளறல்!

ஒரு நாள்கூடப் பழகியிராத பெண்ணிடம் அப்படி யென்ன ஆழமான காதல்...?"

அஸ்வின் விளக்கிக் கேள்வி கேட்க...

"உயிருக்குயிரான நேசத்தை எப்படிடா மறப்பேன், அஸ்வின்?

ஒருநாள் பழகினாலும்... ஓராயிரம் நாள் பழகினாலும்... ஜென்மா ஜென்மமாய்ப் பழகியிருந்தாலும் காதல் காதல் தானே, அஸ்வின்...?

என்னில் கரைந்து விட்ட... என்னில் கலந்து விட்ட... என்னில் ஊடுருவிவிட்ட நேசத்தை எப்படிடா மறப்பேன்...?

இனி சுவாசிக்கக்கூட மறப்பேன்! ஆனால் என் ஜோஷி தாவை நேசிக்க மறக்க மாட்டேன்!"

"இடியட்..."

அஸ்வின் சீறினான்.

"என் மனப் பிரதேசம் முழுக்க... என் ஜோஷிதாவின் ஆட்சிதான் நடக்கிறது!

என் இதயம் முழுக்க அவள் பாதச்சுவடுகள்தான் பதிந்திருக்கின்றன!

என் நெஞ்சம் முழுக்க அவள் நினைவுகள்தான் நிரம்பியிருக்கின்றன!

என் எண்ணம் முழுக்க அவள் நினைவுகள்தான் தளும்பிக் கொண்டிருக்கின்றன!

மொத்தத்தில் இனி நான் நானில்லை!

நானாகிப் போன அவள்...

அவளாகிப் போன நான்...

ஒருதலையாய் என் நேசச் சுவாசிப்பு என்றென்றும்... என் உயிர் மூச்சு வரை தொடரும், அஸ்வின்!

இனி ஜோஷிதா... ஜோஷிதா என்று என் இதயம் சுவாசிக்கும்! முணுமுணுக்கும்!'

விஷ்வாவின் கண்களில் கண்ணீர் தளும்பி நின்றது!

அவனை அஸ்வின் தேற்ற வழி தெரியாமல் திணறி னான்!

7

ஜோஷிதாவின் நாட்கள் றெக்கை கட்டிப் பறந்தன!

ஈஸ்வர் வீட்டில் மண்டபம், மேளம், நாதஸ்வரம், சமையல், கச்சேரி என்று ஒரு மாதத்திற்கு முன்பே புக் செய்து விட்டனர்.

இன்னும் பாக்கி வேலையாய் இருப்பது, தாலி, கூறை, மளிகைதான்!

ஈஸ்வர் இரண்டு நாட்களுக்கு முன்... அவள் வேலை செய்யும் 'சரவணா ட்ராவல் ஏஜென்ஸி'க்கு வந்தான்.

"நாளை மறுநாள் தாலி, கூறைப் பட்டு வாங்கலாம், ஜோஷிதா! நீ கிளம்பி இரு! நான் வந்து அழைச்சிட்டுப் போறேன்!"

"நான் வந்து என்ன செய்யப் போறேன்?"

"உனக்குப் பிடித்தாற் போலப் பட்டு, நகை வாங்கிக் கொள்ளலாம், இல்லையா?"

"உங்களுக்குப் பிடிச்சதா வாங்குங்க!"

"நீயும் வா, ஜோஷிதா!"

"உங்க தாயை அழைச்சிப் போய் வாங்குங்க, ஈஸ்வர்!"

ஜோஷிதா மறுத்தாள்.

ஜோஷிதா எவ்வளவு மறுத்தும், அவன் மீண்டும் மீண்டும் வற்புறுத்த...

மனசே இல்லாமல் ஒத்துக் கொண்டாள்.

ஈஸ்வரின் வரவுக்காகத்தான் உடையணிந்து காத்துக் கொண்டிருக்கிறாள்.

"உனக்குப் பிடிச்சதா எடுத்துட்டு வா, ஜோஷிதா!"

பாட்டிதான் சொன்னாள்.

"நீங்களும் வாங்களேன், பாட்டி!"

"வேண்டாம்மா! இந்த வயசானவளுக்கு என்ன தெரியும்? அதான் ஈஸ்வர் அம்மா இருக்காங்களே! அவங்க துணை கொண்டு தேர்ந்தெடுத்துட்டு வாயேன்டா!"

கார் வந்து நின்ற ஓசை கேட்க...

"சரி, நான் வரேன், பாட்டி!" என்று வாசலுக்கு விரைந்தாள்.

கார் கதவைத் திறந்து... பின் சீட்டில் அவனுடைய தாயின் அருகில் சிறு புன்னகையோடு அமர...

அவளோ எதிரியைப் பார்ப்பதுபோல... பெரிய முறைப்புடன், முகத்தில் துளி புன்னகையின் அடையாளமில்லாமல் அமர்ந்திருந்தாள்.

ஜோஷிதாவிற்குக் கஷ்டமாய்ப் போய்விட்டது.

அவன் தாயின் இந்தச் செய்கைக்குக் காரணமிருக்கிறது. அவளுடைய சகோதரனின் மகளை ஈஸ்வர் மணக்கச் சம்மதிக்காமல்... ஜோஷிதாவைக் கை காட்டி... பிடிவாதம் பிடித்து... திருமணம் வரை கொண்டு வந்து நிறுத்தி விட்டான்.

தாய் எவ்வளவு பிடிவாதம் பிடித்தும்... அவளுடைய பிடிவாதம் செல்லுபடியாகவில்லை!

ஈஸ்வர் மேல் கோபத்தைக் காட்ட முடியவில்லை!

அதனால், ஜோஷிதாவின் மேல் அவ்வப்போது வெறுப்பை உமிழ்ந்தாள்!

அதன் விளைவுதான்... மங்களத்தின் இந்த முகத் திருப்பம்...! அலட்சியம்...!

எத்தனை அழகோடு ஜோஷிதா திகழ்ந்தாலும்... தனது அண்ணனின் மகள் இருக்க வேண்டிய இடத்திற்குப் போட்டியாய் வர இருப்பவள் என்று... ஜோஷிதாவைப் பெண் பார்க்கப் போன தினத்திலிருந்து வெறுப்புடனே பார்க்கத் தொடங்கி விட்டாள்!

அந்த வெறுப்பு இன்று ஆலமரமாய் விழுது விட்டு... வேர் விட்டு... விண்ணுக்கும் மண்ணுக்கும் முட்டி நிற்கிறது!

அந்த வெறுப்பை எல்லாம் திருமணத்திற்குப் பின்பு ஜோஷிதா அந்த வீட்டிற்குப் போய்த்தான் களைய

வேண்டும்! அன்பு என்ற களை கொத்தியைக் கொண்டு மங்களத்தின் மனதில் உள்ள வெறுப்பு என்ற புல்லை வெட்டி வீசியெறிய வேண்டும்!

ஜோஷிதாவால் முடியுமா...? முடியாதா...?

ஜோஷிதா இந்தச் செயலால் வெற்றி பெறுவாளா...? வீழ்ச்சியடைவாளா...?

காலம்தான் பதில் சொல்ல வேண்டும்!

''ஆன்ட்டி நல்லாயிருக்கீங்களா...?''

ஜோஷிதா வலியப் புன்னகையை வரவழைத்துக் கொண்டு... மென்மையோடு கேட்க...

''ம்.. ம்...'' என்று வெறுப்போடு தலையை ஆட்டினாள், மங்களம்.

'கன்னிகா பரமேஸ்வரி ஸ்டோர்.'

விழுப்புரத்தின் தரமான ஆடை விற்பனையகம்.

அதன் முன்பு போய் கார் நின்றது.

ஈஸ்வர், ஜோஷிதா, மங்களம், மங்களத்திற்குத் துணையாய் வந்த பக்கத்து வீட்டுப் பெண்மணி பார்வதி என நால்வரும் கடையினுள்ளே சென்றார்கள்.

முதலில் பட்டுச் சேலை எடுத்துவிட முடிவு செய்து பட்டுச் சேலைப் பிரிவிற்குச் சென்றனர்.

''எவ்வளவு விலைக்குச் சேலை பார்க்கறீங்க, சார்?''

விற்பனையாளர் பணிவோடு கேட்டான்.

''இருபதாயிரத்திலிருந்து முப்பதாயிரம் வரை உள்ள சேலைகளா எடுத்துப் போடுங்க!''

மங்களம் பொறாமையோடு ஈஸ்வரை முறைத்துப் பார்த்தாள்.

''அவ்வளவு விலையுள்ள புடவையா... வேண்டாம் ஈஸ்வர்!''

ஜோஷிதா சொல்லவும்...

''ஏன்...? எடுத்துக்கோ, ஜோஷிதா!'' என்று ஈஸ்வர் சொல்ல.

''வெறும் சேலைக்குப் போய் அவ்வளவு செலவு செய்யணுமா...? விலை கம்மியா பாருங்க, ஈஸ்வர்!''

''வெறும் சேலையா, இது...? கூறைச் சேலையில்லையா...? திருமணம் என்பது ஒவ்வொரு மனிதனின் வாழ்வில் மலரும் முக்கியமான நிகழ்ச்சி!

எல்லோருக்கும் வாழ்க்கையில் ஒரு முறை மட்டுமே வரும் நிகழ்ச்சி...!

அந்த நிகழ்ச்சியில் கட்ட வேண்டிய சேலை விலை உயர்ந்ததா... தரமானதா இருக்க வேண்டும், ஜோஷிதா...!''

''இல்லைங்க, ஈஸ்வர்! எதுக்கு அநாவசியப் பணச் செலவு..?''

''மண்டபம், பத்திரிகை, கச்சேரி, சமையலுக்கு ஆள் என்று எல்லாமே அநாவசியச் செலவுதான்! அதை நிராகரிச்சிட்டு... சில சொந்த பந்தங்கள் முன்பு ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கலாமா...?'' ஈஸ்வர் கோபத்தோடு கேட்டான்.

ஜோஷிதா அமைதியாய் நின்றாள்.

மங்களத்திற்கு மகனின் பேச்சு எரிச்சலைத் தந்தது!

''திருமணம் உன்னதமானது! ஒரே ஒரு முறை வாழ்வில் மலரும் உத்தமமான, போற்றப்பட வேண்டிய நிகழ்ச்சி! அதை நிறையச் செலவு செய்து... ஜாம் ஜாம்னு செய்யறதுல யாரும் குறைஞ்சிட மாட்டாங்க!

நான் மாசம் லட்ச ரூபாய் சம்பாதிக்கிறேன்!

சம்பாதிப்பது எதற்கு?

செலவு செய்யத்தானே...? ம்...?''

ஈஸ்வர் கூறிவிட்டு ஆசையாசையாய் ஜோஷிதாவின் கைப்பற்ற...

அவள் அவசர அவசரமாய்த் தன் கையை அவன் கையிலிருந்து உருவிக் கொண்டாள்.

அவளின் அந்தச் செய்கை... ஈஸ்வருக்குப் பிடிக்காமல் போனது!

விலையுயர்ந்ததாய் இரண்டு பட்டுச் சேலை எடுத் தார்கள்.

மங்களத்திற்கும் அதே விலையிலேயே சேலை எடுத்துவிட... ஈஸ்வரிடம் சண்டைக்குப் போகாமல்... வாயை மூடிக் கொண்டாள்.

பக்கத்திலிருந்த கன்னிகா பரமேஸ்வரி ஜுவல்லர்ஸ்க் குச் சென்றார்கள்!

தாலி வாங்கினார்கள்!

ஜோஷிதாவுக்குத் தோடு, தொங்கல், கழுத்துக்கு ஆரம், நெக்லஸ், செயின் என்று பார்க்க...

''இதெல்லாம் எதுக்கு? வேண்டாம், ஈஸ்வர்!''

ஜோஷிதா வேகமாய் மறுப்புத் தெரிவிக்க...

''உன்கிட்ட இருக்கா...? உனக்கு இதெல்லாம் பவுனில் போட்டுட்டு வரத் தகுதியிருக்கா...? அதான் என் பிள்ளை உனக்கு வாங்கித் தரான்! பயன்படுத்திக் கோடிம்மா! ஏன் மறுக்கறே...? உனக்கு அதிர்ஷ்டம் கூரையைப் பிச்சிட்டு இல்ல கொட்டுது!''

என்று மங்களம் முகத்தைத் தோளில் இடித்துப்... பழித்துக் காட்டிக் கூறவும்...

''மாமி...'' என்று ஜோஷிதா கண்கள் கலங்கவும்...

''அம்மா... என்ன பேசறே, நீ? அடுத்தவர் மனதைப் புண்படுத்திப் பார்க்கறதுல உனக்கு அவ்வளவு சந் தோசமா...? அவ்வளவு விருப்பமா...? ச்சே... உன்னைப் போய் மதிச்சி அழைச்சி வந்தேனே...!''

''நிஜத்தைச் சொன்னால் எதுக்கு வலிக்கணும்...?''

''அம்மா...'' என்று வேகமாய் அவளை அடக்க...

''இவ வேண்டாம்ன்னு கௌரவமா மறுத்தால் மட்டும்... இவளால் அதையெல்லாம் வரதட்சிணையா கொண்டுட்டு வர முடியுமா...?''

''அம்மா, நீ பேசாம இருக்கமாட்டே?''

''உலகத்துல இவள் ஒருத்திதான் ரதின்னு ஒத்தக் கால்ல நின்னையே! உனக்குப் பெண் கொடுக்க... நூறும், இருநூறு பவுனுமா தங்கத்தோட... வீட்டுக்கு வேண்டிய பொருள்களோட, காரோட பெண் தரேன்னு வந்தவங் களை நிராகரிச்சுட்டு... உன் விருப்பத்துக்கு இவளைத் தான் கட்டிப்பேன்னு அடம் பிடிச்சே! உன் மிரட்டலுக்குப் பயந்து மனசே இல்லாமல்தான் சம்மதித்துத் தொலைத் தேன்! பஞ்சப் பராதேசிக்கு இப்படி ஒரு குருட்டு

யோகமா...? அழகான வாழ்க்கையா? நினைக்கும் போதே என் வயிறெல்லாம் எரியுதுடா.''

''அம்மா... வாயை மூடு! கோபம் வந்தால் கடைன்னு கூடப் பார்க்காமல் அறைஞ்சிடுவேன்!''

ஈஸ்வர் கத்தினான்.

''இவ மேல உள்ள மோகம் உனக்குக் கண்ணை மறைக்குதுடா!

என் அண்ணா பெண் உன்னைத்தான் கட்டிப்பேன்னு ஒத்தகால்ல நின்றாள்! ஆசையாசையா கற்பனை செய்துட்டு இருந்தாள்! அவள் ஆசையில மண்ணையள்ளிப் போட்டுட்டு... அநாதையான இவளைக் கட்டிக்கப் போறேன்னு சொன்னதும் இல்லாமல்... கல்யாணம் வரை வந்து நிறுத்தி... இப்படிப் பட்டும், தங்கமுமா பூட்டி இவளுக்கு அழகு பார்க்கறீயே... நீ எங்கே உருப்படப் போறே...?

என் அண்ணா பெண்ணிடம் இல்லாததுன்னு ஸ்பெஷலா இவகிட்ட என்ன இருக்கு...? சொல்லுடா...

அவள் படிப்புல, அந்தஸ்துல, சொத்துல, பணத்துல உனக்குச் சரிசமமா வருவாள்! இவளால் வர முடியுமா...?

உன்னைப் போய் இன்ஜினியருக்குப் படிக்க வச்சேனே... அதுவும் வாயை வயிற்றைக் கட்டி!

உன் அப்பன் இல்லாமல்... விதவையா, ஒத்தப் பொம்பளையா நின்னு உன்னை உருவாக்கி இருக்கேன்!

நீ இப்படி மாசம் கண்டா ஒரு லட்சம் சம்பாதிக்க நான் மட்டும் காரணமில்லே! என் அண்ணனும், அவன் கொடுத்த பணமும் ஒரு காரணம்!

அவர் கொஞ்சம் உதவலேன்னால்... என்னால் உன்னை இவ்வளவு உயரம் தூக்கி நிறுத்தியிருக்க முடியுமா...?''

மங்களம் காரசாரமாய்க் கேட்டு அவன் முகம் பார்த்து நிற்க...

''அதுக்கு நான் என்ன செய்யணும்...? எவ்வளவு அவர்கிட்ட இருந்து வாங்கிட்டு வந்து எனக்குச் செல வழிச்சேன்னு சொல்லு...? அதை வட்டியும், முதலுமா திருப்பிக் கொடுத்துடறேன்! இதுபோல அநாவசியப் பேச்செல்லாம் பேசாதே!''

ஈஸ்வர் அழுத்தமாய்ச் திருப்பிச் சொன்னான்.

''ஏறிவந்த ஏணியையே தூசா நினைச்சி எட்டி உதைக்க நினைக்கறவன், நீ! நீயெல்லாம் இவளைக் கட்டின மறுநிமிடம் எங்க என்னை வச்சி காப்பாத்தப்போறே?

கையைப் பிடிச்சி இழுத்துத் தெருவுலதான் விடுவே! இது ஒரு நாள் கண்டிப்பா நடக்கும்! இந்தச் சிறுக்கி மேல் உள்ள மோகத்தில் இதைக் கட்டாயமா செய்வே!''

தாய், பிள்ளையின் வாக்குவாதத்தைக் கேட்டுத் தாங்க முடியாமல் ஜோஷிதா அழுகையோடே வெளியே வந்தாள்.

''ஜோஷிதா... ஜோஷி...''

என்று ஈஸ்வர் பின்னால் ஓடி வந்தான்.

அதற்குள் சென்று கொண்டிருந்த ஆட்டோவைக் கை தட்டி நிறுத்தி அமர்ந்து விட்டாள்.

ஆட்டோ அவன் முகத்தில் கரும்புகையைக் கக்கி விட்டு வேகவேகமாய்ச் சென்றது.

ஈஸ்வர் தலையில் கை வைத்து நின்று விட்டான்.

பின்னாடியே வந்த மங்களம்,

''என்னடாப்பா... உன் அருமை ஜோஷிதா அழுதுட்டே போயிட்டாளேன்னு வருத்தமா இருக்கா...?''

என்று ஈஸ்வரின் ரணமான மனதை மேலும் கீற...

அவ்வளவுதான். தாயைப் பார்த்து ஆவேசத்தோடு கத்தினான்.

''நீங்கயெல்லாம் ஒரு பெண்ணா...? பெண்ணுக்குப் பெண்ணே இப்படிப் பொறாமை கொள்றீங்களே... நம்ம வீட்டுக்கு வரப் போறவள்... உங்க மகனுக்கு மனைவியாகப் போறவள்... அவளைப் போய்க் கேவலமா நினைக்கறீங்களே... இது எந்த விதத்துல நியாயம்? ம்? அதையெல்லாம் கூட விடுங்க... அவளுக்கும் தாய், தகப்பன் இருந்திருந்தால்... இதுபோல நகைகளைப் போட்டுட்டு வராமலா இருப்பாள்? தாய், தகப்பனற்ற பெண்ணை மனச்சாட்சியே இல்லாமல் பேசிட்டீங்களே...''

''எல்லா விதமான நகைகளையும் எடுத்து வந்து வீட்டுல வை. அவள் அங்கே வந்து மாட்டிட்டு மினுக்கட்டும்!''

''வாயை மூடுங்கம்மா! எனக்கு எதுனா வாயில வந்துடப் போகுது! ஜோஷிதா இல்லாதவளானாலும்... மானரோசம் உள்ள பெண்! நான் வரேன்! நீங்க ஆட்டோ பிடிச்சிப் போங்க!''

சொன்ன ஈஸ்வர் விறுவிறுவென நடந்து போய் காரை ஸ்டார்ட் செய்து கிளம்பினான்.

''டேய்... டேய்... ஈஸ்வர்...'' என்று மங்களம் குரல் கொடுத்தாள்.

அழைத்த மங்களத்திற்கு காரின் கரும்புகையைப் பரிசாய்க் கொடுத்துவிட்டு ஈஸ்வர் சென்றாலும்... மங்களம் வில்லியாய் ஒரு பெரும் சிரிப்புச் சிரித்தாள்.

ஈஸ்வர் ஜோஷிதாவிற்கு வாங்கிக் கொடுக்க இருந்த நகையைத் தடுத்து நிறுத்தியதால் இதழ்களில் பெரும் புன்னகையைப் படர விட்டாள்.

ஜோஷிதா ஏறிச்சென்ற ஆட்டோவை வழிமறித்தான், ஈஸ்வர்.

ஜோஷிதாவை அழைக்க... அவள் வர மறுத்தாள்.

அவன் கெஞ்சினான்!

அவள் மிஞ்சினாள்!

அவள் கைப்பற்றி வலுக்கட்டாயமாய் இழுத்துப் போய் காரில் உட்கார வைத்தான்.

அவள் முகத்தை உர்ரென்று வைத்துக் கொண்டு பயணித்தாள்.

நேரு பூங்காவில் கார் நின்றது.

அவன் முன்னே செல்ல... அவளும் பின்னே சென்றாள்.

இடம் தேடி எதிரெதிரே அமரும் வரை கட்டுப்படுத்திக் கொண்டிருந்த கோபத்தை மடைதிறந்த வெள்ளமாய் அவன் மேல் பாய்ச்சினாள்.

''நீங்க மட்டும்தான் இந்த உலகத்துல ஆம்பளையா...?'' என்று காரமாய்க் கேட்க...

''ஜோஷிதா...''

''சொல்லுங்க. நீங்க திருமணம் செய்துக்க முன் வரலேன்னால் யாருமே என்னை மணந்துக்க வர மாட்டாங்களா...? ம்...?''

''வீணான பேச்சு வேண்டாம், ஜோஷிதா...? விடும்மா!''

''எது வீணான பேச்சு...? நான் எதுனா உங்ககிட்ட நகை வேணும்ன்னு கேட்டேனா...? உங்கம்மா குணம் உங்களுக்குத் தெரியுமில்லே... தெரிஞ்சி எதுக்கு இதுபோல செயல்ல ஈடுபடணும்? தாலி வாங்கினோமா... கூறைப் புடவை வாங்கினோமான்னு விடாமல்... ச்சே... உங்கம்மா பேசறது முறையா...?''

''முறைன்னு சொன்னேனா, ஜோஷிதா...?''

''உங்களோட எனக்கு ஏற்படப் போற பந்தத்தால நான் தினம் தினம் தீக்குளிக்கணும்போலத் தெரியுதே! உங்களை யார் என்னைத்தான் கட்டிப்பேன்னு கட்டாயப் படுத்தச் சொன்னது? உங்க மாமா மகளையே மணந்து... உங்கம்மாவை சந்தோசப்படுத்தி இருக்கலாம், இல்லையா...?

''அதை விட்டுட்டு ஏன் இப்படிச் செய்தீங்க...? நாளைக்கு உங்கம்மாகிட்ட மாட்டிட்டு தவிக்கப் போறது, கஷ்டப்படப் போறது நானில்லையா...?''

ஜோஷிதா கடுமையாய்ச் சீற...

''திருமணம் முடிந்த கையோடு... உன்னையும் என்னோட பெங்களூரு கூட்டிட்டுப் போயிடுவேன்! உனக்கு எப்படி அம்மாவோட தொல்லை இருக்கும்?''

''இது சரியா...? ஊர் மக்கள் என்ன பேசுவாங்க...?'' என்று முறைப்போடு கேட்டாள்.

''என்ன பேசுவாங்க?''

''தாயை மட்டும் தனியே தவிக்க விட்டுட்டு மனைவியை மட்டும் அழைச்சிட்டுப் போய் உல்லாசமா இருக்கானேன்னு பேச மாட்டாங்களா?

''பேசட்டும்! ஊரார் பேச்சையெல்லாம் காதில் வாங்கிட்டா வாழவே முடியாது, தெரியுமா?''

''உங்கம்மாவுக்குப் பிடிக்காத இந்தத் திருமணம் எதுக்கு நடக்கணும்?''

''ஜோஷிதா... நீ என்னம்மா சொல்றே?''

ஈஸ்வர் அதிர்ந்து போய்க் கேட்க...

''இந்தத் திருமணத்தை நிறுத்துங்க!''

ஜோஷிதா சொல்ல... ஈஸ்வர் மேலும் அதிர்ந்து போனான். பின் சொன்னான்.

''நாமே நினைச்சாலும் முடியாது, ஜோஷிதா!''

''எப்படி?''

''ஊரெல்லாம் பத்திரிகை கொடுத்தாச்சி!''

''இருக்கட்டும்!''

''பைத்தியக்காரி மாதிரி எதுனா உளறாதே! இப்போ திருமணத்தை நிறுத்தினால் பெருத்த அவமானம் தெரியுமா? அடுத்ததா என்னை உன்னால் மறக்க முடியுமா...?''

''ஏன் முடியாது? நான் ஒண்ணும் உங்களைக் காதலிக்கலையே!''

''ஓ.கே. காதலிக்கலே! கனவு, நினைவுலன்னு என்னை நினைப்பாய்தானே...? கற்பனையில என்னோட குடும்பம் நடத்துவேதானே?''

''கனவிலேயும்... கற்பனையிலேயும் குடும்பம் நடத்த சராசரிப் பெண்ணில்லே, நான்! சொல்லப் போனால் உங்களைப் பற்றிய நினைவுகளைக்கூட என் நெஞ்சில்

உலாவ விடறதில்லே! எனக்குள் பலமான வேலி போட்டு வச்சிருக்கேன்! அந்த வேலியைத் தாண்டிக் கட்டிக்கப் போறவரானாலும் உங்களை உள்ளே விட்டதில்லே!''

''இந்த ஒழுக்கம், கற்பு நெறி, பண்பாடு கண்டு மேலும் மேலும் நான் உன்னை ஆழமாய் நேசிக்கிறேன், கண்ணம்மா!''

சொன்ன ஈஸ்வர் அவளின் முகத்தை இரு கைகளாலும் ஏந்த...

ஜோஷிதா பட்டென்று தட்டி விட்டாள்.

''கட்டிக்கப் போறவனே என்றாலும்... ஒரு எல்லைக் கப்பால் வைத்துப் பேசறீயே... பழகறீயே... இந்தக் குணம் எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு!''

''உன் உடல் எத்தனை தூய்மையானதோ... அது போல உன் மனமும் கற்போட இருக்குன்னு நினைக்கும்போது... இப்படிப்பட்ட பேரழகி... பெருந்தன்மைக்காரி... குணவதி எனக்கு மனைவியா அமையப்போறீயேன்னு நினைத்து... என் உள்ளம் பூரிக்குது, ஜோஷிதா!...

எப்பேர்ப்பட்ட எதிர்ப்பு வந்தாலும்... உன்னை என்றும் கைவிட மாட்டேன், ஜோஷிதா...

அந்த எதிர்ப்புக்காரி என் தாயே ஆனாலும் தள்ளி வைப்பேன், ஜோஷிதா!''

ஈஸ்வர் வாக்குறுதி கொடுக்க...

ஜோஷிதா மலர்ந்தாள்!

இந்த மலர்ச்சி உடனே கருகிக் காயப் போகிறது என்று தெரியாமல்!

8

சிம்லாவில் இருந்து தாரிகாவின் தந்தை சீனுவாசன் ஜோஷிதா பணிபுரியும் இடத்திற்கு போன் செய்தார்.

ஜோஷிதா போனை எடுத்தாள்.

''அம்மா ஜோஷிதா... உன் பெரியப்பா சீனுவாசன் பேசறேம்மா!''

''பெரியப்பா... நீங்களா...? சொல்லுங்க பெரியப்பா... எங்கிருந்து பேசறீங்க?''

''சிம்லாவுல இருந்துதான்!''

''அப்படியா... பெரியம்மா நலமா...?''

''ம்...''

''அஸ்வின் அத்தான், தாரிகா நலமா, பெரியப்பா?''

''எல்லோரும் நலமாத்தாம்மா இருக்காங்க!''

''சொல்லுங்க பெரியப்பா... வேற என்ன விஷயம்? திருமணம் நெருங்கிட்டு இருக்கு. அங்கிருந்து கட்டாயம் வந்துடுவீங்கதானே...?''

''அதைப்பற்றிப் பேசத்தாம்மா அழைச்சேன்!''

''ம்... சொல்லுங்க.''

''நம்ம அஸ்வினோட பாஸ்...''

''ஆமா... அவருக்கென்ன?''

''அவர் உன்னை மணந்துக்க கேட்டாராமே!''

''ம்...''

''நீ மறுத்துட்டையாமே!''

''ம்...''

''அந்த விஷயம் இப்போதாம்மா தெரியும்! ஏன்டாம்மா அப்படிச் செய்தே?''

''என்ன செய்யச் சொல்றீங்க, பெரியப்பா?''

''தப்பு பண்ணிட்டடா!''

''எப்படித் தப்பாகும்? ஈஸ்வரோட திருமணம் நிச்சயமான பிறகு... ஒரு ஆண் என்னை மணந்துக்க கேட்டால் மறுப்பதுதானே மனித இயல்பு! மனித தர்மம்!''

''விஷ்வஜித் எவ்வளவு பெரிய வசதி படைத்தவர் தெரியுமா...?''

''எல்லாம் சொன்னார், பெரியப்பா!''

''எல்லாத்தையும் சொல்லியும் மறுத்து இருக்கயே, முட்டாள் மாதிரி!''

''வசதி படைத்தவர் விஷ்வஜித்தன்னா... அதுக்காக நான் என்ன செய்ய முடியும்? அதுக்காக ஈஸ்வரை விலக்கிட்டு... அந்த விஷ்வஜித்தை மணந்துக்கறது முறையா...? நியாயமா...?''

''பணத்துக்காக ஆளை மாத்தற பரம்பரையா நம் முடைய பரம்பரை, சொல்லுங்க?''

''திருமணம் ஆன பிறகு பணத்துக்காக நிறம் மாறறதுதாம்மா துரோகம்! இது எப்படித் துரோகமாகும்?''

''என்ன பேசறீங்க, பெரியப்பா? புரிஞ்சிதான் பேச நீங்களா...? நிச்சயம் என்பது பாதித் திருமணம் முடிஞ்ச

மாதிரி! அப்படிப்பட்ட பிணைப்பை விலக்கிட்டு... அந்த தொழிலதிபரை மணப்பது எந்த விதத்தில் சரியாகும்? அப்படிச் செய்தால் அதுவும்கூட ஒருவித விபசாரம் தான், பெரியப்பா!''

''கண் முன்னாடி சொர்க்கமே உனக்கு விரியும்போது அதைப் பார்க்க மாட்டேன்னு கண்ணை மூடறீயே... குருடிபோல!''

சீனுவாசன் கோபமாய்க் கேட்க...

''நீங்க இப்படி பேசறதுதான் எனக்கு வெட்கக் கேடா இருக்கு பெரியப்பா!''

ஜோஷிதாவும் தன் பங்குக்குக் கோபத்தைக் காட்டினாள்.

''நான் சிம்லாவுல இருந்துதான் பேசறேன்! அவர் பங்களாவும்... தொழிலும்... தோட்டங்களும் என்று ஏகப்பட்ட சொத்து இருக்கு, ஜோஷிதா - விஷ்வஜித்துக்கு. நூற்றுக்கு மேற்பட்ட தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிட்டாலும் தீரவே தீராது. தெரியுமா?''

''மீண்டும் மீண்டும் இப்படி வசதியைப் பார்த்துட்டு நியாயம் தவறிப் பேசறீங்களே, பெரியப்பா!''

''நீ எக்கேடோ கெட்டு ஒழி!''

''எனக்குன்னு இருக்கற ஒரே ஒரு தூரத்துச் சொந்தம் நீங்க மட்டும்தான்! நீங்க வந்துதான் என்னைத் தாரை வார்த்துக் கொடுக்கணும், பெரியப்பா!

ப்ளீஸ் பெரியப்பா... நீங்களும், பெரியம்மாவும் கண்டிப்பா என் திருமணத்துக்கு வரணும்! என்னை மனசார வாழ்த்தணும், பெரியப்பா!''

ஜோஷிதா கண்களில் நீர் பூக்கக் கெஞ்சினாள்.

''பெரியவங்க பேச்சுக் கேட்காத உனக்கெல்லாம் வாழ்த்துதான் ஒரு கேடா...? நானும் என் மனைவியும் தாரிகா பிரசவத்துக்காக வந்திருக்கோம்!...

''பிரசவம் முடிந்து அங்கே வந்தாலும் வருவோம்... அல்லது இங்கேயே கூட செட்டில் ஆனாலும் ஆயிடு வோம்! இங்கேயே அவரிடத்தில் தற்காலிகமா ஏதாவது வேலை பார்க்கச் சொல்றார். மாசம் ஐம்பதாயிரம் சம்பளம் போட்டுத் தரேன்னு சொல்றார்...

''என் பெண்ணிற்கு எங்களோட பாதுகாப்பும் கிடைக் குது! எங்களுக்குப் பெரும் வருமானமும் கிடைக்குது! இங்கேயே பிடிச்சிப் போனால்.. நான் பார்த்துட்டு இருக்கற கவர்ன்மெண்ட் வேலையையே ரிசைன் பண்ணினாலும் பண்ணிடுவேன்!...

''இளவரசன் கணக்காய் செங்கோல் வீச்சும் அவரை நிராகரிக்கறீயே! பின்னாடி வருந்துவே பார்! ஈஸ்வரோட நீ எப்படி நல்லா வாழறேன்னு பார்க்கறேன்!''

அவர் ஆத்திரத்தில் போனை கட் செய்தார்.

ஜோஷிதா பெரிய இடி விழுந்த கணக்காய் அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

9

ஜோஷிதாவின் திருமண நாள் நெருங்க நெருங்க விஷ்வஜித், உடலளவிலும்... மனதளவிலும், துவண்டு போனான்!

உயிரோட்டமற்ற சிலையாய் நடமாடினான்!

'ஜோஷி... என் அன்பே... எப்படியடி இருக்கிறாய்?'

'நீ நலம்! ஆனால் நான் நலமாய் இல்லை, கண்ணே!'

'ஜோஷிதா... உன்னிடம் என்னைத் தொலைத்து விட்டேனே! தொலைத்த இடத்தில் என்னைத் தேடிக் கண்டுபிடிக்கக் கூட முடியாமல் சூழ்நிலைக் கைதியாகிப் போனேனே!'

'நான் உன்னை ஒரு நொடிகூட மறப்பதில்லை! நீ என்னை ஒரு நொடியாவது நினைப்பாயா, பெண்ணே!

'உன்னை எனக்குத் தருவாய் என்று எவ்வளவு ஆசை யாய் என் காதலைச் சொன்னேன்! கடைசியில் என் காதலுக்கு வெந்நீர் பாய்ச்சி விட்டாயே, என் வெண்ணி லவே!'

'ஜோஷிம்மா... நீயில்லாமல் நான் எப்படி வாழ்வேன்?'

'ஜோஷிம்மா... நீயில்லாத உலகம் வெற்றிடம்!'

'ஜோஷிம்மா... நீயில்லாத உடல், உயிர் அத்தனையும் வெறுமை!'

'ஜோஷிம்மா... காதல் எத்தனையோ பேருக்கு ஆனந் தத்தை அள்ளியள்ளி ஊட்டுகிறது...! என் விஷயத்தில் மட்டும் மறுத்துச் சதி செய்ததேன்?'

'வானத்து வளர்பிறை நிலவே... நிலவின் குளிர்ச்சி யோடு என் மேனி தீண்டுவாய் என்றிருந்த எனக்குச் சூரியனாய்ச் சுட்டெரிக்கிறாயே! இது நியாயமா?'

'நீ தாமரை மலர்போன்றவள் இல்லையா...? நீயென்ன ரோஜாப் பெண்ணா...? என் இதயத்தை முரட்டு முள் ளால் கிழித்தெறிந்து விட்டாயே!'

'நீ பூவினும் மென்மையானவள், இல்லையா...? நீயென்ன புயலா...? என் உயிரை, உடலை, ஆன்மாவைச் சுருட்டி வாயில் போட்டு வேடிக்கை பார்க்கிறாயே!'

'அடிபெண்ணே... உனக்குத் தெரியவில்லையா...? என் பட்டு இதயத்தை... உன் மேலான காதலைப் பொத்தி வைத்த இதயத்தை... குருதி சிந்த ரணமாக்குகிறோம் என்று!

'ஜோஷிம்மா... என் கண்ணே... உன்னை என்னால் மறக்க முடியுமா...? மறந்துதான் வாழ முடியுமா...? என் இதயத்தில் ஊடுருவிவிட்ட... இனிய தேவதை நீ இல்லாமல் என்னால் வாழவே முடியாதே, ஜோஷிம்மா!'

'என் ஒவ்வொரு அணுவிலும் கலந்து விட்டவள் நீ...! கரைந்து விட்டவள் நீ...! அப்படிப்பட்ட உன்னை எப்படி விலக்குவேன்?'

'ஜோஷிம்மா... உன் மேலான நேசம் வானமாய்... பூமியாய்... நீலக்கடலாய் என்னுள் விரிந்து, பரந்து விரவி இருக்கிறதே! அதைச் சுருட்டி, மடித்துச் சுக்கல் சுக்கலாய் எவ்வாறு கிழித்தெறிவேன்?'

'என் விழியில் விழுந்தவளே... அமிலமாய் மாறிக் கண் மணியை அழிக்கலாமா...?'

'என் நெஞ்சம் நிறைந்தவளே... இப்படி நெருஞ்சி யாய் மாறலாமா...?'

'ஜோஷிம்மா... பதில் சொல்லடி... காதல் என்ன அவ்வளவு கொடூரமானதா...?'

'காதல்... காதல்... காதல்...! காதல் போயின்... நான் என்ன செய்வேன்...?'

'ஜோஷிம்மா... உன் திருமண நாள்... அம்மாவின் பேரப்பிள்ளை ஆசைக்குத் தீ வைக்கும் நாள்!'

'அம்மாவிடம் சொல்லப் போகிறேன்... மறு ஜென்மம் எடுத்து வா... உன் மடி நிறைக்கிறேன் என்று!'

மருத்துவக் கல்லூரி மளமளவென உயர்ந்து விட்டது. இன்னும் மாணவர்கள் சேர்க்கையும், திறப்பு விழாவும் தான் பாக்கி!

ஆனால்...

என் மனதில் கட்டிய காதல் கோட்டையைச் சரசர வெனச் சரிய வைத்து விட்டாயே, என் இதயமே!

இவ்வாறு விஷ்வஜித் தினம் தினம் மனதோடு புலம் புவான்.

'இரவு வராதா என்று காத்திருக்கிறேன்...

அப்போதுதானே நீ என் கனவில் வருவாய்...!

கள்ளத்தனம் செய்து சில்மிஷம் செய்வாய்...!

கட்டிப்பிடித்துக் கொஞ்சுவாய்...!

கன்னம் முழுக்க முத்த மழை பொழிவாய்...!

என்னை உன் மடியில் போட்டு

கண்ணே, மணியே என்று காதல் மொழி பேசுவாய்...!

என் அன்பே, ஆருயிரே என்று

காற்றுக்குக்கூட இடைவெளி விடாமல்

என்னை இறுக அணைத்துக் கொள்வாய்...!

என் உயிரே... என் உயிர்ச் சுவாசமே... என்று

என்னிடம் உருகிப் போவாய்...!

என் மானே... என் தேனே... என்று
என்னிடம் மருகிப் போவாய்...!
என் அழகான ராட்சசனே என்று
நீ என் கன்னம் கிள்ள...
என் அழகான ராட்சசியே என்று
நான் உன் நாசியைப் பிடித்து இழுக்க...
என் அன்பான ராஜகுமாரனே என்று
நீ என் இதழ் பற்றி வலிக்க வலிக்கத் திருக...
என் இதமான ராஜகுமாரியே என்று
நான் உன் கன்னம் பிடித்து முரட்டு முத்தமிட...
என் உள்ளம் கவர்ந்த கள்வனே என்று
நீ என் மோவாய்க் குழியைக் கிள்ள...
என் உள்ளம் கவர்ந்த கள்ளியே என்று
நான் உன் கருங்கூந்தல் பற்றி வலிக்க இழுக்க...
இப்படிக் காதலும், காமமுமாய் விளையாடி மகிழ...
வருவாய் என்று காத்திருக்கிறேன்...
கண்மூடி இரவுக்காக... தவமிருக்கிறேன்...!
அப்போதுதானே நீ என் கனவில் வருவாய்...!'

இப்படிக் கவிதை பாடிக் கலங்கிப் போவான்...! உள்ளுக்குள்ளே கண்ணீர்விட்டு மருகிப் போவான்...!

ஜோஷிதாவைக் கணநேரம்கூட மறக்க முடியாமல் தவித்துப் போவான்...!

கஷ்டப்பட்டு நாட்களை நகர்த்தினான், விஷ்வஜித்!

* * *

திருமணத்திற்கு இன்னும் நான்கு நாட்களே உள்ளன.

அந்த மாலை வேளையில் ஆபீஸ் முடிந்து தெருவில் நடந்து கொண்டிருந்தாள்.

மாலைத் தென்றல் அவள் மேனியை ஜில்லிப்பாய்த் தீண்ட... அந்த தீண்டுதலில் மனதைப் பறிகொடுத்து... இதமான ரசிப்புடனே அந்தச் சிறிய வீட்டினுள் நுழைந்தாள், ஜோஷிதா.

பாட்டி புது டிகாக்ஷனும், பாலுமாய்க் கலந்து சுவையான காபியை நீட்டினாள்.

''ரொம்ப நன்றி பாட்டி!'' என்று வாங்கியவள் அதை ரசித்து, ருசித்துச் சொட்டுச் சொட்டாய் உள்ளிறக்கினாள்.

ஜோஷிதா காபி குடித்து முடிந்ததும் பாட்டி கேட்டாள்.

''ஜோஷிதா... லீவு சொல்லிட்டையாடா?''

''எதுக்கு பாட்டி?''

''திருமணத்துக்கு இன்னும் மூன்று நாட்கள்தானேடா இருக்குது!''

''இருக்கட்டுமே பாட்டி! எதுக்கு அநாவசியமாய் லீவு போடணும்? வீட்டில் உட்கார்ந்து என்ன செய்யப் போறேன்? ம்...?''

ஜோஷிதா சின்னச் சிரிப்போடு கேட்டாள்.

''லீவு போட்டுட்டு ரெஸ்ட் எடுத்துட்டு இருடாம்மா! அப்போதுதான் உடலும், உள்ளமும் காலைத் தாமரையாய் வாடி வதங்காமல் இருக்கும்!

நல்லா சாப்பிடு... நிறைய நேரம் தூங்கு...

பியூட்டி பார்லர் போய் முகத்துக்கு பேஷியல், புருவத் திருத்தம்னு செய்துட்டு வா...

கையில மருதாணி வச்சிக்கோ... இப்படிப் பல வேலைகள் எல்லாம் இருக்கில்லையா...? அதனால் நாளை முதல் நீ வேலைக்குப் போக வேண்டாம்! இன்றே லீவு லட்டரோட சேர்த்து, உன் ராஜினாமா கடிதத்தையும் கொடுத்துட்டு வந்திருக்கலாம்!''

''கஷ்ட காலத்தில் உதவிய வேலையில்லையா...? என் எம்.டி.யும் சாதாரண ஊழியை கிட்ட பழகினாப் போலவா பழகினார்? என் சகோதரன் போலப் பழகின வரை எப்படி மறப்பேன்? நீ உடல் நலம் சரியில்லாமல் படுத்த பின்பு கட்டாயமாய் நான் வேலைக்குப் போக வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டு... வெறும் ப்ளஸ் டூ மட்டுமே படித்திருந்த நான் எத்தனை இடங்களில் ஏறி இறங்கினேன்! யாருமே வேலை கொடுக்க முன் வரவில்லையே! அப்போது என் மீது கருணை காட்டி... வேலை கொடுத்து... நல்ல சம்பளமும் கொடுத்து வாழ வைத்துக் கொண்டிருந்தவர் என் எம்.டி. சரவணன் அண்ணா! அவருடைய மனைவியும் ரொம்ப நல்லவர்!''

''திருமணம் என்ற பந்தம் வரும்போது எப்படிப்பட்ட உறவுகளையும் பிரிய வேண்டிய நிர்பந்தம் வரும்தான், கண்மணி!''

''கஷ்டமா இருக்கு, பாட்டிம்மா!''

''இங்கே வரும்போதெல்லாம் அவர்களைப் பார்த்தால் போயிற்று!''

''சரி, பாட்டிம்மா!''

''போன் செய்து சொல்லிடு, தங்கம்! நாளை முதல் நான் வேலைக்கு வர்லேன்னு!''

''சரி பாட்டிம்மா!''

''நாளைக் காலையே பியூட்டி பார்லர் போயிட்டு வாடா!''

''வேண்டாம் பாட்டிம்மா! பேஷியல், ப்ளீச்சிங் என்று எனக்கு எதுவுமே தேவையில்லே, பாட்டிம்மா! இயற்கை கொடுத்த அழகு போதாதா...? எதுக்குச் செயற்கையை நேசிக்கணும், பாட்டிம்மா! உங்களுக்குச் செயற்கைதான் பிடிக்குமா...? உலகம் மாற மாற... நீங்களும் மாறிட்டே வரீங்க, பாட்டிம்மா! இது கொஞ்சங்கூட நல்லாயில்லே தெரியுமா...?''

ஜோஷிதா அழகான சிரிப்போடு சுட்டுவிரல் நீட்டிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது... கார் வந்து நிற்கும் ஓசை கேட்டது!

பாட்டிம்மா, ஜோஷிதா இருவரும் விரைந்து வந்து எட்டிப் பார்த்தனர்.

ஈஸ்வர் கார் கதவைத் திறந்து, பட்டென்று மூடி விட்டு... வேகமான நடையோடு வந்து கொண்டிருந்தான்.

''வாங்க தம்பி... அம்மா சௌக்கியமா...?''

பாட்டி கேட்டாள்.

''வாங்க ஈஸ்வர்! பெங்களூருவிலிருந்து எப்போ வந்தீங்க...? நீங்க வரப்போறதா ஏன் எனக்குச் சொல்ல வேயில்லை? ம்?''

ஜோஷிதா கேட்டாள்.

உள்ளே வந்த ஈஸ்வர் இருவருக்கும் பதில் சொல்லாமல்... விழிகளால் இருவரையுமே சுட்டெரித்துக் கொண்டிருந்தான்.

"என்னப்பா, ஈஸ்வர்...? ஏன்...? என்ன விஷயம்...?" பாட்டி கொஞ்சம் பதற்றத்துடன் கேட்டாள்.

"இந்தத் திருமணம் நடக்காது!"

வெடிகுண்டு கணக்காய் அந்தச் செய்தி அவன் வாயிலிருந்து வர...

"ஐயோ... ஏன்...? என்ன தம்பி நடந்தது?

பாட்டி அலறினாள்.

ஜோஷிதா திடுக்கிடலோடு அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஜோஷிதாவைப் பிடிக்கலே!"

"ரொம்பப் பிடிச்சிருக்குன்னுதானே பெண் கேட்டு வந்தீங்க?"

"....."

"உங்கம்மா ஜோஷிதாவைக் கட்டிக்க ஒத்துக்கலேன்னும்போது... இவளைத்தான் கட்டுவேன்னு அடம் பிடிச்சி... உங்கம்மாவைச் சமாதானப்படுத்தி அழைச்சி வந்தீங்க...! இப்போ இப்படி சொன்னால் எப்படிப்பா?

"மண்டபம், தாலி, கூறை, பத்திரிகைன்னு அத்தனை வேலையும் முடிச்சாச்சி! இன்னும் மூன்று நாளில் திருமணம். இப்போ இப்படிச் சொல்றீங்களே?

ஏன்?

என்ன நடந்தது...?

என் பேத்தி ஏதாவது உங்ககிட்ட தரக்குறைவா நடந்துட்டாளா...?

என்ன காரணம்...?"

பாட்டியம்மாள் மடிந்தமர்ந்து அழுதாள்.

"உங்க பேத்தியைக் கட்டிக்க முடியாது!"

"ஏன்...?"

பாட்டியம்மாள் அழுகையை நிறுத்தி வேகமாய்க் கேட்டாள்.

"ஏன்னா... ஏன்னா... இவள் சரியில்லாதவள்! நடத்தை சரியில்லாதவள்!"

அக்கினிக் குழம்பாய் வார்த்தைகளை அவர்கள் மேல் ஈஸ்வர் அள்ளி விசிற...

பாட்டியம்மாள் தலையிலும், நெஞ்சிலும் அடித்துக் கொண்டு அழுதாள்.

புயலாய் எழுந்து சாமியறைக்கு ஓடினாள்!

ஜோஷிதா நிலைகுலைந்து... பின்னர் சட்டென்று தன்னைத் தேற்றி...

"என்ன ஈஸ்வர்...? என்ன இது புதுக்கதை? புதுக் கவிதை? ம்...?"

மிதமிஞ்சிய ஆத்திரத்தோடு ஜோஷிதா கேட்டாள்.

"நீ ஒரு ஏமாற்றுக்காரி!"

"ஈஸ்வர்..." கத்தினாள். பின், "நாக்கை அடக்கிப் பேசுங்க!" என்று சொல்ல...

"உண்மையைச் சொன்னால் கூடச் சுடுமா?" என்று அவனும் கோபத்தோடு கேட்க...

ஜோஷிதா தன்னைப் பெரும் சிரமப்பட்டு அடக்கினாள். கேட்டாள்.

"சரி, அப்புறம்...?"

''நீ ஒரு வழிப்பறிக்காரி!''

''அடுத்தது?'' பல்லைக் கடித்துக் கேட்டாள்.

''நீ ஒரு விபசாரி!''

''ம்... அப்புறம்...? கண்களை உருட்டிக் கேட்டாள்.

''நீ ஒரு ஆள் மயக்கி!''

''சரி... நெக்ஸ்ட்...?''

''உன்னிடம் ஏமாந்த ஆண்களில் நான் எத்தனை யாவது ஆள்? இதுவரை நூறு பேரையாவது ஏமாற்றி உன் காலடியில் விழ வைத்திருப்பாயா...?''

''கணக்கை அப்புறம் சொல்றேன்! நீங்க மேலே சொல்லுங்க?''

''நீ ஒரு துரோகி! அதுவும் நம்பிக்கைத் துரோகி! உனக் கொரு நல்ல வாழ்க்கையைக் கொடுக்க எண்ணினேன், நீ ஒரு நடத்தை கெட்டவள் எனத் தெரியாமல்!''

ஈஸ்வர் தன் கோபத்தைக் கொட்டிவிட்டு மூச்சு வாங்க நின்றான்.

''இந்த டயலாக் எல்லாம்... உங்க அம்மா எழுதித் தந்ததா...?''

ஜோஷிதா நக்கலாய்க் கேட்டாள்.

''யார் எழுதித் தந்தால் என்ன? உண்மைதானே?''

''அல்லது என்னை விலக்கிவிட்டு உங்க மாமன் பெண்ணை மணக்க... உங்க தாய் மாமன் எழுதித் தந்த வசனங்களா...?''

''உனக்குக் கேட்கத் தகுதியில்லேடி!''

''எந்த விதத்தில் தகுதியை இழந்து விட்டேன்? சரியான காரணத்தைச் சொல்லுங்க. எப்படி இப்படி என் நடத்தை மீது சந்தேகப்படலாம்?''

''தரங் கெட்டவளிடம் இவ்வளவு நேரம் நின்று பேசு வதே எனக்கும்... என் தகுதிக்கும் பெரிய இழுக்குடி!'' ஈஸ்வர் முகத்தைச் சுழித்துச் சொல்ல...

''ஏய் மிஸ்டர்... கண்டபடி உளறாதீங்க! அப்புறம் நடக்கறதே வேற!''

''போடி, குடி கெடுத்தவளே... பெண்ணினத்திற்கு இருக்க வேண்டிய ஒழுக்கமும், பண்பாடும் உன்னிடத் தில் ஒரு துளியாவது இருக்கிறதா...? உன் நெஞ்சில் கை வைத்துக் கேட்டுப்பார்... அது சத்தியம் பேசும்!''

''ஈஸ்வர்... மரியாதையா வெளியே போயிடுங்க!''

''மரியாதை கெட்ட நாய் நீ...! மரியாதையைப் பற்றி நீ பேசறியா...?''

ஈஸ்வர் சொல்ல...

அடுத்த நொடி ஆவேசம் கொண்டவளாய் ஓங்கிக் கன்னம் பழுக்க ஈஸ்வரை அறைந்து தள்ளினாள், ஜோஷிதா.

ஈஸ்வர் அவள் விட்ட அறையில் நிலை குலைந்து போனான்.

''ஏய்...'' என்று கை ஓங்கியவனின் கையைப் பற்றி முறுக்கினாள்.

''டேய் ராஸ்கல்... என்னைப் பற்றி உனக்கு என்ன தெரியும்? அபாண்டமா இனி இன்னும் ஒரு வார்த்தை பேசிட்டு நின்னே... உன் மானத்தை நாலு பேர் முன்பு வாங்கிடுவேன்! வெளியே போடா நாயே!''

வெளிவாசல் பக்கம் கை நீட்டிக் கத்தியவள்... தன் கையில் அணிந்திருந்த நிச்சயதார்த்த மோதிரத்தைக் கழற்றி அவன் முகத்தில் விட்டெறிந்தாள்.

ஒடிப்போய்ப் பீரோவைத் திறந்து... நிச்சயதார்த்தப் பட்டுச் சேலை, அவன் வாங்கித் தந்த நகைகளை அவன் முன்பு விசிறியடித்தாள்.

"பொறுக்கிக் கொண்டு போடா நாயே! யாரைப் பார்த்துடா நடத்தை கெட்டவன்னு சொல்றே? உனக்கு இப்படியெல்லாம் என் மேல் பொய்க்குற்றச்சாட்டுச் சொல்லச் சொல்லிக் கற்றுக் கொடுத்தவள்தான்டா விபசாரி... ஆள் மயக்கி... ஆள் மாற்றி... லொட்டு லொசுக்கு எல்லாமே! யாரைப் பார்த்து ஒழுக்கம் கெட்டவன்னு சொல்றே...? எனக்கு வர கோபத்துக்குப் பத்ரகாளியா மாறி... உன் குடலை உருவி மாலையாப் போட்டுக்கு வேண்டா, சண்டாளா! அதுக்கு முன்பு ஓடிப்போயிடுடா!"

ஜோஷிதா முகம் சிவந்து பத்ரகாளியாய்... ருத்ரகாளியாய் மாறிக் கத்தினாள்.

ஈஸ்வர் அதற்கு மேல் நில்லாமல் வேகவேகமாய் எல்லாவற்றையும் பொறுக்கிக் கொண்டு வெளியேறினான்.

அவன் அகன்ற பின்னர் பாட்டியம்மாளின் ஞாபகம் வந்து பூஜையறைக்கு ஓடினாள்.

பாட்டி தரையில் துடித்துக் கொண்டிருந்தாள்.

"என்ன பாட்டி செய்யுது? ஐயோ பாட்டி... பாட்டியம்மா..." என்று ஜோஷிதா கதறித் தூக்கினாள்.

"தண்ணீர்... தண்ணீர்..." என்று நாக்கை நீட்டிக் கேட்க...

ஜோஷிதா தண்ணீர் எடுத்துவரச் சமையற்கட்டிற்கு ஓடினாள்.

வெந்நீரை எடுத்து வந்து பாட்டிக்குப் புகட்டினாள்.

நாலு வாய் முழுங்கிய பாட்டியம்மாள் ஐந்தாவது வாய் முழுங்கியபோது வாய் கோணித் தலை சரிந்தது.

ஜோஷிதாவைக் கவலை தோய்ந்த விழிகளால் நோக்கிக் கொண்டே, பாட்டியின் உயிர் மண்ணை விட்டு விண்ணுக்குப் பறந்து விட்டது.

ஜோஷிதா தலையிலடித்துக் கொண்டு அழுதாள்.

10

பாட்டி இறந்த துக்கத்தை அவளால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை!

அவள் அழுது கதறிப் புலம்பிக் கொண்டிருந்தபோது... பக்கத்து வீட்டுப் பெண்மணி... அவளின் பாஸ் சரவணனுக்குச் செய்தியைச் சொன்னாள்.

சரவணன் நிமிடம் தாமதிக்காமல் வந்து சேர்ந்தான்.

அனைத்துக் காரியங்களுக்கும் ஏற்பாடு செய்தான்.

பெரியப்பா சீனுவாசன் மகளின் பிரசவத்திற்குப் போய் இருப்பதால்... பாட்டி இறந்த சோகத்தைச் சொல்லித் துக்கப்பட வைக்க விரும்பவில்லை, ஜோஷிதா.

அடுத்ததாய், அவர் இருமுறை போன் செய்து கண்டபடி திட்டியிருக்கிறார், ஜோஷிதாவை!

நல்லது, கெட்டது என்று எதற்குமே தன்னை அழைக்க வேண்டாம் என்று எச்சரிக்கை வேறு விடுத்திருக்கிறார்.

அவர் எச்சரிக்கையை மீறிச் சொன்னாலும்... அவர் மனம் மாறி வந்தாலும்... நெடுந்தொலைவு உள்ள

இமாச்சலப் பிரதேசத்திலிருந்து வந்து கஷ்டப்பட வேண்டும்.

அவரைக் கஷ்டப்படுத்த ஜோஷிதா விரும்பவில்லை.

அவர் நினைப்புபடி அவர் பேச்சுக் கேளாமல் ஈஸ்வரை மணந்து வாழ்வதாகவே நினைத்துக் கொள்ளட்டும் என்று அவருக்குச் சொல்லாமல் விட்டு விட்டாள்.

பாட்டியை இடுகாட்டிற்குத் தூக்கிப் போன பின்னர்... இருந்த ஒரிரு தூரத்துச் சொந்தங்களும்... வயதுப் பெண்ணின் பாதுகாப்பு, கடமை, தன் தலையில் விழுந்து விடுமோ என்று பயந்து அவரவர் திரும்பிப் பாராமல் சென்று விட்டனர்.

ஜோஷிதா தனியொருத்தியாய் மூலையில் சுருண்டு படுத்திருந்தாள்.

பக்கத்து வீட்டுப் பெண்மணியும் சென்றுவிட... சரவணன் அவள் அருகில் சென்றான்.

ஜோஷிதாவைப் பார்க்கப் பார்க்கப் பாவமாய் இருந்தது.

...ச்சே! இவ்வளவு பெரிய சோதனையைக் கடவுள் எதற்காக ஜோஷிதாவிற்குக் கொடுத்தான் என்று நினைத்துக் கொண்டான்.

''ஜோஷிதா! அழாதம்மா... எழுந்து உட்காரம்மா!'' என்று சரவணன் சொல்ல... மேலும் தேம்பினாள்.

அவன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு எழுந்தமர்ந்தாள்.

''உனக்கு ரத்த சம்பந்தமான ஒரே உறவு உன் பாட்டியம்மா மட்டும்தானே?''

''ம்....'' என்று தலையாட்டினாள்.

''நல்லாதானே இருக்கறதா சொன்னே? பாட்டி உன் திருமண நிகழ்ச்சியால் மேலும் மகிழ்ச்சியில வயது குறைந்து சின்னப் பெண்ணா நடமாடறாங்கன்னு நேற்றுக்கூடச் சொன்னியேம்மா...''

நேற்றுச் சரவணன் கேட்டதும், இப்படித்தான் சொன்னாள். சொன்ன நொடியை நினைத்து நெஞ்சு விம்ம... அழுகையில் குலுங்கினாள்.

''என்னம்மா... ஏன்...?''

''.....''

''என்ன நடந்தது ஜோஷிதா...?''

''நெஞ்சு வலி சார்!''

''இதுக்கு முன்பு இதுபோல நெஞ்சுவலி வந்திருக்கா...?''

''ம்கூம்!''

''அப்புறம் இப்படி வலி சிவியரா வரக் காரணம் என்ன? நெஞ்சு அடைச்சு இறக்கக் காரணம் என்ன?''

ஜோஷிதா பதில் பேசாமல் கண்ணீர் வடித்தாள்.

''பாட்டிக்கு நெஞ்சுவலி வருவதுபோல என்ன நடந்தது? ஈஸ்வருக்குச் சொல்லலாம் என்றதும்... நீ வேண்டாம் என்றாய்! ஏன் அவர் குடும்பத்து ஆட்களுக்குச் சொல்ல வேண்டாம் என்றாய்?''

ஜோஷிதாவிற்கு முன்னிலும் அழுகை காட்டாற்று வெள்ளமாய்ப் பெருக்கெடுத்து ஓடியது.

''என்ன நடந்தது ஜோஷிம்மா...? நீ சொன்னாத்தானே தெரியும்?''

''.....''

"அக்கம் பக்கத்து மனிதர்களும் ஒண்ணுமே சொல்லலை! உண்மை என்னன்னு சொன்னாத்தானே தெரியும்!"

"....."

"உனக்குள்ளே மறைத்து வைப்பதால் என்ன பயன்?"

"....."

"உன் மனதில் உள்ளதை வெளிப்படுத்தும்மா! என்னை உன் சகோதரனா நினைச்சிட்டு இருப்பதா அடிக்கடி சொல்லுவே... அது உண்மைன்னால்... உன்னுள் தேக்கி யிருக்கற... பதுக்கியிருக்கற சோகத்தைச் சொல்லி அழுதுடும்மா!

"....."

"இப்படி உள்ளேயே போட்டு அடைத்து வைத்தால்... உனக்கு ஏதாவது ஆகிவிடுமோ என்று பயமா இருக்கும்மா!

"....."

"ஜோஷிதா... உனக்கு என்னிடம் சொல்ல விருப்பம் இல்லை, இல்லையா...?"

"....."

"என்னை உன் அண்ணனா நினைச்சி... உன் சுகதுக்கங்களைக் கொட்ட... உன் மனசு ஒப்பலே இல்லையா...? என்னை உன் சகோதரனா ஏத்துக்க... உன் இதயம் இடம் கொடுக்கவே இல்லையா?"

"ஐயோ அண்ணா..." என்று குலுங்கியழுதாள்.

"சொல்லும்மா, ஜோஷி?"

"நான் எப்படிண்ணா சொல்வேன்? பாட்டி இன்னும் பத்துப் பதினைந்து வருடங்களுக்குக் கல்லுப்போல

இருந்திருப்பாங்களே...! அந்தப் பாவி... அந்தப் பாவி வந்து கொன்றுவிட்டானே...!"

என்று சொல்லித் தலையில் அடித்துக் கொண்டு கதறி அழ...

சரவணன் அதிர்ச்சியடைந்தான்.

"யார்..? யார் ஜோஷிதா...?"

"அவன்தான்... அவன்தான்..." அவள் அழ...

"எவன்...?"

"ஈஸ்வர்... ஈஸ்வர்..." என்று நடுக்கத்தோடு சொன்னாள்.

"அவரா?"

"ஆமாண்ணா!"

"என்ன செய்தார்?"

"என் திருமணம் நடக்காது எனச் சொன்னார்!"

"என்ன ஜோஷிதா இது? நிஜம்தானா? ஈஸ்வரா...? ஈஸ்வரா அப்படிச் சொன்னார்? உன்மீது பிரியம் கொண்டு... விரும்பி வந்து பெண் கேட்டவர் தானேம்மா...?"

"ஆமாண்ணா!"

"பின்னே திருமணத்தை நிறுத்த என்ன காரணமாம்?"

"நான் சரியில்லாதவளாம்! என் நடத்தை மீது சந்தேகப்படுகிறார்!"

"ச்சே... என்ன ஆள் அவன்? கயவன்!" என்று சரவணன் கோபமானான்.

"ஆமாண்ணா! என்ன நடந்தது? அவருக்கு என்னைப் பற்றி யார் கட்டுக்கதை கட்டிவிட்டாங்கன்னு தெரியலே!

அவங்க பேச்சைக் கேட்டுட்டு வந்து பாட்டியிடம் திருமணம் நடக்காதுன்னு சொல்ல... பாட்டிக்கு அதிர்ச்சியில உயிர் போயிடிச்சி!''

''உன்மேல் அபாண்டமா யார் இப்படியெல்லாம் ஒரு கதையைக் கற்பித்து இருப்பாங்க? அதை இந்த மடையனும் நம்பலாமா...? நீ நெருப்பு... சொக்கத் தங்கம்ன்னு அவனுக்குத் தெரியாதா...?''

''.....''

''தீர விசாரிக்காமல்... அடுத்தவர் பேச்சைக் கேட்டு எப்படி இப்படி ஒரு பழியை உன்மேல் அவன் சுமத்தலாம்...? நான் இதை விடமாட்டேன்...!

''போலீஸ், கேஸ்ன்னு இழுத்தடித்து... மான நஷ்ட வழக்குல அவனை உள்ள தள்ளிக் களி தின்ன வைக்கணும், ஜோஷிதா! இதுபோல உள்ள விஷமிகளைச் சுதந்திரமா நடமாட விடக்கூடாது! இன்று உன்னை... நாளை வேறு பெண்ணென்று பெண்களை இவன் பதம் பார்த்துட்டுப் போவான்!''

சரவணனின் கோபம் கண்டு நெகிழ்ந்து போனாள், ஜோஷிதா. பின் சொன்னாள்.

''வேண்டாம்ண்ணா! போலீஸ், கேஸ்ன்னு அலையப் போவது அவன் மட்டுமில்லே... நானும்தானே! ஊரறிய அவன் என்னை நடத்தை சரியில்லாதவன்னு பழியைச் சுமத்துவான்! மீடியா... செய்தித்தாள்ன்னு சும்மா இருக்குமா?

செய்தியைத் திரித்து... மிகைப்படுத்தி... விற்பனையை அதிகரித்துப் பணம் சம்பாதிக்காதா...? வேண்டாம்!''

''அவனுக்குத் தண்டனையை யார் தருவது?''

''ஆண்டவன் தரட்டும்! நம்மையெல்லாம் படைத்த இறைவன் அவனைப் பார்த்துக்குவான்!''

''ஈஸ்வர் நல்லவன்தானே? அவன் எப்படி மாறினான்? யார் மாற்றினா?''

''எனக்கு அவன் தாய் மேலும்... தாய் மாமன் மேலும் தான் சந்தேகம் வருதுண்ணா.''

''ஏன்?''

''தாய் மாமன் தன் பெண்ணைக் கட்டிக்கலேன்னு அவரும்... அவருடைய சகோதரியும் சேர்ந்து செய்த சதியாய் இருக்கலாம்! ஈஸ்வரின் மனதைக் கலைத்து... திருமணத்தை நிறுத்தச் சொல்லியிருக்கலாம்!''

''பெண்ணுக்குப் பெண்ணே எதிரியா? சரி, போகட்டும். விடும்மா! குறித்த தேதியில் உனக்குத் திருமணத்தை நடத்தி அவன் முகத்தில் கரியைப் பூசணும்!''

''ம்கூம்! வேண்டாம்ண்ணா! எனக்கு ஆண் இனத்தையே பிடிக்கலே!''

''என்னம்மா சொல்றே?''

''எல்லோரும் சுயநலவாதிகள்! பெண்களைப் போகப் பொருளாய் நினைப்பவர்கள்!''

ஜோஷிதா பெரும் கோபத்துடன் சொன்னாள்.

''எல்லோரையும் அப்படி எண்ணி விடாதே, ஜோஷிதா! ஆண்களில் நல்லவர்கள் ஏராளமானோர் உள்ளனர்! உன் நினைவில் உள்ளவர்கள் போல நூறில் இருபது சதவிகிதத்தினர் இருக்கலாம்! அதற்காக ஒட்டு மொத்த ஆண் இனத்தையே குறைத்து எடை போடுவது எந்த விதத்தில் நியாயம்? ம்?''

மனைவி நோயில் விழுந்து படுத்த படுக்கையாகிப் போக... உடல் சுகம் எடுத்து... உறவுக்கு அழைத்த தோழியின் கணவன்...

மனைவி இறந்துவிட... அறுபது வயதிலும் இரண்டாம் தாரமாய்ப் பெண் கேட்டு வந்த முதியவர்...

திருமணம் நிச்சயமாகி விட்டது என்று கூறியும்... உன்னைக் காதலிக்கிறேன்... நீ என்னை மணந்து கொள்... என்ற விஷ்வஜித்...

விரும்பி மணக்க வந்து... யார் பேச்சையோ கேட்டு... அவள் ஒழுக்கத்தைச் சந்தேகித்த ஈஸ்வர்...

பஸ்ஸில் பயணம் செய்யும்போது தோளில் வந்து சாயும் காமுகர்கள் என்று எத்தனையோ விதவிதமான ஆண்களைக் கண்டிருக்கிறாள், ஜோஷிதா.

அதன் விளைவுதான் இப்போது ஆண்களையே பிடிக்கவில்லை என்று கூறுவது!

''உனக்கென்று ஒரு ஆண் துணை வேண்டும், ஜோஷிதா!''

''ஏன் ஆணில்லாமல் இந்த உலகில் வாழ முடியாதா...?''

''வாழச் சில கயவர்கள் விடமாட்டார்கள்! தனியே ஒரு பெண் வாழும்போது நிம்மதியாய் இருக்க விட மாட்டார்கள்! ஏதாவது ஒரு விதத்தில் தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பார்கள்!

''நீயோ வயதானவளாய் இருந்தால் பரவாயில்லை... உனக்கு ஆண் துணையும் தேவையில்லை! நீ ஒரு இளம் வயது அழகிய பெண்! இளமையும், அழகும், அறிவும் நிரம்பிய உன்னைக் கயவர்கள், காமுகர்கள் விட்டு வைப்பார்களா, அதுவும் நீ ஒரு அநாதையென்று தெரிந்து! ம்? வேண்டாம்மா!

''என் மனைவியின் தம்பிக்குத் திருமணத்திற்குப் பெண் பார்க்கிறார்கள்! அவன் நான் சொன்ன சொல்லை மீறமாட்டான்! நான் கிழித்த கோட்டைத் தாண்ட மாட்டான்! அவனைப் பேசி முடிக்கட்டுமா, ஜோஷிதா? குறிப்பிட்ட தேதியிலேயே மணையில் உட்கார்ந்து உனக்குத் தாலிகட்டச் சொல்லட்டுமா...?''

சரவணன் மிதமிஞ்சிய அக்கறையிலும், பாசத்திலும் கேட்டான்.

''ம்கூம். வேண்டாம், அண்ணா!''

''திருமணத்தைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம், உன் மனக்காயங்கள் ஆறிய பிறகு! ஜோஷிதா... நீ தனியே இருப்பது நல்லதில்லை! என் வீட்டு மாடியறை காலியாத்தான் இருக்கு! வந்து தங்கிக் கொள்ளும்மா!''

''வேண்டாம்ண்ணா! பாட்டி உயிர், ஆன்மா, சுவாசம் அத்தனையும் இங்கேயே சுற்றிக் கொண்டிருக்கும். கதவை இழுத்து மூடிவிட்டுப் போகக் கூடாது! தினம் விளக்கு எரிய விடணும்!''

''தனியே எப்படி தங்குவேம்மா...?''

''இனி அப்படித்தானே இருக்க வேண்டிய கட்டாயம்!''

''நம்ம ஆபீஸ் ஸ்டாப் மாலதியைக் கொஞ்ச நாள் வந்து இரவு துணையிருக்கச் சொல்றேன். ஆமா... சென்னையில தூரத்துச் சொந்தம் இருப்பதா சொன்னீயே? அவங்களுக்குத் தகவல் கொடுக்கலையா?''

''ம்கூம்... மகள் பிரசவத்திற்காக இமாச்சலப் பிரதேசம் போயிருக்காங்க! வீணா அவர்களைக் கலவரப்படுத்த வேண்டாம்ன்னு சொல்லலேண்ணா!''

''சரி. பத்திரமாய் இரு! மாலதியை அனுப்பறேன்!''

''அண்ணா!''

''என்ன ஜோஷிதா?''

''பாட்டி இறுதிச் சடங்கிற்குச் செய்த செலவுத் தொகையை என் சம்பளத்தில் மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பிடிச்சிட்டு கொடுங்கண்ணா!''

''நீ எனக்குத் தங்கைன்னா... அவங்க எனக்கும் பாட்டிதானே...? பாட்டியின் இறுதிச் சடங்கிற்குச் செலவு செய்த தொகைக்குப் பேரன் கணக்குப் பார்ப்பானா...?''

''அண்ணா... அண்ணா!''

ஜோஷிதா தாங்க முடியாமல் முதுகு குலுங்க விம்மி வெடித்தாள்.

சரவணன் இரவு உணவை வாங்கிக் கொடுத்துவிட்டு வீட்டிற்குச் சென்றான்.

கொஞ்ச நேரத்தில் மாலதி வந்தாள். ஜோஷிதா விரித்த பாயில் படுத்து உறங்கி விட்டாள்.

அவளருகில் படுத்த ஜோஷிதாவால் நிம்மதியாய்க் கண்மூட முடியவில்லை!

'பெரிய பணக்காரன் திருமணம் செய்து கொள்ளச் சொல்லிக் கெஞ்ச... அதை மறுத்தவள், நான்! அப்படிப் பட்ட என்னைப் போய் எப்படித் தரக்குறைவாய் நினைப் பான், ஈஸ்வர்?'

தரக்குறைவாய் நினைத்ததும் இல்லாமல், பாட்டியின் உயிரையும் வாங்கி விட்டானே!'

நினைத்த ஜோஷிதாவின் கண்களில் சரம் சரமாய்க் கண்ணீர் வழிந்தது!

11

விஷ்வஜித் அவன் கனவுப் பூமிக்கு வந்து விட்டான்!

அவன் வரும்போது தங்க என்றே பெரிய அழகிய பங்களாவைக் கட்டி முடித்திருந்தான்.

அதன் மேல்மாடி படுக்கையறையின் சன்னல் கம்பியைப் பிடித்துக் கொண்டு... இருண்ட வானத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜில்லென்ற பனிக்காற்று அவன் மேனி தொட்டுக் குளிர வைக்க முயற்சி செய்து, தோற்றுத் தூரப் போய்க் கொண்டிருந்தது!

அவன் துடிதுடித்துக் கொண்டிருந்தான்!

அவன் தாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருந் தான்!

உள்ளுக்குள்ளேயே உருக்குலைந்து போய்க் கத்தினான்! கதறினான்! விம்மினான்! வெடித்தழுதான்!

மலைமலையாய்ச் சோகம் அவனை மூழ்கடித்துக் கொண்டிருந்தது.

வெளியே மலைச் சிகரங்கள் பனிப் போர்வை போர்த்து. நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தன!

ஆனால், விஷ்வஜித் உறக்கமின்றி வெந்து, வேதனை கொண்டிருந்தான்.

ஜோஷிதாவிற்குச் சகல அலங்காரங்களும் நடந்திருக் கும்!

ஜோஷிதா... மணப்பெண் அலங்காரத்தில் தங்கமாய், வைரமாய் ஜொலிப்பாள்!

ஜோஷிதாவின் வீட்டிற்குப் பெண் அழைப்புக்காய் ஆட்கள் வந்து... அவனின் அழகு தேவதையை அள்ளி அபகரித்துக் கொண்டு சென்றிருப்பார்கள்!

காரில் ஊர்வலம் நடக்குமா...?

அல்லது குதிரை பூட்டிய வண்டியில் பெண்ணிற்கு ஊர்வலம் நடக்குமா...?

தெரியவில்லை!

ஆனால், அவன் மனம் கவர்ந்த கள்ளி மாற்றானை மணக்கப் புன்னகையைச் சூடிப் பயணப்பட்டுக் கொண்டிருப்பாள்!

'ஜோஷிதா... என் கண்ணே... உனக்காக இங்கொரு இதயம் தவித்துக் கொண்டிருப்பது தெரியாதா...?''

'ஜோஷி... என் உயிரே... எல்லாமும் நீயென்று நினைத்த நினைவுகளுக்கு அமிலத்தை வார்த்து விட்டாயே, பெண்ணே!'

'எல்லாவற்றையும் பெற முடிந்த என்னால்... உன் இதயத்தைப் பெற்று... இனிமையாய் வாழக் கொடுத்து வைக்கவில்லையே, கண்ணே!'

'யாரிடமும் என் தவிப்பை விவரிக்க முடியாமல் தனித்து ஓடிவந்து ஒருவனாய் ஓலமிட்டுக் கொண்டிருக்கிறேனே!'

'அம்மா என்னைக் காணாமல் பதறுவாள்!'

'அப்பா தவித்து விடுவார்!'

'அஸ்வின் கலங்கிப் போவான்!'

தாரிகா அன்பு மிகுதியில் அழுவாள்!

'என் செல்போனின் 'ஸ்விட்ச் ஆப்' என்று சொல்லும் குரலில், பதிலில் எல்லோரும் என்னைப் போலவே உறங்காமல் உருக்குலைந்து உட்கார்ந்து இருப்பார்களே!'

'என்னைத் தேடக் கடும் முயற்சி செய்து கொண்டிருப்பார்களே!'

'ஏன் நான் இப்படி ஆனேன்?'

'எதற்குமே வளையாத நான் உன்னிடம் வளைந்து போனேனே?'

'எந்தப் பெண்ணும் இப்படி என்னைப் பைத்தியக் காரனாய் ஆக்கவில்லை!'

'என்னை இப்படி இம்சித்துப் பார்ப்பதில் அப்படி என்ன சுகம், என் ரோஜாப் பெண்ணே!'

'ஏன் என் கண் முன்னே தென்றலாய்த் தோன்றினாய்...?''

'என் காதலைச் சொன்னபோது... ஏன் என்னைத் தீயாய்த் தீண்டினாய்...?'

'உன்னைக் காணாது இருந்தால்... இப்படித் துடித்துப் போய் இருக்க மாட்டேனே...?'

'ஏன் என் கண்ணில் விழுந்தாய்...?'

'ஏன் என் நெஞ்சில் கீதமாய்த் தவழ்ந்தாய்...?'

'என்றும் கனவுகளில் கைகோர்த்து நடந்திருந்தால்... எனக்கு இதுபோல ஒரு தீங்கு நேர்ந்திருக்காதே!'

'நேரில் வந்து... நெஞ்சம் நிறைந்து... இன்னொருவன் மனைவியாகப் போவது எந்த விதத்தில் நியாயம்...?'

'இன்பத்திற்குப் பின்னால் துன்பமும், துயரமும் உள்ளது என்று எனக்கு இதுநாள்வரை தெரியாதே!'

'இத்தனை நாளும் இன்பத்தோடு மட்டுமே கை கோர்த்து இளவரசனாய்த் திரிந்த என்னை... எனக்குத் துன்பம் என்றொரு புதிய அத்தியாயத்தை அறிமுகப் படுத்திச் செல்கிறாயே, என் அழகிய செல்லமே!'

படுக்கையில் விழுந்து ஒருக்களித்துப் படுத்தான்!

மல்லாந்து படுத்தான்!

குப்புறக் கவிழ்ந்தான்!

ம்கூம்!

எப்படிப் படுத்தாலும் அவன் இதயம், எண்ணம் அவனை உறங்கவிடவில்லை!

திரியைத் தூண்டிய தூண்டுகோலாய்... துன்பத்தைத் தீண்டித் தீண்டிப் பெரிது படுத்தியது, அவன் மனது!

விடிய விடியத் தூக்கமில்லாமல் புரண்டவன்... விடியற் காலையில் எழுந்து உட்கார்ந்து பயம் கொண்ட குழந்தை யாய் மடியில் முகம் புதைத்து விம்மி வெடித்தழுதான்.

ஒரு அழகான, பேராண்மைக்கார ஆண்மகன் அழ லாமா என்று கூட நினைக்காமல் கதறினான், விஷ்வஜித்!

கண்களில் கண்ணீர் புது வெள்ளத்தின் வீரிய சக்தி யுடன் முட்டி, மோதி, தவழ்ந்து, உடைப்பெடுத்து வெளி வந்தது.

ஆறு முப்பது மணி. நெருங்க நெருங்க...

'ஜோஷிதா... ஜோஷிதா... ஜோஷிதா... ஜோஷிதா...' என்று வாய்விட்டுப் புலம்பி, அடக்க முடியாமல் வீறிட்டு அழுதான், விஷ்வஜித்.

விஷ்வாவிற்குத் தெரியாது... ஜோஷிதாவிற்கும் ஈஸ்வருக்கும் நடக்க இருந்த திருமணம் நின்று போனது!

செய்தி தெரிந்தால் இப்படியா அழுது புலம்புவான்? விண்ணுக்கும் மண்ணுக்கும் எகிறி எகிறிக் குதிக்க மாட் டானா?

மதியம் இரண்டு மணி வாக்கில் தன்னைத் தேற்றி வீட்டிற்குப் புறப்பட்டான்.

வீடு வர இரவாகி விட்டது!

அவன் உள்ளே நுழைய... இதயம் விம்ம... சிவரஞ் சனி ஓடிவந்து அணைத்து மகனின் கன்னம் முழுக்க முத்தமிட்டார்!

''விஷ்வா... விஷ்வா... ஏன்டா இப்படி எங்களைத் தவிக்கவிட்டே?''

என்று வீறிட்ட குரல் கேட்க... ரவிவர்மா ஓடிவந்து மகனைக் கண்ணீரோடு அணைத்துக் கொண்டார்.

''விஷ்வா... சொல்லாமல் கொள்ளாமல் எங்கேடா போனாய்...? விஷ்வா... அஸ்வின் எல்லாத்தையும் இப்போதான் சொன்னான்! நிஜமாவாடா...?

உன் தவிப்புக்கு... கலக்கத்திற்கு... ஒரு பெண்தான் காரணமா...?''

விஷ்வஜித் தந்தையின் சொல்லிற்குப் பதில் சொல் லாமல் மௌனமாய் நின்றான்.

''ஏன்டா இதை முன்னவே சொல்லவில்லை?'' என்று விஷ்வாவின் சட்டையை ஆத்திரத்துடன் சிவரஞ்சனி பற்றிக் கேட்க...

''சொல்லியிருந்தால்...?'' என்று தாயிடம் விஷ்வஜித் அலட்சியம் காட்ட...

''அவள் காலில் விழுந்து, கதறியாவது... உன்னை மணக்கச் சொல்லிக் கேட்டிருப்பேன்!''

''ஐயோ அம்மா...'' என்று தாயின் வாயைப் பொத்தினான், விஷ்வஜித்.

''யோசித்துப் பேசுங்கம்மா! இதுபோல யோசிக்காமல் பேசி என் மனதைப் புண்படுத்த வேண்டாம்!''

விஷ்வாவின் கண்கள் கண்ணீரில் பளபளத்தன!

''விஷ்வா... உன்னுடைய இன்பம்... உன்னுடைய சந்தோசம்... உன்னுடைய ஆனந்தம் அத்தனையும் எனக்கு முக்கியம்டா, கண்ணா! உன் எதிர்கால வாழ்வின் சந்தோசத்திற்காக.. உன் தாய் ஒரு பெண்ணின் காலில் விழுவதால் எந்தத் தரக்குறைவும், தவறும் இல்லே, விஷ்வா!''

''அம்மா... என்னைக் கொல்லாதீங்கம்மா!''

''உன் உருகல்... மருகல்... தவிப்பு... கஷ்டத்துல இருந்து, உன்னோட அளவுக்கதிகமான நேசம் தெரியுது. விஷ்வா! இனி உனக்காக என்னால் ஒண்ணுமே செய்ய முடியாதே, விஷ்வா! அவளுக்குத் திருமணம் ஆகியிருக்குமே, விஷ்வா! உன்னை வேண்டி விரும்பிக் கேட்டுக்கிறேன்! அவளை மறந்துடுப்பா, விஷ்வா!''

சிவரஞ்சனி அழுகையோடு சொன்னார்.

''என் இதயத்தைத் திருடிய தேவதையை எப்படியம்மா மறக்க முடியும்...? என்னால் மறக்க முடியாதும்மா! அது ஒண்ணு மட்டும் முடியாதும்மா!'' தீர்மானமாய் விஷ்வஜித் சொல்லவும்...

''விஷ்வா... விஷ்வா...'' ரவிவர்மா மகனைப் பற்றிக் கொண்டு தழுதழுத்தார்.

''ஆமாம்பா! அவள் மீது நான் வைத்த காதல் என் இதயத்துல ஆழமா வேர்விட்டு... தண்டு விட்டு... கிளையாகி...

இலையாகி... பூவாகி... மொட்டாகி... கனியாகின்னு தழைத்துக் குலுங்கிட்டு இருக்குப்பா!

என்னுள் வேர்விட்டுக் கிளைபரப்பிய காதல் மரத்தை எப்படிப்பா பிடுங்கி எறிவேன்... கோடரி கொண்டு எப்படிப்பா வெட்டி எறிவேன்...?'' தாங்க முடியாத சோகத்துடன் சொல்ல...

''விஷ்வா... விஷ்வா... மறந்துரு கண்ணா! ஜோஷிதா என்ற பெண்ணையே பார்க்கலேன்னு நினைச்சிக்கோ! புதுசா உன் வாழ்க்கையை சந்தோசமாக வாழப் பார்! நல்ல பெண்ணாய்ப் பார்த்துக் கட்டி வைக்கிறேன்! அவளோட சந்தோசமா குடும்பம் நடத்தினால்.. உன் மனசுல இருக்கற காதல் காயமெல்லாம் ஆறிடும்! உன் மனைவி... உன் மனப் புண்ணிற்கு மருந்தாய் இருப்பாள்!''

''சாகச் சொல்லுங்கம்மா, செத்துடறேன்! ஆனால், என்னைத் திருமணம் மட்டும் செய்துக்கச் சொல்லி வற்புறுத்தாதீங்க!''

''விஷ்வா... விஷ்வா... என்று இழுத்து அணைத்த அம்மாவின் மடிதேடி முதுகு குலுங்கத் தலை வைத்துப் படுத்துக் கொண்டான்!

விஷ்வஜித் வந்துவிட்டான் என்ற செய்தியறிந்து அஸ்வின், தாரிகா, சீனுவாசன், சுமத்திரா என்று அனைவரும் அங்கே வந்துவிட்டனர்!

ஓரளவு தாயின் மடி தந்த தாலாட்டில் எழுந்தமர்ந்தான், விஷ்வஜித்!

''ஏய் விஷ்வா... எங்கேடா இடியட் போனே...? ஊர் முழுக்கச் சல்லடை போட்டுத் தேடி... ஒவ்வொருவருக்கும்

போன் போட்டுக் கேட்டு... ச்சே! இப்படி எங்களைத் தவிக்க விடலாமா...?''

அஸ்வின் மிதமிஞ்சிய கோபத்துடன் கேட்டவன் மீண்டும் தொடர்ந்தான்.

''நீ சொல்லாமல் போன காரணம் புரியாமல் மூளையைப் போட்டுக் கசக்க... கடைசியாய் ஜோஷிதாவின் திருமண நாள் ஞாபகத்திற்கு வர... அதன் விளைவாய்த் தான் எங்கோ சென்று விட்டாய் என்று நினைத்தேன்! ஆமா... எங்கேடா போனாய்...?''

''.....''

விஷ்வஜித்தின் மௌனம் அஸ்வினுள் அபாய மணியை அடிக்க...

''ஜோஷிதாவின் திருமணத்திற்குப் ாயிட்டு வரியா என்ன?'' என்று பதறிக் கேட்க...

''ம்கூம்...! அந்த அளவு தைரியம் எனக்கில்லேடா! அவள் வேறொருவனுக்கு மனைவியாவதை எவ்வாறு கண் கொண்டு காண்பேன்?''

''பின்னே எங்கே போனீங்க, விஷ்வா?'' தாரிகா கேட்டாள்.

''கனவுப் பூமிக்கு...''

''அங்கேயா...? அவ்வளவு தூரமாகவா...? அதுவும் தனியாகவா...? என்ன விஷ்வா சொல்றே?''

''ம்...'' என்று அவன் பதிலளிக்க...

''காரை அவ்வளவு தூரம் நீதான் ஓட்டிச் சென்றாயா...?''

''துக்கம் எனக்குத்தானே...? என் கஷ்டத்திற்காக டிரைவரைத் தண்டிப்பது தவறில்லையா...?''

''ச்சே! மடையா... போ... போய் வெந்நீர்ல குளி! சாப்பிட்டுட்டு படு! அம்மா! இவனோட நீங்களும் போய்ப் படுங்க! இவனைத் தனியே விடாதீங்க! மடையன் திரும்பவும் உடம்பைக் கெடுத்துக்குவான்!'' அஸ்வின் அக்கறையோடு சொன்னான்.

''அஸ்வின்...''

அழைத்த விஸ்வாவை அஸ்வின் பார்க்க...

'ஜோஷிதாவிற்கு போன் செய்து நான் அவளுடைய மண வாழ்க்கைக்கு 'ஆல் த பெஸ்ட்' சொன்னேன்னு சொல்லு, அஸ்வின்!''

''உங்க நல்ல மனதை ஜோஷிதா புரிஞ்சிக்கலையே, விஷ்வா சார்!''

சீனுவாசன் கவலையோடு சொன்னார்.

''ச்சே.. முதல்ல அந்த அரக்கியை மறந்து தொலைடா!''

அஸ்வின் அதட்டினான்.

''உங்க மனசுல இருக்கற அவள் நினைவுகளைச் சுத்தமா வழிச்சி எறியுங்க, விஷ்வா!''

தாரிகா கண்ணீரோடு சொன்னாள்.

அதன் பிறகு அனைவரும் கிளம்பினார்கள்.

உடல் மெலிந்து... கண்களின் கீழ்க் கருவளையம் விழுந்து... தொய்வாய்க் காணப்பட்ட மகனைக் காணக் காண சிவரஞ்சனியின் கண்களில் கண்ணீர் ஊற்றாய்ப் பெருகியது!

சிவரஞ்சனி சூடான வெந்நீரைக் கொண்டு... தன் கையாலேயே விஷ்வாவைக் குளிக்க வைத்தார்!

தலையைப் பூத் துவாலை கொண்டு துவட்டி விட்டார்!

மிருதுவான பருத்தியாடை அணிந்து வந்த மகனுக்குச் சூடான உணவைப் பரிமாறினார்.

இரண்டு நாட்கள் பட்டினி கிடந்த வயிறு உணவுக் காக ஆவலாய்த் தவித்திருக்க... கையிலெடுத்துச் சாப்பிட் டவன்... ஜோஷிதாவின் நினைவு தந்த பாதிப்பால் பாதியிலேயே கையைக் கழுவினான்.

சிவரஞ்சனி பதறினார்.

''என்னப்பா...? ஏன் விஷ்வா...?''

''தொண்டையில உணவு இறங்கலேம்மா! அடைக்கு தும்மா! உணவா...? துக்கமா...? துன்பமா...? என்ன வென்று இனம் கண்டு பிடிக்க முடியலேம்மா!''

விஷ்வஜித் கலக்கத்துடன் கூறினான்!

சிவரஞ்சனி விம்மி வெடித்தழுதார்!

மகனை அவனுடைய படுக்கையறைக்கு அழைத்துச் சென்றார்.

சிவரஞ்சனியை உட்கார வைத்து... அவர் மடியில் விஷ்வஜித் தலை வைத்துப் படுத்துக் கொண்டான்.

''அம்மா... என்னைத் தட்டித் தாலாட்டும்மா!''

''என்ன பாட்டுப் பாடட்டும், கண்ணா?''

''பாலும் கசந்ததடி... படுக்கையும் நொந்ததடின்னு பாரதியார் பாட்டு இருக்கே... அதைப் பாடும்மா... ப்ளீஸ்ம்மா...''

சொன்ன விஷ்வாவின் கண்கள் கண்ணீரைப் பொல பொலவெனக் கொட்ட...

தாய் தவித்துப் போனார், ஆறுதல் கூற மொழியின்றி!

12

'நீ என்னை விட்டு எங்கேயும் போய்விடவில்லை!

நீ என்னோடே இருக்கிறாய்!

என் உடலில் உயிராய்க் கலந்திருக்கிறாய்!

என் நினைவுகளில் ஞாபகங்களாய்த் தவழ்கிறாய்!

என் இதயத்தில் ஆக்ஸிஜனாய் ஓடிக் கொண்டிருக் கிறாய்!

என் ஆன்மாவில் ஒளியாய் ஒளிர்ந்து கொண்டிருக்கிறாய்!

என் உயர்வில் ஏணியாய்த் தாங்கிக் கொண்டிருக்கிறாய்!

என் உழைப்பின் மூலதனமாய் இயங்கிக் கொண்டிருக் கிறாய்!

என் எண்ணங்களில் தூய சிந்தனையாய் உருமாறி யிருக்கிறாய்!'

இப்படியான கவிதைகளை அவன் டைரி தாங்கிக் கொண்டிருக்கிறது!

'என் உயிர்ச் சுவாசம் நீ...!'

என் உயிரின் உணர்வு நீ...!'

'உன்னைக் கண்களால் கண்டவுடன் காலம் காலமாய்க் கலந்து கரைந்த உணர்வுகள்...!'

'உன் பூவிதழ்களைக் கண்டவுடன்... காலம் காலமாய்த் தேன் பருகிச் சுவைத்து மகிழ்ந்த சிலிர்ப்புகள்!'

'உன் இடையைக் கண்டவுடன்... யுகயுகமாய்ப் பின்னிப் பிணைந்து கொண்டிருந்த எண்ண அலைகள்...!'

'உன் தாமரையைவிட மென்மையான கைகளைக் கண்டவுடன்... ஜென்ம ஜென்மமாய் என் கைக்குள் உன் கையினைப் பொத்திச் சுகம் கண்ட அழகிய சிந்தனைகள்...!'

'உன் மெல்லுடலைக் கண்டவுடன் காலம் காலமாய்க் கட்டி இன்பம் பெற்ற நெகிழ்வுகள்...!'

இப்படிப்பட்ட நெகிழ்ச்சியான வாசகங்கள் என அவன் டைரியில் இடம் பெற்றிருக்கும்!

விஷ்வஜித் நாடித் துடிப்பும்... இதயத் துடிப்பும் ஜோஷிதா... ஜோஷிதா... என்றுதான் துடிக்கும்!

ஜோஷிதாவையே சிந்தித்து... அவள் பெயரையே சுவாசித்து... விஷ்வஜித் நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தான்!

தாரிகாவிற்கு அழகான ஆண் குழந்தை பிறந்தது!

ரவிவர்மா, விஷ்வஜித், சிவரஞ்சனி, அஸ்வின், தாரிகா, சீனுவாசன், சுமத்திரா என்று அத்தனை பேரும் குதூகலித்தார்கள்!

விஷ்வஜித் குழந்தையின் தளிருடலைத் தொட்டுத் தொட்டுப் பார்த்து சந்தோசப்பட்டான்!

குழந்தையின் ரோஜாக் கன்னத்தில் முத்தமிட்டு முத்தமிட்டு அவன் அன்பை வெளிப்படுத்தினான்!

குழந்தையை முத்தமிடும்போது அவனின் இதய தேவதை ஜோஷிதா வந்து... அவன் ஞாபகங்களில் கண் சிமிட்டிப் போவாள்!

அச்சு அசல் அஸ்வினின் ஜாடையை உரித்து வைத்துக் குழந்தை இருக்க...

'எனக்கும் ஜோஷிதாவிற்கும் திருமணம் நடந்தால்... இப்படித்தான் என் சாயலை உரித்து வைத்து என் பிள்ளை பிறப்பானா...?'

அந்த அழகான நினைவு... அவன் நெஞ்சைப் பிளந்து வலிக்கச் செய்தது!

அன்று இரவு ஜோஷிதாவிடமிருந்து சீனுவாசனுக்கு போன் வந்தது!

சீனுவாசன் ஜோஷிதாவின் நெம்பரைக் கண்டவுடன் போனைக் கட் செய்தார்.

மீண்டும் மீண்டும் ஜோஷிதா ட்ரை பண்ண... சீனுவாசன் ஆத்திரத்தோடு எடுத்து ஆன் செய்து காதில் வைத்தார்.

''என்ன வேணும்?'' என்று சீறினார்.

''பெரியப்பா... உங்களுக்கு என் மேல் பயங்கரக் கோபம்!''

''ஆமாம்!''

''பழசையெல்லாம் விடுங்க, பெரியப்பா! தாரிகா அக்கா எப்படி இருக்காங்க?''

''தாரிகா எப்படி இருந்தா உனக்கென்ன?''

''குழந்தை பிறந்துடிச்சா?''

''அதைக் கேட்க நீ யார்?''

''சொல்லுங்க பெரியப்பா... ப்ளீஸ் பெரியப்பா... அக்காவுக்குக் குழந்தை பிறந்தாச்சா...? இல்ல, இன்னும் இல்லையா...?''

''அதை நீ தெரிஞ்சிக்க வேண்டிய அவசியமென்ன? என் சொல்பேச்சுக் கேட்காதவள்! நீ இனி என்னைப் பெரியப்பான்னு கூப்பிட வேண்டாம்! உனக்குத் திருமணம்

முடிஞ்சது இல்லையா...? நீ உன் புருஷனோட சந்தோசமா வாழற இல்லையா...? உன் வாழ்க்கையைப் பார்த்துட்டு இரு! அடுத்தவங்களைப் பற்றி தெரிஞ்சிக்க ஆர்வம் கொள்ளாதே!''

''பெரியப்பா... பெரியப்பா...''

ஜோஷிதா தேம்பியவாறு சொல்ல...

''இனியொருமுறை என்னிடம் பேச முயற்சிக்காதே!'' என்று கூறி போனை 'கட்' செய்தார்.

அங்கு வந்த அஸ்வின்...

''யார் மாமா...?'' என்று கேட்டான்.

''அவள்தான்!''

''எவள் மாமா?''

''ஜோஷிதா!''

''அவளோட போன்னு தெரிஞ்சா கட் பண்ண வேண்டியதுதானே...?''

''செய்தேன்! மீண்டும் மீண்டும் முயற்சிக்க... இனி என்னிடம் பேச முயற்சிக்காதே என்று திட்டித் தீர்க்கத் தான் ஆன் செய்து பேசினேன்!''

''விஷ்வாவோட துன்பத்துக்கும், துயரத்துக்கும் காரணமானவள் ஜோஷிதா என்று நினைக்கும்போது அவள் மேல் வெறுப்பா வருதுப்பா!''

தாரிகா சொன்னாள்.

''என் பேச்சைக் கேட்டிருந்தால்... விஷ்வா இந்த நேரம் சந்தோசமா இருந்திருப்பார்!''

''சரியா சொன்னீங்க மாமா! விஷ்வாவுக்கு என்ன குறை? நிச்சயம் நடந்ததைக் காரணம் காட்டி மறுத்துட்டாளே!''

அஸ்வின் சோகத்தோடு கூறினான்.

''தாரிகா... உனக்குக் குழந்தை பிறந்தாச்சா... இல்லையான்னு தெரிஞ்சிக்கணுமாம்... கேட்கறாள்!

சீனுவாசன் தாரிகாவைப் பார்த்துக் கூற...

''ஆஹா... அவளுக்கு என்மேல் ரொம்பதான் அக்கறை! அவள் அக்கறையைக் கொண்டு போய் ஆற்றிலே போடச் சொல்லுங்க!''

தாரிகா முகம் சுழித்துச் சொன்னாள்.

''ஆமா... புருஷனோட சந்தோசமா இருக்காளா? என்னவாம்...?''

சீனுவாசன் மனைவி சுமத்திரா கேட்க...

''நமக்கேன் அந்தச் செய்தியெல்லாம்? அவளையே ஆகலேன்னும்போது... அவள் கணவனோட நல்லா வாழ்ந்தா என்ன? இல்ல, கண்ணைக் கசக்கிகிட்டு துன்பப்பட்டா என்ன?'' சீனுவாசன் ஆத்திரத்தோடு சொன்னார்.

''புருஷனோட பெங்களூர் போயிருப்பாள்!'' என்று தாரிகா நீட்டி முழக்க...

''விடு தாரிகா! நமக்கு ஒருத்தரைப் பிடிக்கலேனா... அவர்களைப் பற்றி நினைப்பதே பெரும் தவறு!''

அஸ்வின்தான் சொன்னான்.

''ஜோஷிதா மட்டும் விஷ்வாவை மணந்துக்கச் சம்மதிச்சி... திருமணம் நடந்து இருந்தால் நாமெல்லாம் எவ்வளவு மகிழ்ந்திருப்போம்! எனக்கு விஷ்வாவைப் பார்க்கும் போதெல்லாம் துக்கம் பீறிடுது! என்ன ஒரு ராஜகளை பொருந்தியவன்! எத்தனை அன்பானவன்! வாரிவாரிக் கொடுக்கும் வள்ளல் பரம்பரையில் வந்தவன்! கடந்ததைப் பேசிப் பலனில்லே! விட்டுடுவோம்!''

மீண்டும் பேசிய அஸ்வின் பேச்சை நிறுத்தி... பெரு மூச்சு விட்டான்.

''விஷ்வஜித் சாரோட மனதை மாத்தப் பாருங்க, மாப்ளே!'' சீனுவாசன் சொன்னார்.

''முயற்சிக்கிறேன், மாமா! காலத்தின் சுவடுகள்... ஜோஷிதாவைப் பற்றிய ஞாபகங்களை அழிக்கும் என்று நம்பறேன்! அப்போ அவன் எதிர்காலம் பற்றிப் பேசலாம்!''

''ஜோஷிதாகிட்ட இருந்து அப்பாவுக்கு போன் வந்ததை மறந்தும்கூடச் சொல்லிடாதீங்க, அஸ்வின்!''

தாரிகா அஸ்வினைப் பார்த்து எச்சரித்தாள்.

''அவளைப் பற்றி பேச்சே பேச மாட்டேன், தாரு! இதில் அவள் போன் செய்ததைப் போய் அவன்கிட்ட சொல் வேனா...? விஷ்வாவை மேலும் கலவரப்படுத்திக் கலங்க வைப்பேனா, தாரு?''

அஸ்வின் வருத்தத்துடன் மனைவியைப் பார்த்துச் சொன்னான்.

''சொல்ல மாட்டீங்கதான்! ஆனாலும் ஆர்வக்கோளாறுல உளறிடுவீங்களோன்னு எச்சரித்தேன், ஸாரி அஸ்வின்!''

தாரிகா மன்னிப்பைக் கோரினாள்.

* * *

பார்ட்டி இறந்து இரண்டு மாதங்கள் கடந்து விட்டன!

ஜோஷிதாவிடம் இன்னும் சோகத்தின் சுவடுகள் விஞ்சி நின்றன!

மாலதி கொஞ்ச நாட்களுக்குத் தினம் தினம் வந்து இரவு துணை இருந்தாள்!

ஜோஷிதா கொஞ்சம் தெளிந்த பிறகு, 'இனி நான் தனியே இருந்து கொள்வேன், மாலதி! உனக்கு ரொம் பவே நன்றி மாலதி!' என்று கூற...

மாலதி இரவு வருவதை நிறுத்திக் கொண்டாள்.

சரவணனும், அவன் மனைவி ரஞ்சிதாவும் அன்பாய், ஆதரவாய் இருந்தனர்.

அடிக்கடி அவளைப் போய்ப் பார்த்து ஆறுதல் சொல்லி விட்டு வந்தனர்.

'உன்னை நேசிக்கிறேன் என்று விரும்பி வந்தவனை நிச்சயதார்த்தம் நடந்துவிட்டது என்றும்... ஒழுக்கம், பண்பாடு என்றும், என்னை நிராகரித்து விட்டாயே, ஜோஷிதா!' என்று விஷ்வஜித் அடிக்கடி கனவிலும், நினைவிலும் வந்து குற்றம் சாட்டுவான்.

அப்போதெல்லாம் ஜோஷிதா எழுந்தமர்ந்து விடு வாள். திரும்பத் தூக்கமே வராது தவிப்பாள்.

'எப்போப்பட்ட பேராண்மை நிரம்பியவன், விஷ்வா! அவன் என்னை மணக்கக் கேட்டது ஈஸ்வரின் காதில் விழுந்திருந்தால் அவ்வளவுதான்! அவன் என்னை இன்னமும் தரக்குறைவாய்ப் பேசியிருப்பான்! அந்த மட்டும் தப்பித்தேன்.'

ஜோஷிதா அந்த நினைவில் நிம்மதிப் பெருமூச்சு விடுவாள்.

'சரவணன் இன்னும் எத்தனை நாட்களுக்கு விடுப்பும் கொடுத்து... சம்பளமும் கொடுத்துப் பார்த்துக் கொள்வான்...?'

'அவனுக்கு நான் என்ன உறவா...? சொந்தச் சகோ தரிதானா...?'

'திருமணம் நின்றது. என்னுடைய விதிப் பயன்! வினைப் பயன்!'

'பாட்டி இறந்தது அவளின் ஆயுட்காலம் முடிந்ததால்!'

'இனியும் உட்கார்ந்து வெட்ட வெளியை நோக்கிக் கொண்டிருந்தால் திருமணம் நின்றதால் ஏற்பட்ட அவமானம் அவளிடம் இருந்து தூரே போய்விடுமா?'

'அல்லது பாட்டிதான் உயிர் பெற்று என்னைப் பராமரித்துக் கொள்ள வருவாளா?'

இவ்வாறு ஜோஷிதா மனதைத் தேற்றிக் கொண்டாள்!

மறுநாளே வேலைக்குப் புறப்பட்டாள்!

சரவணன் அவளின் மாற்றத்தை வரவேற்றான்!

'வேலை... வேலை...' அவளின் சோகத்திற்கு முட்டுக்கட்டை போட்டுத் தூர நிறுத்தியது!

மெல்ல மெல்ல ஜோஷிதா சோகத்திலிருந்து மீண்டெழுந்தாள்!

இந்த முறை ஐம்பது பேர் கொண்ட குழு வடக்கே சுற்றுலா செல்ல இருந்தது!

அத்தனை பேரும் ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகளும், அவர் மனைவிமார்களும்தான்!

டெல்லி, ஹரியானா, பஞ்சாப், உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஹிமாச்சலப் பிரதேசம், ஜம்மு, காஷ்மீர் என்று செல்ல இருந்தது.

அந்த ட்ராவல் ஏஜென்சியில் நான்கைந்து பேர் பொறுப்பாளர்களாய் உள்ளனர்.

அந்த அமைப்பு - பொறுப்பாளர்களில் ஜோஷிதாவும் ஒருத்தி!

ஜோஷிதாவை எல்லோரும் விரும்பிக் கை காட்ட... அவளும் மறுக்காமல் ஒத்துக் கொண்டாள். அவளுக்கும் ஒரு மாற்றம் தேவைப்படுவதால்!

ஜோஷிதாதான் அவர்களை உதவியாளர்கள் உதவியோடு வழி நடத்திச் செல்ல இருக்கிறாள்.

சுற்றுலாத் தலங்கள் பற்றியும், வழித்தடங்கள் பற்றியும் தெரிந்து வைத்துக் கொண்டாள்.

சுற்றுலாவில் இடம் பெறும் ஆலயங்கள் பற்றிய குறிப்பினை இரவு, பகல் பாராது படித்துச் சுருக்கமாய் எழுதியும் வைத்துக் கொண்டாள்.

அன்று இரவு...

ரயிலில் விழுப்புரத்திலிருந்து ஐம்பது பேர் கொண்ட குழுவுடன், ஜோஷிதாவும், அவளின் அசிஸ்டெண்ட மாலதியும், பாதுகாப்புக்கெனக் கிருபாகரன், கிஷோர், பாலா என்ற இளைஞர்களும் என்று கிளம்பி விட்டனர்.

சரவணன் ஜோஷிதாவிடம் ரயில் கிளம்பும் போது சொன்னான்.

"ஜோஷிதா, பத்திரம்மா! பயணிகள் அத்தனை பேரும் உன் பொறுப்புதான்! அவர்களின் உடல் நலன், பாதுகாப்பு, உணவு அத்தனையும் உனது கடமையைச் சேர்ந்தது...

"உன்னை விரும்பி... நீ வரமாட்டேன் என்று மறுக்க... கட்டாயப்படுத்தி அழைத்துச் செல்கிறார்கள்! அவர்களைப் பொறுப்போடு வழிநடத்திச் செல்வது உன் பொறுப்பும்மா, ஜோஷிதா!"

"கட்டாயம், அண்ணா!"

"ஏறக்குறைய ஒரு மாதத்திற்கும் மேலான பயணச் சுற்றுலா இது! பயணத்தின் போது உன் துக்கங்களை, உன் இழப்புகளை மனதில் போட்டுக் குழப்பிட்டு கவனக் குறைவாய் இருந்து விடாதே!"

"சரி, அண்ணா!"

"இவர்கள் அத்தனை பேரையும் கட்டிக்காக்க வேண்டிய அன்னையாய் நீ அவதாரம் எடுக்க வேண்டும்!"

"நிச்சயம்!"

"அப்படியே சுற்றுலாவிலேயே உன் துன்பங்களை... உன் துயரங்களை விட்டுட்டு புது மனுஷியாய் வர வேண்டும்!"

"முயற்சிக்கறேன், அண்ணா! உங்கள் அக்கறைக்கு ரொம்பவே நன்றி, அண்ணா!"

"அவர்களைக் கவனிக்கிறேன் என்று உன்னைக் கவனித்துக் கொள்ள மறந்துவிடாதே!..."

"சரி..."

"சரியான நேரத்திற்கு உண்ண வேண்டும்."

"சரி!"

"சரியான நேரத்திற்கு உறங்கி ஓய்வெடுக்க வேண்டும்!"

"கட்டாயமாய்ச் செய்கிறேன், அண்ணா! என் பாட்டியே உயிர்பெற்று வந்து வழியனுப்புவதுபோல தோன்றுது, அண்ணா!"

ஜோஷிதா கண்கள் கலங்கினாள்.

"கிளம்பும்போது கண்கள் கலங்கலாமாடா? துடைத்துக் கொள், ஜோஷிம்மா!"

ரயில் மெல்லக் கிளம்ப...

"நான் வருகிறேன், அண்ணா!"

என்றவள் சரவணனையே கண்ணை விட்டு மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்தாள்.

இனி, அவனைப் பார்க்கவே போவதில்லை என்பது போல!

13

மத்தியப் பிரதேசம்...

உத்தரப்பிரதேசம்...

டெல்லி...

ஹரியானா...

பஞ்சாப்...

என்று இவ்வளவு இடங்களிலும் உள்ள முக்கிய சுற்றுலாத் தலங்கள், புனிதக் கோயில்கள் என்று இன்பமாகப் பார்த்தாகி விட்டது.

இன்னும் மிஞ்சி இருப்பது ஹிமாச்சலப் பிரதேசமும்... ஜம்மு காஷ்மீரும்தான்!

ஜோஷிதா, தன் குழுவோடு ஹிமாச்சலப் பிரதேசத்திற்கு வந்திருக்கிறாள்.

இமாச்சலத்தைக் 'கடவுளின் சொந்த பூமி' என்று அழைக்கின்றனர்.

ஹமீர்ப்பூர் பாபா பாலக்நாத்...

நைனாதேவி கோயில்...

அவாதேவி கோயில்...

சிந்துபூரணி ஆலயம்...

ஜுவாலமுகி ஆலயம்...

சிம்லா...

குலு...

மணாலி... என்று குறிப்பிட்ட முக்கிய இடங்களை யெல்லாம் பார்க்க வந்திறங்கியுள்ளனர்!

சிம்லா மண்ணைத் தொட்டபோது... ஜோஷிதாவிற்குக் குற்ற உணர்வு மேலோங்கியது!

'கண்களில் கனவுகளோடு ஆசையாசையாய்க் காதலைச் சொன்ன இளவரசன் விஷ்வஜித் எங்கிருக்கிறானோ...?'

'எங்காவது இருந்து அவன் கண்களில் பட்டு விடுவோமோ...?'

என்றெல்லாம் ஜோஷிதாவினுள் பயம் பந்தாய் உருண்டு திரண்டு மிரட்டியது!

'அஸ்வின், தாரிகா, பெரியப்பா, பெரியம்மா என்று பார்க்க நேர்ந்தால் அவர்களை எப்படி எதிர்கொள்வது?'

'கல்யாணமாயிற்றா...?' என்ற கேள்வி வந்தால் என்ன பதில் சொல்வது?'

'ஆம் என்றால் கல்யாணமானவள் எதற்காக வேலைக்கு... அதுவும் பழைய வேலைக்கு வந்தாய் என்று கேட்பார் கள்!'

'நின்றுபோன காரணம் தெரிந்தால் இழிவாய்ப் பார்ப் பார்கள்.'

'கடவுளே! அவர்களை நான் காணக்கூடாது.'

'விஷ்வஜித் சுவாசித்து வெளிவிடும் சுவாசக்காற்றை நானுமே சுவாசிக்கிறேன்!'

'விஷ்வஜித் பாதச்சுவடு பட்ட இடங்களில் என் பாதச் சுவடுகள் படிகின்றன!'

'விஷ்வஜித்தின் கண்களுக்குக் குளிர்ச்சியைத் தந்த மரங்களும், மலைகளும், இயற்கைகளும் என் கண் களுக்கும் குளிர்ச்சியைத் தருகின்றன!'

'விஷ்வஜித்தின் மேனியைத் தீண்டி மெய்சிலிர்க்க வைத்த பனிக்காற்று என் மேனியையும் தீண்டி மெய் சிலிர்க்க வைக்கிறது!'

'விஷ்வஜித்திற்கு என் திருமணம் நின்றதின் உண்மை யான காரணம் தெரிந்தால்... ஒழுக்கம், பண்பாடு பற்றி வாய்கிழியப் பேசிய உன்னையே ஒருவன் ஒழுக்கத்தைக் காரணம் காட்டித் தாலிகட்ட மறுத்து விட்டானா... என்று நகைப்பான்!'

'கடவுளே... அவனை நான் காணக்கூடாது!'

'என் உயிர் உள்ளவரை அவனைக் காணக்கூடாது!'

'அதுவும் முக்கியமாய் விஷ்வஜித்தின் கண்களில் மட்டுமாவது படாமல் என்னைக் காப்பாற்று!'

இறைவனை மீண்டும் மீண்டும் வேண்டிக் கொண்டாள்!

அவள் வேண்டுதலும் சிம்லா மண்ணில் பலித்தது!

இமாச்சலப் பிரதேசம் கோவில்கள் நிறைந்த பிரதேசம்!

அதுமட்டுமல்லாது, பெரும்பாலான கோவில்கள் நூற்றாண்டுகளுக்கு மேற்பட்ட புராணச் சிறப்புகளை யும்... செய்திகளையும் தாங்கி நின்றிருக்கின்றன.

கொஞ்சம் காலங்களையும், நேரங்களையும் நிறையவே எடுத்துக் கொண்டு சுற்றிப் பார்த்தனர்.

அன்று இரவு பிலாஸ்பூரில் தங்கிக் கொண்டனர்! வசதியான பெரிய சொகுசு ஓட்டலில் தங்கி விட்டனர்!

சிம்லாவை விட்டு பிலாஸ்பூருக்கு வந்ததும்தான் ஜோஷிதாவின் மனது அமைதி கொண்டது!

சிம்லாவில் இருந்த இரண்டு நாட்களும் ஜோஷிதா இமை மூடிக் கொஞ்ச நேரம் கூடத் தூங்கவில்லை.

சரியாகச் சாப்பிடவேயில்லை!

ஆனால், பிலாஸ்பூர் மண்ணிற்கு வந்து நிறைவாக வயிறு நிரம்ப உண்டாள்!

அறைக்கு வந்து கட்டிலில் படுத்ததும்... நித்திரை தேவி அவள் கண்களைச் சிறை செய்ய... நிம்மதியாக உறங்கினாள்!

விடியற்காலையிலேயே எல்லோரும் எழுந்து குளித்தார்கள்!

ஜோஷிதா எளிய இளம் ரோஜா வண்ணப் பட்டுப் புடவை உடுத்திக் கொண்டாள்!

அவளின் செக்கச் சிவந்த சந்தன மேனிக்கு அந்த அழகிய பட்டுப்புடவை பாந்தமாய் இருந்தது!

எளிய அலங்காரத்திலேயே தேவதையாய் ஜொலித்தாள்!

அத்தனை பேரும் அவளின் அழகைப் புகழ்ந்தனர்!

பிலாஸ்பூரிலிருந்து 65 கி.மீ. தொலைவில் உள்ள 'நைனா தேவி' கோயிலுக்குத்தான் இன்று செல்கின்றனர்.

மணி எட்டுக்கெல்லாம் அவர்களின் பேருந்து அங்கு சென்று விட்டது!

ஹோட்டலில் உண்டு விட்டுக் கிளம்பினர்.

'நைனாதேவி கோயில்' அழகிய குன்று ஒன்றின் மீது அமைந்துள்ளது!

அவர்கள் சென்ற நாள் நவராத்திரி நாள்!

ஒவ்வொரு ஆண்டும் தேவியின் நினைவைப் போற்றும் வகையில் 'நவராத்திரிக் கொண்டாட்டம்' விசேஷமாய் இருக்கும்!

அன்று பெரிய சந்தையும் கூடும்!

நவராத்திரி பண்டிகையை ஒட்டி பஞ்சாப், ஹரியானா, மாநிலங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் சுற்றுலா வந்திருந்தினர்!

லட்சக் கணக்கில் பெரும் கூட்டம் கூடிவிட்டது!

கோவிலுக்குச் செல்ல இரு வழிகள் உண்டு.

ஒன்று கயிற்றின் மூலம் இயக்கப்படும் தொட்டில் ஏணி மூலம் செல்லலாம்!

அடுத்ததாக, மலைப் படிக்கட்டுகளின் வழியே ஏறிச் செல்லலாம்!

மலைப்பாதைப் படிக்கட்டுகள் நெட்டுக் குத்தலாய் இல்லாமல் கொண்டை ஊசி வளைவுகளோடு இருந்தது!

படிக்கட்டுகள் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்டிப் பாதுகாப்பாய் இருந்தது!

அத்தனை பயணிகளும் படிக்கட்டு வழியே ஏறிச் செல்லப் பிரியப்பட்டதால்... ஜோஷிதாவும் ஓ.கே. சொல்லி விட்டு மெல்லப் படிக்கட்டுகளில் ஏறினாள்.

ஆங்காங்கே தண்ணீர் பாட்டில், பாக்கெட்டில் பழரசம், மோர் என்று விநியோகித்தனர்!

புளியோதரை, பொங்கல், தயிர் சாதம் என ஆங்காங்கே பொட்டலங்களும் விநியோகிக்க, விருப்பமானவர்கள் வாங்கி உண்டு கொண்டு நடந்தனர்.

மலைப்பாதையில் கொஞ்ச தூரத்திற்குக் கொஞ்ச தூரம் உதவிக் குழுவும்... மருத்துவக் குழுவும் அமர்த்தப் பட்டிருந்தது.

''ஏதோ தன்னார்வத் தொண்டு நிறுவனமோ... தனி மனிதனோதான் இதையெல்லாம் செய்வார்கள் என்று நினைக்கிறேன், ஜோஷிம்மா!''

கிருபாகரன் சொன்னார்.

''நிஜமாகவா, தாத்தா...? பேர் எதுவும் இல்லையே! அரசாங்கம், அதிகாரிகள்கூட இதைச் செய்யலாம் இல்லையா...?

ஜோஷிதா கேள்வி கேட்டாள்.

''மக்கள்மேல் இந்த அளவு எந்த அரசாங்கத்துக்கும், அதிகாரிகளுக்கும் அக்கறையிருக்கு, ஜோஷிதா?

சொல்லும்மா பார்க்கலாம்...?

எல்லோரும் சுயநலவாதிகள்!

போலீஸ்லகூட ஒரு சிலரைத் தவிர பலர் இப்போ எல்லாம் தன் பணியை ஒழுங்கா செய்யறதில்லே, தெரியுமா...?

திருவிழாக் காலங்களில் பந்தோபஸ்துக்கு வரும் போலீஸ்காரர்கள் மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்காமல்... வீண் பிரச்சனையும், சண்டையும், சச்சரவும் மோதல்

களும் வராமல் தடுப்பதை விட்டுவிட்டு... கும்பல் கும்பலாய் நின்று அரட்டை அடிக்கிறார்கள்!

இரு பிரிவினர்களுக்கிடையே மோதல் ஏற்பட்டு... நிறைய உயிர்ச்சேதம் ஏற்பட்டு... முடியும் தருவாயில் போய் நிற்கிறார்கள்!

காலம் ரொம்ப கெட்டுப் போச்ச, ஜோஷிம்மா!

ஏதோ தனிமனிதன்... புண்ணியவான்தான்... இந்த நல்ல காரியங்களைச் செய்வார் என்று நினைக்கிறேன்!''

கிருபாகரன் நீண்டதாய்ச் செய்தி சொல்லி முடித்தார்.

''நிஜமாகவே அப்படி ஒரு உயர்ந்த உள்ளம் கொண்ட வங்ககூட இருப்பாங்களா, தாத்தா...?''

ஜோஷிதா சந்தேகமாய்க் கேட்க...

''அவர்கள் கடவுளின் மறுபிறவிகள்! கடவுள் என்றுமே நேரடியாகக் காட்சி தரமாட்டார்! இப்படி ஏதாவது உருவிலேதான் காட்சி தருவார்!''

ராம் என்ற ஓய்வு பெற்ற ஆசிரியர் இடைப்புக...

''தாத்தா! எனக்கொரு சந்தேகம். பாதுகாப்புக் குழு அவசியம்தான்! ஆனால், இந்த மருத்துவக் குழு எதுக்கு ஆங்காங்கே முகாமிட்டிருக்கு! தேவையில்லாமல்?''

''யோசிக்கவே மாட்டீயாடா, ஜோஷிம்மா...?''

''ஏன் தாத்தா?''

''பின்னே, என்னைப் போல வயசாளிகள் எத்தனை பேர் ஏறுகிறார்கள்!...

திடீரென்று மாரடைப்பு... இல்ல, சுவாசப் பிரச்சனை... அல்லது வயிற்று உபாதைன்னு வந்துட்டால் பாதி மலையில் என்ன செய்ய முடியும்?

எங்களைப் போன்றவர்களுக்கு முதல் உதவி செய்யவே மருத்துவக் குழு முகாமிட்டிருக்கு!''

''ஓ... ஸாரி தாத்தா! நான் இந்தக் கோணத்தில் சிந்திக்கவேயில்லை!''

கிருபாகரன் ஆசையாய்க் கேட்டார்.

''ஜோஷிம்மா, நைனா தேவியின் சிறப்பு... தலமகிமை உனக்குத் தெரியுமா...?''

''ஓ... தெரியுமே, தாத்தா!''

''சொல்லேன், தாயீ.''

''என்ன தாத்தா இப்படி நடு வழியில கேட்கறீங்க? கூட்டம் ஜாஸ்தியா இருக்கே! யாராவது தடுமாறப் போறாங்களோன்னு பயத்துல இருக்கேன்! மேலே ஏறிப்போய்... தேவியைத் தரிசனம் செய்துவிட்டு... நல்ல இடமாய்ப் பார்த்து அமர்ந்து எல்லோருக்குமே சொல்றேனே!''

''அப்புறம் ஒரு முறையும் சொல்லுடா! யார் வேண்டாம் என்றா? எனக்கு நீ இப்போதே சொல்லு, தாயீ. தல மகிமையையும், தேவியின் சிறப்பையும் தெரிந்து கொண்டு போய்... அந்த அம்பாளை வணங்கினால் மேலும் பக்தி கூடுமில்லையா...?''

''தாத்தா... நீங்க சரியான ஆளு தெரியுமா...? நான் சொல்லலேன்னால் விடமாட்டீங்க போல!''

''கண்டிப்பாம்மா!''

கிருபாகரன் உறுதியாய்ச் சொல்லிவிட்டு அவளோடு அவரும் மெல்லப் படிகளில் நடந்தார்.

''வைணவர்களுக்கு எப்படி 108 திவ்ய தேசங்களோ... அது போன்று சக்தி வழிபாட்டுக்காரர்களுக்கு 51 சக்தி தலங்கள் இந்தியா முழுவதும் பரவியுள்ளன!

இந்த நைனாதேவி சக்தி பீடம் 51 சக்தி பீடங்களில் ஒன்று!

சிவபெருமானுக்கும், அவரின் பாதியான சக்திதேவிக்கும் ஒரு சமயம் நடனப் போட்டி ஏற்பட்டது. அப்போட்டியில் தேவி தோற்று... அவமானம் தாங்க முடியாமல் இறந்து விழுந்ததாகவும்... அவருடைய இறந்த உடலைச் சுமந்து சிவன் தன் அழிவு நடனத்தை ஆடினார் என்றும் புராணம் கூறுகிறது!

சிவனின் இந்த உக்கிர தாண்டவம் கண்ட திருமால்... சிவனின் கோபத்தைத் தணிக்கத் தன் சக்கரப் படையை ஏவி... தேவியின் உடலை 51 கூறுகளாகும்படி செய்தார் எனவும்...

அவ்வாறு துண்டாக்கப் பெற்ற உடலின் பகுதிகள் விழுந்த ஒவ்வொரு இடமும் ஒவ்வொரு சக்தி பீடம் என்றும்... அவ்வாறு உடல் பகுதியில் தேவியின் கண்கள் விழுந்த இடமே நைனாதேவியின் ஆலயம் அமைந்துள்ள இடம் என்றும் கூறப்பெறுகிறது! என்ன தாத்தா தல வரலாறு போதுமா...?''

''எவ்வளவு சிறப்பாய், அழகாய், விளக்கமாய் விளக்கினே ஜோஷிம்மா!''

''அப்படியா தாத்தா, ரொம்ப சந்தோசம் உங்க புகழ்ச்சிக்கு தாத்தா... தேவி ரொம்ப சக்தி வாய்ந்தவளாம்! கேட்ட வரத்தைக் கொடுப்பவளாம்! நைனாதேவிகிட்ட என்ன வேண்டிக்கப் போறீங்க?''

''என் மனைவி நீண்ட காலம் நோய், நொடி இல்லாமல் இருக்கணும்ன்னு வேண்டிக்குவேன்!''

ஜோஷிதா சட்டென்று நெகிழ்ந்தாள். பின் சொன்னாள்

''நீங்க நோயில்லாமல் இருக்க வேண்டாமா...? உங்களுக்காக வேண்டிக்க மாட்டீங்களா?''

''அவள் நல்லபடியா இருந்தால்... நானும் நல்லா யிருப்பேன், ஜோஷிதா!

எனக்காக அவள் வேண்டிக்குவாள்! அவளுக்காக நான் வேண்டிக்குவேன்!''

கிருபாகரன் தாத்தா ஜோஷிதாவிற்குப் பதில் சொல்ல...

அந்த நேரம் அருகில் வந்த அவருடைய மனைவி மீனாட்சியைப் பார்த்து...

''ஆஹா... உங்க அன்பை, நேசத்தைக் கண்டு புல் லரிக்குது, தாத்தா!'' என்றவள் மீனாட்சியைப் பார்த்துச் சொன்னாள், ஜோஷிதா.

''உங்க புருஷன் உங்களுக்கு ரொம்பத்தான் ஐஸ் வைக்கிறார், பாட்டிம்மா! குளிர்ந்துடாதீங்க!''

என்று மல்லிகையாய் மலர...

''சரியான குறும்புக்காரப் பெண்ணம்மா, நீ!'' என்று மீனாட்சி சிரித்தபடி படியேறினார்.

இரண்டு நாட்களுக்கு முன்னர்...

விஷ்வஜித் ஆபீஸிலிருந்து அலுப்போடு உள்ளே நுழைந்தான்.

சிவரஞ்சனியும், ரவிவர்மாவும் ஹாலில் அமர்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்தனர்.

சிவரஞ்சனியின் அருகில் அமர்ந்து கால் சாக்சைக் கழற்றினான். கழுத்து டையை அவிழ்த்துவிட்டு, கோட்டைக் கழற்றிவிட்டு... அலுப்போடு அம்மாவின் மடியில் தலை சாய்ந்தான்.

ரவிவர்மா அவன் கால் பகுதியில் வந்தமர்ந்து... அவன் காலைத் தூக்கி மடியில் வைத்து... கால்களை மெல்லப் பிடித்துவிட...

''அப்பா... என்னப்பா இது? விடுங்க!' என்று விஷ்வ ஜித் அதட்டினான். கால்களை இழுக்க முயற்சித்தான்.

ரவிவர்மா விடவில்லை.

''என் மகனுக்குக் கால் பிடித்து விடுவதால் நான் ஒன் றும் குறைந்து விட மாட்டேன்! இது எனக்கு அவமான மும் இல்லை!

நாள் முழுக்க அலைந்து, திரிந்து, உழைத்துவிட்டு வரும் மகனுக்குக் கால் பிடித்து விடுவதில்... எனக்கு இன்பம்தான், விஷ்வா!

உன்னைப்போல் பிள்ளைகள் அழகாய் உடுத்திக் கொண்டு... வெட்டியாய் ஊர் சுற்றி வரும்போது... நீ எவ்வளவு பொறுப்பாய்... என் தொழில்களைப் பார்த்துக் கொள்கிறாய். அதுவுமில்லாமல் பலவிதமான புதிய தொழில்களை நிறுவி வெற்றி நடை போடுகிறாய்! உன்னை நினைத்து எனக்குப் பெருமைதான் விஷ்வா!''

''உங்களுக்கு உடல்நிலை சரியில்லை! அதனால் தொழிலை ஏற்று நடத்துவது... என் கடமைதானே?''

''பெரிய கடமை...! அதை எத்தனை பேர் செய் கிறார்கள்?'' என்ற சிவரஞ்சனி...

மகனின் நெஞ்சு வருடி... கன்னம் தடவி... அவன் கண்களில் மாறி மாறி அழுத்தமாய் முத்தமிட... அந்த பாசமான, தித்திப்பான முத்தத்தில் மகிழ்ந்து போனான் விஷ்வா!

தாயின் முகம் பற்றி முத்தமிட்டான்!

பின் கண்மூடிப் படுத்து விட்டான், விஷ்வா!

"ரொம்பக் களைப்பா இருக்கா, கண்ணா...?"

சிவரஞ்சனி கேட்டாள்.

"ஆமாம், அம்மா!"

"நீ இன்னும் ஜோஷிதாவை மறக்கலையா, கண்ணா...?"

"எப்படிம்மா மறக்க முடியும்?"

கண்களில் வலியோடு கூறிய மகனைக் கண்கள் கலங்க நோக்கினார், சிவரஞ்சனி.

"நீங்க விரும்பிய அப்பா கிடைக்கலேன்னா... அவரை மறந்துட்டு... வேறொருத்தரைத் திருமணம் செய்து வாழ்ந்திருப்பீங்களா...?" என்று விஷ்வா கேட்க... சிவரஞ்சனியிடமிருந்து பட்டென்று பதில் வந்தது.

"எப்படி முடியும், விஷ்வா...? உன் தந்தையை நான் காதலித்தேனே! உன் விஷயம் அப்படியா...? உனக்கும், ஜோஷிதாவுக்கும் காதல் இருந்ததா...? அல்லது நல்லா பழகறீங்களா...?"

"ஜோஷிதாவை நானும் காதலித்தேன், அம்மா!"

"என்ன விஷ்வா உளர்றே?"

"எனக்குள்ளே கண், காது, மூக்கு, உருவம் வைத்து... என் மனைவி எப்படி இருக்க வேண்டும் என்று... ஒரு தேவதையை சிருஷ்டித்து... அவளையே நேசித்து வந்தேன்! என் நேசத்துக்கு உரியவள் வேறு யாருமல்ல... ஜோஷிதாதான்! கனவில் கண்டவள்... நேரில் வர... என் காதலைச் சொன்னேன்! நிச்சயத்தைக் காரணம் காட்டி மறுத்து விட்டாள்! இந்தப் பிறவி முழுக்க அவளோடு

என்றுமே கனவிலேயே கை கோர்த்து வாழ்ந்து விடு வேன், அம்மா!"

"மடையா... என்ன பேசறே? அந்த நைனாதேவி உனக்கு நல்ல புத்தியைக் கொடுக்கட்டும்!" என்ற சிவரஞ்சனி நினைவு வந்தவராய்...

"விஷ்வா... இன்னும் இரண்டு நாளில் நவராத்திரிப் பண்டிகை வருதில்லையா...?"

"ஆமாம்! அதுக்கென்ன, வரட்டுமே, அம்மா!"

"என்ன விஷ்வா இப்படி விட்டேத்தியா பேசறே? நவராத்திரி பண்டிகையை ஒட்டி நைனாதேவி கோவில்ல விழா விசேஷமா இருக்குமில்லையா? ஒவ்வொரு ஆண்டும் 'நவராத்திரி அன்றும், சிரவண அஷ்டமி' அன்றும் நம் கம்பெனி ஆட்களுக்கு விடுப்புக் கொடுத்து விட்டு... அங்கே பணிபுரியும் இளைஞர்களை மட்டும் அழைத்துக் கொண்டு பாதுகாப்புக்கென்று செல்வாய்! நல்ல மருத்துவர்களை புக் செய்து மருத்துவ முகாமும் வைப்பாய்! மக்களின் தாகம் தீர்க்க நீர், மோர், பழரசம் என்று கொடுப்பாய்! பொங்கல், புளியோதரை, தயிர் சாதம் என்று மக்களின் பசி தீர்க்க அன்னதானம் செய் வாய்! இந்த வருடம் செய்வதற்கு எல்லா ஏற்பாடும் நடந்து விட்டதா...? இல்லையா...?"

"இல்லம்மா! இந்த வருடம் அதையெல்லாம் செய்யப் போவதில்லை!"

"ஏன் விஷ்வா...? நீ கம்பெனி பொறுப்பேற்றதி லிருந்து இந்த நல்ல காரியத்தைச் செய்கிறாய்தானே...?"

"செய்கிறேன்தான்!"

"அப்புறம் இந்த வருடம் மட்டும் ஏன் செய்ய மாட் டேன் என்கிறாய்?"

"இத்தனை வருடங்களும் தவறாமல் அந்த தேவியைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்கு அன்னதானம், மருத்துவ உதவி என்று எல்லாமும் செய்தேன்!

ஆனால், அந்த தேவி மட்டும் எனக்கு மனம் இரங்க வில்லையே!

என் மனதுக்குப் பிடித்த ஜோஷிதாவோடு என்னைச் சேர்த்து வைக்கவில்லையே!"

விஷ்வஜித் சோகமாய்ச் சொன்னான்.

"தேவி மேல் குறை சொல்லாதே, விஷ்வா! உனக்குத் தான் ஜோஷிதான்னால்... உன்னோடு அவளைச் சேர்த்து வைப்பாங்க இல்லையா...?"

"இனிமேலா...? என்னம்மா பேசறீங்க? வேறு ஒருவ னோடு மணமாகிப் போனவள் எனக்கு எப்படிக் கிடைப் பாள்...?"

"நைனாதேவியின் அருள் இருந்தால்... அவள் கண வன் இறந்துகூட உனக்குக் கிடைப்பா இல்லையா...?"

சிவரஞ்சனி இவ்வாறு சொல்ல விஷ்வஜித்துக்குச் சட்டென்று கோபம் வந்துவிட்டது.

"ச்சே... வாயைக் கழுவுங்கம்மா! ஏன் இப்படி அவலட் சணமாய்ப் பேசறீங்க? நான் நேசிக்கிற பெண் என்றுமே கண்கள் கலங்கக் கூடாது! நல்லபடியா சந்தோசமா இருக் கணும்! ஆண்டவனிடம் அதைத்தான் வேண்டிக்கிறேன்!"

"இதுக்குப் பேர்தான் உண்மையான நேசம், விஷ்வா! நேசித்தவள்... எங்கிருந்தாலும் நல்லா இருக்கணும்ன்னு நினைக்கிறே பாரு... உனக்குத்தான் எத்தனை நல்ல மனது! உன் நல்ல மனதுக்கு நல்லதே நடக்கும், கண்ணா!"

"எனக்கு நம்பிக்கையில்லேம்மா!"

"நம்பிக்கைதான் ஒவ்வொரு மனிதனோட வாழ்க்கை வண்டியின் அச்சாணி... தெரியுமா?"

ஒரு மனிதன் பொன்னை இழக்கலாம்! கஷ்டப்பட்டுச் சேர்த்த பொருளை இழக்கலாம்! அவன் கையை இழக் கலாம்! அவன் காலைக் கூட இழக்கலாம்! ஆனால், நம் பிக்கையை மட்டும் இழக்கக் கூடாது, விஷ்வா செல்லம்!" அம்மா அறிவுறுத்தினாள்.

"விஷ்வா... நன்மை செய்யும்போது பலனை எதிர் பார்த்துச் செய்யக்கூடாது! நாம செய்யற நன்மையை என்றும் செய்திடுவோம்!

அந்த நன்மை நமக்குப் பலனாய் அமையட்டும். அல்லது பாலையாய்க் கூட அமையட்டும்! புரியுதா...?"

அவனுடைய தந்தை ரவிவர்மா இவ்வாறு அறிவுறுத்த...

"சரிப்பா!" என்றான், விஷ்வா.

"நாளைக்கு ஒரு நாள் போதுமா?"

போதும்பா!"

"அஸ்வினைக்கூட வச்சிட்டு ஒவ்வொன்றையும் முடி! அரிசி, பருப்பு, சமையலுக்கு ஆள் என்று நாளையே அனுப்பிவிடு!"

"சரிப்பா!"

"மருத்துவர்கள்...?"

"போன வருடம் வழக்கமா வந்தவர்கள் நம்ம அளவுக் கதிகமான சம்பளம் தெரிந்து என் அழைப்புக்காகக் காத் திருப்பார்கள், அப்பா!"

''அவர்களுக்கு போன் செய்து விஷயத்தை முதலில் சொல்!''

''சரிப்பா! அம்மா... இப்போ உங்களுக்கு சந்தோசம் தானே?'' அம்மாவைப் பார்த்துக் கேட்க...

''சந்தோசம், விஷ்வா! ரொம்ப ரொம்ப சந்தோசம், விஷ்வா! அந்த நைனாதேவி உனக்கு மீண்டும் ஏதாவது வழியில் சந்தோசத்தைக் கொடுப்பாள்!''

நவராத்திரியன்று...

காலை ஏழுமணி...!

விஷ்வா... அஸ்வின் மற்றும் சில கம்பெனியில் பணிபுரியும் இளைஞர்களோடு மேலே போனான்.

நைனாதேவியின் சன்னதி முன்பு விஷ்வா கண்கள் கலங்க நின்று விட்டான்.

'தேவி... தேவி... நான் நினைத்தது நடக்கவில்லையே!'

'ஜோஷிதா... எனக்குக் கிடைக்கவில்லையே!'

'என் உயிருக்குயிரான நேசம் நீர்க்குமிழியாய் வந்த வேகத்திலேயே உடைந்து உருக்குலைந்து போய் விட்டதே!'

'ஜோஷிதா... எனக்கில்லை எனும்போது அவளை என் கண்களில் காட்டாமல் இருந்திருக்கலாமே, தாயே!'

'அவளைக் கண்களில் காட்டி... காட்டிய வேகத்திலேயே தட்டிப் பறித்துக் கொண்டாயே, தேவி!''

'தேவி... நான் அப்படி என்ன பாவம் செய்தேன்?'

'ஏன் என் நெஞ்சத்தின் ஆசையை மட்டும் நிறைவேற்றி வைக்காமல் பழி வாங்கி விட்டாய்?'

'ஜோஷிதாவை என்னால் மறக்க முடியவில்லையே!'

'ஜோஷிதா வேறு ஒருவனுக்குச் சொந்தமாகி இருப்பாள் என்று என் புத்திக்கு உரைத்தாலும்... என் நேசம் கொண்ட நெஞ்சு அவளை ஒரு கணமும் மறக்க மாட்டேன் என்கிறதே!'

'நான் என்ன செய்வேன் தேவி? அவள் நினைவுகளை மூச்சு முட்டச் சுமந்து கஷ்டப்படுகிறதே, என் இதயம்!

நைனா தேவியின் முன்பு இதயம் விம்ம... மனமுருக வேண்டியபடி நின்றான், விஷ்வஜித்.

அவன் வேண்டுதல் நிறைவேறாது என்று தெரிந்தாலும்!

14

உச்சிவானில் சூரியன் உக்கிரமாய்க் கோலம் கொண்டு... ராட்சசனாய்ச் சுட்டெரிக்கப் பார்த்தாலும்... இமயமலையின் சாரல் காற்று தென்றலாய்ப் பக்தர்களைத் தாலாட்டியது! சூரியனுடைய வெயிலிலிருந்து பக்தர்களைக் காத்தது, இமயத்தின் சாரல்!

நைனாதேவி கோயில் சலவைக் கற்களால் ஆனது!

வெள்ளைச் சலவைக் கற்கள் நிலவாய், சூரியனாய்ப் பிரகாசித்தன!

கோயிலின் எழில்மிகு... கம்பீரமான தோற்றம் அத்தனை பேரையும் வியக்க வைத்தது! காந்தமாய்க் கவர்ந்து இழுத்தது!

கலைநயமிக்க கோயிலின் அமைப்பைக் கண்டு அத்தனை பேரும் அசந்து விட்டனர்.

ஜோஷிதாவின் குழு மெல்ல மேடேறி விட்டது!

கர்ப்ப கிருகத்தின் உள்ளே புகுந்து அருமையாய்ச் சாமி தரிசனம் முடிந்து வெளியே வந்தார்கள்.

அவளோடு சென்ற பயணிகள் அத்தனை பேரும் அங்கே கிடைத்த பிரசாதத்தைத் திருப்தியாய் உண்டு விட்டு... கொஞ்ச நேரம் ஓய்வெடுத்துக் கொண்டு மலை இறங்கினர்.

அடிவாரத்தில் இருந்த மருத்துவக் குழுவிற்குப் போடப்பட்டிருந்த டெண்டின் பின்புறம் நாற்காலியில் அமர்ந்து விஷ்வஜித் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான்.

காலை அஸ்வின் எவ்வளவு வற்புறுத்தியும் விஷ்வ ஜித் உணவு உண்ணவில்லை!

மதியமும் உண்ணவில்லை!

எவ்வளவோ சொல்லியும் விஷ்வஜித் கேட்காததால்... அவன் மேல் கோபம் கொண்டான், அஸ்வின்!

பின்னர் அஸ்வின் மருத்துவக் குழு, அன்னதானக் குழுவை மேற்பார்வையிடக் கிளம்பி விட்டான்.

அடிவாரத்தில் ஆரம்பித்து அரை கிலோ மீட்டர் இடை வெளியில் இவர்களின் அன்னதானக் குழு, பாதுகாப்புக் குழு, மருத்துவக் குழு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது!

விஷ்வாவின் உள்ளத்தில் இன்று ஜோஷிதாவைப் பற்றி அலைப்புறுதல் அதிகமாய் நடந்தது!

ஒரு நொடிகூட ஜோஷிதாவை அவன் இதயம் எண் ணாமல் இல்லை!

செல்போனை எடுத்துத் தட்டி... அவளின் பூ முகத் தைப் பார்த்தான்!

யாரும் காணாத போது உதட்டுக்குக் கொண்டு போய் முத்தமிட்டான்!

காலையில் தினமும் கண் விழிப்பது ஜோஷிதா என்ற தேவதையின் வதனத்தில்தான்!

போட்டோகிராபர் நண்பன் கொடுத்த போட்டோவில் ஜோஷிதா தவறிவிழ... தாவி அணைத்து... அவளைப் பிடித்துக் கொண்ட போட்டோவை... கொஞ்சம் பெரிது படுத்தி வைத்திருக்கிறான், விஷ்வஜித்!

அந்த போட்டோவை அவனுடைய செல்போனி லும்... அவனுடைய லாப் - டாப்பிலும் பதிவு செய்து வைத்துள்ளான்!

நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதை எடுத்து விழி விரியப் பார்ப்பதும்... ஜோஷிதாவின் கன்னம், விழி இதழ்களை வருடிக் கொடுப்பதும்... தொட்டுத் தொட்டுப் பார்ப்பதும்... முத்தமிட்டு மோகம் கொள்வதும் அவ னுடைய வேலைகளில் முக்கியமான வேலை!

அவனுடைய கஷ்டப்படும், வேதனைப்படும், துன்பப் படும் இதயத்திற்கு அந்த போட்டோக்கள்தான் இதமான அருமருந்து!

விஷ்வஜித் தூங்கும்போது அவன் நெஞ்சின மேலேயே அந்த போட்டோவை வைத்துக் கொண்டு... இறுக அணைத்துத் தூங்குவான்!

விடிய விடிய போட்டோவைக் கட்டிக் கொண்டு ஜோஷிதாவோடு விஷ்வஜித் பேசுவான்... கொஞ்சு வான்... அவள் அழகில் சொக்கிப் போவான்!

விடியற்காலையில் நல்ல அசதி ஏற்பட உறங்கி விடுவான்!

அம்மா வந்து கதவைத் தட்டுவார்.

உடனே சட்டென்று எழுந்து போட்டோவில் இருக்கும் ஜோஷிதாவின் அழகிய முகத்தில் விழியைப் பதிப்பான்! பூவிழ்களில் இதழைப் பதிப்பான்!

பீரோ திறந்து அந்த போட்டோவை வைப்பான்.

பின்னர்தான் அம்மாவின் முகத்தில் விழிப்பான்!

வேலை விஷயமாய் விஷ்வஜித்தோடு அஸ்வினும் அந்த முறை சென்றான்.

இரவு விஷ்வா... அந்த போட்டோவை எடுத்து முத்தமிட்டு, கட்டிக் கொண்டதைக் கண்டு... அஸ்வின் அவனின் முட்டாள் தனத்தைக் கண்டித்தான்! கண்டபடி திட்டினான்!

ஆனால் விஷ்வஜித் அதைச் செவிமடுத்துக் கேட்டுக் கொள்ளவில்லை!

ஜோஷிதா மலைப்படிக்கட்டுகளில் இறங்கிக் கொண்டிருந்தாள்! அருகில் மீனாட்சிப் பாட்டியும், அவருடைய கணவன் கிருபாகரனும் மெல்ல அவளோடு இறங்கிக் கொண்டிருந்தனர்.

எதிர்க்காற்று ஜோஷிதாவின் முன் கற்றை முடிகளைச் செல்லமாய்க் கலைத்து... விளையாடிவிட்டுக் கடந்து சென்று கொண்டிருந்தது!

நைனாதேவியை அருகிருந்து... திருப்தியாய்ப் பார்த்து... வழிபட்ட நிம்மதியில் ஜோஷிதா இறங்கிக் கொண்டிருந்தாள்.

திடீரெனப் பக்தர்களிடையே பெரும்கூச்சல் ஏற்பட்டது! பக்தர்கள் மேலே ஏறுவோரும்... கீழே இறங்குவோரும் முட்டி மோதிக் கொண்டனர். ஜோஷிதா இறங்கிக் கொண்டிருந்த இடத்தில்!

காரணம்...?

அருகில் உள்ள மலைப் பகுதியில் நிலச்சரிவு ஏற்பட்டுப் பாறைகள் கீழே விழுவதாக... உருண்டு வருவதாக வதந்தி பரவியதுதான் காரணம்!

எங்கும் கூச்சல்...!

எங்கும் குழப்பம்...!

எங்கும் பெரும் பீதி!

பெரியோர், சிறியோர், இளைஞர்கள் என்று கூட்ட நெரிசலில் சிக்கினர்!

கூட்ட நெரிசல் காரணமாய்த் தடுப்புக் கம்பிகள் உடைந்தன.

மக்கள் அங்கும் இங்கும் ஓடினர்!

பக்தர்கள் ஒருவர் மீது ஒருவர் விழுந்து மிதிபட்டனர்!

ஜோஷிதா எல்லோரையும் காப்பாற்றக் கடுமையாய்ப் போராடினாள்!

கிருபாகரன், ராம் போன்ற பெரியோர்களைக் கைப்பற்றி இழுத்து ஓரமாய் விட்டு விட்டாள்.

மீனாட்சிப் பாட்டியைத் தேடிக் கூட்டத்தில் அலை மோதினாள், ஜோஷிதா. கட்டுக்கடங்காத கூட்டம் ஏற்பட்டதன் பொருட்டு ஒருவர் மீது ஒருவர் விழுந்து... ரத்தக்காயம் ஏற்பட்டுச் சிலர் உயிர் நீத்தனர்.

நிறையப் பேர் காயமடைந்தனர்!

மீனாட்சிப் பாட்டியை ஒரு ஓரமாய்க் கைப்பிடித்து நிறுத்தியவளுக்கு... பேலன்ஸை சரி செய்ய முடியாமல் சரிவுகளில் மக்களோடு மக்களாய் உருண்டாள்.

தலை, கை, கால் போன்ற பகுதிகளில் ஏற்பட்ட காயத்தோடு உருண்டு கீழே போனவள் ஒரு மரத்தின் தண்டுப் பகுதியும், வேர்ப் பகுதியும் தடுத்து நிறுத்த... அந்த வேரில் பலமாய்த் தலை மோத மயங்கிப் போனாள்.

இந்தக் களேபரத்தைக் கண்டு விஷ்வாவின் மீட்புக் குழுவினரும், போலீசும் தலையிட்டு... இந்தச் செய்தி பக்தர்களிடையே நிலவிய வீண் வதந்தி என மைக்கில் அறிவிக்கப்பட... கூட்டம் கொஞ்சம் கட்டுப்பட்டது.

லேசாய்க் காயமுற்றோரை ஸ்ட்ரெச்சரில் வைத்துத் தூக்கிப் போய் மருத்துவ முகாமில் முதலுதவி செய்தனர்.

பலமான அடிபட்டோரை அருகில் உள்ள மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றனர்.

உயிருக்குப் போராடியவர்களை மாவட்ட மருத்துவ மனைக்கு எடுத்துக் கொண்டு விரைந்தனர்.

உயிரிழந்தோரை ஒருபுறம் தூக்கி ஒதுக்கினர்!

பலி எண்ணிக்கை 200-வரை எட்டிப் பிடித்தது!

லேசாய் மழை வேறு தூவ ஆரம்பித்தது!

விஷ்வா, அஸ்வின் இருவரும் மலைச்சரிவில் விழுந்தவர்களை மீட்கும் குழுவோடு சேர்ந்து செயல்பட்டனர்!

தமிழகத்திலிருந்து ஜோஷிதாவோடு சென்ற குழுக்களில் ஐந்து பேர் பலியாயினர்!

பத்துப் பேர் பலத்த காயமடைந்தனர்!

கிருபாகரன், ராம், மீனாட்சிப் பாட்டி, மாலதி என்று எல்லோரும் கத்திக் கதறினர்.

"ஜோஷிதா... ஜோஷிதா..." என்று அழுது புலம்பினர்.

சரிவுகளில் உருண்டு மரத்தின் தண்டுப் பகுதிகளிலும், மரத்தின் வேர்ப் பகுதிகளிலும், பாறையின் தடுப்புகளிலும் உருண்டோரையும்... அடுத்த கொண்டை ஊசி வளைவு வரை போய்க் கிடந்தோரையும் மீட்புக் குழுநபர்கள் ஒவ்வொருவராய்த் தூக்கி மேடேற்றினர்.

சரிவில் உருண்ட பெரும்பாலானோர் இறந்துதான் கிடந்தனர்.

எல்லோரையும் சடலமாயும், பெரும் காயத்தோடும் மீட்டு விட்டு... கண்களை விரித்து நான்கு புறமும் துழாவிவிட்டு யாருமில்லை என்று எண்ணி... கடைசியில் மெல்ல மேடேற அஸ்வின், விஷ்வா நடக்க...

திடீரென லேசான முனகல் குரல் கேட்க...

விஷ்வா திரும்பிப் பார்க்க.... கிடுகிடு சரிவில்... கிடந்த அந்தப் பெண்ணைக் கண்டுவிட்டான், விஷ்வஜித்.

"அஸ்வின்..." கத்தினான்.

"அந்த மரத்தின் வேரில் சிக்கி யாரோ கிடக்கறாங்கடா!" என்று ஓடினான், விஷ்வஜித்.

"மெல்ல விஷ்வா... டேய் மெல்லப் போடா... நீ உருண்டுடப் போறே!" என்று அஸ்வின் கத்தியதைச் செவிமடுக்காமல் ஓடினான்.

குப்புறக் கிடந்தவளைப் புரட்டிப் போட்டான்!

அடுத்த நொடி...

விஷ்வா பேரதிர்ச்சிக்கு உள்ளானான்.

நிஜமாகவே நிலச்சரிவு ஏற்பட்டுத் தலையில் பாறை விழுந்த கணக்காய்க் கத்தினான்.

''அஸ்வின்...'' என்று வீறிட்டவனைப் பயம் இதயத்தைக் கவ்விப் பிடிக்க விரைந்து அருகில் போனான், அஸ்வின்.

''அ... அஸ்வின்... அஸ்வின்... எ... என் ஜோஷிதாடா!'' என்று விஷ்வஜித் அலற...

''இந்த மடையனுக்கு எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் ஜோஷிதாதான்! பைத்தியம் முத்திப் போச்சி! முதல்ல உன்னை நல்ல மனநல மருத்துவர்கிட்ட காட்டணும்!''

அஸ்வின் அலட்சியமாய்ச் சொல்லியவாறு அந்தப் பெண்ணின் முகம் நோக்க... முகமெங்கும்... உடலெங்கும் ரத்தம் வழிய வழியக் கிடந்தவள் ஜோஷிதா என அறிய... அந்த நொடி...

''விஷ்வா... விஷ்வா... இது நம்ம ஜோஷிதாதான்டா!'' என்று அஸ்வினும் அதிர்ச்சியோடு கூறினான்.

விஷ்வஜித் ஜோஷிதாவின் கோலம் கண்டு தலையிலும், மார்பிலும் அடித்துக் கொண்டு அழுதான்.

''விஷ்வா... விஷ்வா... ஜோஷிதா இங்கு எதுக்கு வந்தாள்? இவளுக்குப் போய் இப்படி ஒரு விபரீதம் நடந்திருக்கே! உயிர் இருக்கா...? இல்லையா...? பாருடா!''

''முனகல் சத்தம் கேட்டுத்தான் வந்தேன்! அஸ்வின்... அஸ்வின்... என் ஜோஷிதாடா! என் கண்மணிடா! என் சின்னக் கண்ணம்மாடா! ப்ளீஸ் அஸ்வின் சீக்கிரம்டா! என் செல்லத்தைக் காப்பாற்றணும்டா!''

சட்டென்று தூக்கித் தோளில் போட்டான், விஷ்வஜித்!

சரிவில் தட்டுத் தடுமாறி வேகமாய் ஏறினான்.

அஸ்வின் முன்னே சென்றான்.

''விஷ்வா... கமான்... கமான்... குயிக்டா...'' என்று மேடேறினான்.

படிக்கட்டிற்கு வர நாலைந்து போலீஸ்காரர்கள் வந்து குவிந்து விட்டனர்.

அவர்களை விலக்கி... விஷ்வா படியிறங்கி ஓட...

மாவட்ட எஸ்.பி. அவனுக்குத் தெரிந்தவர்...

''ஹலோ மிஸ்டர் விஷ்வா... யார் இவங்க? உயிர் இருக்கா? இல்லையா...? உயிர் இல்லேன்னால் இந்தப் பிணத்தோட இப்படிப் போடுங்க! நில்லுங்க, விஷ்வா!''

அவர் முன்னே வந்து... அவன் வழியை மறித்துக் கொண்டு நின்றார்.

''சா... சார்... இவள்... இவள்... எ... என்...'' என்று விஷ்வஜித் உளற...

அஸ்வின்தான் உதவிக்கு ஓடி வந்தான்.

''எஸ்.பி. சார்... அவர் விஷ்வஜித்துக்கு வேண்டிய பெண்! உயிர் இருக்கிறது! உடனே பெரிய மருத்துவமனையில் அட்மிஷன் செய்தால் காப்பாற்றிவிடலாம். ப்ளீஸ்...'' என்று கெஞ்சினான்.

''அப்படியா விஷ்வா, சார்? சரி. நீங்க கிளம்புங்க!'' விஷ்வாவின் செல்வாக்கு அறிந்த எஸ்.பி. கூறினார்.

அவளைத் தூக்கிக் கொண்டு படிகளில் இறங்கினான்.

15

விஷ்வாவின் மனதிற்குள் ஆயிரம் கேள்விகள் வரிவரியாய் நெளிந்து ஓடின.

'ஜோஷிதா... இங்கே எதற்கு வந்தாள்?'

'நைனாதேவியைத் தரிசிக்க இவ்வளவு தூரம் பயணம் செய்து வந்தாளா...?'

'அப்படியானால் தனியாக வந்தாளா...?'

'அல்லது அவள் கணவனோடு வந்தாளா?'

'அல்லது அவர்களுடைய சுற்றத்தினரையும் அழைத்துக் கொண்டு இருவரும் வந்தார்களா...?'

'அப்படியானால் அவள் கணவன் என்ன ஆனான்?'

'சுற்றத்தினருக்கு எந்த மாதிரி ஆபத்து வந்தது?'

'ஆனால்... ஆனால் கழுத்தில் தாலி எதுவும் இல்லையே! வெறும் சிறிய, மெல்லிய தங்கச் சங்கிலிதானே உள்ளது!'

'காலில் எதுவும் மெட்டியைக் காணுமே!'

'திருமணமான பெண்கள் வகிட்டில் இடும் குங்குமத் திலகம் இல்லையே!'

''ஜோஷிம்மா... ஜோஷிம்மா...''

கிருபாகரன் பின்னாடியே கத்திக் கொண்டு வந்தார்.

அஸ்வின் அவரைக் கண்டுவிட்டு...

''நீங்க...?'' என்று கேட்க...

''ஜோஷிதாவின் தலைமையில் புறப்பட்டு வந்த சுற்றுலாப் பயணிகளில் நானும் ஒருவன்!''

''ஜோஷிதாவின் தலைமையில் புறப்பட்டு வந்த சுற்றுலாப் பயணிகளில் நீங்களும் ஒருவரா...?''

அவரைப் பார்த்து ஆச்சரியத்துடன் கேட்டான்.

''ம்...''

என்ற கிருபாகரன் அவளைப் பற்றிக் கொஞ்சமாய் அவருக்குத் தெரிந்ததைக் கூறி முடித்தார்.

''நிஜமா ட்ராவல் ஏஜென்ஸில ஜோஷிதா வேலை பார்க்கிறாளா...? ஐயோ... நம்பவே முடியலையே! ஈஸ்வருக்கும், ஜோஷிதாவிற்கும் இடையே நடை பெற இருந்த திருமணம் நின்று விட்டதா...? ஏன்? என்ன காரணத்தால் திருமணம் நின்றது?''

அஸ்வின் கேள்வி மேல் கேள்வி கேட்டான்.

''காரணம் தெரியாது, தம்பி! நடக்க இருந்த திருமணம் நின்று விட்டது என்ற செய்தி மட்டும்தான் தெரியும்!''

விஷ்வாவிற்கு இந்தச் செய்தி தேனாய் இனித்தது! அமிர்தமாய் அவன் நெஞ்சுக்குள் ஊடுருவி அவனைச் சந்தோசம் கொள்ளச் செய்தது!

ஆனால் ஜோஷிதாவின் நிலைகண்டு பயந்தான்.

ஜோஷிதாவை எப்படியாவது காப்பாற்றிவிட வேண்டும் என்று வெறி வந்தது.

கண்மண் தெரியாமல் தடதடவெனப் படிகளில் இறங்கி ஓடினான்.

விஷ்வாவின் வெறியையும், வேகத்தையும் கண்டு... அஸ்வின் நெகிழ்ந்து போனான்

விஷ்வஜித் ஜோஷிதாவின் மேல் கொண்டுள்ள அன்பையும், அதீதக் காதலையும் கண்டு மலைத்துப் போனான்!

சமதரைக்குச் சென்றனர்.

தயாராய் இருந்த ஆம்புலன்ஸில் ஏற்றினர்.

ஆம்புலன்ஸ் விரைந்தது!

ஆம்புலன்ஸில் இருந்த இரண்டு டாக்டர்கள் ஜோஷிதாவிற்கு முதலுதவி செய்ய ஈடுபட்டனர்.

விஷ்வஜித் கண்ணீரோடு அமர்ந்து விட்டான்!

கண்களிலிருந்து சரம்சரமாய்க் கண்ணீர் அவன் கன்னத்தை நனைத்தது!

விஷ்வஜித்தைத் தேற்ற வார்த்தைகளற்று அஸ்வினும் அமர்ந்து விட்டான்.

'ஜோஷிதா... என்னுயிரே... பிழைத்து எழுந்து கொள்ளடி!'

'ஜோஷிதா... என் தேவதையே... என்னைத் தவிக்க விட்டு விட்டு நீ மட்டும் போய் விட்டால்... நானும் உன்னோடு வந்து விடுவேனடி, என் செல்லமே!'

'அம்மா தாயே... நைனாதேவி... நீ சக்தியுள்ள தெய்வம்தான்! அதை நான் ஒத்துக் கொள்கிறேன்! என்னவளுக்குத் திருமணத்தடை ஏற்பட்டு... என் இடத்திற்கே அவளை அழைத்து வந்து... என் கண்ணில் காட்டி விட்டாய்!'

'ஆனால், அவளை எனக்கு இப்படி ஆபத்தான நிலையிலா காட்ட வேண்டும்?'

'என் ஜோஷிதா உயிர் பிழைக்க வேண்டும், தாயே!'

'என் ஜோஷிதா கண் விழித்து, எழுந்து, என்னைக் காதலோடு நோக்க வேண்டும், தேவி!'

'நைனாதேவி தாயே... எனக்கு என் பிரியசகி, ஜோஷிகுட்டி வேண்டும்!'

'ஜோஷிதாவை எனக்கு மீட்டுக் கொடு!'

'நிச்சயமாய் மீட்டுக் கொடு! இல்லையேல் அவளோடு நானும் செயற்கையாய் மரணத்தைத் தழுவிக் கொள்வேன்! விண்ணுலகிற்கு என்னவளின் கைத்தலம் பற்றிக் கட்டாயமாய்ச் சென்று விடுவேன்!'

'என் மான்விழியாள் இல்லாத உலகம் எனக்கு வேண்டாம்!'

ஜோஷிதாவின் கைப்பற்றினான்!

நெஞ்சில் வைத்துக் கொண்டான்!

குலுங்கிக் குலுங்கி வாய்விட்டு அழுதான்!

''ஏய் விஷ்வா... என்ன இது? சின்னக் குழந்தையா நீ? ஜோஷிதாவிற்கு எதுவும் ஆகாது! காப்பாற்றி விடலாம்! கவலைப்படாதே!''

அஸ்வின் அவன் தோள்களில் ஆதரவாய்த் தட்டினான்.

விஷ்வஜித்தின் செயல் கண்டு டாக்டர்கள் வியந்தனர்.

வியப்புடன் கூடிய பார்வையை அஸ்வின் மேல் பாய்ச்ச...

விஷ்வாவின் காதலி இந்தப் பெண்!

இவளைத்தான் விஷ்வா மணந்துக்க இருந்தான்!

அஸ்வின் நினைத்துக் கொண்டவனாய்... செல்லை எடுத்து... கோவிலில் இருந்த மீட்புக் குழுவிற்கு போன் செய்தான்.

'தமிழ் நாட்டிலிருந்து ஒரு குழு வந்திருக்கிறது. அவர்கள் அத்தனை பேரையும் மீட்டுக் காப்பாற்றுங்கள்!'' என்று கட்டளையிட்டான்.

கிருபாகரனுக்கு அஸ்வினின் செயல் நிம்மதியைத் தந்தது.

ஆஸ்பத்திரி வந்தது.

ஜோஷிதா ஸ்ட்ரெச்சரில் வைத்து அவசரப் பிரிவிற்குக் கொண்டு செல்லப்பட்டாள்.

விஷ்வாவின் பேரும், செல்வாக்கும் அங்கிருந்த டாக்டர்களைச் சுறுசுறுப்பாக்கியது!

உடனடியாய் டாக்டர்கள் குழு குழுமிக் கொண்டது!

உயர்தர மருத்துவத்தைக் கையாண்டனர்.

இரண்டு மணி நேரப் போராட்டத்திற்குப் பின்பு டாக்டர்கள் விஷ்வாவின் முன்பு வந்து நின்றனர்.

''டா... டாக்டர்...'' என்று தவிப்போடு தழுதழுத்தவனிடம்...

''மிஸ்டர் விஷ்வா! பயப்படாதீங்க! உயிருக்கு ஆபத்தில்லே! ஆனால்...'' என்று தலைமை டாக்டர் இழுக்க...

''என்ன... என்ன டாக்டர்?'' என்று விஷ்வஜித் பரபரத்தான்.

''தலையில் பெரிய பலமான அடி பட்டிருக்கிறது!''

''அதன் விளைவு என்ன டாக்டர்?''

''ஜோஷிதா... அவர்களின் பழைய நினைவை இழக்கலாம்!''

''ஐயோ... என்ன சொல்றீங்க?''

''பதறாதீங்க, மிஸ்டர் விஷ்வா! உங்களின் வேண்டுதலால்... அந்த நைனாதேவியின் அருளால் எதுவும் நேராமல் நல்ல முறையில் பிழைத்து எழுந்து வரலாம்!''

விஷ்வஜித்தின் மனம் கொஞ்சம் சமாதானமானது.

பின் கேட்டான்.

''டாக்டர்! உயிருக்கு நிஜமாகவே ஆபத்து இல்லையல்லவா...? அல்லது எனக்காக பாஸிடிவ் ஆன்ஸர் சொல்றீங்களா...?''

''நோ மிஸ்டர் விஷ்வஜித்! ஜோஷிதாவை சீரியஸ் கண்டிசனில்தான் கொண்டு வந்து சேர்த்தீர்கள்! ஆதுவும் சரியான நேரத்திற்குக் கொண்டு வந்து சேர்த்ததால் கஷ்டப்பட்டுக் காப்பாற்றி விட்டோம்!

''ஆனால் கொஞ்சம் காலதாமதமாய் வந்திருந்தால் நீங்கள் நினைப்பது போல காப்பாற்றி இருக்க முடியாதுதான்! சந்தேகக் கேஸாகத்தான் இருந்திருக்கும்! இவர்களை இப்போது நாம் அனைவரும் உயிரோடு பார்த்திருக்க முடியாது!''

''ஐயோ டாக்டர்... வேண்டாம்... அப்படி வார்த்தைக்குக் கூட சொல்லாதீர்கள்? என்னால் தாங்க முடியவில்லை!''

விஷ்வஜித்தின் கண்கள் சடசடவெனக் கண்ணீர் உற்பத்தி செய்து வெளியேற்றியது!

விஷ்வஜித்தின் நேசம் கண்டு... அவனின் அளவுக்கதிகமான பாசம் கண்டு அத்தனை பேரும் பிரமித்துச் சிலையாய் நின்றனர்.

அஸ்வின் அவனின் தோள் பற்றி... ஆதரவாய் அழைத்து வந்து ஹாலில் உட்கார வைத்தான்.

அரைமணி நேரத்தில் தன்னைத் தேற்றிக் கொண்டான்.

பின்...

வீட்டிற்கு போன் செய்தான்.

அவனுடைய தந்தை ரவிவர்மாதான் போனை எடுத்தார்.

"ஹலோ..." என்றார்.

தந்தையின் குரல் கேட்டுத் தொண்டை அடைத்தது. கரகரத்த குரலில்...

"டாடி..." என்றான்.

விஷ்வஜித்தின் குரல் கேட்டு ரவிவர்மா பதறினார்.

"என்ன விஷ்வா...? குரல் ஏன் ஒரு மாதிரி இருக்கு? ம்...? எனி ப்ராப்ளம்...?"

அவர் கேள்விகளை அடுக்க...

"ப்ளாஷ் நியூஸ் பார்க்கலையா, டாடி?"

"இல்லையே! ஏன்? என்ன நியூஸ்?"

"நைனாதேவி கோவில் இருக்கற மலையில் நிலச்சரிவு ஏற்பட்டு பாறை மேலிருந்து உருண்டு கீழே வருவதாய் பக்தர்களிடையே புரளி ஏற்பட்டு... அமளி துமளியாகி... கூட்ட நெரிசலில் பக்தர்கள் சிக்கி... உயிர்ச்சேதம் அதிகம் டாடி!"

"ஐயோ விஷ்வா... என்னப்பா சொல்றே? நம்ம மீட்புக் குழு உடனே செயல்படுதுதானே?"

"ஆமா டாடி!"

"உனக்கு ஒன்றும் இல்லையே? நீ நல்லா இருக்கற தானேப்பா?"

"எனக்கு ஒன்றுமில்லை!"

"அஸ்வின் நல்லாயிருக்கானா?"

"அவனும் நல்லாயிருக்கான்! ஆனால்...?"

"நம்ம கம்பெனி ஸ்டாப்புக்கு ஏதாவது உயிருக்கு ஆபத்தா, விஷ்வா...?"

"இல்லே, டாடி!"

"பின்ன என்ன நடந்தது? சொல்லேன், விஷ்வா."

என்று பதற்றத்தோடு கேட்டுக் கொண்டிருக்க...

அங்கே வந்த சிவரஞ்சனி... "யாருங்க போன்ல?" என்று கேட்க...

"நம்ம விஷ்வாதான்! நைனாதேவி கோவில்ல விபத்து ஏற்பட்டு..."

அவர் முழுவதும் சொல்லி முடிப்பதற்குள் அவர் கையிலிருந்த போனைப் பிடுங்கிய சிவரஞ்சனி...

"விஷ்வா... விஷ்வா... உனக்கு... உனக்கு?" என்று தடுமாறினார்.

"எனக்கு ஒன்றுமில்லேம்மா!" என்று கலங்கிய குரலில் சொன்னான்.

"பின்னே யாருக்கு ஆபத்துப்பா..."

"உங்க... உங்க... மருமகள்தான்!"

"என் மருமகளா...? என்னப்பா உளர்றே?"

"ஆமாம்மா! உங்க மருமகள் விபத்தில் சிக்கி... ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில இருக்கா."

"விஷ்வா... என்ன விஷ்வா... அங்கே உயிர்ச் சேதத்தைப் பார்த்த அதிர்ச்சியில் உனக்கு மூளை பிசகிடிச்சாப்பா...?"

"அம்மா... ஜோஷிதா..."

"ஜோஷிதாவா... யார்ப்பா...?"

சிவரஞ்சனிக்குச் சட்டென்று ஜோஷிதாவை ஞாபகத்துக்கு வராமல் கேட்க...

''உங்க மருமகள்... என் மனைவி... இங்கே உயிருக்குப் போராடிட்டு இருக்கா! எனக்குப் பயமா இருக்கும்மா! நீங்களும், டாடியும் உடனே வாங்கம்மா!''

சிவரஞ்சனி நிஜமாகவே அதிர்ந்தார்.

''ஏய் விஷ்வா... அஸ்வின் அருகில் இருக்கானா? அவன்கிட்ட போனைக் கொடு!'' என்று கூறவும்... அஸ்வின் அவனிடமிருந்து போனைப் பிடுங்கினான்.

''ஜோஷிதா...'' என்று ஆரம்பித்து... அவளுக்குத் திருமணம் நின்றது... பின் டிராவல் ஏஜென்ஸிக்கே வேலைக்குப் போனது... நைனா தேவி கோவிலுக்குப் பயணிகளோடு வந்தது... விபத்தில் சிக்கியது அத்தனையும் கூறினான்.

''ஜோஷிதா... ரொம்ப ஆபத்தான நிலையில் இருக்காளா?''

''ஆமாம்மா!''

''என்ன செய்தீங்க? எங்கே எடுத்துட்டுப் போனீங்க, அஸ்வின்?''

''உடனடியா ஆம்புலன்ஸ் ஏற்றிட்டுப் போய் பிலாஸ்பூர்ல இருக்கற பிரசித்தி பெற்ற தனியார் மருத்துவமனையில சேர்த்திருக்கோம்! டாக்டர்ஸ் தீவிர சிகிச்சை கொடுத்திருக்காங்க!''

''நாங்க உடனே கிளம்பி வரோம், அஸ்வின்!''

''வேண்டாம்மா!''

''என் மருமகளுக்கு இப்படியொரு ஆபத்து எனும்போது எப்படிப்பா நாங்க இங்கே இருப்போம்?''

''நீங்க இங்கே வந்து உங்க உடம்பை அலட்டிக்க வேண்டாம்! அது உங்க உடம்புக்கு ஒத்துக்காமல் போகும்! நான் அப்பப்போ ஜோஷிதாவின் உடல்நிலையோட கண்டிஷனை சொல்றேம்மா!

''சரிப்பா!''

''பயப்படாமல் இருங்கம்மா!''

''முயற்சிக்கிறோம்ப்பா! ஜோஷிதாவை ஜாக்கிரதையா பார்த்துக்கங்கப்பா! எனக்கு என் மருமகள் வேண்டும்!''

''கண்டிப்பாம்மா!''

''ஜோஷிதா... உயிர் பிழைச்சி வந்தால்தான் விஷ்வஜித்தை மணக் கோலத்துல பார்க்க முடியும். தெரியும்தானே?''

''தெரியும்மா! ஜோஷிதாவைத் தவிர வேறு பெண்ணை விஷ்வா மனதாலும் நினைக்கவே மாட்டான்னு தெரிந்தவன் நான்!''

''விஷ்வாவையும் ஜாக்கிரதையா பார்த்துக்கப்பா! ஜோஷிதாவையே உயிராய்ச் சுவாசிக்கிறான்!

அழுது புலம்பி அவன் உடம்பைக் கெடுத்துக்கப் போறான்.''

''சரிம்மா!''

''விஷ்வாகிட்ட போனைக் கொடு.''

அஸ்வின் போன் கை மாறியது.

''விஷ்வா... உன் தவம் பலிக்கும்பா!''

''சரிம்மா!''

''உனக்கு முழுமையா ஜோஷிதா கிடைப்பா!''

''சரிம்மா!''

''அம்மா சொல்றேன் தைரியமா இரு! உன் ஆழமான காதல் கண்டுதான் நைனா தேவி பரிசாய் ஜோஷிதாவைக் கண்ணில் காட்டியிருக்கிறாள்! அதே நைனாதேவி அம்மன் ஜோஷிதாவை நல்லபடியாய்ப் பிழைக்க வைத்து உன் கைகளில் சேர்ப்பாள்!''

''சரிம்மா!''

''சிகிச்சை முடிந்து... நினைவு திரும்பி... கொஞ்சம் தேறியவுடன் டாக்டர் கூட்டிட்டுப் போகலாம்ன்னு சொன்னால்... சிம்லாவுக்குக் கூட்டிட்டு வந்துடு. இங்கே உள்ள மருத்துவமனையில சேர்த்து மீதிச் சிகிச்சையைக் கொடுத்துக்கலாம்!''

''டாக்டர்கிட்ட இது பற்றி பேசறேம்மா!''

''உனக்குதான் ஜோஷிதான்னால் கடவுள் எப்படியாவது உன்னிடம் அவளைச் சேர்ப்பார்னு சொன்னேனே, அது பலிச்சிடிச்சி பார்த்தயா?''

''ஆமாம்மா!''

''உன் உடம்பைப் பத்திரமா பார்த்துக்கோ!''

''சரிம்மா!''

''வீணா மனசைப் போட்டுக் குழப்பிக்காதே!''

''சரிம்மா!''

''நீ சாப்பிட்டாயா?''

''ஜோஷிதாவிற்கு மருத்துவம் முடியட்டும்!''

''சொன்னால் கேட்கமாட்டாயா? உன் உடலைக் கெடுத்துக் கொண்டால்... உன் மனதுக்குப் பிடித்தவளோடு எப்படி இன்பமாய் நூறாண்டுகள் வாழ்வது? ம்?''

''சாப்பிடறேம்மா! ஜோஷிதா கண் விழித்த மறுநிமிடம்!''

விஷ்வஜித் அழுத்தமாய்ச் சொன்னான்.

''நீ சரியான அழுத்தக்காரன்! உனக்குச் சரியென்று படுவதைத்தான் செய்வாய்!''

சிவரஞ்சனி போனை வைத்து விட்டார்.



16

மறுநாள்...

விஷ்வஜித்தின் வேண்டுதல் பலித்தது!

ஜோஷிதாவின் உடல் லேசாய் அசைந்தது!

அஸ்வின், சீனுவாசன், கிருபாகரன், ராம், மீனாட்சிப் பாட்டி என்று - இறந்தவர்கள் காயமுற்றவர்களைத் தவிர - அனைவருமே வந்து அங்கே குழுமி விட்டனர்.

அத்தனை பேரும் விழி விரியப் பார்த்தனர்.

கண்கள் கலங்கி நின்றிருந்த விஷ்வஜித் தான் ஜோஷிதாவின் கண்களுக்கு முதலில் தெரிந்தான்!

அங்கிருந்த அனைவரையுமே ஜோஷிதாவிற்கு அடையாளம் தெரியவில்லை.

''என் கண்ணே... என் தேவதையே...'' என்ற விஷ்வஜித்...

''பிழைச்சுட்டே, என் தங்கமே!'' என்ற சீனுவாசன்...

''விஷ்வாவின் தவம் பொய்க்கவில்லை, ஜோஷிதா!'' என்ற அஸ்வின்...

''என் செல்லமே... என் பெண்ணே!'' என்று கைப் பற்றிக் கொண்ட மீனாட்சிப் பாட்டி...

''ஜோஷி... ஜோஷி...'' என்று தழுதழுத்த கிருபாகரன், ராம் என்று யாரையுமே ஜோஷிதாவிற்குத் தெரியவில்லை.

''நீங்களெல்லாம் யார்?''

ஜோஷிதா கேட்க... அத்தனை பேரும் அதிர்ந்து விட்டனர்.

''எனக்கு என்னாச்சி?''

விஷ்வாவின் இதயம் நடுங்கி விட்டது.

''ஏன் அழறீங்க...?''

இது எந்த ஊர்...?

நான் யார்...?

விஷ்வா முதற்கொண்டு அனைவருமே உள்ளம் பதறினர்.

கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்த பெரிய டாக்டரிடம் விஷ்வா சொன்னான்.

''டாக்... டாக்டர்... ஜோ... ஜோஷிதாவிற்குத் தன்னையே அடையாளம் தெரியவில்லை! ஏன்? என் ஜோஷிதாவிற்கு என்னானது?''

''ஓ... நான் நினைத்தேன், மிஸ்டர் விஷ்வா! தலையில் பலமாய் அடிபட்டதன் காரணமாய் இவங்க தன்னுடைய பழைய நினைவுகளை இழந்துட்டாங்க!''

''ஐயோ...!''

''அம்னீஸியா அட்டாக் ஆகியிருக்கு!''

''நிஜம்தானா, டாக்டர்?''

''ஆமாம், மிஸ்டர் விஷ்வா! ஸாரி... ஸாரி மிஸ்டர் விஷ்வா! இவங்களுடைய சீரியஸ் கண்டிசனுக்குப் பிழைத்து எழுந்தாங்களே, அதுவே பெரிசு மிஸ்டர்!''

''டாக்டர்! அப்போ என் ஜோஷிதாவிற்குப் பழைய நினைவுகளே வராதா...?''

''அப்படி கரெக்டா வராதுன்னும் சொல்ல முடியாது! வரும்ன்னு சொல்ல முடியாது!''

''ஓ... காட்!'' விஷ்வா டாக்டரின் பதிலில் அதிர்ந்து தான் போனான்.

''ஏதாவது மீண்டும் விபத்தோ... அதிர்ச்சியோ ஏற்பட்டால் மீண்டும் பழைய ஞாபகங்கள் வர வாய்ப்பிருக்கு!''

டாக்டரின் இந்தப் பதில் விஷ்வாவைக் கொஞ்சம் அமைதிப்படுத்தியது.

''டாக்டர்! இதனால்...'' விஷ்வாதான் இழுக்க...

''அம்னீஷியா பற்றி நான் உங்களுக்கு விளக்கணுமா என்ன? ம்? ஒரு அம்னீஸியா அட்டாக் ஆன பேஷண்ட் தன்னுடைய பழைய ஞாபகங்களை மட்டும்தான் இழக்கிறார்! மற்றப்படி எதையும் இழப்பதில்லே. படிப்பு, பயிற்சி அத்தனையும் மூளையில் இருக்கும்! சரியா? பேஷண்டைக் கொஞ்சம் தொந்தரவு செய்யாதீர்கள்!'' என்று டாக்டர் கூறினார்.

ஜோஷிதாவின் உடலை டெஸ்ட் செய்தார்.

ஊசி போட்டார்.

அவளுக்குத் தேவையான மருந்து மாத்திரைகளை நர்சிடம் கொடுக்கச் சொன்னார்.

பின் அங்கிருந்து அகன்றார்.

நர்ஸ் அவளுடைய மருந்து. மாத்திரைகளைக் கொடுத்தாள். அங்கிருந்தோரிடம் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு அகல, விஷ்வஜித், அஸ்வின், சீனுவாசன் தவிர, மீதிப் பேரும் நர்ஸின் பின்னே அறையிலிருந்து வெளியே வந்தனர்.

ஜோஷிதாவின் நிலையை எண்ணி விஷ்வஜித்திற்குக் கண்கள் பொங்கின.

கலங்கிய கண்களுடன் அவன் ஜோஷிதாவைப் பார்த்துக் கொண்டிருக்க... அவளும் அவனையே விழி யெடுக்காமல் சிறிது நேரம் நோக்கிக் கொண்டிருந்தாள். பின் அவள் கண்களில் சோர்வு தெரிந்தது. கொஞ்ச நேரத்தில் கண்மூடி உறங்கி விட்டாள்!

''அஸ்வின்... என்னப்பா இது... என் தம்பி பெண் ணிற்கு இப்படியாகி விட்டதே! பழைய நினைவுகளை இழந்துட்டு எப்படி வாழ்வாள்?'' சீனுவாசன்தான் அஸ் வினைப் பார்த்துக் கேட்டார்.

''அதெல்லாம் பெரும் பிரச்சனையே இல்லே, அங் கிள்! ஜோஷி உயிர் பிழைத்து எழுந்தாளே, அதுவே போதும்!''

அஸ்வின் சொல்ல... சீனுவாசன் அமைதியானார்.

மீண்டும் மாலை கண் விழித்தாள், ஜோஷிதா.

தன்னைப் பற்றிய ஒரு விபரமும், நினைவுகளும் தெரியாமல் மூளையைப் போட்டுக் கசக்கிக் கொண்டாள். எதிரில் இருந்த சீனுவாசன், அஸ்வின், விஷ்வஜித் இவர்களையும் அவளுக்கு யார் என்று தெரியவில்லை!

ரொம்ப நேரம் கண்களை உருட்டித் தவித்தாள். விடை தெரியாமல் சோர்வுடன் விஷ்வஜித்தை நோக்கினாள்.

''நா... நான் யா... யார்...?'' என்று கேட்டாள்.

விஷ்வஜித் கலங்கிய கண்களுடன் பதில் சொல்ல வாய் வராமல் சிலையென நின்று விட்டான்.

சீனுவாசன்தான் முன்னே வந்து... அவள் நெற்றியை நீவி... அவள் முடிகோதி... அன்போடு சொன்னார்.

''நீ என் ஒன்றுவிட்ட தம்பி பெண்!''

''நீங்க...?''

''பெரியப்பா. என் பெயர் சீனுவாசன்!''

''அப்போ என் பெயர்?''

''உன் பெயர் ஜோஷிதாம்மா! செல்லமா ஜோஷின்னு கூப்பிடுவோம்டா!''

''பெரியப்பா... எனக்கு இந்தக் காயமெல்லாம் எப்படி யானது?''

''உனக்கு சின்ன ஆக்ஸிடெண்ட்ம்மா!''

''அதான் கை, காலெல்லாம் கட்டுப் போட்டிருக்கு!'' சிறு குழந்தை போலப் பேசினாள், ஜோஷிதா.

''பெரியப்பா... என்னைப் பற்றிய விவரங்கள் எனக்கு ஞாபகத்துக்கே வர்லே!''

''வரும்மா!''

''நீங்க சொல்லுங்களேன்... என்ன யோசித்தாலும் எனக்கு விடையே தெரியலே!''

''சொல்றேன். இப்போ வேண்டாம்மா! உனக்கு உடம்பு கொஞ்சமா குணமாகட்டும். பிறகு சொல்றேன், ஜோஷிம்மா!''

''பெரியப்பா... இவர் யார்?''

அஸ்வினைப் பார்த்துக் கேட்டாள்.

''அஸ்வின்! உன் அக்காவின் கணவர்!''

''அப்படியா! அப்போ இவர்?''

விஷ்வஜித்தைப் பார்த்துத்தான் கேட்டாள்.

சீனுவாசன் ஒரு நிமிடம் மௌனிக்க...

''யார் பெரியப்பா. இவர்? சொல்லுங்க. பெரியப்பா.''

''நமக்கு நெருங்கிய உறவினர்!''

''நான் இவரை எப்படி அழைக்கணும்?''

''அத்தான்னு அழைக்கணும்!'' என்று அழுத்தம் திருத்தமாய்ச் சொல்ல... விஷ்வஜித் முகம் பிரகாசித்தது.

''அத்தான்னு அத்தை மகனைத்தானே அழைப்போம்? அப்போ இவர் எனக்கு அத்தை மகனா?''

''ஆமாம்மா!''

சீனுவாசன் சொன்னதும்... விஷ்வஜித்தை வெட்கத் துடன் ஏறிட்டாள், ஜோஷிதா.

அடுத்த நொடி அவளுக்குப் புது உணர்வு வந்து ஆட் கொண்டது.

ஜோஷிதா விஷ்வஜித்தைக் காதலோடு நோக்கினாள்.

அந்த மயிலிறகு நேசப்பார்வையின் ஸ்பரிசத்தால் இறக்கையில்லாமல் மகிழ்ச்சி வானில் வட்டமிட்டுப் பறந்தான், விஷ்வஜித்.

ஆஸ்திரேலியா சென்றிருந்த சரவணன் இரவு வந்தான்.

ஜோஷிதாவைக் கண்கள் கலங்கப் பார்த்தான்.

''ஜோஷிதா... ஜோஷிதா...'' என நா தழுதழுத்தான்.

ஜோஷிதாவோ தனது முதலாளியை யார் என்று தெரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

'யார் இவர்? எனக்கு இவரும் உறவாக இருக்குமோ? என்ன உறவாக இருப்பார்?' என்று யோசிக்க யோசிக்க... அவளுக்கு விடைதான் தெரியவில்லை.

அடுத்த நொடி அலுப்பாய் இருந்தது. கண்கள் சொக்க, தூக்கம் வந்தது. விழி மூடித் தூங்கிப் போனாள்.

''ஹலோ மிஸ்டர் விஷ்வா... ரொம்ப நன்றிங்க!''

பக்கத்தில் நின்ற விஷ்வாவின் கைப்பற்றிக் கொண் டான், சரவணன்.

''இந்த நன்றியை நான் மறக்கவே மாட்டேன்! எங்க ஆளுங்களை ஆஸ்பத்திரியில் சேர்த்து... தரமான சிகிச்சையளிக்கச் செய்தமைக்கு நன்றி, சார்!

''விபத்து ஏற்படாதவர்களை ஹோட்டலில் தங்க வைத்து, உணவுக்கும், உடைக்கும், பாதுகாப்புக்கும் ஆவன செய்தமைக்கும் வெறும் நன்றி சொன்னால் பத்தாதுங்க, விஷ்வா சார்!''

சரவணன் நீர் கசியும் கண்களோடு கூற... விஷ்வஜித் அவனை ஆறுதலாய் அணைத்துக் கொண்டான்.

''எங்க ஜோஷிதா இப்போ உயிரோடு இருக்கான் னால்... அதுக்கு நீங்கதான் காரணம்! ரியலி... ரியலி... யூ ஆர் காட்!''

''ஐயோ சரவணன்... என்னைக் கடவுளோடு எல்லாம் ஒப்பிட வேண்டாம், நானும் சாதாரண மனிதன்தான்!''

''சாதாரண மனிதர்களால் எல்லாம் இவ்வளவு பெரிய சேவையைச் செய்ய முடியாது, விஷ்வா சார்!''

''சேவை செய்யறது எங்க பரம்பரைக் குணம்! சிற்றர சர்கள் வம்சத்திலே வந்தவன் நான்! ஏகப்பட்ட பணம்,

சொத்து வசதி! எங்க பாட்டன், தாத்தா, தந்தை காலத்துல இருந்து எங்களால் முடிந்த சேவையைச் செய்யறோம்!''

''அப்படின்னாலும் ஹாஸ்பிடல்ல சேர்த்ததோடு இல்ல போயிருப்பீங்க! எங்க ஜோஷிக்காக இரண்டு நாள் கஷ்டப்பட்டீங்களாமே! எங்க ஜோஷிக்காக அழக்கூடச் செய்தீங்களாம்! ஜோஷிதாவை இப்படி கண்ணும், கருத்துமா பார்த்துக்கணும்ன்னு என்ன விதியா உங்களுக்கு?''

சரவணன் கேட்கவும்....

''ஜோஷி என்னுடையவள்!...

ஜோஷி என் உயிர்!...

என் உயிரைக் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு என்னுடையது அல்லவா?''

விஷ்வஜித் உருக்கமாய்ச் சொன்னான்.

சரவணன் புரியாமல் முழித்தான்.

''வாங்க சரவணன்! வெளியே போய்ப் பேசலாம்!'' என்று தோளில் கை போட்டு நட்புடன் அழைத்துப் போனான். அஸ்வினும் அவர்கள் பின்னே சென்றான்.

ஹாஸ்பிடலுக்கு எதிரில் இருந்த காபி ஷாப்பில் மூவரும் அமர்ந்தனர்.

மூன்று காப்பியை வரவழைத்தனர். குடித்து முடித்தனர்.

''ஜோஷிதாவை நீங்க பார்த்திருக்கீங்களா? எங்கே?'' சரவணன் கேட்டான்.

''சமீபமா பார்த்திருக்கேன்! இவன் என் நண்பன் அஸ்வின். இவன் மனைவியின் வளைகாப்பு வைபவம் சென்

னையில் நடந்தது. இவன் அழைப்பின் பேரில் சென்னை வந்த எனக்கு ஜோஷிதா அறிமுகமானாள்!''

''ஓ... ரியலி... ரியலி?''

சரவணன் ஆச்சரியப்பட்டான்.

''ஜோஷிதாவின் திருமணம் என்ன காரணத்தால் தடைப்பட்டது? அது பற்றி உங்களுக்குத் தெரியுமா, சரவணன்?''

அஸ்வின்தான் கேட்டான்.

''அந்த ஈஸ்வர் ஜோஷிதாவின் நடத்தை மேல் சந்தேகப்பட்டுத் திருமணத்தை நிறுத்திட்டானாம்!'' விஷ்வஜித்தால் இந்தச் சொற்களை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை!

''ராஸ்கல்...!''

விஷ்வஜித் கோபத்தில் பற்களை நறநறவெனக் கடித்தான்.

''ஜோஷிதாவின் நடத்தை மேல் சந்தேகம் வரும்படி இவள் என்ன செய்தாளாம்? அந்தத் திருட்டு நாய் காரணத்தைச் சொன்னானா?''

விஷ்வஜித் கண்கள் சிவந்து கேட்டான்.

''காரணத்தைச் சொல்லாமல் கழட்டி விட்டுட்டான், விஷ்வா சார்!''

''பிறகு?''

''பேத்தியின் நடத்தையைச் சந்தேகப்பட்டதாலும்... திருமணம் நின்றதாலும்... அந்த மூதாட்டி நெஞ்சு வெடித்துச் செத்துப் போனாள்!''

''ஐயோ... பாட்டிம்மா செத்துப் போனாங்களா? எவ்வளவு நல்லவங்க தெரியுமா? மாமாவுக்கு இந்த விஷயம் கூடத் தெரியாதே!''

அஸ்வின் கவலைப்பட்டான்.

''ஜோஷிதா அநாதையானாள்! பாட்டியின் இழப்பிலிருந்தும்... திருமணம் நின்று போன அவமானத்திலிருந்தும்... மெல்ல மீண்டும்... இப்போதுதான் வேலைக்கு வந்தாள்!...

இவளுக்குக் கொஞ்சம் மனச்சாந்தியா... மன மாறுதலா இருக்குமென்று எண்ணிதான்... இந்த வடநாட்டு சுற்றுலாவுக்கு... இந்தக் குழுவோடு அனுப்பி வைத்தேன்!...

வந்த இடத்தில் இப்படி ஆகிவிட்டதே, மிஸ்டர் விஷ்வா!...

ஆனால், கெட்டதிலும் ஒரு நல்லதிருக்கு இல்லையா? பெரியப்பா, பெரியாம்மான்னு இங்கிருக்கற சொந்தத்தோடு சேர்த்திருக்கே!...

அதை விட மேலாய்... உங்களிடமும் வந்து சேர்ந்திருக்கிறாளே! ஜோஷி என்னுடையவள்! என் உயிர் என்றெல்லாம் கூறினீர்களே... எங்கள் ஜோஷியை விரும்புகிறீர்களா?''

''விரும்பினேன்... விரும்புகிறேன்...''

''உங்க வார்த்தையின் அர்த்தம் புரியலையே, விஷ்வா சார்?''

விஷ்வஜித் வளைகாப்புக்கு வந்தது... அவளை விரும்பியது... அவன் விருப்பத்தை ஜோஷிதாவிடம் சொன்னது... அவள் தனக்கு நிச்சயமானதைக் காரணம் காட்டி மறுத்தது அனைத்தையும் சுருக்கமாய்க் கூறினான்,

ஜோஷிதாவிற்கு அம்னீஷியா அட்டாக் ஆகியிருப்பதையும் கூறினான்.

''ஜோஷிதா தன் பழைய நினைவுகளை இழந்துட்டாளா? ஐயோ... என்ன இது சோதனை?''

''சரியாயிடும்ன்னு டாக்டர் சொல்றார், சரவணன்! கவலைப் படாதீங்க!''

அஸ்வின் தான் இதைக் கூறினான்.

''ஜோஷிதாவிற்கு உடம்பு குணமானதும்.... நான் அவளைத் திருமணம் செய்துக்கப் போறேன், சரவணன்!''

''அவள் சம்மதம்...?''

''அவள் சம்மதம்... அவளுடைய பெரியப்பா, பெரியம்மா அனைவரின் சம்மதம் பெற்றுத்தான் திருமணம் செய்துக்குவேன்!...

திருமணத்திற்குப் பத்திரிகை அனுப்பறேன்!'' விஷ்வஜித் சொல்ல...

''கட்டாயம் வருவேன், விஷ்வா சார்!'' என்று பதில் சொன்னான், சரவணன்.

''எங்கள் ஜோஷிதாவிற்கு இவ்வளவு பெரிய அதிர்ஷ்டம் அடிக்கும் என்று நான் நினைத்துகூடப் பார்க்கவில்லை, மிஸ்டர் விஷ்வா! இவ்வளவு படித்தவர்... அழகானவர்... பெரிய சொத்து சுகங்களுக்குச் சொந்தக்காரர்... சிற்றரசர் பரம்பரையிலே வந்தவர்... இப்படி எல்லாவற்றிலும் மேன்மையான ஒருவர் எங்க ஜோஷிதாவிற்கு மாப்பிள்ளையாய் அமைவார் என்று நான் கற்பனை கூடச் செய்து பார்த்ததில்லை, சார்! எங்கள் ஜோஷிதா லக்கிவுமன் தான்!'' சரவணன் அதிசயம், ஆச்சரியம் நிறைந்த விழிகளுடன் சொல்ல,

''ரியலி...?'' என்று விஷ்வா அழகுப் பல்வரிசைகள் தெரியச் சிரித்தான்.

''யெஸ், மிஸ்டர் விஷ்வா.''

சரவணன் ஆமோதித்தான். பின் சொன்னான்.

''உங்கள் இருப்பிடம் வந்து சேரவே இவளுக்கு இப்படி ஒரு விபத்து நேர்ந்திருக்கிறது! கடவுளுக்குத் தான் நீங்க நன்றி சொல்லணும்!''

''நாளை உங்கள் பயணிகளை அழைத்துக்கொண்டு நீங்க கிளம்ப ஏற்பாடு செய்யறேன்!''

''உங்களுக்கு எதுக்கு சிரமம்?''

''நீங்க ஏர்போர்ட்டுக்குப் பயணிகளோடு போய் விட்டால்... என் விஷ்வா ஏர்லைன்ஸ் மூலம் சென்னைக்குச் சென்று விடலாம்!''

''நீங்க இதுவரை செய்த உதவியே அதிகம், விஷ்வா சார்! பயணிகளை ரயிலில் ஏற்றி அழைத்துப் போகிறேன்!''

சரவணன் மறுத்தான்.

''ஜோஷிதா பிழைக்க அவர்களின் வேண்டுதலும் குறிப்பிட்ட சதவீதம் உண்டு, சரவணன்! அத்தனை பேரும் ஜோஷிதாவிற்காகத் துடித்து விட்டார்கள்! அவள் மேல் நிரம்ப பாசம் கொண்ட அத்தனை பேரும் ரயிலில் போய்க் கஷ்டப்பட வேண்டாம்!...

'விஷ்வா ஏர்லைன்ஸ்' என்ற பெயரில் எத்தனையோ விமானங்கள் வாடகைக்கு விடப்படுகிறது!...

எங்களுக்குச் சொந்தமா வான்வழித் தடமும், டைமும் உண்டு, சரவணன்!...

என் விமானம் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியான்னு இன்னும் பிற நகரங்களுக்குச் சென்று வருகிறது. அது உங்களுக்குத் தெரியுமா?''

''ம்கூம்...'' என்று பிரமிப்போடு தலையாட்டினான், சரவணன்.

''ஜோஷிதாவிற்கு இப்படியொரு நல்ல வாழ்க்கையும், நல்ல கணவனும் அமையப் போகிறது என்று தெரிந்தால் என் மனைவி பூரித்துப் போவாள், மிஸ்டர் விஷ்வா!''

''திருமணத்திற்கு அவர்களையும் கட்டாயம் அழைத்து வாருங்கள், சரவணன்!''

விஷ்வஜித் கூறிச் சிரித்தான்.

பிறகு... மறுநாள் காலை...

சரவணன் பயணிகளோடு கிளம்பி விட்டான்.

''சார்... நீங்க, அஸ்வின் இருவரும் சிம்லாவுக்குக் கிளம்புங்க!''

சீனிவாசன், அஸ்வினைப் பார்த்து விஷ்வஜித் சொன்னான்.

''ஜோஷிதாவின் உடல் நிலைமை தெரிந்து கொண்டு பிறகு அனைவரும் செல்லலாம், விஷ்வா!''

அஸ்வின் மறுத்தான்.

''அங்கே தாரிகா, குழந்தை, அத்தை, என் அம்மா, அப்பா அனைவரும் பதற்றத்துடன் இருப்பார்கள். டாக்டரின் ஆலோசனைப்படி நாளையோ, அல்லது அதற்கு மறுநாளோ ஜோஷிதாவை அழைத்து வருகிறேன்! சரியா?''

''இல்ல... எல்லோரும் ஒன்றாகவே போகலாம்!''

என்ற சீனுவாசனையும், அஸ்வினையும் சமாதானப் படுத்தி அனுப்பி வைத்தான்.

இரவு எட்டு மணி...

ஜோஷிதா தூக்கத்திலிருந்து எழுந்தாள்.

அவளருகில் அமர்ந்து... அவளின் பூமுகத்தை விழிகள் விரிய நோக்கிக் கொண்டிருந்த விஷ்வஜித்தைக் கண்டாள்!

அந்த ஆழ்ந்த பார்வை... அவளை என்னென்னவோ செய்தது!

அவளின் சிவந்த முகத்தை மேலும் சிவக்க வைத்தது!

அவளின் பூ முகச் சிவப்பைக் கண்டு புன்னகை புரிந்தான், விஷ்வஜித்.

விஷ்வஜித்தின் புன்னகையின் அழகு கண்டு விழிகளை விரித்தாள், ஜோஷிதா.

அவன் கண்களாலேயே 'என்ன?' என்று ஜாடை காட்டிக் கேட்க... அவள் நாணத்தோடு தலை குனிந்து கொண்டாள்.

பின் அவள் பார்வை அறை முழுக்கச் சுழல...

விஷ்வா புரிந்து கொண்டு, ''என்னம்மா...?'' என்று சிநேகிதத்தோடு கேட்க...

அவள் நாணத்துடனே...

''பெரியப்பா, அஸ்வின்...?'' என்றாள்.

''அவங்க ஊருக்குப் போயாச்சே!''

அவள் முகம் கலவரமானது.

''அப்போ... எனக்கு யார் துணையிருப்பா?''

ஜோஷிதா கவலையோடு கேட்டாள்.

''நான்தான்!''

''நீங்களா...?''

ஜோஷிதா ஆச்சரியத்தோடு கேட்டாள்.

''ஏன்... நான் உனக்குத் துணையா இருக்கக் கூடாதா...?''

''இல்ல... வந்து...''

ஜோஷிதா குழந்தையாய் மிரள...

''அவங்களை விட நான் உன்னை என் கண்ணின் மணியாய்க் காப்பேன், கண்மணி!''

விஷ்வஜித் ஜோஷிதாவின் கைகளை நேசத்தோடு பற்றிக் கொண்டான்.

அவனின் இதமான மென்தொடுகை அவளுக்குப் பெரிய பாதுகாப்பு உணர்வைக் கொடுத்தது.

''காயங்கள் வலிக்குதா, ஜோஷிம்மா...?''

விஷ்வஜித் பாசத்தோடு கேட்டான்.

''ம்....'' என்று கூறி ஜோஷிதா கண்கள் கலங்கினாள்.

அவன் எழுந்து அவளருகில் வந்து கட்டிலில் அமர்ந்தான்.

மெல்ல மெல்லக் காயங்களை இதமாய் வருடிக் கொடுத்தான்.

''ஆ... உஸ்... ஐயோ... வலிக்குது, அத்தான்!''

ஜோஷிதா வலியால் முனகி... மெல்ல எழுந்தமர எத்தனிக்க...

விஷ்வஜித் தாங்க முடியாமல் அவளைத் தூக்கி மார் போடு அணைத்துக் கொண்டான்.

''அத்தான்... அத்தான்...'' அவள் முனக...

அவளின் அத்தானின் அழைப்பில் சொக்கிப் போனான். அவளின் உச்சந்தலையில் இதழ் பதித்தான்.

அவனின் பரந்து விரிந்த மார்பில் நிம்மதியாய்த் தலை சாய்த்துக் கண்மூடிக் கொண்டாள், ஜோஷிதா.

கொஞ்ச நேரம் கழித்து ஜோஷிதா கேட்டாள்.

''என்னைப் பற்றி எதுவுமே தெரியலையே! எனக்கு அம்மா, அப்பா இருக்காங்களா...?''

விஷ்வஜித் இந்தக் கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் மௌனமாய் இருந்தான்.

''இல்லையா அத்தான்? எனக்கு அ ா, அம்மான்னு யாருமே சொந்தங்கள் இல்லையா? இருந்திருந்தால் நீங்கள் தகவல் தந்திருப்பீங்க! அவங்களும் என்னை வந்து பார்த்திருப்பாங்க! அப்படித்தானே?''

''பெரியம்மா, பெரியப்பா, அஸ்வின் மாமா, தாரிகா அக்கா, என் அம்மா, அப்பா, நான்னு உனக்குப் பெரிய உறவுக் கூட்டமே இருக்கு, ஜோஷிம்மா!''

அவள் அவனின் பதிலில் கொஞ்சம் சாந்தமானாள்.

''உங்க அப்பா, அம்மா அதான் மாமாவும், அத்தையும் இன்னும் ஏன் வந்து பார்க்கல?''

''அப்பாவும், அம்மாவும் உடம்புக்கு முடியாதவங்க! எல்லோரும் சிம்லாவுல உன் வரவுக்காகக் காத்திருக்காங் கடா!''

''நாம எப்போ போறோம்?''

''நாளை போகலாம்ன்னு டாக்டர் சொல்லிட்டார்! அங்கே போய் வைத்தியத்தைத் தொடரலாம், ஜோஷிம்மா!''

''எனக்கு இங்கே பிடிக்கவே, இல்லை. அத்தான்! முதல்ல என்னை நம்ம வீட்டுக்குக் கூட்டிட்டுப் போங்க அத்தான்!''

ஜோஷிதா வார்த்தைக்கு வார்த்தை 'அத்தான்' என்று அழைத்து அவனை அன்பில் ஆழ்த்த...

விஷ்வஜித் கட்டுப்படுத்த முடியாமல்...

அவளின் அழகிய செவ்விதழ்களில் அழுந்த முத்த மிட்டான்.

17

விஷ்வஜித் டாக்டரின் ஆலோசனைப்படி.... மறு நாளே... ஆம்புலன்ஸில் ஏற்றிச் சிம்லாவிற்குக் கூட்டி வந்தான், ஜோஷிதாவை!

சிம்லாவில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தான்.

அவனும், அவளும் செல்லும் முன்பே சிவரஞ்சனி, ரவிவர்மா, சீனுவாசன், தாரிகா, அஸ்வின் என்று வந்து காத்திருந்தனர்.

ஜோஷிதா நல்ல தூக்கத்தில் இருந்தாள்.

ஜோஷிதாவின் அருகில் அமர்ந்து சிவரஞ்சனி கண் ணீர் விட்டுக் கொண்டிருந்தார்.

அவரை எத்தனை தேற்றியும் அழுகையை நிறுத் தவே இல்லை.

"அம்மா... எதுக்கு அழறே? அதான் பிழைச்சுட்டா இல்லையா?" என்று விஷ்வஜித் லேசாய் அதட்டினான்.

"தலையில் காயம், கையில் முறிவு, காலில் லேசாய் விரிசல்ன்னு உடம்பெல்லாம் ரணமா இருக்கே. விஷ்வா! என் மருமகள் இவ்வளவு வலியையும் எப்படித் தாங்குகிறாளோ!"

சிவரஞ்சனி சொல்லிவிட்டு முதுகு குலுங்க அழுதார்.

"சரியாயிடும்மா!"

"எவ்வளவு நாட்களாகும், விஷ்வா?"

"ஒரு மூன்று அல்லது ஐந்து மாதத்திற்குள்!"

"பழைய ஞாபகத்தை வேற இழந்துட்டதா சொல்றீயே, விஷ்வா!"

"அதனால் எந்தப் பிரச்சனையும் வராதும்மா! நம்ம ஜோஷிக்கு நிச்சயம் ஒருநாள் பழைய நினைவு திரும்பி வந்துடும்!"

கொஞ்ச நேரத்தில் கண்விழித்த ஜோஷிதா அனைவரின் கண்ணீரையும் கண்டு... அவர்களின் பாசத்தைக் கண்டு... ஆனந்தக் கண்ணீர் விட்டாள்.

சிவரஞ்சனி, விஷ்வஜித், சீனுவாசன், சுமத்திரா, தாரிகா, அஸ்வின் என்று அவளைப் பார்த்துப் பார்த்துப் பராமரித்தனர்.

பகல், இரவு என்று சிவரஞ்சனியும், சுமத்திராவும் ஜோஷிதாவை அருகிருந்து பார்த்துக் கொண்டனர்.

விஷ்வஜித், அஸ்வின், சீனுவாசன் மூவரும் காலை, மாலை தவறாமல் வந்து பார்த்து விட்டு கம்பெனிக்குச் சென்றனர்.

ஜோஷிதா விஷ்வஜித்தின் வரவை எதிர்பார்க்க ஆரம்பித்தாள்.

விஷ்வஜித் வந்து விட்டால் அவள் கண்களில் கூடுதல் ஒளி மிளிரும்!

முகத்தில் நாணப் புன்னகை வந்து குடிகொள்ளும்!

விரைவிலேயே ஜோஷிதாவை வீட்டிற்கு அழைத்துச் சென்றனர்.

பங்களாவின் எழில்மிகு தோற்றம்... அங்கிருந்த ஆடம்பரம்... பணியாட்களின் எண்ணிக்கை அனைத்தையும் கண்டு பிரமித்தாள்.

டாக்டர் வந்து தினமும் வீட்டிலேயே வைத்தியத்தைத் தொடர்ந்தார்.

ஜோஷிதாவின் உடல்நலத்தில் சீரான முன்னேற்றம் ஏற்பட்டது.

ஈஸ்வரோடு திருமணம் நிச்சயம்... திருமணம் நின்று போனது... அதன் காரணமாய்ப் பாட்டியின் இறப்பு என்று சீனுவாசன் ஓரளவு அவளைப் பற்றிக் கூறிவிட்டார்.

அவளும் ஓரளவு தன்னைப் புரிந்து கொண்டாள்.

ஜோஷிதாவின் உடம்பில் உள்ள காயங்கள் சுத்தமாய்க் குணமாகி விட்டன!

கால் விரிசல் சரியாகி மெல்ல நடந்தாள்!

கை முறிவு ஓரளவு சரியாகிவிட்டது.

ஜோஷிதாவிடம் விஷ்வஜித் சென்னையில் காதலை யாசித்ததைச் சொன்னான்.

ஜோஷிதா நிச்சயத்தைக் காரணம் காட்டி மறுத்து விட்டதையும் சொன்னான்.

ஏற்கெனவே ஜோஷிதாவின் மனம் அவன் மேல் மயக்கம் கொண்ட அவனிடம் போய்த் தஞ்சம் புகுந்திருந்த நிலையில்... அவனின் இந்த விளக்கம் கேட்டு... அவன் மேல் தீராத காதல் கொண்டாள்!

அவன் மேலான நேசத்தையே சுவாசமாய் எண்ணி வாழலானாள்!

நாள் முழுக்க வெறுமையை உணர்பவள்... அவனைக் கண்டுவிட்டால் துள்ளிக் களிப்படைவாள்!

விஷ்வஜித்தும் வேலை முடிந்து விட்டால்... அடுத்த நொடி தாமதிக்க மாட்டான். பங்களாவிற்கு வந்து விடுவான்.

ஜோஷிதாவோடு மணிக்கணக்காய்ப் பேசுவான்!

நாட்கள் இப்படியே இன்பமாய் நகர்ந்தன.

அன்று...

விஷ்வஜித்தும், அஸ்வினும் அவனுடைய 'கனவு பூமி'க்கு விசிட் செய்யச் சென்றனர்.

அவன் காரில் ஏறி.... கார் கண்களுக்கு மறையும் வரை ஏக்கத்தோடு பார்த்திருந்து விட்டு... ஜோஷிதா உள்ளே சென்றாள்.

ஒரு நாள்...

இரண்டு நாள்... என்ற பிரிவைத்தான் அவள் கண்டிருக்கிறாள்.

மூன்றாம் நாள் வாசலிலேயே நின்று நின்று இரவு நெடுநேரம் கண்கள் பூத்துப் போனதுதான் மிச்சம்!

விஷ்வஜித் வரவேயில்லை!

ஜோஷிதா போன் செய்து கேட்க...

''ஜோஷி செல்லம்... பயங்கர வேலைடா! கொஞ்சம் பொறுத்துக்கோடா! நாளை வருவதற்கு முயற்சி செய்கிறேன்!''

விஷ்வஜித் போனை அணைத்து விட்டு.... நாள் முழுக்க உழைத்த உழைப்பின் களைப்பில் தூங்கிப் போனான்.

ஆனால் சிம்லாவில் தூங்காமல் இரவைச் சபித்துக் கொண்டே அறையில் நெடுநேரம் நடந்து கொண்டிருந்தாள், ஜோஷிதா.

காலை முதல் உண்ணாமல் கன்னத்தில் கை வைத்துச் சோகமாய் வாசலிலேயே அமர்ந்திருந்த ஜோஷிதாவின் நிலை கண்டு சிவரஞ்சனி விஷ்வஜித்திற்கு போன் செய்தாள்.

''விஷ்வா... என்ன செய்யறே? கிளம்பி வர மாட்டீயா?''

சிவரஞ்சனி அதட்டலோடு கேட்டார்.

''வரேம்மா! இங்கே பயங்கர வேலை!'' விஷ்வா பதிலளித்தான்.

''என்ன பெரிய பயங்கர வேலை? உடனே வந்து சேர்!''

சிவரஞ்சனி கட்டளையாய்க் கூறினார்.

''அம்மா... என்னைப் புரிஞ்சிக்கங்க... வேலை அதிகம்! உடையவர்கள் அடிக்கடி நேரில் வந்து வேலை வாங்காமல் போக... வேலைகள் ரொம்ப ஸ்லோவா இருக்கு! சில ஏமாற்று இன்ஜினியர்கள், மேஸ்திரிகளை மாற்றிவிட்டுப் புது ஆட்களை ஒப்பந்தம் செய்து என்று நிறைய வேலைகள் பார்க்கிறேன்! வரேன்மா!''

"எப்போ?"

"ஒரு நான்கு நாட்கள்..."

"இன்னும் நான்கு நாட்கள் கழித்து வந்தால்... ஜோஷிதா உன்னைக் கடித்துக் குதறக்கூடச் செய்வாள்!"

"அவள் அப்படியெல்லாம் செய்ய மாட்டாள்!"

"உன் மேல் பயங்கரக் கோபம் கொண்டிருக்கா, தெரியுமா?"

"என்னைப்பற்றி, என் வேலைகளைப் பற்றியெல்லாம் நான் இல்லாத சமயம் பார்த்துச் சொல்லி விளக்கிக் கொண்டிருக்கக் கூடாதா? உங்களுக்கும், அவளுக்கும் பொழுது போனது மாதிரியும் இருக்கும்! அவளுக்கும் என்னைப் பற்றிப் புரிய வைத்தது போலவும் இருக்கும்! அவளுக்கு போன் செய்தால் எடுக்கவே மாட்டேங்கிறா, தெரியுமா?"

ஜோஷிதாவை விஷ்வஜித் குற்றம் சாட்டினான்.

"உடல் நிலை சரியில்லாத பெண்! மேலும் உன் மேல் உயிரையே வைத்திருக்கும் பெண்! இப்போது என்ன வென்றால் உன் மேல் பயங்கரக் கோபம் கொண்டுள்ள பெண்! எப்படிப் பேசுவா?"

"சரி, முயற்சிக்கிறேன்!"

"அதெல்லாம் தெரியாது! நீ புறப்பட்டு வந்துட்டு... நாளையே கூட மீண்டும் போயேன்! ஏன் இப்படி என் மருமகளை வருத்தப்பட வைக்கறே?"

"வரேம்மா!"

"தாரிகா என்ன பாவம் பண்ணினா? அந்தப் பிஞ்சுக் குழந்தை என்ன பாவம் செய்தது? அந்தப் பிஞ்சு தகப்

பனைத் தேடுது தெரியுமா, விஷ்வா? ஏன் விஷ்வா இப்படி இருக்கே?...

பிசினஸ், வேலை எல்லாம் முக்கியம்தான்!...

அதுபோல உறவுகளும்... உறவுகளுக்கிடையே உள்ள அன்பு, பாசம், நேசம், பிணைப்பு அத்தனையும் முக்கியமில்லையா...?"

சிவரஞ்சனி பேசிக்கொண்டே போக... இடைமறித்தான், விஷ்வஜித்.

"புலம்பாதீங்க! வரேன்!"

விஷ்வஜித் போனை ஆப் செய்தான்.

சிவரஞ்சனி ஜோஷிதாவிடம் ஓடினாள்.

"ஜோஷிம்மா... நம்ம விஷ்வா இன்று வரேன்னு சொல்றான்!"

"வரட்டும்!"

ஜோஷிதாவிடமிருந்து விட்டேத்தியாய்ப் பதில் வந்தது.

"நல்ல செய்தி சொல்றேன்! உனக்கு சந்தோசமில்லையா...?"

"விஷ்வா வருவது நல்ல செய்தியா?...

அவர் உங்களுக்குப் பிள்ளை! அவர் வருவது உங்களுக்கு இனிக்கும்!...

ஆனால், அவர் எனக்கு யாரோதானே, ஆன்ட்டி?"

விஷ்வஜித் மேல் உள்ள கோபத்தை... சிவரஞ்சனியிடம் நாசூக்காய்த் தெரிவித்து விட்டு... அவளறைக்குப் போய்ப் படுத்துக் கொண்டாள்!

அவளின் கோபம் சிவரஞ்சனிக்குப் பிடித்திருந்தது!

'இன்று விஷ்வா... இந்தக் கோபக்காரியிடம் மாட்டிக் கொண்டு விழிபிதுங்கப் போகிறான்!' என்று நினைத்து மெல்லப் புன்னகைத்துக் கொண்டார்.

நள்ளிரவு... பதினொரு மணி!

விஷ்வாவின் கார் போர்டிகோவில் நின்றது.

வேலைக்காரி வந்து கதவு திறந்து விட... விஷ்வஜித் உள்ளே வந்தான்!

நேரே ஜோஷிதாவின் அறையை நோக்கிப் போனான்!

கதவு தட்டினான்!

ஜோஷிதா முழித்துக் கொண்டுதான் படுத்திருந்தாள். ஆனால் கதவை வந்து திறக்கவில்லை!

''ஏய் ஜோஷி... நான் விஷ்வா... எழுந்து வந்து கதவைத் திற!''

விஷ்வஜித் மீண்டும் தட்டினான்.

''நான் தூங்கிட்டேன்!''

உள்ளிருந்து குரல் வந்தது, கோபமாய்!

''தூங்கினவ எப்படி குரல் கொடுப்பா?''

அவன் கேட்க... அவள் தன் தவறு உணர்ந்து தலையில் கொட்டிக் கொண்டாள்.

''ஜோஷி.... ப்ளீஸ்... உன் கோபம் போதும்... வாடாம்மா...!''

விஷ்வஜித் காதலோடு கெஞ்ச...

ஜோஷிதாவினுள் கோபம் ஒரு பக்கம் இருந்தாலும்... அவனைப் பார்க்க வேண்டும் என்ற வெறி மெல்ல மேலெழுந்து கதவைத் திறக்க வைத்தது.

கதவு திறந்தாள்!

உள்ளே சென்ற விஷ்வஜித் பிரிவின் தாகம் தணியக் கண்களால் அவளைத் தழுவினான்!

அவளும் அவனை விழி விரிய நோக்கினாள்!

அங்கே கண்களிரண்டும் கலந்து... கரைந்து... குழைந்து... உருகி... மருகி... காதலைச் சுவாசித்தது!

இருவர் உள்ளங்களும் பின்னிப் பிணைந்து, கூடி இன்புற்றன!

''ஜோஷிம்மா...''

விஷ்வஜித் நேசத்தோடு கைகளை விரித்து அவளை அழைக்க...

''போங்க... என்கிட்ட பேசாதீங்க! இத்தனை நாளும் என்னைப் பிரிந்து... என்னைத் தவிக்க விட்டீங்க, இல்ல? உங்க கூட பேசவே மாட்டேன்!''

ஜோஷிதா குழந்தையாய்க் கையை, காலை உதறிக் கோபத்தைக் காட்ட...

''ஜோ.... ஜோஷி... ஜோஷிம்மா... என் கண்ணே... என் தங்கப் பெண்ணே...''

என்று காதலோடு நெருங்கி அவளை அவன் அணைக்க...

''விடுங்க... போங்க...''

என்று ஜோஷிதா சிணுங்கி... அவனிடமிருந்து விடுபடப் போராடினாள்!

அவன் அணைப்பு மேலும் இறுகியது!

அவள் அவன் நெஞ்சில் இரு கைகளாலும் குத்தினாள்!

''ஜோஷிம்மா... ஸாரிடா... தப்புதான்டா!'' என்று கூறினான்.

அவனிடமிருந்து விடுபடப் போராடினாள்!

''அங்கே நம் 'கனவு பூமி'யில் வேலை முடியும் தருவாயில் உள்ளது!...

அது முடிந்ததும் திறப்பு விழா!...

அதற்கு அடுத்ததாய் நல்ல நாளில் நம் திருமணம்!...

நாம் திருமணத்தில் சீக்கிரம் இணைய வேண்டும் என்ற நோக்கத்தில்தான்டா... மனசைக் கல்லாக்கிட்டு வேலை... வேலைன்னு அலையறேன்! ப்ளீஸ்டா.... என் மேல் கோபிக்காதேடா!''

அவனின் விளக்கம் கேட்டு...

''விஷ்வா... விஷ்வா...!''

என்று கண்ணீரோடு கூறி... அவனை ஆரத்தழுவிக் கொண்டாள், ஜோஷிதா.

''விஷ்வா.... விஷ்வா... உங்களைப் பிரிந்து என்னால் இருக்க முடியலே, விஷ்வா!''

அழுகையில் குலுங்கினாள்.

''என் செல்லம்... என் தங்கம்...'' என்று அவளின் கண்ணீரைத் துடைத்து.... அவளை அணைத்துக் கொண்டான்.

''விஷ்வா... விஷ்வா... ஐ லவ் யூ, விஷ்வா! ஐ லைக் யூ, விஷ்வா!''

என்று சொல்லிவிட்டு அழகாய் உதடு பிதுக்கி அழுத ஜோஷிதாவைத் தூக்கித் தட்டாமாலை சுற்றி... இன்னும் மூச்சு முட்ட இறுக்கிக் கொண்டான்!

விஷ்வாவினுள் வானமே வசப்பட்ட உணர்வு உண்டானது!

அவள் அழகு முகம் பிடித்து... ஆசையாய், ''ஐ லவ் யூ' சொன்ன இதழில் அழுந்த முத்தமிட்டான்.

பிரிவுத்துயரைக் 'கண்ணீராய்' வெளிப்படுத்திய கன்னங்களில் முத்தமிட்டான்!

இந்த நிலை நீண்ட நேரம் நீடித்தது!

பின்னர் இயல்புக்கு வந்தனர்!

அவளைக் கையணைப்பில் அழைத்துப் போய்க் கட்டிலில் அமர வைத்து... அவள் மடியில் தலை சாய்த்துக் கொண்டான், விஷ்வஜித்!

''கள்ளி... இவ்வளவு காதலை உன்னுள்ளே வைத்துக் கொண்டு... ஒரு நாள் கூட நீ என்னிடம் 'ஐ லவ் யூ' சொல்லலே தெரியுமா...?''

விஷ்வஜித் ஜோஷிதாவைக் குற்றம் சாட்டினான்.

''ஏய் கள்வா... நீங்க மட்டும் சொன்னீங்களா, என்ன?''

''நான் ஆண்! எனக்குத் தயக்கம்!''

''நான் பெண்! எனக்கு வெட்கம்!''

''நீ சொல்லலாம் இல்லையா...?''

''நீங்க சொல்லலாம் இல்லையா...?''

''உனக்கு அழுத்தம் அதிகம்டி!''

''உங்களுக்கு ஆணவம் அதிகம்டா!''

''என்னடி 'டா' போடறே?''

''நீங்க ஏன்டா 'டி' போட்டீங்க?''

''சரியான மகா வாயாடிகிட்ட மாட்டிட்டேன்டா, சாமி!''

''உங்களுக்கு மட்டும் வாயில்லையா? இல்லே, ஊமையா, நீங்க?''

''நீ இப்படி கூட வார்த்தையாடுவீயா, ஜோஷிம்மா? பூச்சி மாதிரி இருந்தே! அதிர்ந்து பேசமாட்டே! நேரா கூட என்னைப் பார்க்கமாட்டே! அதிசயமா இருக்கு! நிஜமாவே நீ என் ஜோஷிதானா?''

''இத்தனை நாளும் என்னைப் பிரிந்திருந்தது... என் விஷ்வாதானான்னு எனக்குச் சந்தேகமா இருக்கு!...

''ஏய், அகலிகை கிட்ட... இந்திரன் அவள் கணவன் போல உருவமெடுத்து வந்தாப் போல... என் விஷ்வா போல உருவமெடுத்து வந்த நீ யார்?''

ஜோஷிதா கண்களை உருட்டி... மடியில் படுத்திருந்த வனின் சட்டையைச் செல்லமாய்ப் பற்றி இழுத்தாள்!

அதுதான் சாக்கு என்று மெல்லத் தலையைத்தூக்கி.... அவள் கன்னத்தை அழுந்தப் பல் பதியக் கடித்தான், விஷ்வஜித்!

''யூ நாட்டி!''

அவள் செல்லமாய் அவன் மார்பில் குத்தினாள்! அவர்கள் சிரிப்புச் சத்தம் அந்த அறையில் அலையலை யாய்ப் பரவியது!

18

இளம் மாலைப் பொழுது... ரம்யத்தோடு... அழகாய் நடை பயின்று கொண்டிருந்தது!

ஜோஷிதா தலைகுளித்து முடியை முதுகில் படர விட்டிருந்தாள்!

காதோரம் இருபுறமும் சிறு முடியை எடுத்து ஹேர் பின் குத்தியிருந்தாள்.

சிவரஞ்சனி தன் கைகளாலேயே அடர்த்தியாய்க் கட்டிய ஜாதி மல்லிகைச் சரத்தைக் கொண்டு வந்து சூட்டிவிட்டுப் போனார்!

ஜாதி மல்லிகை மொட்டவிழ்ந்து... அவளைச் சுற்றி நறுமணத்தை உற்பத்தி செய்து கொண்டிருந்தது!

மணியும், கற்களும் பதித்த விலையுயர்ந்த இளம் ஆரஞ்சு நிறச் சேலையை உடுத்தியிருந்தாள்! அந்த ஆரஞ்சு வண்ணச் சேலை அவளுக்கு அழகுக்கு அழகு சேர்த்துக் கொண்டிருந்தது!

வில்லாய் வளைந்த புருவம்...

மானாய் மிரண்ட விழிகள்...

வெட்கத்தில் இயல்பாய்ச் செந்நிறம் ஏறிய கதுப்புக் கன்னங்கள்...

இளம்ரோஸ் நிற இதழ்கள் என்று ஜோஷிதா காணப் பட்டாள்!

முழுதாய் அவள் இங்கு வந்து ஆறு மாதங்கள் நிறைவடைந்து.... ஏழாவது மாதம் நடைபெறுகிறது!

அவள் உடல் பூரண குணமாகிவிட்டது!

'கனவு பூமி' திறப்பு விழாவிற்கான வேலையும்...

அவளுக்கும், விஷ்வாவிற்கும் இடையேயான திரு மண வேலையும் வேகமாய் நடந்து கொண்டிருந்தது.

இரு நிகழ்ச்சிகளுக்கும் நாள் குறிக்கப்பட்டுப் பத்திரிகை அடிக்கப்பட்டது!

ரவிவர்மாவின் ஐடியா இது!

இரு பத்திரிகைகளையும் ஒரே நேரத்தில் கொடுத்தால் வேலையும் மிச்சம்... அலைச்சலும் மிச்சம் என்று எண்ணித்தான் ரவிவர்மா இந்த யோசனையைக் கூறியது!

சொந்தம்... பந்தம்... சுற்றம்... நண்பர்கள்... அரசியல் வாதிகள்... கம்பெனி ஊழியர்கள்... தோட்டத் தொழிலாளி கள் என்று அத்தனை பேருக்கும் அழைப்பு விடுப்பதில் விஷ்வஜித் அலைந்து திரிந்து கொண்டிருந்தான்.

விஷ்வா வீட்டில் இல்லை!

ஜோஷிதாவின் அலங்காரம் கண்டு விஷ்வஜித் ஆனந்தப்பட்டிருப்பான்!

அவன் இல்லாமல் போக ஜோஷிதாவிற்கு... இந்த மாலைப்பொழுது சலிப்பை உண்டு பண்ணியது!

மாடியிலிருந்து வெளியே நோக்கினாள். தோட்டத் தின் ரம்யம் அவளைக் கவர்ந்தது!...

அடுத்த நொடி இறங்கித் தோட்டத்திற்கு வந்தாள்!

அழகாய் இதழ்விரித்து... ரம்யமாய்த் தென்றலின் தாளத்திற்கேற்ப தலையாட்டி... மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்த மலர்களைக் கண்டவுடன்... விஷ்வாவின் ஞாபகம் வாட்டியது!

மலர்களை ஆசையுடன் வருடினாள்! முத்தமிட்டாள்!

ஒரு சிறிய குடில் அமைத்து... ஒரு பெரிய கூண்டில் அறையறையாய்த் தடுத்து... புறா, கிளி, லவ் பேர்ட்ஸ் என்று அங்கே வளர்க்கப்படுகிறது!

அந்தக் குடிலினுள்ளே சென்றாள்!

அங்கிருந்த பறவைகள் அனைத்தும் அவளைக் கண்டு ஆனந்தத்தில் 'கீச் கீச்' என்று கத்தி அங்குமிங்கும் பறந்தன!

ஜோஷிதா பொழுது போகாத வேளைகளில் அங்கு வந்து பறவைகளைக் கொஞ்சி மகிழ்வாள்!

அந்தப் பரிச்சயத்தில் அவை சிறகு விரித்து மகிழ்ச் சியைத் தெரிவித்தன!

''வந்துட்டேன் செல்லங்களா... பசிக்குதா... தாக மெடுக்குதா...? என் குட்டித் தேவதைகளுக்கு நான் என்றால் பிடிக்குமா...?''

என்று கொஞ்சியவாறே அங்கிருந்த தானியங்களை எடுத்துக் கூண்டுக்குள் இருந்த கிண்ணத்தில் போட்டு நிரப்பினாள்.

ப்ளாஷ்டிக் தட்டில் நீரை நிரப்பி உள்ளே வைத்தாள்.

பறவைகள் தானியத்தை அலகுகளால் கொத்திக் கொத்தித் தின்றதை... கண் கண்டுக்காமல் நோக்கி ரசித்துக் கொண்டிருந்தாள்!

பின் குடில் விட்டு வெளியேறினாள்!

தோட்டத்தில் தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சலில் வந்து அமர்ந்தாள்!

சிறு குழந்தைகளின் உற்சாகத்தோடு... காலை உதைத்து மேலும் கீழும் ஊஞ்சலாடினாள்!

கொஞ்ச நேரம் கழித்து... ஊஞ்சலில் படுத்துக் கண் மூடிக் கிறங்கிக் கொண்டிருந்த போது...

''என்ன... என் தேவதை மோன நிலையில் இருக் காங்களா...? ஆஹா... என்ன அழகு! என்ன நேர்த்தி! என்ன நளினம்! எனக்கென்று அழகாய்ப் பிரம்மன் வடி வமைத்து அனுப்பிய பேரழகுச் சிற்பம் போல!''

விஷ்வஜித்தின் குரல் தெவிட்டாத தேனாய் அவள் காதுகளில் ஒலித்தது!

சிப்பி இமையைத் திறந்து.... சட்டென்று எழுந்தமர்ந்து அவனைக் காதலோடு நோக்கினாள், ஜோஷிதா!

''ஓ... விஷ்வா.... வந்துட்டீங்களா...?

நாளைக்குதானே வருவேன்னு சொன்னீங்க! என்ன இது, இப்படி இன்ப அதிர்ச்சி கொடுக்கறீங்க!''

என்று மலர்ந்த முகத்துடன் ஜோஷிதா சொன்னாள்!

''தேவியைத் தரிசிக்கத்தான்... தேவன் உடனே புறப் பட்டு வந்துட்டேன்! தப்பா?''

விஷ்வஜித் அழகாய்ச் சிறு புன்னகையுடன் கேட் கவும்... அந்தப் புன்னகையில் ஜோஷிதாவின் உள்ளம் கொள்ளை போனது!

''ஜோஷிம்மா... இங்கேயே இருடா! உடம்பெல்லாம் கசகசன்னு இருக்கு! சின்னதா குளியல் போட்டுட்டு வந்துடறேன்!''

''சரி!''

''ஆமா, காபி, டிபன் சாப்பிட்டாச்சா, ஜோஷி?''

''ம்கூம்!''

''சரி, இரு! இங்கேயே சேர்ந்து சாப்பிடுவோம்!''

அவன் கோட்டைக் கழற்றி... தோளில் போட்டு... மன் மதனாய் நடந்து போனான்!

'இந்த மன்மதனை மணக்க... எனக்கு என்ன அருகதை இருக்கிறது?'

'பெரிய படிப்பிருக்கிறதா...?'

'சொத்திருக்கிறதா...?'

'எனக்கென்று சொந்தங்கள் இருக்கிறதா....?'

'அல்லது நல்ல வேலைதான் இருக்கிறதா...?'

இதில் எதையுமே பார்க்காமல்... எனது அன்பான மனதையும்... அழகான, அடக்கமான உருவத்தையும் கண்டு... காதல் கொண்ட விஷ்வா... பெரிய கிரேட் மேன்தான்!

இது எந்தப் பிறவியில் செய்த தவமோ... இந்தப் பிறவி யில் எனக்கு நற்பலனைக் கொடுத்திருக்கிறது!

'விஷ்வா... விஷ்வா... உங்களைக் கண்டதே வரமல் லவா...?'

விஷ்வா... என் இனியவனே... என் இதயம் கவர்ந்த வனே... என்னில் கரைந்தவனே... எனக்கெனப் பிறந்த வனே... உன்னைக் கண்டதே பெரும் வரம்! இந்த வரத்தை அருளிய இறைவனுக்குக் கோடி கோடி நன்றி!'

என்று ஜோஷிதா விஷ்வஜித்தின் நினைவுகளில் மூழ்கி... கடவுளுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண் டிருந்த போது...

''ஏய்...''

என்று கோபமான குரல் கேட்டது!

சட்டென்று திடுக்கிடலோடு கண்விழித்து நோக்க...

எதிரே நவநாகரிகப் பத்ரகாளியாய் ஒருத்தி... மினி மிடி... கையில்லாத பனியன் அணிந்து... ஆக்ரோஷத்தோடு நின்று கொண்டிருந்தாள்!

ஜோஷிதா அவளைப் புரியாமல் நோக்க...

''நீதான் ஜோஷிதாவா...?''

மினிமிடிக்காரி கோபத்தோடு கேட்டாள்.

''என் மன்மதனை மயக்கி... மடியில் கட்டிக் கொண்ட ரதிதேவி நீதானா...?''

காட்டுக்கத்தலோடு அவள் கேட்கவும்.... ஜோஷிதா எதுவும் விளங்காமல் விழித்தாள்!

''என்னிடம் இல்லாத ஒன்று உன்னிடம் அப்படி என்ன ஸ்பெஷலா இருக்குடி? ம்? இத்தனை மயங்கிக் கிடக்கிறார், என் விஷ்வா!...

இதுதான் உன் தொழிலா...?''

அவள் பேச்சின் அர்த்தம் வேறுபடுவது கண்டு பொங்கினாள் ஜோஷிதா.

''யாருங்க நீங்க? அளவா பேசுங்க! மரியாதை கொடுத்துப் பேசக் கத்துக்கங்க! ஜாக்கிரதை!''

ஜோஷிதா மிரட்டினாள்!

''எவனாவது பணக்கார வாலிபன் கிடைத்தால்... பல்லிளித்து... மயக்கி... மடியில் போட்டுக் கொள்ளும் உனக்கெல்லாம் மரியாதை ஒரு கேடா...?''

பனியன்காரி சீறலோடு கேட்டாள்!

''ஏய், என்னடி பேசறே? யார்டி நீ...?''

ஜோஷிதாவும் அவளுக்கு மரியாதை கொடுப்பதை விடுத்து... ஒருமைக்குத் தாவி அவளைப் போலவே பேச...

''என் விஷ்வாவைத் திருடிட்ட திருடிதானடி, நீ?''

''அவர் ஒன்றும் பொருளில்லே! திருடிக்கொள்வதற்கு!'' பனியன்காரிக்குப் பதிலடி கொடுத்தாள், ஜோஷிதா.

''எனக்குக் கிடைக்க இருந்த விஷ்வாவை அபகரிச் சுட்டே இல்லே?''

''திரும்பவும் சொல்றேன்... விஷ்வா பொன்னோ... பொருளோ அல்ல, அவரை அபகரித்துக் கொள்வதற்கும்

திருடிக் கொள்வதற்கும்! ரத்தமும், சதையுமான மனிதன், விஷ்வா!''

''அதான் உன் சதையைக் காட்டி... அவரை உன் முந்தானையில் முடிந்து கொண்டாயா...?''

''ஏய் யாருடி நீ...? பைத்தியமா நீ...? உன்னை யார் உள்ளே விட்டது? வாட்ச்மேன்... ஏய் வாட்ச்மேன்...''

ஜோஷிதா கத்தினாள்.

''என்னையே நீ யார்ன்னு கேட்கமாட்டாயா, பின்னே? உரிமையே இல்லாத ஒருத்திக்கு உரிமை கிடைக்கவும்... ரொம்பத்தான் அலட்டறீயா?'' கண்களில் நீர் துளிர்க்க பனியன்காரி கேட்டாள்.

''ஏய் பெண்ணே... யார் நீன்னு சொல்லித் தொலையேன்?''

''நான் விஷ்வாவைக் கட்டிக்க இருந்தவள்!''

''அவரைக் கட்டிட்டு சந்தோசமா குடும்பம் நடத்தி இருப்பதுதானே?''

''படித்து முடித்து விட்டு வந்து என் ஆசையை டாடிட்ட சொல்லாம்ன்னு இருந்தேன்!...

இப்படி இடைப்புகுந்து கெடுத்துட்டையே, நீ!....

நல்லாயிருப்பாயா, நீ?...

என் விஷ்வாவை இப்படி கள்ளத்தனமா அபகரிச்சுட்டு எத்தனை நாட்கள் வாழ்ந்துடுவே, நீ? அதையும் பார்க் கிறேன்!''

பனியன்காரி கண்களை உருட்டிச் சொல்லவும்... ஜோஷி தாவிற்கும் பெரும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது!

''இதுக்கு மேல் ஒரு வார்த்தை பேசினே, உன்னை என்ன செய்வேன்னு தெரியாதுடி! மரியாதையா

போயிடு! என் கண் முன்னால் நிற்காதே! உன்னால் முடிந்தால் இந்தக் கல்யாணத்தை நிறுத்து! விஷ்வாவை என்னிடமிருந்து பிரித்துக் கொண்டு போ!''

ஜோஷிதா சவால் விடவும்...

''விஷ்வாவோட உறுதியைக் கண்டு சவால் விடறீயா...? விஷ்வா உனக்குக் கிடைக்காமல் செய்யறேன் பார்!''

''என்ன செய்வே?''

''எனக்குக் கிடைக்காத அவரை...'' என்று நிறுத்தவும்...

''அவரை...?''

''உனக்குமே கிடைக்க விட மாட்டேன்! அவரைக் கொல்றேன் பார்!''

இந்தச் சொல்லில் ஜோஷிதாவிற்குக் கண்மண் தெரியாமல் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

திடீரெனக் காளியாய் உருவெடுத்தாள்!

ஓங்கிப் பளாரென அந்த பனியன்காரியின் கன்னத்தில் அறைந்தாள்!

எதிர்பாராமல் விழுந்த அறையால் நிலைகுலைந்து போனாள், அவள்!

அடுத்த நொடி...

''உன்னையும் சேர்த்தே அழித்துக் காட்டறேன்டி!''

கறுவிக்கொண்டே நகர்ந்து சென்றாள், அந்தப் பெண்!

ஜோஷிதா ஆத்திரத்தின் கடைசி எல்லையில் இருக்கும்போது விஷ்வஜித் அவளருகே வந்தான்!

''அந்த லூசு உன்னிடம் என்ன பேசியது, ஜோஷி?'' விஷ்வஜித் சாதாரணமாய்க் கேட்க...

''அவள் யார்?'' ஜோஷிதா குரோதத்தோடு கேட்டாள்.

''சாருலதா!'' என்றான், விஷ்வா.

''அவளுக்கும், உங்களுக்கும் என்ன உறவு? சொல்லுங்க.''

''எந்த உறவுமே இல்லையே!''

''அப்புறம் எப்படி 'என் விஷ்வா'ன்னு சொந்தம் கொண்டாடுவாள்? ம்?''

''நம்ம எஸ்டேட்டுக்குப் பக்கத்துல இருக்கற எஸ்டேட் அவளுடையது!''

''அப்புறம்?''

''அவங்க அப்பா நமக்கு நல்ல பழக்கம்! தங்கமான மனிதர்! இரு குடும்பத்துக்கும் நல்ல நட்பு இருக்கு!''

''நீங்க அவளிடம் நெருக்கமா நட்பு பாராட்டினீங்களா...?''

''என்ன பேசறே, ஜோஷி?...

நீ யோசித்துத் தான் பேசறீயா? இல்லையா? சொல். அவள் உன்னிடம் என்ன சொன்னாள்? சொல்லு, ஜோஷிதா...''

''அவளுக்குக் கிடைக்க இருந்த உங்களை நான் அபகரிச்சுட்டேனாம்!

''ச்சே... ச்சே...!''

விஷ்வஜித் முகம் சுழித்தான்!

''நான் திருடியாம்! உங்களைத் திருடிட்டேனாம்!''

''வாயாடிக் கழுதை... அவளை நான் அப்புறம் பேசிக்கிறேன்! இன்னும் என்னவெல்லாம் சொல்லி உன்னை வெறுப்பேத்தினாள்?''

"படித்து முடித்து வந்து உங்களைத் திருமணம் செய்துக்கலாம்ன்னு ஆசையா வந்தாளாம்!"

"என்ன பெரிய படிப்பு படிக்கறா? ப்ளஸ் டூ முடிச்சிட்டு வந்த கழுதைக்குக் கொழுப்பைப் பார்த்தாயா, ஜோஷிம்மா!"

"ப்ளஸ் டூ வா...?"

"சந்தேகமா இருக்கா...?"

"ம்!"

"நல்ல போஷாக்கான, ஆரோக்கியமான உணவு உண்டதன் பலன்... இந்தப் பெரிய மனுஷித் தோரணை!"

"இந்த வயதுக்கு இப்படிப் பேசறாளே!"

"சின்னப் பெண்! விடு, ஜோஷிம்மா!"

"மீண்டும் என்னிடம் வாலாட்டினால் அவள் வாலை ஒட்ட நறுக்கிடுவேன்! சொல்லி வையுங்க!"

ஜோஷிதா எச்சரித்தாள்.

"புரியாத, அறியாத பெண்! புத்தி சொல்லி வளர்க்கத் தாயில்லை!"

"ஐயோ பாவமே!"

"தகப்பன் வளர்ப்பில் வளர்ந்த அவளுக்கு என்ன தெரியும்! விடு ஜோஷிம்மா! அவளுடைய தந்தை மறுமணம் செய்து கொண்டார்!"

"அப்போ சித்தி கொடுமையும் இருக்குமே, இவளுக்கு!"

"ஆமா!"

"ஐயோ பாவம்! தாயற்ற பெண்ணா? தகப்பன் மறுமணம் செய்ததனால் சித்தி கொடுமையையும் அனுபவிக்கறாளா? அவள் அழுதுட்டுப் போறாளே, விஷ்வா!...

உங்களைக் கொல்லுவேன், என்னை அழிப்பேன்னு சொன்னதால் அறைஞ்சிட்டேன், விஷ்வா!"

"அதிகப்படியாய்ப் பேசியதற்குச் சரியான தண்டனை கொடுத்திருக்கிறாய் ஜோஷி!"

"அம்மா இல்லாத பெண்! பாவமா இருக்கு, விஷ்வா இப்போ!"

"நாளையே இங்கு வருவாள்! ஸ்கூல் லீவு விட்டிருக்காங்க இல்லையா? லீவு முடியும் வரை பெரும்பொழுதை உண்டு, உறங்கின்னு அம்மாவோடுதான் கழிப்பாள்! அப்போ அவளுக்கு உங்க தமிழ்நாட்டின் ஒழுக்கம், பண்பாடு, நாகரிகம், அன்பு, பாசத்தைக்கற்பி, ஜோஷிம்மா!"

"கண்டிப்பா, விஷ்வா! அவள் இனி என் தங்கை போல!"

ஜோஷிதாவின் முகம் தெளிவிற்கு வந்தது.

"அலங்காரம் ரொம்ப அசத்துதே!"

என்று சொல்லியவாறு விஷ்வஜித் அவளைப் பார்த்துக் கண்ணடித்தான்.

"அடுத்ததா மோகம் கொள்ள வைக்குதே!" சொல்லியபடியே ஜோஷியின் அருகில் போனான்!

அவள் அவனைப் பிடித்துத் தள்ளி விட்டாள்!

"ஏய் ராட்சசி...! ஏன் என்னைத் தள்ளிவிட்டே?"

"எல்லாம் கல்யாணத்துக்கு அப்புறம்தான்! ஆ... ஊன்னா கட்டிக்கிறதும்... முத்தமிடறதும் இதெல்லாம் என்ன கெட்ட பழக்கம்? ம்?"

ஜோஷிதா உதடு சுழித்துக் கேட்டாள்.

''இந்தக் கெட்டபழக்கத்தைச் செய்யத்தான் நமக்குத் திருமணம், தாலிங்கிற லைசன்ஸ்... சென்டிமெண்ட் எல்லாம்!''

என்று கூறியவாறு கிட்டே போய்... அவளைப் பார்த்து அசிங்கமாய்க் கண் சிமிட்ட...

''ச்சீ... நீங்க ரொம்ப மோசம் தெரியுமா?''

''எவ்வளவு? இவ்வளவு இருக்குமா?'' விஷ்வஜித் கைகளை விரித்துக் கேட்கவும்... அவள் சிணுங்கியவாறு அவன் மார்பில் குத்தவும்...

அவன் அவளை ஆசையோடு... ஆனந்தத்தோடு அணைத்தான்...!

அவளும் மறுப்பேதும் சொல்லாமல் அவன் மார்போடு ஒண்டிக் கொண்டாள்!

அங்கே ஆனந்தம் றெக்கை கட்டிக் கூத்தாடியது. இந்த ஆனந்தம் நிலைக்காது என்று தெரியாமல்!

19

அன்று ஞாயிற்றுக்கிழமை!

வேலைக்கு விடுப்பு என்பதால்... எல்லா மனிதர்களும் சோம்பி இருக்க... சூரியனிடம் கூட இந்தச் சோம்பேறித்தனம் ஒட்டிக்கொண்டதோ... என்னவோ... கிழக்கு வானில் இருந்து மேற்கு வானை நோக்கி மெல்ல மெல்லச் சுறுசுறுப்பற்று நடைபோட்டுக் கொண்டிருந்தான்!

காலை 10.00 மணி!

விஷ்வா ஜோஷிதாவிடம் வந்தான்! வெளியே அழைத்துப் போவதாய்க் கூறினான்!

''நிஜமாவா, விஷ்வா?''

''ம்!''

''எங்கே போறோம், விஷ்வா?''

''நீ கிளம்பு, சொல்றேன்!''

''சினிமாவுக்கா...?''

''ம்கூம்!''

''ஷாப்பிங்...?''

''ம்கூம்!''

''பார்க்...?''

''இல்லை, ஜோஷி!''

''யாராவது சொந்தக்காரங்க வீட்டுக்கா...?''

''அதெல்லாம் இல்லை!''

''பின்னே எங்கே?''

''உன்னால் கண்டுபிடிக்க முடியாது, ஜோஷி!''

''சரி. நீங்களே சொல்லுங்க.''

ஜோஷிதா சிணுங்கினாள்.

''எங்கே அழைத்துப் போகிறேன் என்பது சஸ்பென்ஸ்!''

''சரியான கல்லுளி மங்கனா இருக்கீங்களே!''

''போ... போய் ஜம்முன்னு ட்ரஸ் பண்ணிட்டு வா!''

''நான் என்ன உடை உடுத்தட்டும்? சுடிதார் அணிந்துக்கவா, விஷ்வா?''

"ம்கூம்!"

"சல்வார்?"

"அதெல்லாம் வேண்டாம்!"

"பின்னே எதை உடுத்திட்டு வரட்டும்?"

"சேலை உடுத்திட்டு வா, ஜோஷிம்மா!"

"சேலையா...?"

"அதான் உனக்கு ரொம்ப டாப்பா இருக்கு!"

விஷ்வஜித் ரசனையோடு சொல்லவும்.

"நீங்க இது நாள்வரை நான் சேலையில தான் பெட்டரா இருப்பேன்னு ஏன் சொல்லல, விஷ்வா?"

என்று ஜோஷிதா குறைப்பட்டுக் கொள்ள...

"நீ சேலை அணிந்து இருக்கும் போதெல்லாம்... என் விழிகள்... ஆசையாய்... மோகமாய்... உன் மேனி தீண்டுமே... நீ கவனித்ததில்லையா?"

"ம்கூம்..."

காதில் அணிந்திருந்த கல்வைத்த ஜிமிக்கிகள் ஆட... அவள் உதட்டைப் பிதுக்கினாள்.

"நீ சேலையில இருக்கும் போது... உன் அழகான இடுப்புப் பிரதேசம் ஆசையாய் இறுக்கிக் கொள்ளத் தூண்டும்! உன் அம்சமான முதுகுப் பிரதேசம் முத்தமிடத் தூண்டும்!"

விஷ்வஜித் கண்களில் ரசனையோடு சொல்லவும்....

"விஷ்வா... நிஜம் சொல்லுங்க. அப்போ சேலைகட்டி இருக்கற பெண்ணுங்களோட இடுப்பு, முதுகு, மார்பு பார்த்து ஜொள்ளுவிடறது தான் உங்க வேலையா?"

ஜோஷிதா சட்டெனச் சீற...

"ஆஹா... பெண்களுக்கே உரிய இயல்பான சந்தேகப் புத்தி உனக்கும் இருக்கா...? உன் என்று அழுத்தம் திருத்த மாய்ச் சொன்னேனே... அது உனது காதில் விழலையா, ஜோஷிம்மா!...

இதுவரை... இந்த விஷ்வா எந்தப் பெண்ணைக் கண்டும் சலனப்பட்டதில்லே... தெரியுமா?...

என்னைச் சலனப்படுத்திய தேவதை நீ... நீ மட்டும் தானடி, பெண்ணே!"

"பொய் சொல்லாதீங்க! பொய் சொல்றதுக்கும் ஒரு அளவிருக்கு, தெரியுமா...?"

"எதுக்குப் பொய் சொல்லணும்?...

நான் விரல் அசைச்சா என் படுக்கைக்கு வரத் தயாரா இருக்கற பெண்கள் ஏராளம், தெரியுமா?"

"ஐயோ... விரல் அசைக்க வேண்டியது தானே? ஏன் விரல் அசைக்கலே?"

ஜோஷிதா நக்கலாய்க் கேட்டாள்.

"யாரையுமே எனக்குப் பிடிக்கலையே! ஒருத்தி கூட என்னை வீழ்த்தி... சலனப்படுத்தி... சஞ்சலப்பட வைக்கலையே!"

"நான் மட்டும் அப்படி என்ன ஸ்பெஷல்?"

"எனக்குள் ஒரு உருவம் உலவி வந்தது! என்னுள் உலாவிய உன்னைக் கண்டதும்தான் என்னுள் சலனம்... சஞ்சலம்... எல்லாம் ஏற்பட்டது!

உன்னைக் கண்டவுடன்... நீதான் என் தேவதை என்று என் மனம் உன்னைச் சுட்டிக்காட்ட... அடுத்த நொடியே என்னுள் உன் மேலான காதல் மலர்ந்தது!"

அவன் சொற்கள் கேட்டு மயங்கினாள்.

''சரி. நீங்க கிளம்புங்க... நான் ட்ரஸ் சேஞ்ச் பண்ணிட்டு வரேன்!''

''இங்கேயே இருக்கேனே... என்ன தப்பு? உன்னைக் கட்டிக்கப் போறவன்தானே?''

''திருடா... திருடா... முழுசும் மூடி இருக்கும் போதே உங்க சில்மிஷம் தாங்கலே! முதல்ல வெளியே போங்கப்பா!''

ஜோஷிதா அவன் முதுகைப் பிடித்து வெளியே தள்ளி வர...

''பாவி... படுபாவி... இருடி.. கல்யாணம் முடியட்டும்! இதுக்கெல்லாம் வட்டியும் முதலுமா சேர்த்து வைத்து உன்னிடம் வசூலிச்சிக்கிறேன்!''

என்று கூறியவன் கவர்ச்சியாய் ஒரு புன்னகை சிந்தி... கண்ணடித்து விட்டுச் சென்றான்.

ஜோஷிதா அழகான இளம் ரோஸ் நிறப் புடவையை அணிந்து கொண்டாள். நீண்ட முடியைத் தளரத் தளரப் பின்னி... சேலையின் நிறத்தில் உள்ள ரோஜாவைக் காதோரம் செருகிக் கொண்டாள்.

வானத்துத் தேவதையாய் அவள் படியிறங்கி வர... விஷ்வஜித்தோ வைத்த விழி எடுக்காமல் நோக்கினான்... நோக்கிக் கொண்டு இருந்தான்...!

ஜோஷிதா சிவரஞ்சனி, ரவிவர்மாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினாள்.

அவள் காரருகே செல்ல...

''கார்ல போகல, ஜோஷி!''

''பின்னே?''

''ஹெலிகாப்டர்ல போறோம்!''

''நான் இதுவரை ஹெலிகாப்டர்ல எல்லாம் பயணம் செய்ததில்லையே, விஷ்வா! எனக்குப் பயமா இருக்கும்!''

''மச்சான் பக்கத்துல இருக்கும் போது என்ன பயம்? என்னைக் கெட்டியா இறுக்கி அணைச்சிக்கோ... உனக்குப் பயமே வராது!''

விஷ்வஜித் கள்ளச் சிரிப்பொன்றை உதிர்த்துச் சொல்ல... யாரும் அறியா வண்ணம் அவன் இடுப்பில் நறுக்கென்று கிள்ளினாள், ஜோஷிதா!

''ஏய்... ஏய்... திருட்டுக் கழுதை... என்ன சொல்லிட்டேன்னு இப்படிக் கிள்றே?''

''ரெட்டை அர்த்தம் வராப்பல விரசமா ஏதாவது பேசினால் இனி இது போல் தண்டனை கிடைக்கும்!''

''நானும் உன் அழகான இடுப்புப் பிரதேசத்தில் கிள்றேன்... இங்கே இல்லே... ஹெலிகாப்டர்ல வச்சி!''

''விஷ்வா... குறும்பு போதும்! ஆன்ட்டி அங்கிள் பார்க்கறாங்க இல்லையா...?''

''அவங்களும் நம் வயதைக் கடந்து வந்தவர்கள்தான்! அவர்களும் இந்தக் குறும்பையெல்லாம் செய்திருப்பார்கள்! அதனால் நம் குறும்பை ரசிக்கவே செய்வார்கள்! நீ பயப்படாதே, கண்ணம்மா!''

விஷ்வஜித் புன்னகையுடன் சொல்ல... அவளோ கண்களை உருட்டி முறைத்தாள்.

ஹெலிகாப்டர் தளம் வந்துவிட... விஷ்வஜித் ஏறி அமர்ந்தான்!

ஜோஷிதாவும் ஏறி அவனருகில் அமர்ந்தாள்.

ஓட்டுனர் ஹெலிகாப்டரை இயக்க, அது ஜிவ்வென்று கிளம்ப... "ஐயோ..." என்று தாவி விஷ்வஜித்தை அணைத்துக் கொண்டாள்!

பயமிகுதியில் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

அவன் அணைப்பும் இறுகியது!

கொஞ்ச நேரத்தில்... அவன் கைகள் அவள் மேனியில் சில்மிஷம் செய்ய...

சட்டென்று அவனிடமிருந்து திமிறினாள், ஜோஷிதா.

"விஷ்வா... இதுக்குத் தான் கார் வேண்டாம்ன்னுட்டு... ஹெலிகாப்டர்ல கூட்டிட்டுப் போறீங்களா?"

என்று அவள் கேட்க...

"அடி என் அழகியே... இந்த சில்மிஷத்தைக் காரில் வைத்து எனக்குச் செய்யத் தெரியாதா? காரில் போனால் ஒன்று, இரண்டு என்று தான் எஸ்டேட்டைச் சுற்றிக் காட்ட முடியும்! ஹெலிகாப்டரில் என்றால் எல்லா இடத்தையும் காட்ட முடியும்! சுற்றி, சுழன்று என்று நேரத்தை விரயமாக்காமல்... எல்லா இடத்துக்கும் உன்னை அழைத்துப் போகலாமே என்ற நல்ல எண்ணத்தில்தான் நாம் இப்போ ஹெலிகாப்டரில் பயணம் செய்வது! அது தெரியாமல் ஏதேதோ உளறுகிறீயே!"

விஷ்வஜித் நேசமுடன் கூறவும்...

அவளே ஒட்டி வந்து... சிறு புன்னகையுடன்... கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு அமர்ந்தாள்.

அங்கு நடப்பதை ஓரப்பார்வையால் பைலட் பார்த்து ரசித்துக் கொண்டு வேகத்தைக் கூட்டினார்.

அவன் தந்தை காலம் தொட்டு... அங்கே ஹெலி காப்டர் பைலட்டாய்ப் பணிபுரிபவர்!

வேகத்துடனும், அதே சமயம் நிதானத்துடனும் செயல்படுவார்!

இதுவரை விபத்தே ஏற்பட்டதில்லை!

அவரை நம்பிப் பயமின்றிப் பயணிக்கலாம்!

அடுத்ததாய் உண்மையான விசுவாசியும் கூட!

இயற்கை அன்னையின் மடியில் வீற்றிருந்த மலை முகடுகள் அத்தனையும்... பச்சைப்பட்டுடுத்தி... கம்பீரமாய்க் காட்சியளித்தன!

பெரிய ஆறுகளிலும்... சிறு சிறு ஓடைகளிலும் தண்ணீர் சலசலத்து ஓடியதைப் பார்க்க வெள்ளியை உருக்கி ஓடவிட்டது போல ரம்யமாய் இருந்தது!

கிடுகிடு பள்ளத்தாக்குகளைக் காண ஜோஷிதாவிற்குப் பயமாய் இருந்தது!

அப்போதெல்லாம் விஷ்வஜித்தின் மார்பிற்குள் அடைக்கலமானாள்!

அவனோ அவள் முதுகில் தட்டி, வருடிவிட்டு அவளின் பயத்தைப் போக்கினான்!

உயர உயரமாய்த் தேவதாரு, பைன், யூகலிப்டஸ் மரங்கள் வளர்ந்து... அத்தனையும் நேர்த்தியாய் நெஞ்சை நிமிர்த்தி நின்ற காட்சியைக் கண்கொட்டாமல் மகிழ்வுடன் பார்த்து வந்தாள்.

வீடு, மரங்களின் உச்சியில்... பனி சிம்மாசனமிட்டு அமர்ந்திருந்து... மெல்ல உருகிக் கொண்டிருந்த காட்சி... அவளை ஈர்த்தது!

அவனுடைய தேயிலை, காபி தோட்டங்களைக் கைகளால் சுட்டிக் காட்டிக் கொண்டு வந்தான்.

"ஜோஷிம்மா... இதையெல்லாம் இங்கிருந்தே பார்த்துக்கோ! இன்னொரு நாள் காரில் அழைத்து வந்து காட்டுகிறேன்!" என்று விஷ்வா கூற...

"சரிங்க, விஷ்வா!" என்றாள்.

அடுத்ததாய் ஆரஞ்சுத் தோட்டம்!

அங்கே அமைந்திருந்த ஹெலிகாப்டர் தளத்தில் ஹெலிகாப்டர் தரையிறங்கி நின்றது!.

ஜோஷிதா பிரமிப்போடு அவன் கைப்பற்றி இறங்கினாள்!

ஏக்கர் ஏக்கராய் விரிந்து பரந்திருந்தது, ஆரஞ்சுத் தோட்டம்!

அதில் ஆரஞ்சுப் பழங்கள் காய்த்துக் கனிந்து தொங்கிக் கொண்டிருந்தன.

"விஷ்வா... விஷ்வா... எத்தனை இனிமை! எத்தனை ரம்யம்! இந்தக் காட்சிகள் என் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுதே! அத்தான்... அத்தான்.... நான் இது போல இடத்துக்கெல்லாம் போனதில்லே! பார்த்ததில்லே!"

"ஏய்... நீ என்ன சொல்லி என்னை அழைத்தே?"

"அத்தான்னு!"

"முன்பெல்லாம் என்னை இப்படித்தான் அழைப்பாய்! இப்போ இப்படி அழைப்பதை மறந்துட்டு... விஷ்வா... விஷ்வான்னு பேர் சொல்லி அழைக்கிறே!"

"ஏன் பிடிக்கலையா?"

"ம். பிடிச்சிருக்கு!"

"அப்புறம்?"

"ஆனாலும் அந்த அத்தானில் எவ்வளவு மயக்கமும்... கிறக்கமும் கிடைக்குது தெரியுமா? அதை வார்த்தைகளில் வர்ணிக்கவே முடியாது!"

"சரி, உங்களுக்கு அப்படி அழைப்பது பிடித்திருந்தால் விஷ்வாவோடு அத்தானையும் சேர்த்து 'விஷ்வா அத்தான்னு கூப்பிடவா?"

"இது அத்தான்னு கூப்பிடுவதை விட பல மடங்கு போதையைக் கொடுக்குது!"

விஷ்வஜித் பூரிப்புடன் சொன்னான்!

ஒரு மரத்தின் தாழ்வான கிளையைச் சாய்த்து... இழுத்து... அதிலிருந்து ஆரஞ்சுப் பழத்தைப் பறித்து... தோல் உரித்துக் கொடுத்தான்!

"சாப்பிடு ஜோஷி!" என்று விஷ்வஜித் கூறினான்.

சிறு குழந்தையாய் வாங்கி... ஆசையுடன்... ஆர்வமுடன் உண்டாள், ஜோஷிதா!

"ஐயோ விஷ்வா அத்தான்... எத்தனை இனிப்பு! எத்தனை சுவை! எப்படி? எப்படி? நாம் கடையில் வாங்கிச் சுவைக்கும் போது இவ்வளவு சுவையாய் இருப்பதில்லையே!"

"உணவைச் செய்தவுடன் சாப்பிடுவதற்கும்... ஆறிய பின்பு சாப்பிடுவதற்கும் நிறைய வித்தியாசம் இருக்கில்லே!...

உணவு ஆறிப்போனால் ருசிப்பதில்லை! அது போல பழங்களைப் பறித்து மார்கெட்டுக்குக் கொண்டு போய்

விற்பனை செய்யும் போது... நாள் கூடிவிடுதல்லவா... அதனால் சுவையும் குறைந்து விடுகிறது!...

ஒரு ஆண்மகன் இளம் கன்னியைக் கட்டிக் கொண்டு வாழ்வதற்கும்... முதிர் கன்னியைக் கட்டிக் கொண்டு வாழ்வதற்கும் வித்தியாசம் இருக்கிறதல்லவா...? நாள் பட்டால் எதிலும் சுவை குறைவுதான்!''

அவன் சொல்லிவிட்டு மந்தகாசமாய்ப் புன்னகைத்தான்!

''ஐயோ... உங்க எக்ஸாம்பில் சகிக்கலே! உங்க திருவாயைக் கொஞ்சும் மூடுங்க சாமி!''

ஜோஷிதா அவன் வாயைப் பொத்தினாள்!

''உங்க தமிழ்நாட்டுப் பாஷையில், முறையில் எக்ஸாம்பில் சொன்னேன்!''

''எங்க தழிழ்நாட்டு முறையா...? என்ன அது?''

''அங்கே தான் நல்லவனா...? கெட்டவனா..? ஒழுக்க மானவனா...? பண்பாடு நிறைந்தவனா...? பாசமுள்ளவனா... பதவியில் உள்ளவனா...? சொத்து, சொந்தம் என்று உள்ளவனா...? என்று ஒரு ஆண்மகனின் குண நலன்களைப் பிரித்து, ஆராய்ந்து... பிறகு பெண்ணைக் கட்டிக் கொடுப்பீர்கள்! இதிலேயே ஒவ்வொரு பெண்ணிற்கும் திருமண வயது தள்ளிப் போய் விடும்!...

ஆனால், எங்க வட மாநிலங்களில் அப்படியில்லே! பெண்ணிற்குத் திருமண வயது வந்ததும்.... ஏன், அவள் வயதிற்கு வந்ததும்... எவனையாவது பார்த்துக் கட்டி வைத்து விடுவார்கள்!...

உங்களைப் போல ஆயிரத்தெட்டு வியாக்கியானம் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள் தெரியுமா?''

விஷ்வஜித் நீளமாய்ப் பேசி முடித்தான்!

''உங்களைப் பற்றிதான் தினம் பேப்பர்ல போடறானே! அறுபது வயது ஷேக்குக்குப் பதினைந்து பெண்ணை மணமுடித்து அனுப்புவீர்கள்! வசதியான பாகிஸ்தான்காரன் வந்து பெண் கேட்டால் இருபது வயதுப் பெண்ணை எண்பது வயதுக் கிழவனுக்குக் கொடுப்பீர்கள்!

சப்பை மூஞ்சியும்... குள்ளமாயும்ன்னு பசை உள்ள சீனாக்காரன் வந்து பெண் கேட்டால் உடனே கொடுத்து விடுவீர்கள்!

இப்படிக் கட்டிக் கொடுத்து விட்டுக் கலங்கிட்டு இருக்கற பெற்றோர்... விவாகரத்து கேட்டுப் படியேறும் அப்பாவி இளம் பெண்கள் என்று பேப்பர் முழுக்கச் செய்தி வந்து நாறுதே!''

ஜோஷிதா காரசாரமாய்ப் பேச...

''தாயே... உன்னிடம் பேசி மிச்சமெடுக்க முடியுமா...?... என் எக்ஸாம்பிலையும்... தமிழ் நாட்டு மக்களைக் குறை கூறியதையும் நான் வாபஸ் வாங்கிக்கிறேன்! போதுமா...?''

அவன் பயப்படுவது போலச் சொல்லவும்...

''ம்.... அந்தப் பயம் இருக்கணும்! இனி தமிழ்நாட்டையும்... தமிழ் மக்களையும் குறை சொல்வதைக் கனவில் கூட... கற்பனையில் கூட நினைத்துப் பார்க்கக் கூடாது! ஓ.கேவா?''

ஜோஷிதா தன் காந்தக் கண்களை உருட்டி மிரட்ட...

''சரிடி என் ராட்சசியே!''

என்று மரியாதையாய் முன்புறம் குனிந்து வணங்கினான்!

உன்னிடம் கேட்டது போலக் கேட்டாள்! மறுத்துட் டேன்!...

''இப்படிபட்ட என்னையே நீ மறுத்த போது எனக்கு எவ்வளவு கஷ்டமாய் இருந்தது. தெரியுமா?''

விஷ்வா முகம் வாடிச் சொல்லவும்...

''விஷ்வா அத்தான்... திருமணம் நிச்சயமான ஒருத்தி... எப்படி அடுத்தவன் காதலை ஏற்றுக் கொள்வாள்...? அது முறையா, விஷ்வா அத்தான்? அது சரியா, விஷ்வா அத்தான்?''

அவள் பணிவுடன் கேட்கவும்...

"அந்தப் பண்பாடு கூட எனக்கு உன்னிடம் ரொம்ப பிடித் துப் போய்...மேலும் மேலும் உன் மேலான நேசத்தை என்னுள் புதைத்துக் கொண்டேன், ஜோஷிம்மா!...

நான் நினைத்திருந்தால் அங்கேயே சீனுவாசன் சார், உன் பாட்டி, அஸ்வின் அனைவரிடமும் என் விருப் பத்தைக் கூறி உன்னை எனக்கு வலுக்கட்டாயமாய்க் கட்டி வைக்கச் சொல்லியிருப்பேன்! அவர்களும் கட்டி வைத்திருப்பார்கள்!''

விஷ்வஜித் உறுதியோடு கூற...

''எப்படி நீங்க அவ்வளவு உறுதியா சொல்றீங்க? என் சம்மதம் வேண்டாமா, அத்தான்?''

''உன் சம்மதம் இல்லாமலேயே... அவர்களின் ஒத் துழைப்போடு... உன்னைத் தூக்கிப் போய் என்னால் பலவந்தமாகத் தாலி கட்ட முடிந்திருக்கும், தெரியுமா தேவதையே?''

'தேவதை' என்று அவன் அழைத்ததில் ஒரு நொடி நெகிழ்ந்தாலும்... அடுத்த நொடியே அவனின் சொற் களால் கடினமானவள், சொன்னாள்!

''தாலி மட்டும்தான் கட்டியிருக்க முடியும்! அப்புறம் தாலி என்ற வேலியைப் பயன்படுத்தி என்னிடம் எந்த உரிமையையும் எடுத்துக் கொள்ள... என் உயிர் உள்ள வரை விட்டிருக்க மாட்டேன்! தெரியுமா, அத்தான்?''

''சரி. நீ பண்பாட்டின், ஒழுக்கத்தின் நல்திலகம் தான்! ஒத்துக்கறேன் தாயே... நீ ஒரு அக்மார்க் முத்திரை குத்தின கண்ணகி பரம்பரை என்று!''

விஷ்வஜித் சொல்லிவிட்டுச் சிரிக்க...

''என்ன கிண்டலா...?''

ஜோஷிதா கூறிவிட்டு முறைக்க...

''நிஜமாகவே உன் கற்பின் தன்மையைக் கண்டு வியக்கிறேன் தாயே! இத்தனை நாளும் நான் எவ்வளவு மயக்கியும் மசியாமல் இன்னும் கற்போடு இருக்கீயே...' வேறு ஒருத்தியா இருந்தால் இத்தனை பணக்காரன் எங்கே களவு போய் விடுவானோ என்று தளுக்கி... மினுக்கி... என்னோடு படுத்து என்று... வரம்பு மீறி... என்னை முந்தானையில் முடிந்து வைத்திருப்பார்கள்!''

''என்ன பேச்சிது... கருமம்!''

ஜோஷிதா காதைப் பொத்தினாள்!

''ஆனால் இதையெல்லாம் எதுவுமே செய்யாமல் என்னை மயக்கி, மடியில் கட்டிக் கொண்ட அழகான கள்ளிடி நீ, ஜோஷிதா!''

''அந்த ஈஸ்வர் மட்டும் என் வாழ்வில் வராமல் இருந் திருந்தால் உங்களின் காதலை ஏற்றிருப்பேன்! நமக்குத் திருமணமும் நடந்திருக்கும்!''

''பிறகு உன் வயிற்றில் சின்னக் குட்டிப் பாப்பாவோ... தம்பியோ உருண்டு புரண்டு கொண்டிருப்பார்கள்!

இந்நேரம் பிரசவத்திற்காக ஆஸ்பிடலில் சேர்த்து... ஐ.சி.யூ. வார்டு வெளியில் நான் கையைப் பிசைந்து கொண்டு இருந்திருப்பேனாக்கும்!''

''சரியான கிண்டல் பேர்வழியா இருக்கீங்களே!''

விஷ்வஜித்தின் தாடையில் இடித்தாள், ஜோஷிதா! நினைத்துக் கொண்டாற் போல விஷ்வா கேட்டான்!

''ஈஸ்வர் உன் வாழ்வில் வரலேன்னால் என்னைக் காதலித்து இருப்பாய்! மறுத்திருக்க மாட்டாய்!''

''ம்!''

''இந்த ஒரு சொல் போதுமடி, என் தங்கப் பெண்ணே! என் உயிருக்குயிரான காதலுக்குக் கிடைத்த அங்கீகார மாய் எடுத்துக் கொள்கிறேன்!''

''என் மேல் இத்தனை பிரியமா? என் மேல் இவ்வளவு நேசமா வைத்திருப்பீர்கள்?''

''என் உடலும்.... உயிரும்... ஏன், சுவாசமே நீதானடி, கண்ணே!''

அவன் சொற்களில் நெகிழ்ந்து போனாள்!

அவனிடம் நெருங்கி அணைத்துக் கொண்டாள்! கன்னம், நெற்றி, உதடு என்று கண்ட இடங்களில் முத்தமிட்டாள்!

கொஞ்ச நேரத்தில் அவனிடமிருந்து பிரிந்து சென்று தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டாள்!

''விஷ்வா... உங்க மருத்துவக் கல்லூரிக்கு எப்போ என்னைக் கூட்டிட்டுப் போவீங்க?''

''விரைவில்!''

''திறப்பு விழா எப்போது, விஷ்வா அத்தான்?''

''நம் திருமணம் முடிந்து?''

''ஓ... சரி! அத்தான்.... நான் சொன்னதா சொன்னீங்களே ஒரு திட்டம்... மாநிலத்துக்கு ஒரு மருத்துவமனை... அதுவும் தரத்துடன் கூடிய இலவச மருத்துவமனை... தனியாருக்கு இணையாய்த் தொழில் நுட்பம், சுத்தம், சுகாதாரம், மருத்துவ சேவை என்று எப்போ செய்யப் போகிறீர்கள்? ம்...?''

ஜோஷிதா கேட்கவும்...

''இந்த வருடம் மாணவர் சேர்க்கை நடைபெற்றாலும்... அவர்கள் மருத்துவம் பயின்று முடிக்க ஆறு வருடங்கள் ஆகுமல்லவா, ஜோஷிம்மா! அதனால், உன்னைக் கைத்தலம் பற்றிய மறுமாதமே மாநிலத் தலைநகர்களில் இடம் வாங்கிப் போட்டு.... பிறகு அங்கே அடிக்கல் நாட்டிக் கட்டடம் கட்ட ஆரம்பித்து விடலாம்! போதுமா?''

ஜோஷிதா கேட்கவும்...

''இப்படி ஒரு நல்லவர் கிடைக்க... நான் அதற்கு அருகதையானவளா, விஷ்வா அத்தான்? விஷ்வா அத்தான்... ஐ லவ் யூடா! உங்களை என் உயிரினும் மேலாய் விரும்புகிறேன்டா!''

ஜோஷிதா சொல்லிவிட்டுக் கண்கள் கலங்கினாள்.

அவனின் அழகான, கம்பீரமான முகத்தை நீண்ட நேரம் விழிகள் விரிய நோக்கினாள்!

அவன் மேல் பதித்த பார்வையை எடுத்து... உயரமாய் வளர்ந்திருந்த விஷ்வஜித்தின் கழுத்தில் கைகளை மாலையாய்ப் போட்டு... இழுத்து... எம்பி... அவன் உதடுகளில் தன் உதடுகளை அழுத்தமாய்ப் பதித்து முத்தமிட்டாள்!

அவன் கிறங்கி... மயங்கி... அந்த முத்தத்தின் தித்திப்பில் சொக்கித்தான் போனான், மகிழ்வுடன்!

இந்த மகிழ்ச்சி நெடுநாட்களுக்கு நிலைக்காது எனத் தெரியாமல்!

20

'கனவு பூமி!'

அதுதான் அந்தப் பிரமாண்டமான இடத்திற்குப் பெயர்! பெரிதாய் விழாக்கோலம் பூண்டிருந்தது!

விஷ்வஜித் கோட் சூட்டில் மன்மதனாய்ப் பரபரப் போடு அலைந்து கொண்டிருந்தான்.

ஜோஷிதா எளிய காஞ்சிபுரம் பட்டுச் சேலையணிந்திருந் தாள். சிறு சிறு வைர நகைகள் கழுத்து... காது... கைகளில் மின்ன... வானத்துத் தேவதையாய்க் காட்சி அளித்தாள்!

ரவிவர்மா, சிவரஞ்சனி, அஸ்வினி, தாரிகா, சீனு வாசன், சுமத்திரா மற்றும் விஷ்வஜித்தின் உறவினர்கள்... அவன் தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்கள்... அரசியல்வாதிகள்... தெரிந்தவர்கள் என்று பெரிய கூட் டமே அங்கே கூடிவிட்டது!

பெரிய மேடையில் மினிஸ்டர், எம்.எல்.ஏ., தொழிலதி பர்கள் என்று வீற்றிருந்தனர்!

இமாச்சலப் பிரதேசத்தின் முதலமைச்சருக்கு வேறு அவசர வேலையிருந்ததால் வரமுடியாமைக்கு போனில் விஷ்வஜித்திடம் வருத்தம் தெரிவித்துக் கொண்டார்!

எல்லோரும் அவனையும், அவன் தொழிலைப் பற்றியும், கனவு பூமியைப் பற்றியும் பேசினர்.

அழைப்பிதழில் வெறுமனே 'கனவு பூமி' திறப்பு! அனைவரும் வருக!' என்றுதான் அச்சிட்டு இருந்தான், விஷ்வஜித்!

யார் திறந்து வைக்கப் போகிறார்கள் என்று கூறவில்லை! பெரிய அமைச்சர் கையில் கத்தரியைக் கொடுப்பான் என்று அத்தனை பேரும் எதிர்பார்த்துக் காத்திருந்தனர்!

கடைசியாய் ஓரமாய் உட்கார்ந்திருந்த அவனுடைய மதிப்புக்குரிய ஆரம்பப் பள்ளி ஆசிரியர் தனசேகரன் கையில் கத்தரிகோலைக் கொடுத்தான், விஷ்வஜித்!

அங்கிருந்த கூட்டம் அத்தனையும் ஆர்வமுடன் வாய் பிளந்து வேடிக்கை பார்த்தது!

பெரிய பெரிய அமைச்சர்களுக்கெல்லாம் ஏமாற்றத் தில் முகம் சுண்டிப் போனது!

அவர் ரிப்பனை வெட்டி 'கனவு பூமி' யைத் திறந்து வைத்தார்.

அங்கிருந்த கூட்டம் கைதட்டி ஆர்ப்பரித்தது!

அவனுக்கு ஆரம்பக் கல்வியைப் பயிற்றுவித்த... அந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியரின் முகத்தில் தான் எத்தனை சந்தோசம்! மகிழ்ச்சி!

விஷ்வஜித்தின் நன்றி மறவாமையை நினைத்து அனைவரும் பெருமைப்பட்டனர்!

அங்கு வந்திருந்த அத்தனை பேருக்கும்... அருமை யான உணவளித்தான்!

கூட்டம் ஒவ்வொரு இடமாய்ச் சுற்றிப் பார்த்துப் போ னந்தப்பட்டது!

ஒரு இளைஞனால் இந்த அளவு செய்ய முடியுமா...? இந்த அளவு உயரமுடியுமா...? என்று ஆச்சரியத்தில், கன்னத்தில் கை வைத்துக் கொண்டனர்.

அங்கே...

செயற்கையாய் வடிவமைக்கப்பட்டது போல இல்லாமல் இயற்கையாய் அமைந்தது போல பெரிய நீர்வீழ்ச்சி!

சிறு சிறு சிற்றோடைகள்...!

பெரிய பரந்த ஏரி...! அதில் போட் சவாரி செய்ய போட்கள் மிதந்து கொண்டிருந்தன!

சிறுவர் விளையாட்டுப் பூங்காக்கள்...!

காதலர்கள் களிப்புறுவதற்கென்றே தனியே சொர்க்கபுரி!

பெரிய பெரிய ராட்டினங்கள்...!

நிறைய ஹோட்டல்கள்...!

பெரிய அடுக்கு மாடிகளைக் கொண்ட ரிசார்ட்டுகள்!

இவ்வளவும் அடங்கிய பெரிய சுற்றுலாத்தலமாய்க் காணப்பட்டது. கனவு பூமி...!

விழா முடிந்து அங்கேயே ரிசார்ட்டில் தங்கி விட்டனர்!

இரவு உணவு முடிந்து எல்லோரும் படுக்கப் போய்விட்டனர், அவரவர் அறைக்கு!

ஜோஷிதாவிற்கு உறக்கமே வரவில்லை!

எழுந்து வெளியே வந்தாள்!

ரிசார்ட்டின் முன்புறம் இருந்த அழகிய புல்வெளி மைதானத்தில் போடப்பட்டிருந்த சிறு பெஞ்சில் அமர்ந்தாள்!

அவள் நினைவுகள் விஷ்வாவிடம் போய்விட்டன!

விஷ்வாவின் அளவுக்கதிகமான திறமை, உழைப்பை எண்ணி வியந்தாள்!

ஊர்மெச்சும் விஷ்வாவின் மனைவியாகப் போகிறோம் என்று நினைக்கும் போது பெருமை பிடிபடவில்லை!

சிறுவயது முதற்கொண்டு அநாதையாய்... பாட்டியின் பராமரிப்பில் வளர்ந்தவள், ஜோஷிதா!

ஏழ்மையில் வாழ்ந்த அவள் மேல் கருணை கொண்டுதான் கடவுள் அவளுக்கு இப்படி ஒரு சொர்க்கமான வாழ்க்கையைப் பிச்சையாய்ப் போட்டிருக்கிறார்!

குடிசையில் மனம் வெதும்பி... மிடில் கிளாஸ் மக்கள் அனுபவிக்கும் வசதி வாய்ப்புகள் கூட அனுபவிக்காத அவளுக்கு... தங்கத்தாலான பாதை அவளை இரு கை நீட்டி வரவேற்பது எண்ணி வியந்து போனாள்!

குடிசையில் வாழ்ந்த அவளுக்கு... ராஜ பரம்பரையில் வந்த விஷ்வஜித் காதலன் எனும்போது அவளுக்கே இந்தச் செய்தியை அடிக்கடி நம்ப மறுத்தது, அவளுடைய மனது!

மிதமான பனிக்காற்று அவளைத் தட்டித் தாலாட்ட... கண்மூடி அனுபவித்துக் கொண்டிருந்த போது....

''ஜோஷிம்மா...!''

என்ற விஷ்வஜித்தின் குரல்... மயிலிறகாய் அவள் இதயத்தை வருடி எழுப்பியது!

இமை மலர்ந்தாள்!

விஷ்வஜித் அவளருகில் வந்து அமர்ந்தான்!

''என்னம்மா... தூக்கம் வரவில்லையா...?''

''ம்!''

''என்னடா ஏதோ கடும் யோசனையில் இருப்பது போல தெரியுது!''

''ஆமா!''

''யாரைப் பற்றிய யோசனை?''

விஷ்வஜித் ஆச்சரியத்துடன் கேட்டான்!

''உங்களைப் பற்றிய யோசனை தான்!''

''என்னன்னு?''

''இந்த வயதில் இவ்வளவு உங்களால் சாதிக்க முடியுமா என்று!''

''என் பாட்டன் முப்பாட்டன்கள் பெரிய பெரிய நிலப்பரப்பையே ஆண்டவர்கள்!''

''.....''

''பெரிய பெரிய மன்னர்களுக்கு உதவி புரிந்தவர்கள்! சில சிற்றரசர்களோடு போரிட்டு... மக்களைக் காத்து... நல்லது செய்து என்று வாழ்ந்த... வீரமுகி பரம்பரையில் வந்தவன், நான்!''

''அதெல்லாம் தெரியும், விஷ்வா!''

''அப்படிப்பட்ட நான் சாதிப்பதில் என்ன ஆச்சரியம்? அவர்களின் வீரமிக்க மரபு எனக்குக் கிடைத்திருக்கிறது!''

''என்னதான் வீரமிக்க பரம்பரையில் வந்தாலும்... எத்தனை பேரால் இந்த அளவு... ஊர் மெச்சும் அளவு சாதிக்க முடிகிறது, விஷ்வா அத்தான்?''

''சரி.... உன் கணிப்புப்படி நான் பெரும் திறமைசாலி தான்! அப்படியே வைத்துக் கொள்வோம்!''

''கடுமையான உழைப்பாளியும் கூட!''

''சரி. அதற்கு என்னடா?''

''உங்களை எண்ணி எண்ணி வியக்கிறேன், விஷ்வா!''

''ஆனால், நீ இல்லையெனும் போது என் திறமை கூட மங்கி, ஒளியிழந்து போனது நிஜம், ஜோதிம்மா!''

விஷ்வஜித் வருத்தமுடன் கூற...

''ஸாரி, விஷ்வா அத்தான்!''

அவனின் கையை அன்புடன் பிடித்துக் கொண்டாள், ஜோஷிதா!

''மீண்டும் நீ எனக்குக் கிடைக்க... என் வாழ்வில் வசந்தம்...! வெளிச்சம்...! மாற்றம்...! வேலையில் சுறுசுறுப்பு...!''

அவள் பிரமிப்போடு நோக்க...

''என் திறமையில் மெருகு கூடியது! என் உழைப்பும் கணிசமாய் உயர்ந்தது! எல்லா வேலைகளும் மளமள

வென முடிந்து திறப்பு விழாவும் இனிதே கொண்டாடி யாகி விட்டது!''

விஷ்வஜித் கூறி முடித்தான்!

''நான் ஒன்று சொன்னால் கோபிப்பீர்களா, அத்தான்?''

''கோபிக்க மாட்டேன்! சொல், கண்மணி.''

''இல்லாதோருக்கும்... ஏழைகளுக்கும் எவ்வளவோ செய்கிறீர்கள்?''

''ஆமாம்...! அதுக்கென்ன...?''

''இருக்கப்பட்டவர்களாலும், பணக்காரர்களாலும் கனவு பூமிக்குச் சுற்றுலா வர முடியும்!''

''யெஸ்!''

''ஏழைகளால் இங்கே வர முடியுமா...?... இங்கே கட்டணம் கட்டி உள்ளே நுழைய முடியுமா...? இந்தச் சுற்றுலா தளத்தில் காட்டேஜ் தான் எடுத்துத் தங்க வசதிப்படுமா?''

''முடியாதுதான்!''

''அப்போ கனவு பூமியைக் காணும் பாக்கியம் பெற்றவர்கள்... பணக்காரர்கள் மட்டும்தானா?''

அவன் புரியாமல் பார்த்துக் கொண்டிருக்க...

''இங்கே ஏழைகளுக்கென்று ஏதாவது பாதிக் கட்டணம் போலச் சலுகை செய்யலாமே!''

''.....''

''உடல் ஊனமுற்றோருக்குக் கட்டணம் ஏதுமின்றி உள்ளே நுழையவும், தங்கவும் சலுகை செய்யலாமே!''

''.....''

''அரசுப் பள்ளி மாணவர்களுக்கு இலவச நுழைவுச் சலுகை வழங்கலாம், விஷ்வா அத்தான்!''

அவள் பேசப் பேச ஆச்சரியமாகி...

''ம்... அப்புறம்?''

''அவர்கள் தங்குமிடம், உணவு இலவசாய் உங்களால் கொடுக்க முடியும்! ஏழை மாணவர்களும் இது போல சுற்றுலா தளத்திற்கு வந்து பார்த்து மனநிறைவோடு உங்களை வாழ்த்தி விட்டுப் போவார்கள்!''

''எல்லாம் சரிதான்! ஆனால் உன் ஐடியாவால் எனக்கு நிறைய வருமான இழப்பு ஏற்படலாம்!''

''இது கூடப் பெரிய சேவைதான், விஷ்வா!''

''.....''

''ப்ளீஷ் விஷ்வா! நான் கூட அரசுப் பள்ளியில் படித்தவள் தான்! சுற்றுலா செல்வதற்குக் கூட எங்களால் பணம் திரட்ட முடியும்! ஆனால், அங்கே தங்கவும், நுழையவும்தான் எங்களால் செலவு செய்ய முடியாது! தெரியுமா, அத்தான்? இதுவே மெட்ரிக் பள்ளி மாணவ, மாணவிகள் சர்வ சாதாரணமாய் டூர் செல்வார்கள்! ஏன்னா அவர்கள் அத்தனை பேரும் நிரம்பப் பணக்காரர்கள்! அவர்களால் எளிதாய் இது போன்ற சுற்றுலா தளத்தில் நுழைவுக் கட்டணம் செலுத்தி நுழைய முடியும்! தெரியும் தானே, விஷ்வா?''

அவள் முடித்து விட்டு அவன் முகத்தை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தாள்!

விஷ்வஜித் கொஞ்ச நேர அமைதிக்குப் பின்...

அவளின் பூ முகத்தை இரு கைகளாலும் தாங்கினான்! நிறைய மகிழ்ச்சியை அவன் முகத்தில் காட்டிச் சொன்னான்!

''ரியலி... ரியலி... உன்னுடைய ஐடியா... கோரிக்கைகள் எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு, கண்ணம்மா!''

''விஷ்வா.... அப்போ நான் சொன்னதெல்லாம் செய்வீர்களா...?''

''கண்டிப்பா செய்யலாம்டா! நாளையே பேப்பரில் பிரம்மாண்டமாய் இந்தச் செய்தியை விளம்பரப் படுத்திடலாம்!''

''நிஜம்தானா, அத்தான்?''

''ஏன் என் வார்த்தைகளில் நம்பிக்கை வரவில்லையா, ஜோஷி?''

''கனவில்லையே... நான் சொன்னதெல்லாம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?''

என்றவள் தன்னையே கிள்ள... அது வலிக்கவும்...

''ஆமா, விஷ்வா! இது நிஜம் தான்! இது கனவில்லை! எனக்கு வலிக்குது!''

''உன் கோரிக்கையை மறுக்காமல் நிறைவேற்றப் போற எனக்கு எதுவும் பரிசில்லையா...?''

''பரிசா...? என்னிடம் இப்போ எதுவும் இல்லையே!''

''எனக்குப் பிடிச்ச பரிசை...'' அவன் நிறுத்திவிட்டு அவளை நோக்க...

''பரிசை...?''

''உன் பட்டு இதழ்களுக்குள் ஏகப்பட்டதை நிறைய ஒளித்து வைத்திருக்கிறாயே! ஏய் மண்டு... சண்டாளி! எதுவும் புரியாதது போல நடிக்க வேறு செய்கிறாயா...? நான் பட்டு இதழ்களுக்குள் ஒளித்து வைத்திருக்கும் பரிசு என்றது 'முத்தங்களைத்தான்' சொன்னேன்!''

என்று அவள் இதழ்களைப் போதையுடன் நோக்கி முணுமுணுக்க...

''படவா... எப்போ பார் முத்தம், அணைப்புன்னு இதே நினைப்புத் தானா?''

ஜோஷிதா பொய்யான கோபம் காட்டி... அவன் சட்டையைக் கொத்தாய்ப் பற்ற...

விஷ்வஜித் சட்டென்று குனிந்தான்!

அவள் எதிர்பாராத போது அவள் இதழ்களில் இதழ் பதித்தான்!

''ஏய் நாட்டி...'' என்று அவள் கூவ... அவளிடமிருந்து விலகி அவன் ஓட...

ஜோஷிதா அவனைத் துரத்திக் கொண்டு சிரிப்புடன் ஓட...

இருவரின் சந்தோசத்தைக் கண்டு மேலேயிருந்த விதி... தன் கோரப் பற்களைக் காட்டிச் சிரித்தது!

உன்னைக் கண்டதே வரமல்லவா...!

21

கல்யாண மண்டபம்

அதிகாலையிலேயே பரபரப்பை உடலில் சூடிக் கொண்டது!

அத்தனை பெண்களும் குளித்து, பட்டுடுத்தி, நகைகளை அள்ளிப் போட்டுக் கொண்டு அங்கும் இங்கும் திரிந்தனர், நகைக்கடை விளம்பரப் பொம்மைகளைப் போல!

ஆண்கள் அத்தனை பேரும் கோட்டும், சூட்டும் அணிந்திருந்தனர்!

அந்த நேரத்தைக்கூட வீணாக்காமல் வியாபாரம் பேசினர்! வாய்மொழியாகவே ஒப்பந்தமும் செய்து கொண்டனர்!

நண்பர்களின் கிண்டல், கேலிகளோடு பட்டு வேட்டி, பட்டுச் சட்டை அணிந்து ராஜகம்பீரத்தோடு மணவறைக்கு ரெடியாகிவிட்டான், விஷ்வஜித்!

ஜோஷிதா... பியூட்டி பார்லர் பெண்மணியின் அலங்காரத்தால் தேவதையாய் ஜொலித்தாள்!

ஆனால், அந்த அழகிய முகத்தில் கொஞ்சம் சோகமும் இழையோடிக் கொண்டிருந்தது!

பெற்றவர்கள் இல்லை.

தன்னைச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த பாட்டி இந்தக் கோலத்தைக் காண இல்லை... என்ற எண்ணமே மனத்திரையில் ஓட... அவளால் சந்தோசமாக இருக்க முடியவில்லை!

ஒவ்வொரு சடங்கிற்கும் உறவுகள் புடைசூழ விஷ்வஜித் கலகலப்பாய் இருப்பான்!

தனக்கு உறவென்று சீனுவாசன், சுமத்திரா, தாரிகா, அஸ்வினைத் தவிர யாருமே இல்லையே என்று எண்ணி எண்ணி மனம் கலங்கினாள்!

பல சமயங்களில் கண்கள் நீரைச் சொட்டின! சில சமயம் கண்களைப் படபடவெனக் கொட்டி... உணர்ச்சியை அடக்கி... கண்ணீரைக் கட்டுப்படுத்துவாள்!

அவளைக் கூர்ந்து நோக்கும் விஷ்வஜித், ''என்னடா ஜோஷி...? ஏன்டாம்மா...?''

என்று அடிக்கடி உருகலோடு கேட்பான்!

அவனை வாட விடப்பிடிக்காமல் சோகத்தை மெல்ல விரட்டக் கடும்முயற்சி எடுத்துக் கொண்டிருந்தாள்!

ஏகப்பட்ட சடங்குகளுக்குப் பிறகு விஷ்வஜித் அவள் கழுத்தில் தாலியைக் கட்டினான்!

அவளின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் மலர்ந்து மின்னியது!

இரவு...

முதலிரவு அறை!

விஷ்வஜித் ஜோஷிதாவின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தான்!

நீண்ட நேரம் காக்க வைத்த ஜோஷிதா எளிமையான பட்டுடுத்தி... சிறு சிறு நகைகள் அணிந்து... எளிய அலங்காரத்தில் நிலவாய் ஜொலித்தபடி வந்து நின்றாள்!

பால் சொம்பை ஸ்டூல் மீது வைத்தாள்!

அடுத்த நொடி அவனே எதிர்பார்க்கவில்லை. சட்டென்று அவன் கால்களில் விழுந்து விட...

"ஏய்... ஏய்.... என்ன இது, முட்டாள் பெண்ணைப் போல?"

என்று கூறியவன் அவளைத் தூக்கி அணைத்துக் கொண்டான்!

அணைப்பை விடுத்து... அப்படியே பூப்போல தூக்கிக் கட்டிலில் அமர வைத்தான்!

அவனும் அவள் எதிரில் அமர்ந்தான்!

அவள் விழிகளையே ஊடுருவினான்!

"என்ன?" என்று கேட்காமல்... தலையை ஆட்டிப் புருவத்தை உயர்த்தி அவள் ஜாடையாய்க் கேட்க...

"எத்தனை முறை எவ்வளவு நேரங்கள் எனப் பார்த்தாலும் உன் முகம் சலிப்பதேயில்லை!"

விஷ்வஜித் ரசனையுடன் சொல்ல...

"ம்க்கும்...! இப்போ இப்படித்தான் சொல்வீங்க! பிறகு மோகம் முப்பது நாள்... ஆசை அறுபது நாள்ன்னு கண்டுக்கவே மாட்டீங்க, தனது பொண்டாட்டியை!"

"ஜோஷிம்மா... நான் ஒரு உண்மையைச் சொல்லட்டுமா?"

விஷ்வஜித் மிருதுவாய்க் கேட்க...

"என்ன அத்தான்?"

"நீ இல்லேன்னால் இந்த திருமணம், முதலிரவு என்ற எந்த சடங்குமே என் வாழ்வில் நடந்திருக்காது! தெரியுமாடா, என் செல்லம்மா!"

"விஷ்வா... பொய் பிடிக்கவும் ஒரு அளவிருக்குது தெரியுமா...?

என்னை எத்தனை நாட்கள் நினைச்சிட்டு இருப்பீங்க?....

என்னை விட பெட்டரா ஒருத்தி வந்திருந்தால்... அவள் மேல் ஆசை கொண்டு மணந்து மகிழ்ச்சியாய் வாழுவீங்க!"

அவள் சாதாரணமாய்ச் சொல்ல... அவனுக்கு லேசாய்க் கோபம் எட்டிப் பார்த்தது!

"அது மட்டும் நடக்காது! பிரம்மசாரியாத்தான் வாழுவேன்!"

"எப்படி முடியும்?"

"என்னால் முடியும், ஜோஷி!"

"மனது கூடச் சொன்னபடி கேட்கும்! ஆனால் உங்க உடம்பு, வாலிப வயது கேட்குமா...? கட்டுப்படுமா...?"

"கட்டுப்படும்!"

"பெண் சுகத்துக்காக ஏங்காதா?"

"என்ன பெரிய பெண்சுகம்? ம்? உடம்பு எப்படிக் கேட்காமல் போய்விடும்? மனதுக்குப் பிடித்தவள் கிடைக்காமல் போனால்... பிறகு வாழ்க்கையே இல்லையெனும் போது..."

விஷ்வஜித் அழகாய் இதழ் சுழித்துச் சொல்ல...

"விஷ்வா... விஷ்வா அத்தான்... உங்களை எனது கணவராக அடைய என்ன தவம் செய்தேனோ? ரியலி ஐ ஆம் லக்கி கேர்ள்!"

என்று சொல்லிவிட்டு ஆனந்தக் கண்ணீர் விடவும்...

அவளின் அழகுப் பூவிதழ்களில் முத்தமிட்டு அணைத்துக் கொண்டான்!

அவர்களின் இன்பமான சங்கமம்... இனிமையாய் நடந்தது!

விஷ்வஜித்தும், ஜோஷிதாவும் சுற்றத்தினர், சொந்தக் காரர்கள் என்று தேர்ந்தெடுத்து அவர்கள் வீட்டுக்கு மட்டும் விருந்துக்குச் சென்றார்கள்.

''மூக்கும் முழியும் வெகு லட்சணம்!''

''விஷ்வஜித்துக்கு நல்ல அதிர்ஷ்டம்! பெண் குணத்திலே தங்கமாய் இருக்கிறாள்!''

''தேவதையொத்த அழகு!''

''இவனுடைய அப்பா ரவிவர்மா போல... இவனும் தமிழ்நாட்டுப் பெண்ணை மணந்து இருக்கிறான்! தந்தைக்கும் மகனுக்கும் எவ்வளவு ஒற்றுமை!''

என்று அனைவரும் பேசினர்.

ஜோஷிதாவின் நீண்ட முடியைக் கண்டு அனைவரும் வியந்து போனார்கள்!

ஒரு படி மேலே சிவரஞ்சனிக்கு மகன் விஷ்வஜித்தை விட சந்தோசம் மனதில் துள்ளியது! தன்னைப் போலவே தனது மருமகளும் தமிழ்நாட்டுப் பெண் என்ற பெருமை அவருக்கு ஏக சந்தோசத்தைக் கொடுத்தது!

பிறகு...

ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரம்... அமெரிக்காவின் நியூயார்க் நகரம்... இங்கிலாந்தில் லண்டன் நகரம்... ஜப்பானின் தலைநகரம் டோக்கியோ... தாய்லாந்தின் தலைநகரம் பாங்காங் என்று ஒரு நாடுவிடாமல் தேனிலவு என்ற பெயரில் சுற்றினர்!

விஷ்வஜித் உல்லாசத்தோடு... சில முக்கிய நகரங்களில் தனது வர்த்தகத்தையும் முடித்துக் கொண்டான்!

சிம்லா திரும்பினர்!

இருவருக்கும் வாழ்க்கை வசந்தமாய்ப் போனது!

அவன் வருவதற்குக் கொஞ்ச நேரம் தாமதமானாலும் தவித்து விடுவாள், ஜோஷிதா!

உள்ளுக்கும் வெளியேயும் நூறு தடவைகள் நடப்பாள்!

விஷ்வஜித் லேட்டாய் வந்தால் ஊடல் கொள்வாள்!

அவன் அவளின் ஊடலைத் தீர்க்க முதலில் கெஞ்சுவான்!

பின்னர் கொஞ்சி நிற்பான்!

அவள் அவனுடைய கொஞ்சலுக்கு மயங்கிப் பின், ஊடல் தீர்ந்த கூடல் தேனாய்த் தித்திக்கும்!

மூன்றாம் மாதம்...

ஒருநாள் ஜோஷிதா காலை முதல் தள்ளாட்டத்துடன் இருந்தாள்!

முதல் நாள் இரவு உண்ணவில்லை! அதனால் இந்த மயக்கமும், தள்ளாட்டமும் இருக்கும் என்று நினைத்தவள் மாமியாரிடமோ... கணவரிடமோ சொல்லவில்லை!

நண்பகல் உணவிற்குப் பின்... மாடி ஏறப் போனவள்... சமதரையில்... மயங்கிக் கீழே பொத்தென விழுந்தாள்.

ஷோபாவில் அமர்ந்திருந்த ரவிவர்மாவும், சிவரஞ்சனியும் பதறிவிட்டனர்.

''ஜோஷிதா... ஜோஷிம்மா...'' என வேகமாய் ஓடிப் போய் சிவரஞ்சனி அவளைத் தூக்கினார்.

ரவிவர்மா தண்ணீரோடு வந்து விட்டார்.

அவள் முகத்தில் தண்ணீர் தெளித்தனர்.

கொஞ்ச நேரத்தில் அவள் கண் மலர்ந்தாள்.

''ஜோஷி... என்னம்மா செய்யுது?''

''மயக்கமா இருக்கு ஆன்ட்டி! கண்ணெல்லாம் இருட்டிட்டு வருது. ஆன்ட்டி!'' என்று மெல்லக் கூறினாள்.

''என்னங்க... உடனே நம்ம குடும்ப டாக்டரை வரச் சொல்லி போன் செய்யுங்க!''

கணவரைப் பார்த்துக் கூற...

''வேண்டாம், ஆன்ட்டி!''

''நீ சும்மாயிரு, ஜோஷிம்மா! மசமசன்னு நிற்காமல் சீக்கிரம் போய் டாக்டருக்கு போன் செய்யுங்க!''

சிவரஞ்சனி விரட்ட.... ரவிவர்மா செல்போனை எடுத்து டாக்டருக்கு போன் செய்தார்.

கொஞ்ச நேரத்தில் அந்த லேடி டாக்டர் வந்துவிட்டார்!

ஜோஷிதாவின் கண்களை ஆராய்ந்தார்!

நாடித் துடிப்பை ஆராய்ந்தார்!

பின் மெல்லப் புன்னகையுடன் சிவரஞ்சனியை நோக்க...

''டாக்டர்... என் மருமகளுக்கு ஒண்ணுமில்லையே?''

''ம்கூம்! நல்ல செய்திம்மா! அதுவும் தேனாய்த் தித்திக்கும் செய்திம்மா!''

''பீடிகை போதும்... என்னன்னு சொல்லுங்க, டாக்டர்?''

''நீங்க ரெண்டு பேரும் தாத்தா, பாட்டி ஆகப்போறீங்க!''

டாக்டர் சொல்ல.... இருவரும் மலர்ந்தனர்.

ஜோஷிதாவின் முகம் அந்தி வானமாய்ச் சிவந்தது.

''அப்போ... அப்போ எங்க ஜோஷிதா...''

''கர்ப்பமா இருக்கா! சந்தோசம்தானே?''

''ம்... ரொம்ப ரொம்ப சந்தோசம்மா!'' ரவிவர்மா சிரிப்புடன் கூறினார்.

''ஏழுமலையானே... எம்பெருமானே...'' என்று கையெடுத்து கடவுளைத் தொழுதார், சிவரஞ்சனியம்மாள்!

''இவளைத் தாயாக்கின வாலுப் பையன் விஷ்வா எங்கேம்மா?'' சிவரஞ்சனியைப் பார்த்து டாக்டர் கேட்க...

''ஆபீஸ் போயிருக்கான், டாக்டர்!''

''அந்த குறும்புக்காரன்கிட்ட விஷயத்தைச் சொல்லுங்க, சந்தோசப்படுவான்!''

''சொல்றோம், டாக்டர்!''

''இந்த சந்தோசத்தைப் பெரிசா பார்ட்டி வச்சி கொண்டாணும், ரவிவர்மா சார்!''

டாக்டர் சொல்லவும்...

''அமர்க்களமா செய்துடலாம், டாக்டர்!'' ரவிவர்மா சொன்னார்.

''டாக்டர்... என் மருமகளை ஹாஸ்பிடலுக்கு எப்போ கூட்டிட்டு வரட்டும்?''

''நாளை மறுநாள் கூட்டிட்டு வாங்க.''

''வாந்தியும், மயக்கமுமா இருக்காளே!''

''வாந்தியும், மயக்கமும் நிற்க மாத்திரை எழுதித் தரேன்! ஜோஷிதா... உடம்பைப் பத்திரமா பார்த்துக்கோ. நான் வரேன்!''

டாக்டர் கிளம்பி விட்டார்.

சிவரஞ்சனி மருமகளை இழுத்து மடியில் போட்டுக் கொண்டார்!

அவள் முகம் முழுக்க முத்தமிட்டார்!

தலைமுடியை இதமாய்க் கோதிவிட்டவாறே.....

''நன்றி ஜோஷிம்மா! என் குடும்பத்தைத் தழைக்க வைத்து விட்டாயே!..

நீ மட்டும் மீண்டும் விஷ்வாவின் வாழ்வில் வராமல் இருந்திருந்தால்... விஷ்வாவோடே எங்க குடும்பம் நின்று போயிருக்கும்!''

சிவரஞ்சனி கூற...

''நல்ல நேரத்துல... என்ன பேசறீங்க, ஆன்ட்டி!'' என்று சிவரஞ்சனியம்மாளின் வாயைப் பொத்தினாள், ஜோஷி!

''ரெஸ்ட் எடு, ஜோஷிம்மா!''

''சரிங்க, ஆன்ட்டி!''

''நம்ம விஷ்வஜித்துக்கு நீயே போன் செய்து சொல்லும்மா! பய ரொம்ப மகிழ்ந்து போவான்!''

''செய்யறேன், ஆன்ட்டி!''

சிவரஞ்சனி அவளைத் தனியே விட்டுவிட்டு அறையை விட்டு வெளியேறினார்.

ஜோஷிதா செல்போனை எடுத்து விஷ்வஜித்துக்கு போன் செய்தாள்.

''ஜோஷி... என்னடா?''

விஷ்வஜித் எதிர்முனையில் கேட்க...

''விஷ்வா.... நீங்க உடனே வீட்டுக்கு வாங்க!''

அவள் மொட்டையாய் அழைக்க...

''ஏன்...? என்ன விஷயம்...?''

''நீங்க வாங்க!''

''அப்பாவுக்கு உடம்பு எதுனா சரியில்லையா, ஜோஷிம்மா?''

விஷ்வஜித் பதற்றத்தோடு கேட்டான்.

''ம்கூம்! நீங்க உடனே வாங்கப்பா!''

''ஜோஷி... நான் முக்கியமான மீட்டிங்ல இருக்கேன்! விஷயத்தைச் சொல்லேன்ம்மா?''

''ம்கூம்! நீங்க வரமுடியுமா...? வர முடியாதா...?''

ஜோஷிதா கோபமாய்க் கேட்க....

''கொஞ்சம் பொறுத்துக்கோ, கண்ணே! மாலை ஐந்து மணிக்கு ஷார்ப்பா உன் முன்னாடி நிற்பேன்! சரியா...?''

விஷ்வஜித் கொஞ்சலோடு சொல்ல...

''நீங்க வரவே வேண்டாம்!''

''என் செல்லத்துக்குக் கோபமா என்ன? ப்ளீஸ்டா... ரஷ்யா கம்பெனியோட பேச்சு வார்த்தை நடந்துட்டு இருக்கு! டீல் முடிஞ்சா ஏகப்பட்ட லாபம் நமக்கு! விஷயம் என்னன்னு சொல்லு, ஜோஷிம்மா!''

''உங்க பிசினஸ் விஷயத்தை தூக்கி எங்காவது போடுங்க!''

''நீ விஷயத்தைச் சொல்ல வேண்டாம்! சரியா ஐந்து மணிக்கு வந்து கேட்டுக்கறேன்! அப்படி ஐந்து மணிக்கு கூடவோ குறைவோ போனால் தண்டனையா எத்தனை தோப்புக்கரணம் போடணும்? அதைச் சொல்லிட்டால் என்னைத் தயார்ப்படுத்திக்குவேன்!''

விஷ்வஜித் குறும்போடு பேச...

''ஐந்து மணிக்குக் கூட ஒரு நிமிடம் எடுத்துட்டாலும் நான் உங்களோட பேச மாட்டேன்! அதுதான் நான் தரப் போகும் தண்டனை!''

''கட்டாயம் வந்துடறேன், கண்மணி!''

அவள் போனை 'கட்' செய்தாள்.

நான்கு மணி வாக்கில் குளித்து... விஷ்வஜித்துக்குப் பிடித்த ஆகாய வண்ண நிறச் சேலையணிந்து கொண்டாள்.

அவன் வரவை எதிர்பார்த்து வாசலுக்கும் உள்ளுக்குமாய் நடந்தாள்.

சிவரஞ்சனியும், ரவிவர்மாவும் அவளின் அழகிய அலங்காரத்தை வைத்த கண் எடுக்காமல் ரசித்தனர். இருவரும் அர்த்தபுஷ்டியுடன் சிரித்துக் கொண்டனர்.

ஐந்து மணி...

ஆறு மணி...

ஏழு மணி...

எட்டு மணி...

நேரம் கரைந்து கொண்டே இருந்தது!

ஆனால், விஷ்வஜித் வந்தபாடில்லை!

சிவரஞ்சனி எவ்வளவு வற்புறுத்தியும், இரவு உணவை மறுத்துவிட்டு, மாடியில் தனது அறையின் கட்டிலில் போய் விழுந்தாள்.

கண்ணீர் கட்டுப்பாடின்றி, தாறுமாறாய் கண்களில் பொங்கி, கன்னத்தில் வழிந்து ஆறாய் ஓடியது!

''விஷ்வா! இப்படி ஏமாற்றி விட்டாயே!''

வாய்விட்டே சொல்லி அழுதாள்!

ஆசையாசையாய் தான் கர்ப்பமாய் இருப்பதைக் கூறி சந்தோசப்படுத்த நினைத்த அவளின் மனதைப் புரிந்து கொள்ளாமல் இப்படி தவிக்க விட்டதை எண்ணி எண்ணி விம்மினாள்!

வெடித்தழுதாள்!

22

பத்து மணி வாக்கில்...

''ஜோஷி... ஜோஷிம்மா...''

விஷ்வாதான் வந்து அழைத்தவாறு கதவைத் தட்டினான்!

அழுது அழுது களைத்து உறங்கிப் போன... ஜோஷிதாவின் காதுகளில்... அவன் அழைப்புக் குரலும், கதவைத் தட்டும் ஓசையும் கேட்டது!

ஆனால் எழுந்து வந்து கதவைத் திறக்கவில்லை!

நீண்ட நேரம் தட்டித் தட்டி ஓய்ந்து போனான்!

அவள் வரவே மாட்டாள் என்று உணர்ந்து... திரும்பித் தன்னறைக்குப் போக எத்தனித்த சமயம்... கதவு 'படக்' கெனத் திறக்கப்பட்டது!

அழுது வீங்கிய முகத்துடன் ஜோஷிதாவைக் கண்ட விஷ்வஜித் உள்ளம் பதறிவிட்டான்!

தவிப்புடன் அருகில் ஓடினான்!

''ஏய் ஜோஷி... உடம்புக்கு என்னடாம்மா? ஏன்? ஏன்டா? உன் முகம் ஏன் வாட்டமா இருக்கு?''

கேட்டவாறு அவள் நெற்றியில், கழுத்தில் கை வைக்க...

அவள் பட்டென்று தட்டி விட்டாள்!

''குட்டிம்மா... நான் வர்லேன்னு அழுதையாடா...?''

அவன் கேட்டது தான் தாமதம், வீறிட்டு அழுதாள், ஜோஷிதா!

விஷ்வஜித் தாங்க முடியாமல் தாவி அணைத்தான்!

அவள் அவனிடமிருந்து விடுபடத் திமிற...

அவன் பிடி மேலும் இறுக...

''விடுங்க... விடுங்க... தூரப் போங்க...!'' என்று அவள் சீறியவாறு அவனிடமிருந்து விடுபடப் போராடினாள்!

அவன் அவளின் போராட்டத்தை லட்சியம் செய்யாமல் அலாக்காகத் தூக்கிக் கொண்டான்!

கட்டிலில் போய் அவளை உட்கார வைத்தான்!

அவளின் அருகில் அமர்ந்தான்!

அவளை இழுத்து மடியில் போட்டுக் கொண்டான்!

அவள் அழுகை மேலும் கூடியது!

''ஸாரி ஜோஷிம்மா... இந்த ஒரு முறை மட்டும் என்னை மன்னிப்பாயாம்! ப்ளீஸ்...''

அவளின் கேசத்தைக் கோதிவிட்டு... மன்னிப்புக் கேட்டான்.

''மாட்டேன்,'' என்று ஒற்றை வார்த்தையில் மறுத்தாள்!

''பேச்சு வார்த்தை முடிந்து... ஒப்பந்தத்தில் கையெழுத்துப் போட இவ்வளவு நேரம் ஆகிவிட்டது!... விஷ்வா ஆப்பிள், ஆரஞ்சு ஜூஸுக்கு அங்கே நல்ல வரவேற்பாம்! பெரிசா டெண்டர் எடுத்திருக்கான், ரஷ்யாக்காரன், தெரியுமா?''

''என்னை விட உங்களுக்கு பிசினஸ்தான் முக்கியமா...? முதலா...?''

''அப்படிச் சொன்னேனா...?''

''இல்ல, உங்க முதல் பொண்டாட்டி.... என் சக்களத்தி உங்க பிசினஸ் தான்! எனக்கு நல்லாவே தெரியும்!''

ஜோஷிதா ஆத்திரத்துடன் சொல்ல...

''மடச்சி மாதிரி பேசாதே! எனக்கு முதலும், முக்கியமும் நீதான்! அப்புறம்தான் எல்லாமே!''

''வார்த்தைக்கு மட்டும் தான்! ம்? செயலில் காட்ட மாட்டீங்க... அப்படித்தானே?''

''அதான் ஸாரி கேட்டேனடா?''

''உங்க ஸாரியைப் போய்க் குப்பைத் தொட்டியில் போடுங்க!''

''ஜோஷிம்மா... இந்த மச்சானை மன்னிக்கவே மாட்டாயா...?''

விஷ்வஜித் அன்புடன், உயிர் உருகக் கேட்க...

அவளின் கோபம் மெல்லக் குறைய...

அவளின் விழிகளை ஊடுருவிய விஷ்வஜித்...

''என்ன விஷயம், ஜோஷிம்மா?'' என்று கேட்க...

''சொல்லமாட்டேன்! உங்களுக்கு இது தேவையில்லாத விஷயமும் கூட!''

ஜோஷிதா பிகு செய்ய...

''ஏதோ முக்கியமான செய்தி சொல்ல என்னை அழைச்சிருக்கே! நான் தான் உன் வேண்டுகோளைத் தவிர்த்துட்டு... பிசினஸ்ஸைப் பார்த்துட்டு இருந்துட்டேன்! சரி, சொல்லு. ஏதோ நல்ல விஷயம் போலத் தெரியுது! அதான் நான் உடனே வர்லேன்னதும் தவிச்சிப் போயிட்ட போல! சரியா?''

அவள் மௌனமாய் இருந்தாள்!

அவளின் முகத்தை இரு கைகளிலும் தாங்கி... கண்ணோடு கண் நோக்கி... மென்மையாய்...

''சொல்லு கண்ணே!'' என்று கேட்கவும்...

அவள் கோபத்தை விடுத்து...

''நீங்க அப்பாவாகப் போறீங்க! என் வயிற்றுக்குள் குட்டி விஷ்வஜித் இருக்கான்!''

இதழ்களில் புன்னகையுடன் கூறிவிட்டு... வெட்கத்தில் தலை குனிந்து கொண்டாள், ஜோஷிதா.

விஷ்வஜித் மலர்ந்து விட்டான்! கண்களில் கூடுதலாய் ஒளி மின்னியது!

அவன் அடைந்த சந்தோசத்தை வார்த்தைகளால் விவரிக்க முடியாது!

''ஹேய் ஜோஷி... நிஜம்தானா...?''

''ம்...''

அவளைத் தூக்கி இறுக அணைத்துக் கொண்டான்!

கன்னம், உதடு, நெற்றி என்று கண்ட இடங்களில் ஆசையாசையாய் முத்தம் பதித்தான்!

''இந்தச் செய்தி சொல்லத்தான்... உங்களை உடனே வரச் சொன்னேன்!''

"செய்தி இதுவென்று தெரிந்திருந்தால் ஒடி வந்திருப் பேனே, கண்மணி! போன்ல சொல்லி இருக்கலாம் இல் லையா...?"

"போன்ல சொல்ற சீப்பான செய்தியா, அத்தான்?"

"ஆமா... ஆமாடா!

அவன் ஒத்துக் கொண்டான்!

பின் மெதுவாய்க் கேட்டான்.

"ஜோஷிதா... கொஞ்ச நேரத்திற்கு முன்பு என் வயிற் றில் குட்டி விஷ்வா இருக்கான்னு சொன்னீயே..."

"ஆமா... ஏன் குட்டி விஷ்வா வேண்டாமா?"

"ம்கூம்! எனக்குக் குட்டி ஜோஷிதா தான் வேண்டும்!"

விஷ்வஜித் ஆசையாய்ச் சொல்ல...

"ம்கூம்... எனக்குக் குட்டி விஷ்வாதான் வேண்டும்!"

ஜோஷிதா சொல்ல...

"நமக்குள்ளே சண்டை வேண்டாம் ஜோஷிம்மா! நீ என்ன செய்யறே ஒரே பிரசவத்துல குட்டி விஷ்வா, குட்டி ஜோஷிதான்னு ரெட்டையா பெத்து என் கையில கொடுத்துடேன்!"

விஷ்வஜித் சொல்லிவிட்டு... கண்ணடித்துச் சிரிக்க...

"ஐயோடா... துரைக்கு ரொம்பத்தான் பேராசை!" என்று அவன் கன்னத்தைக் கிள்ளினாள்.

"ஜோஷிம்மா... என்னை அப்பாவாக்கின உனக்கு என்ன 'கிப்ட்' வேண்டும்? சொல்லு."

அவன் அன்போடு கேட்க...

"நீங்களே எனக்குக் கிடைச்ச 'பெரிய கிப்ட்' தான்!"

அவள் கண்கள் கண்ணீரால் மின்னின!

அவள் கண்ணீரை மென்மையாய்த் துடைத்து விட்டான்.

"ஏதாவது கேளுடா, தங்கம்?" என்று கொஞ்சினான்.

"உங்களுடைய இந்த அபரிமிதமான அன்பு எனக்கு எப் போதும் கிடைக்கணும்! அது தான் நான் வேண்டும் பரிசு!"

"இந்த அன்பில் சற்றுக் கூடுமே தவிர குறையவே குறை யாது! இதில் உனக்கு ஏன் சந்தேகம், ஜோஷி? ம்?"

"இல்ல... எனக்குப் பயமா இருக்கு, விஷ்வா! இத்தனை பாசம்... இத்தனை பிரியம்... இத்தனை அன்பு... இத்தனை ஆசை... நாளையப் பிரிவுக்குத்தானோன்னு எனக்குப் பயமா இருக்கு!"

அவள் கூறிவிட்டுத் தேம்பினாள்.

"ஏய்... பிரிவா...? நம்மிடையேவா...? எதனால் வரும்...? நான் உன்னை முழுதாய்ப் புரிந்து வைத்திருக்கேன்! நீ என்னை முழுவதுமாய்ப் புரிந்து வைத்திருக்கிறாய்!...

இருவரின் எண்ணங்களும்... மனங்களும்... ஒன்றாய் இருக்கிறது!...

பிறகு எப்படி நம்மிடையே பிரிவு வரும்?"

விஷ்வஜித் மன்மதப் புன்னகை ஒன்றைச் சிந்தியவாறு கேட்க...

"இல்ல அத்தான்! எனக்குப் பயமாயிருக்கு, அத்தான்!"

ஜோஷிதா நேசத்தோடு கூறி... உயிர் உருக... அவனை இழுத்து அணைத்துக் கொள்ள...

"ஆஹா...'அத்தான்' என்ற சொல் இத்தனை இனிக் குதே!"

விஷ்வா கண்களைச் சிமிட்டி ரசிப்புடன் சொல்ல...

"விளையாடாதீங்க, விஷ்வா அத்தான்! நான் சீரியஸா பேசறேன்!" என்று கொஞ்சம் கோபத்தோடு பேச...

"பிரிவு உன்னால் வந்தால் தான்!"

விஷ்வா பட்டென்று சொன்னான்.

"என்னடா...? என்ன விஷ்வா... விளையாடறீங்களா?"

ஜோஷிதா ஆத்திரப்பட...

"நீதான் ஏதாவது ஒன்றுமில்லாத விஷயத்துக்கெல் லாம், என்னைப்போட்டுப் படுத்தி எடுத்து விடுவாய்! பெரிதாய் ஆத்திரப்படுவாய்! பெரிதாய்க் கோபப்படுவாய்!"

''கண்டிப்பா மாட்டேன்! நான் இனி உங்கள் மேல் காரணமில்லாமல் கோபித்துக் கொள்ளமாட்டேன்!... என்னால் எந்தப் பிரிவும் வராது!...

சத்தியம், அத்தான்!...

நாம் என்றுமே பிரியக் கூடாது, அத்தான்!...

இன்று போலவே என்றும் அன்போடு... நேசத்தோடு... பாசத்தோடு... ஆசையோடு... மோகத்தோடு சேர்ந்து வாழ வேண்டும், அத்தான்!

இறப்புல கூட நமக்குள் பிரிவு வரக்கூடாது, அத்தான்! சாவு கூட நமக்கு ஒன்றாகவே வரணும், அத்தான்! தினம் தினம் இதைத்தான் இறைவனிடம் வேண்டு கிறேன், அத்தான்!''

அவள் அழுத்தம் திருத்தமாய்... கண்ணீரோடு சொல்ல... அவள் கண்ணீர் வழியும் கண்களில் முத்தமிட்டான்! அவளின் கண்ணீர் உப்புக் கரிப்பதற்குப் பதிலாய்... தேனாய் இனித்தது!

ஜோஷிதாவின் மிதமிஞ்சிய அன்பை, நேசத்தைக் கண்டு விஷ்வஜித் அதிசயத்துப்போனான்!

ஏன்தான் அவளை எண்ணி அதிசயித்தோம் என்று புலம்பப் போவது தெரியாமல்!

23

புவி, இரவின் குளுமையான தாலாட்டில், ஆனந்த மாய் உறங்கிக் கொண்டிருந்தது! வானில் நட்சத்திர இளைஞர்கள்... நிலவு நங்கையைப் பார்த்து... கண்சிமிட்டி... காதல் செய்து கொண்டிருந்தனர்!

அன்று...

இரவு பத்து மணிக்கு விஷ்வஜித்திடமிருந்து போன் வந்தது, ஜோஷிதாவிற்கு!

''ஜோஷி... நான் பங்களாவுக்கு வர்லேம்மா! வேலை முடிய இவ்வளவு நேரமாகிவிட்டது! உடம்பு ரொம்ப அலுப்பா இருக்கும்மா! இன்று இரவு இங்கேயே தங்கிட றேன்! நாளை மதியம் வாக்கில் மீதி வேலையை முடித்து விட்டு வரேன்! சினிமா, பார்க் என்று மீதிப் பொழுதை இன்ப மாய்க் கழிக்கலாம், என்ன? இப்போ வச்சிடறேன், ஜோஷிதா!''

விஷ்வஜித் கூறிவிட்டு... அவளுடைய விருப்பம், பதிலை எதிர்பாராமல்... போனைப் பட்டென்று 'கட்' செய்து விட்டான்.

அவளும் மீண்டும் முயற்சிக்காமல் படுத்து விட்டாள்!

அவனின்றி அவளால் தனியே படுத்திருக்க முடிய வில்லை!

விஷ்வா... வியாபார விஷயமாய் வெளி நாடு சென்று விட்டால்... விதியே என்று படுத்திருப்பாள்!

இப்படி உள்ளூரிலேயே இருந்து கொண்டு அவன் அரு காமையில் இல்லையெனும் போது தனிமை கொடு மையைக் கொடுத்தது!

உடனே விஷ்வஜித்தைப் பார்க்க வேண்டும் போல வெறி மனதில் எழுந்தது!

படுக்கையிலிருந்து எழுந்தமர்ந்தாள்!

புடவையை எடுத்துச் சுற்றிக் கொண்டாள்!

தலையைச் சரிசெய்து கொண்டு... அறையை விட்டு வெளியே வந்தாள்!

மாமனார், மாமியாரிடம் கூடச் சொல்லாமல்... பங்களாவை விட்டு வெளியே வந்தாள்!

கார் ஷெட்டில் தூங்கிக் கொண்டிருந்த டிரைவரை எழுப்பினாள்!

''சின்னய்யா... வீட்டுக்கு வர்லே, குமார்! அவர் ஆப்பிள் தோட்டத்திலே தங்கிவிட்டாராம்! அதனால் நாம் அங்கே போறோம்! காரை எடு, குமார்!''

அவன் திடுக்கிட்டான்.

''சின்னம்மா... இப்போ இரவு பதினொரு மணி! நீங்க வேற வாயும் வயிறுமா இருக்கீங்க! நைட் பயணம் வேண்டாம்!''

''நீ காரை எடுக்கறீயா? இல்ல, நானே டிரைவ் பண்ணிட்டுப் போகட்டுமா?''

ஜோஷிதா எரிச்சலோடு கேட்க...

''சின்னய்யாவைக் காலையில போய்ப் பார்க்கலாம்மா! மலைப்பாதைப் பயணம் ஆபத்தானது,

இரவு நேரத்துல!''

''நீ சரிப்பட மாட்டே! கார் சாவியைக் கொடு! நான் கிளம்பறேன்!''

''வேண்டாம்! நான் வரேன்! இருங்க பெரிய்யா, பெரியம்மாகிட்ட சொல்லிட்டு வந்துடறேன்!''

டிரைவரின் இந்தப் பேச்சு அவளுக்குப் பயங்கர கோபத்தைத் தந்தது!

சிவரஞ்சனியும், ரவிவர்மாவும்... வயிற்றுப் பிள்ளையோடு இருக்கும் மருமகளை... இந்த நேரத்தில், கொண்டை ஊசி வளைவுகள் உள்ள மலைப்பாதையில் பயணிக்க அனுமதிப்பார்களா? அவர்கள் என்ன முட்டாள்களா?

''ஏய்... என்ன நீ மறுத்து மறுத்துப் பேசிட்டு இருக்கே! ஆன்ட்டி, அங்கிளுக்குத் தெரியாமல்தான் போகணும்! நீ வர முடியுமா? முடியாதா?''

''வரேம்மா!'' என்றான்.

ஷெட்டிலிருந்து காரை எடுத்து வந்தான். ஜோஷிதா முன்புறம் ஏறி அமர்ந்தாள்.

கார் விரைந்தது!

பனி மழையாய்த் தூவியது!

டிரைவர் வைபரை ஆன் செய்தான்!

''அம்மா... சின்னய்யாவுக்கு இது கோபத்தை உண்டு பண்ணும்! அவரை வரச்சொல்லி போன் செய்திருக்கலாமே!''

''அவர்தான் அலுப்பா இருக்குன்னு தங்கிட்டார்! அவரை நான் எப்படி அழைக்க? மனச்சாட்சி இல்லாத மனுஷியா நான்?''...

என்னப்பா ஆமை வேகத்துல டிரைவ் பண்றே...? கொஞ்சம் வேகமாய்ப் போயேன்!''

கணவனைச் சீக்கிரம் காண வேண்டும் என்ற ஆவலில் டிரைவரை ஜோஷிதா முறைக்க...

இந்த இரவு நேரத்தில் லாரியோ, காரோ, பஸ்ஸோ வர வாய்ப்பில்லை என்ற நினைப்புடன் டிரைவர் குமார் காரின் வேகத்தைக் கூட்டினான்.

கொண்டை ஊசி வளைவுகளில் வளைந்து வளைந்து கார் வேக மெடுத்துப் பறந்தது!

கொஞ்ச நேரத்தில்...

எதிரே விஷ்வஜித் கம்பெனியிலிருந்து ஆப்பிளை ஏற்றிக் கொண்டு வந்த லாரியும்... வேகமெடுத்து வந்த

காரும் மோதி... கண்ணிமைக்கும் நேரத்தில் அந்த விபத்து நேர்ந்தது!

டிரைவர் லேசான அடியோடு தப்பி விட்டான்.

ஜோஷிதா தன் வயிற்றுக் குழந்தையைக் காப்பாற்ற முதுகை வளைக்கவும், அவளின் தலை முன்புறம் மோதி இடித்துக் கொண்டது!

உடனே மயக்கமானாள்!

லாரியில் வந்த ஆட்கள் அத்தனை பேரும் தெரிந்தவர்கள் என்பதால்... விரைந்து செயல்பட்டனர்.

கார் கதவு திறந்து ஜோஷிதா கீழே கிடத்தப்பட்டாள்.

தலையிலிருந்து இரத்தம் வழிந்தது!

நெற்றியில் சிறு துண்டால் கட்டுப் போட்டனர்!

கையில் லேசான அடி!

பலமான காயமின்றித் தப்பித்தாள்!

விஷ்வஜித்திற்கு போனில் செய்தி சொல்லப்பட்டது!

பதறி வந்த விஷ்வஜித் குடும்ப டாக்டருக்கு போன் செய்து விட்டு... ஜோஷிதாவை ஏற்றிக் கொண்டு மருத்துவமனைக்குப் பறந்தான்.

உடனே ஜோஷிதாவிற்குத் தீவிர சிகிச்சை கொடுக்கப் பட்டது!

விஷ்வஜித் தீவிர சிகிச்சைப் பிரிவு அறைக்கு வெளியே நின்று... டிரைவரைத் திட்டிக் கொண்டிருந்தான்!

''மடையா... அறிவில்லையா, உனக்கு? அவள் காரை எடுக்கச் சொன்னால் எடுக்கலாமா?...

எனக்கு ஒரு போன் செய்து விஷயத்தைச் சொல்லியிருக் கலாமே!...

இந்த விபத்தில் உனக்குப் பாதிப் பங்கிருக்கு!''

''மன்னிச்சிடுங்க, சார்!''

டிரைவர் குமார் கையெடுத்துக் கும்பிட்டான்!

''அம்மா... உங்களைப் பார்க்கணும்கிற தீவிரத்துல இருந்தாங்க, சார்! இப்படி இருக்கும் போது மறுக்க வேண்டாம் என்று தான் சார்!''

''பாத்ரூம் போறாப்பல போய் எனக்கு போன் செய்து விஷயத்தைச் சொல்லியிருக்கலாமே!''

''ஸாரி... ஸாரிங்க, சார்!''

குமார் அழாக்குறையாய் மன்னிப்புக் கோரினான்!

''அல்லது அம்மா, அப்பாவிடம் விஷயத்தைத் தெரிவித்து இருக்கலாம்! அவர்கள் ஜோஷிதாவைத் தடுத்து நிறுத்தி... என்னைப் பங்களாவிற்கு வர வழைத்து இருப்பார்கள்!...

உன்னைக் குறை சொல்லி என்ன பயன்? இந்த விபத்தில் எனக்கும் பங்கிருக்கு!...

மனைவி இப்படி குழந்தையைச் சுமந்துக் கொண்டு இருக்கும் போது... அவளை விட்டுட்டு நான் வெளியே தங்கியது பெரிய தவறு!...

போ... போ அம்மா, அப்பாவிடம் பக்குவமாய்ச் செய்தியைச் சொல்!

அவர்களை விழித்த பிறகு வரச்சொல்!

அஸ்வினுக்கு போன் செய்திருக்கேன்!

அவன் வந்து விடுவான்! நீ கிளம்பு!''

டிரைவர் போய்விட்டான்!

விஷ்வஜித் தளர்ந்து அங்கிருந்த பெஞ்சில் அமர்ந்து விட்டான்!

பனி சாரலாய் வெளியே தூவிக்கொண்டிருந்தது! நகரம் இருட்டை இழுத்துப் போர்த்துக் கொண்டிருந்தது!

விஷ்வஜித் மனதில் மலை மலையாய்ச் சோகம் நிரம்பி இருந்தது!

'ஏற்கெனவே ஒரு பெரிய விபத்தைப் பார்த்துவிட்டு வந்தவள், ஜோஷிதா! இது சின்ன விபத்தே ஆனாலும் இவளால் தாங்க முடியுமா?'

'கர்ப்பமாய் இருக்கும் போது வீரியமான மருந்து கூட உட்கொள்ள முடியாதே!'

'வீரியம் குறைந்த மருந்து எந்த அளவு ஜோஷிதாவைக் குணப்படுத்தும்?'

'கடவுளே... என் ஜோஷிதாவைக் காப்பாற்று! அவள் மீண்டும் எனக்கு எந்தச் சேதாரமும் இல்லாமல் கிடைக்க வேண்டும்!'

'ஜோஷிதாவின் வயிற்றில் வளரும் என் உயிரில் கலந்த ஜீவன் நல்ல முறையில் இருக்க வேண்டும்!'

'என் பிள்ளைக்கு எந்தப் பாதிப்பும் நிகழக்கூடாது!'

'என் உயிருக்குயிரான மனைவியும்... என் உயிர் ஜீவனும் எனக்கு முழுமையாக வேண்டும்!'

கண்மூடி விஷ்வஜித் கடவுளோடு மன்றாடிக் கொண்டு இருந்த போது... அவன் தோள் மீது கை விழத் திடுக்கிட்டுக் கண் விழித்தான்!

எதிரே டாக்டர்!

''டா... டாக்டர்...''

என்று பரபரப்பாய் எழுந்து அவர் கையைப் பற்றிக் கொண்டான்!

கண்கள் கலங்கின.

அதைக் கவனித்த டாக்டர்...

''ஹேய் விஷ்வா... என்ன இது சின்னக் குழந்தை யாட்டம்? ம்? ஜோஷிதாவிற்கு ட்ரீட்மெண்ட் கொடுத் திருக்கு! பயப்பட எதுவுமில்லே!

'நத்திங்' யா! இந்த மட்டும் ஜோஷிதா தப்பித்தாளேன்னு சந்தோசப்படு! தலையில் தான் கொஞ்சம் அடி பலம்! கையில் லேசான அடிதான்! இன்னும் நாலைந்து மணி நேரத்தில் மயக்கத்திலிருந்து கண் விழிப்பாள்!''

''டாக்டர்... அவள் வயிற்றில் உள்ள என் குழந்தை...''

''அதற்கு அடிபட்டுவிடக் கூடாது என்று காப்பாற்றப் போராடியதில்தான் இவளுக்கு இந்த நிலை!''

''குழந்தை நார்மலா இருக்கா?''

''அருமையா இருக்கு! ஸ்கேன் செய்து பார்த்ததில் எந்தக் குறையும் இல்லே!''

''நான் என் மனைவியைப் போய்ப் பார்க்கலாமா?''

''ம்... கலங்காதே, விஷ்வா! அவளைப் பார்த்துட்டு... அப்படியே அவளின் அருகில் உள்ள கட்டிலில் படுத்து நிம்மதியா தூங்கு!''

''சரி டாக்டர்!''

மண்டையில் கட்டு, கைகளில் கட்டு என்று படுத்திருந்த ஜோஷிதாவைக் காணக் காணக் கண்களில் கண்ணீர் நிரம்பியது!

அவளருகே அமர்ந்து கொட்டக் கொட்ட விழித்திருந் தான்!

அஸ்வின் மட்டும் வராமல் சிவரஞ்சனியும் அழுதவாறு வந்து விட்டார்!

''ஐயோ விஷ்வா...'' என்று மகனைக் கட்டிக் கொண்டு கதறியழுதார்.

பின்...

சிவரஞ்சனி ஜோஷிதாவின் அருகில் அமர்ந்து கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தார்.

அஸ்வின் விஷ்வஜித்துக்கு ஆறுதல் சொன்னான்.

விடியற்காலையில் ஜோஷிதாவிடம் அசைவு தெரிய... மூவரும் அருகில் ஓடினர்.

ஜோஷிதாவிற்கு விழிப்பு வந்தது!

கூடவே, விபரீதமும் புயலாய்ப் புறப்பட்டு வந்தது!

24

''என் தங்கமே! இப்படிப் பயப்பட வைத்து விட்டாயே!'' என்று சிவரஞ்சனி ஜோஷிதாவின் அருகில் போனார்.

''என்ன காரியம் செய்தே, ஜோஷிதா! எங்களுக்குத் தெரியாமல் வெளியேறி, இப்படிப் பெரிய ஆபத்தை இழுத்து விட்டுட்டையேம்மா!''

ரவிவர்மா கலக்கத்துடன் சொன்னார்.

''என் கண்ணே... பிழைச்சுட்டையாடா? ஜோ... ஜோஷிம்மா... இப்படியா என்னைத் தவிக்க விடுவாய்? என்று கலங்கிய விழிகளோடு விஷ்வஜித் அவளின் கைப் பற்றினான். முகம் பிடித்துக் கன்னத்தில் முத்தமிட்டான்.

''வேலை... வேலைன்னு அலைந்த எனக்கு நீ இவ்வளவு பெரிய தண்டனை கொடுத்து விட்டாயே ஜோஷிதா!...

உனக்கு மட்டும் ஏன் இப்படியெல்லாம் நடக்குது?...

பெரிய ஆக்ஸிடெண்ட் ஆகி... உயிர் பிழைத்து... மறு ஜென்மம் எடுத்து வந்த நீ... மீண்டும் இவ்வாறு ஆக்ஸிடெண்ட் ஆகிப் படுத்துவிட்டாயே!

இந்த விபத்தில் உன் வயிற்றில் வளரும் குட்டித் தங்கத்திற்கு எதுவும் ஆபத்து இல்லையாம்!

அந்த ஒரு சின்ன சந்தோசத்தைத் தான் ஆண்டவன் இப்போது நமக்குக் கொடுத்திருக்கிறான்!''

அவளின் கைகளை ஆதரவாய்ப் பற்றிக் கூறிய விஷ்வஜித்தையே விழியெடுக்காமல்... கண்கள் பனிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள், ஜோஷிதா.

''என்னடா ஜோஷி?''

''எனக்குப் பழைய நினைவுகள் வந்து விட்டன, அத்தான்!''

அவள் சொன்ன அடுத்த நொடி மலர்ந்தான்.

''என்ன? என்னடா சொல்றே, ஜோ?''

''நான் பிறந்து வளர்ந்தது... படித்தது... அம்மா, அப்பா விபத்தில் இறந்தது... பாட்டி பராமரிப்பில் வளர்ந்தது... சரவணா ட்ராவல்ஸில் வேலை பார்த்தது...''

''ம்... அப்புறம்...?''

விஷ்வஜித் ஊக்குவிக்க...

''ஈஸ்வர் பெண் கேட்டது... அவனோடு நிச்சயம் ஆனது...''

''ம்...ம்... குட்...குட்...''

''அப்புறம் சென்னையில் தாரிகா அக்காவின் வளைகாப்பு விழாவில் உங்களைப் பார்த்தது... நீங்கள் என்னை மணந்துக்கச் சொல்லிக் கேட்டது...

நான் மறுத்தது...

அடுத்ததாய்... அடுத்ததாய் ஈஸ்வர் திருமணத்தை நிறுத்தியது... பாட்டி இறந்தது, நான் அநாதையாய் ஆனது...''

அதற்கு மேல் அவளால் சொல்ல முடியவில்லை. அழுகையில் குலுங்கினாள்.

விஷ்வஜித் அவளை ஆதரவாய் அணைத்துக் கொண்டான்.

ஈஸ்வர் திருமணத்தை நிறுத்துவதற்கு அவளை 'விபசாரி' என்ற காரணம் காட்டியதும்... பாட்டி அதிர்ச்சியில் இறந்ததும் அவளால் தாங்க முடியவில்லை.

நினைக்க நினைக்க நெஞ்சம் கொதித்தது!

ஈஸ்வர்!

எப்பேர்ப்பட்ட நயவஞ்சகன்!

எவ்வளவு பெரிய துரோகி!

அவளுக்கு உறவென்று இருந்த பாட்டியைப்பிரித்த, எமன்!

ஈஸ்வர் பேசிய பேச்சுக்களை... பழிச் சொற்களை... இந்த இதயம் இயங்கும் வரை மறக்கவே மறக்காது!

ஒரே மாதத்தில் ஜோஷிதாவின் உடல் தேறிவிட்டது.

பின்னர் நாட்கள் வெகு வேகமாய்ச் செல்ல... ஏழாம் மாதம் வந்தது!

வளைகாப்பு வைபோகம்!

நாள் குறிக்கப்பட்டது!

மாமியாரிடம் எவ்வளவு மறுத்தும் ஒரு டஜன் வைரக் கற்கள் பதித்த வளையலும்... அதற்கு மேட்சாய் நெக்லஸும், தோடும் என்று வாங்கி வந்து விட்டார்.

மாமனாரும் தன் பங்கிற்குக் கடைக்குப் போய் வைரக் கற்கள் பதித்த மோதிரம், தோடு என்று வாங்கித் தந்தார்.

பாக்கி விஷ்வஜித் மட்டும் தான்!

அன்று மாலை! மணி மூன்றுக்கே நடைப்பயிற்சிக் காக அருகில் உள்ள பூங்கா வரை சென்றனர். இடம் பார்த்து அமர்ந்தனர்.

ஜோஷிதாவின் மடி மீது தலை வைத்துப் படுத்திருந்த விஷ்வஜித் கேட்டான்!

''சொல் ஜோஷிதா... வளைகாப்பு விழாவிற்கு என் பரிசளிப்பாய் என்ன வேண்டும்?''

அவன் கேட்க... அவன் தலைமுடியில் கையை விட்டு அளைந்து கொண்டு... அவனுக்குப் புன்னகையைப் பதிலாய்த் தந்தாள்.

''ஜோஷிதா... இன்றைக்கு நான் உன்னை விடுவதாக இல்லே! சொல்... உனக்கு என்ன பரிசு வேண்டும்?'' என்று அவளின் வழுவழுப்பான கன்னக் கதுப்பைச் செல்லமாகக் கிள்ளிக் கொண்டு கேட்டான்.

''போதும் போதும்ங்கிற அளவுக்கு உடையும், நகையும் வாங்கிக் கொடுத்துட்டீங்க! வேறு என்ன வேண்டும்? எதுவுமே வேண்டாம்!''

''ம்கூம்.... நீ எதாவது ஒரு கிப்டைக் கேட்டுத்தான் ஆக வேண்டும்!''

அவன் மீண்டும் மீண்டும் விடாமல் கேட்க...

''நீங்களே எனக்குக் கிடைத்த பெரிய கிப்ட்தான்! உங்களை விடச் சிறந்த பரிசு எது? சரி. நீங்க வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்வதால் கேட்கிறேன். தங்க ஒட்டியாணம் வாங்கிக் கொடுங்க, விஷ்வா!''

''தங்க ஒட்டியாணமா...?''

என்று கேட்டுவிட்டு அடக்க முடியாமல் எழுந்தமர்ந்து சத்தமாய்ச் சிரித்தான்.

''ம்... ஏன் சிரிக்கறீங்க, விஷ்வா?''

''ஆஹா... அம்மணிக்கு ஆசையைப் பார்!

பிள்ளையார் போல வயிற்றைத் தள்ளிகிட்டு, தங்க ஒட்டியாணம் வேண்டுமா, என் செல்லக் குட்டிம்மாவுக்கு? இப்போ இருக்கற இடுப்புக்குத் தங்க ஒட்டியாணம் செய்யணும்னால்... ஒரு நூறு பவுனாவது வேண்டுமே!''

விஷ்வஜித் சொல்லிவிட்டுச் சிரிப்பை அடக்க முடியாமல் வாயைப் பொத்தி மீண்டும் சிரிக்க...

ஜோஷிதா அழகாய் உதட்டைப் பிதுக்கி..

''ஒட்டியாணம் எனக்கென்று சொன்னேனா?''

''பின்னே?''

''நைனாதேவி அம்மாவுக்கு!''

''என்னடா சொல்றே, ஜோ?''

விஷ்வஜித் சிரிப்பை விட்டு சீரியஸாய்க் கேட்க...

''நீங்களும், நானும் சேர நைனாதேவி அம்மன்தான் காரணம்ன்னு நினைக்கிறேன்! நான் உங்களுக்குக் கிடைக்க அங்கே ஏற்பட்ட விபத்து தானே காரணம்! விபத்து நடக்கலேன்னால் நான் பாட்டுக்கு சாமிதரிசனம் முடிந்து போயிட்டே இருந்திருப்பேன்!...

நீங்கள் என்னை மீண்டும் சந்தித்து இருக்க மாட்டீர்கள், தெரியுமா....?

அதனால், குழந்தை பிறந்தவுடன் தங்க ஒட்டியாணம் செய்து எடுத்துட்டுப்போய், காணிக்கையா கொடுத்துட்டு வரணும், விஷ்வா! இது என் வேண்டுதலும், ஆசையும் கூட! ப்ளீஸ்!''

''நான் செய்யமாட்டேன்னு சொன்னேனா? ஏன்டி இடியட் மாதிரி கெஞ்சறே?'' என்று அவன் முறைத்தான், பின் சொன்னான்.

''ஏய் விஷ்வா... இதைச் செய்யுடா, அதைச் செய்யுடான்னு கட்டளை இடுடி! இந்த விஷ்வா செய்யக் காத்திருக்கேன்! இந்த அடியேன்... இப்போ என்ன செய்ய வேண்டும், கண்மணி?''

விஷ்வஜித் புன்னகையுடன் கேட்டான்.

''வீட்டுக்குப் போகலாம், விஷ்வா! ஆனால் நடந்து வர மாட்டேன்! நீங்க தூக்கிட்டு வரணும்! தூக்குடா விஷ்வா!''

ஜோஷிதா எழுந்து சிறு குழந்தையாய்க் கொஞ்ச... விஷ்வஜித் அவளை அலாக்காகக் கையில் ஏந்திக் கொண்டு நடை போடவும்...

இதையெல்லாம் ஒரு ஜோடி விழிகள் குரோதத்தோடு முறைத்துக் கொண்டிருந்தன! அந்த விழிகளுக்குச் சொந்தக்காரன் ஈஸ்வர்!

பின், அவர்கள் எதிரே வந்து நின்றான்.

நாகரிகமே இல்லாமல்... இப்படி ஒரு அந்நியன் வந்து அருகில் நிற்கிறானே என்று... ஜோஷிதாவை இறக்கி விட்டான், விஷ்வஜித்!

''ஏய்... ஏய்... நீ... நீ... ஜோஷிதாதானே...?'' என்று கர்ண கடூரமாய் ஈஸ்வர் கேட்க...

அவளுக்கும் அவன் யாரென்று தெரிந்து விட்டது!

'ஈஸ்வர் என்ற துரோகி... நயவஞ்சகன்...'

விபசாரியென்றும்... நடத்தை சரியில்லாதவள் என்றும் அவள் மேல் சேற்றையும், சகதியையும் வாரியிறைத்துத் திருமணத்தை நிறுத்தியவன்!

உயிருக்குயிராய் என்னை வளர்த்த பாட்டியின் சாவிற்குக் காரணமானவன்!

அவன் முன்பு நெஞ்சை நிமிர்த்திச் சொன்னாள்.

''ஆமா... நான் ஜோஷிதாதான்!''

''அன்று பெரிய பத்தினி போலப் பேசினாய்! இன்று நீ செய்திருக்கும் காரியம் என்ன?''

''நான் என்ன உன்னை விட மட்டமான செயலிலா ஈடுபட்டேன்?''

''முறையா விஷ்வஜித்தை மணந்து வாழறேன்! நீ என்னை விபசாரி... ஒழுக்கம் கெட்டவள் என்று நிராகரித்தால்... எனக்கு வேறு மாப்பிள்ளையே கிடைக்கமாட்டார்கள் என்று உனக்கு நினைப்பா...?''

இருவரும் பேசிக் கொள்வது புரியாமல் விஷ்வஜித் முழித்துக் கொண்டு நின்றான்.

''நம் திருமண நிச்சயதார்த்தத்துக்குப் பிறகு இந்தப் பணக்காரன் கிடைக்க, வளைத்துப் போட்டுக் கொண்டாய், சரியா...?''

''ஈஸ்வர்...'' என்று அவள் கத்தினாள்.

''நடிக்காதே, ஜோஷிதா!''

''நான் நடிக்கிறேனா...? வார்த்தைகளைக் கொட்டாதே, ஈஸ்வர்! அது நல்லதில்லே!''

''பெரிய பத்தினி மாதிரி பேசாதே! வயிற்றை எரியுது!...

''நமக்குத் திருமணம் நடக்க இருந்த சமீபமாய் ஹைதரா பாத்திலிருந்து பெங்களூருக்கு வந்த என் நண்பன் லால்பார்க், கப்பன் பார்க், திப்பு சுல்தான் அரண்மனை எல்லாம் சுற்றிப் பார்க்கப் பிரியப்பட்டான். அவன் என்னை வற்புறுத்த, மனசேயில்லாமல் சென்ற எனக்குப் பெரும் அதிர்ச்சி!

பெரிசா ஒரு சர்டிங், சூட்டிங் விளம்பரப்படம் பார்த்தேன்!...

அதில் இதோ இவர் கம்பீரமாய் சூட், கோட்டில் இருக்க... நீ கையில் கூல்டிரிங்ஸோடு இவர் அருகில் சென்றவள்... கூல்டிரிங்ஸ் தட்டை நழுவ விட்டு இவர் மேல் மோகத்தோடு சரிய... இவர் உன்னை இழுத்து, இறுக்கி அணைக்க என்று படம் பார்த்து அதிர்ந்து போனேன்!...

''எங்கள் கம்பெனி சர்டிங், சூட்டிங் உடுத்திக் கொண்டால்... உங்கள் அழகில் மயங்கி... எப்பேர்ப்பட்ட ரதியைப் போன்ற பெண்ணும் உங்கள் மேல் விழுவாள்!'' என்று விளம்பர வாசகம் வேறு!..

அந்த விளம்பரப் பலகையையே நான் கோபத்தோடு நோக்கினேன்.

'ஏய் ஈஸ்வர்... இந்த கம்பெனி உடையை நானும் உடுத்திக் கொண்டால் இதே அழகி என்னிடம் மயங்கி என் மீது சரிவாளா...?' என்று நண்பன் கிண்டலடிக்க, நான் அப்போதே செத்துப்போனேன்!...

மறுநாளே புறப்பட்டு ஊர் வந்தேன்! அம்மாவிடம் அத்தனையும் கொட்டினேன்!...

அம்மாவோ... 'யாருக்கோ வளைகாப்புன்னு கிழவியும், பேத்தியும் சென்னைக்குப் போயிருந்தாங்க!...

அங்கே எவனையாவது கண்டு... இது போல ஏதாவது நடத்தை தவறினாளோ.... இல்ல வேணும்னே விளம்பரப் படத்திற்கு போஸ் கொடுத்தாளோ என்னவோ... யார் கண்டா?

இந்தப் பெண் நமக்கு வேண்டாம், ஈஸ்வர்! மாமன் மகள் தங்கமாய் இருக்க... கண்ட கண்ட கழிசடைகளைக் கட்டிக் கொள்வதா என்று அம்மா கூறினாள்!...

இது உண்மையாய் இருக்கும் என்று நினைத்துத் தான் நம் திருமணத்தை நிறுத்தினேன்!

திரும்ப கொஞ்ச நாளில் ஊர் வந்தால்... நீ வடக்கே டூர் போய்... விபத்தில் சிக்கி... உயிர் பிழைத்து... பெரிய பணக்காரனை மணந்து வாழ்வதாய்க் கூறினார், சரவணன்.

அந்த விளம்பரப் படம் உண்மை என்பதை நீயும் நிரூபிக்கும் விதமாய் இதோ... இந்தப் பணக்காரனையே மணந்து இன்பமாய் வாழ்கிறாய்!''

ஈஸ்வர் பேசப்பேச ஜோஷிதா கொதிப்பின் உச்சிக்குப் போனாள்.

விஷ்வஜித்தோ இப்படி ஒரு விபரீதம் அவனுக்குக் காத்திருக்கும் என்று கனவிலும் நினைக்கவில்லை!

''நிஜம்தானா, ஈஸ்வர்? பெங்களூரில் விளம்பரப் படத்தில் இருந்தது இவரும், நானும்தானா...?''

"சத்தியமாய்க கண்டேன்! விளம்பரப்படத்தில் இருந்தது நீயும், இந்த மனிதனும் தான்! நீ வேண்டுமானால் உன் கணவனைக் கேள்! இவர் சாம்பல் நிற சூட் கோட் போட்டிருந்தார்! நீ பிங்க் கலரில் பட்டு உடுத்தியிருந்தாய்!...

அந்த பட்டுச்சேலை கட்டி நான் உன்னை இரு முறை பார்த்திருக்கிறேன்! சந்தேகமே இல்லை, இது ஜோஷிதா தான் என நினைத்து வந்து அம்மாவிடம் கூற... நம் இருவரின் திருமணம் நின்றது!

உன்னுடய இந்தக் கேடு கெட்ட ஒழுக்கத்தின் காரணமாய்த்தான் உன்னை நான் நிராகரித்தேன்! நான் வரேன்!"

ஈஸ்வர் ஜோஷிதாவினுள் பெரிய பூகம்பத்தையே உருவாக்கிவிட்டுச் சென்று விட்டான்.

தாரிகாவின் வளைகாப்பு அன்று அவன் சாம்பல் நிற உடையில் இருந்ததும், அவள் பிங்க் நிற பட்டில் இருந்ததும் உண்மை!

கூல்டிரிங்ஸ் எடுத்துச் சென்ற போது கால் வழுக்கி அவன் மேல் விழுந்ததும் நிஜம்!

விஷ்வா அன்று காதல் மேலிட ஆசையாசையாய் அவளை இழுத்து இறுக்கிக் கொண்டதும் நிஜம்!

அன்றைய நிகழ்வுகள் அவள் மனக்கண் முன்பு வந்து கண்ணாமூச்சி காட்டி மின்னின!

ஈஸ்வர் உடனான திருமணம் நிற்க, விஷ்வஜித்தான் காரணமா...?

'ஈஸ்வர் 'வேசி, விபசாரி' என்று அன்று கண்டமேனிக்குப் பழித்துப் பேசியதற்கும் விஷ்வஜித்தான் காரணமா...?'

'பேரன்புமிக்க பாட்டியின் சாவிற்கும் மறைமுகமாய் விஷ்வஜித்தான் காரணமா...?'

'ஐயோ... கடவுளே... இந்த விஷ்வஜித் எத்தனை நல்லவராய் நடந்து கொண்டார்! எவ்வளவு அன்பு மிக்கவராய் அரவணைத்துக் கொண்டார்!'

'பெரும் பொக்கிஷமாய் வைத்து என்னைப் போற்றினாரே!'

'எவ்வளவு காதலைத் திகட்டத் திகட்ட எனக்கு அமுதாய் ஊட்டினார்!'

'அதன் விளைவாய் இன்று என்னுள் புது ஜீவனும் உருண்டு, புரண்டு விளையாடிக் கொண்டு... இன்னும் கொஞ்ச நாளில் வெளியுலகைக் காண ஆவலாய்க் காத்துக் கொண்டிருக்கிறதே!'

'அய்யோ... விஷ்வஜித் பொய்யனா...?'

'நம்பிக்கைத் துரோகியா...?'

சமீபமாய் நடந்த நிகழ்ச்சி ஒன்று அவள் கண்ணில் மின்னியது.

ஒரு நாள் இரவு விஷ்வஜித் நேரத்தோடு வீட்டிற்கு வந்து... அவனறையில் கட்டிலில் உல்லாசமாய்ப் படுத்துக் கொண்டு... ஏதோ போட்டோவிற்கு முத்தமிட்டுக் கொண்டிருந்ததை... கோவிலுக்குச் சென்று திரும்பிய ஜோஷிதா கண்டு விட்டாள்.

அவள் கண்டுவிட்டதை உணர்ந்து மெத்தைக்கடியில் எதையோ திணித்தான்.

'என்ன?' என்று கேட்டதற்கு மெத்தை அடியில் இருந்த டைரியை எடுத்து... பக்கத்தைப் புரட்டி... அவளைப்பற்றி அவன் எழுதிய கவிதைக்கு முத்தமிட்டதாய்க் கூறினான்.

அவன் முகத்தில் அன்று பெரும் பொய்யைக் கண்டாள்.

அவன் அந்த சூழ்நிலையை மாற்ற... அவளை இழுத்து, இறுக்கி, முத்தமிட... அப்போதிருந்த காதலிலும், காமத்திலும் அந்த நிகழ்வைச் சுத்தமாய் மறந்து விட்டாள்.

விஷ்வாவை எரிக்கும் கண்களோடு நோக்கினாள், ஜோஷிதா.

''விஷ்வா... தாரிகா வளைகாப்புக்கு வந்தப்போ... நான் உங்கள் மேல் வழுக்கி விழுந்தது. நீங்கள் என்னை அணைத்துக் கொண்டது என போட்டோ எடுத்துக் கொண்டீர்களா...?...

ஈஸ்வர் சொல்வது நிஜம்தானா? பொய் மட்டும் சொல்லக்கூடாது. உங்க பிள்ளை மேல் ஆணையா...'' என்று வயிற்றுப் பிள்ளை மேல் ஆணையிட்டுக் கேட்க...

விஷ்வஜித் மறுக்க முடியாமல் மெல்ல விஷயத்தைத் தயங்கித் தயங்கிக் கூறினான்.

''ஜோஷிதா... என் போட்டோகிராபர் நண்பன் படம் எடுத்தான் தான்! ஆனால், அந்த போட்டோ எப்படி விளம்பரப்படத்தில் வந்ததென்று எனக்குத் தெரியாது! உன் திருமணம் நிற்க சத்தியமா நான் காரணமில்லே! என்னை நம்பு! என்னைக் குற்றவாளி போல பார்க்காதே, ஜோஷிம்மா!''

விஷ்வஜித் கெஞ்சலோடு சொன்னான்.

''நான் நம்பமாட்டேன்! அன்று நான் ஈஸ்வர் பெங்களூரில் வேலை பார்க்கிறார் என்று சொன்னதும்... எனக்கே தெரியாமல் என்னோடு எடுத்துக் கொண்ட போட்டோவைப் பயன்படுத்தி... ஈஸ்வருக்கும், எனக்கும் நடக்க இருந்த திருமணத்தை நிறுத்தினீங்க, சரியா?''

ஜோஷிதா மிதமிஞ்சிய கோபத்தோடு கேட்டாள்.

''உன் திருமணம் நின்றது எனக்குத் தெரியாது, ஜோஷிம்மா!''

''நான் உங்களை நம்பமாட்டேன்! நீங்க ஒரு கயவன்! நீங்க ஒரு கள்வன்! களவு வேலை செய்து என் திருமணத்தை நிறுத்தி...''

அவள் மேலே பேச முடியாமல் இடைப்புகுந்தான்.

''ப்ளீஸ் என்னை நம்பும்மா! போட்டோ கிராபர் நண்பனோடு, இன்னொரு நண்பனும் இருந்தான்!...

அவன் விளம்பரத்துறையைச் சார்ந்தவன்! பெங்களூருவில் விளம்பரக் கம்பெனி வைத்திருக்கிறான்!

இது அவன் செய்த காரியமாகத்தான் இருக்கும்! இரு. அந்த மடையனைக் கேட்கிறேன்!''

விஷ்வஜித் செல்போனை எடுத்தான்.

''ஒவ்வொரு உண்மையா வருது. இல்லையா?''

''என்ன சொல்றே, ஜோஷிம்மா?'' அவன் அதிர...

''அந்த நண்பனோட சேர்ந்துட்டு... நீங்க ஆசைப்பட்டது போலவே என்னை அடைஞ்சிட்டீங்க, இல்லையா?''

''ஏய் முட்டாள் மாதிரி பேசாதே! எனக்கும், அந்த விளம்பரத்துக்கும் சம்பந்தமே இல்லை! அப்படி ஒரு விளம்பரம் பெங்களூருவில் வைக்கப்பட்டதே எனக்குத் தெரியாது. தெரியுமா?''

''இனி ஒரு நிமிடம் உங்களோட வாழ மாட்டேன்!''

''ஏய் ஜோஷிதா.... எதையுமே சிந்தித்துப் பார்க்க மாட்டாயா? என்னை நம்புடா, ஜோஷிதா! உன்னை நான் மீண்டும் கண்ட போது உனக்குத் திருமணம் ஆனதா... ஆகவில்லையா என்றே தெரியாது!''

விஷ்வஜித் கெஞ்சலோடு சொல்ல... அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளாமல் ஜோஷிதா வேக வேகமாய் பங்களாவை நோக்கி நடந்தாள்.

அவன் பெங்களூரு நண்பனைத் தொடர்பு கொள்ள அவகாசம் தராமல் அவள் நடக்கவும்.... அவனும் பின்னாலேயே கெஞ்சிக் கொண்டு வந்தான்.

''ஜோஷி... இதைப் பெரிசுபடுத்தாதே! நான் உண்மையானாவன்!''

''இனி ஒரு நொடி ஒரு நிமிடம் உங்களோட வாழமாட்டேன்!''

''என்ன சொல்றே, ஜோஷிம்மா?''

''நான் தமிழ்நாட்டுக்குப் போகப்போறேன்!''

''ஐயோ... அப்படியெல்லாம் பேசாதே. உன்னைப் பிரிந்து என்னால் வாழவே முடியாது. ப்ளீஸ்... ப்ளீஸ்... அப்படி ஒரு தண்டனையை மட்டும் எனக்குக் கொடுத்துடாதே!...

உனக்குத் தமிழ்நாட்டுல யார் இருக்கா?...

நீயும், உன் வயிற்றில் வளரும் என் குழந்தையும் அநாதையாக விடமாட்டேன்!''

''குழந்தை பிறந்ததும் சொல்லிவிடறேன். வந்து எடுத்துட்டுப் போயிடுங்க! ஒரு நம்பிக்கைத் துரோகியோட குழந்தையை நானுமே வளர்க்கப் பிரியப்படலே!''

ஜோஷிதாவின் எரிமலையான வார்த்தைகளின் வீரியம் தாங்காமல் துடிதுடித்துப் போனான் விஷ்வஜித்!

25

ரவிவர்மா, சிவரஞ்சனி, தாரிகா, அவளின் பெற்றோர் அனைவரும் விஷ்வஜித்தின் சொந்தத்தில் ஒரு விழா இருக்க, அங்கே புறப்பட்டுச் சென்றிருந்தனர்.

அந்த சந்தர்ப்பம் ஜோஷிதாவிற்குப் பயனுள்ளதாய் அமைந்து விட்டது.

''ப்ளீஸ்... ப்ளீஸ்.. ஜோஷிம்மா.... என்னை விட்டுப் போகாதே! நீ இல்லேன்னா செத்துடுவேன், கண்மணி!''

''உங்களோட வாழ்ந்தால் நான் செத்துப்போவேன்! அது உங்களுக்குப் பிடிக்குமா?''

ஜோஷிதா தீயாய் வார்த்தைகளை உபயோகிக்கவும்.... அதன் சூடு தாங்க முடியாமல் துடிதுடித்துப்போனான், விஷ்வஜித்.

''என்னை உயிரோடு கொல்லாதே, ஜோஷிம்மா!''

''என்னை நீங்க கொல்லாதீங்க! உங்களோட பேசவோ, உங்களைப் பார்க்கவோ எனக்குப் பிடிக்கல! தூரப்போங்க!''

''ஜோஷி... ஜோ... உன் வார்த்தைகளின் வீரியத்தை என்னால் தாங்க முடியவில்லை!''

அவன் அவளை அருகில் சென்று அணைத்துக்கொள்ள...

''விடுங்க... விடுங்க... இந்த மன்மத மயக்கத்துக்கெல்லாம் ஆட்படற பழைய ஜோஷிதா நானில்லே! நான் போகத்தான் போறேன்!''

என்றவள் அவனிடமிருந்து திமிறி சிறு பெட்டியைத் திறந்து சேலைகளை அடுக்கினாள்.

விஷ்வஜித்துக்கு என்ன செய்வது, எப்படி அவளைத் தடுப்பது எனத் தெரியாமல் போக... உடனே அஸ்வினுக்கு போன் செய்தான்.

அடுத்த நான்காவது நிமிடம் கெஸ்ட் ஹவுஸிலிருந்து புறப்பட்டு வந்து சேர்ந்தான், அஸ்வின்.

''உன்னை எவ்வளவோ புத்திசாலின்னு நினைத்தேன்! இப்படி நடந்துக்கறீயே, ஜோஷிதா! இது உனக்கே நல்லாயிருக்கா...? ஏன் மடச்சி மாதிரி நடந்துக்கறே? இது போல அன்பான, நேசமான கணவனைத் தவிக்க விட்டுட்டுப் போகலாமா?''

அஸ்வின் கோபமாய்க் கேட்க...

''எல்லாம் நடிப்பு! நினைச்சதை நடத்திப் பழகியவர்! என் விஷயத்திலும் வெற்றியே கண்டுட்டார்! எல்லாம் பணத்திமிர்! பணக்காரர்களுக்கே உள்ள புத்தி!''

''ஜோஷிதா.... நீ போகத்தான் போறீயா?''

''ஆமா!''

''எதையும் தீர விசாரிக்காமல் இப்படித்தான் முடிவெடுப்பாயா? பெங்களூரு நண்பனுக்கு போன் செய்து விஷயத்தைத் தெரிஞ்சிட்டு கிளம்பு!''

"அவர் உங்கள் நண்பராச்சே! உண்மையைச் சொல்வாரா?"

ஜோஷிதா படிகளில் தடதடவென வேகமாய் இறங்க... விஷ்வஜித் கவலையோடு அருகில் ஓடினான்.

"ஜோஷி.... ஜோஷி... மெல்லடா!" என்று சொல்லும் போதே அவள் கால் வழுக்கிச் சரியப் போக...

விஷ்வஜித் தாவி அவளைப் பிடித்து நிறுத்தினான்.

"என்னைக் காத்துக் கொள்ள எனக்குத் தெரியும்! எனக்கு யார் தயவும் வேண்டாம்!"

ஜோஷிதா முகத்தில் அடித்தாற் போலப் பேசினாள்.

"ஜோஷிதா.... போகாதேம்மா! என்னைப் புரிந்து கொள், ஜோஷிம்மா!"

விஷ்வஜித் அவள் முன்பு மறித்தாற் போல நின்று அவள் கையைக் கெட்டியாய்ப் பற்ற...

அவள் ஆத்திரத்தோடு அந்தக் கையை உதறி... கார் அருகே சென்றாள்.

"அஸ்வின் அத்தான்.... என்னை பஸ் ஸ்டேண்ட் வரை வந்து இறக்கி விடுங்க!"

ஜோஷிதா அஸ்வினைப் பார்த்துக் கேட்டாள்.

"ஏய் விஷ்வஜித்... நீ உள்ள போடா! இவள் போகட்டும்! எக்கேடோ கெட்டு... உன் அருமை தெரிந்து வரட்டும்!"

சொன்ன அஸ்வின் கார் கதவைத் திறந்து அமர்ந்தான்.

ஜோஷிதா நீர் நிரம்பிய கண்களுடன் விஷ்வஜித்தை ஆழ நோக்கி விட்டு... காரில் ஏறி அமர்ந்தாள்!

கார் புறப்பட்டது!

உடனே விஷ்வஜித் பெங்களூரு நண்பனுக்கு போன் செய்து...

"ஏய் இடியட்... அந்த போட்டோவைப் பயன்படுத்தி, விளம்பரம் செய்து, நீ காசு சம்பாதித்து, என் வாழ்க்கையையே கெடுத்துட்டையே பாவி!"

விஷ்வஜித் கர்ஜிக்க...

"எந்த போட்டோடா...?" என்று கேட்ட எதிர்முனை நண்பனுக்கு உடனே விடை கிடைத்து விட்டது.

"விஷ்வா.... சாரிடா... உன் திருமணத்துக்கு வந்த போதே இதைச் சொல்லணும்னு நினைத்தேன்! தேவையில்லாமல் ஏன் இதைச் சொல்லிட்டுன்னு வந்துட்டேன்! என்ன விஷயம் விஷ்வா?"

விஷ்வா நடந்ததைச் சுருக்கமாய்க் கூறினான்.

"ஸாரி... ஸாரி. அந்த சர்டிங், சூட்டிங் கம்பெனியோட விளம்பரத்துக்கு எதை விளம்பரப்படுத்துறதுன்னு முழிச்சுட்டு இருந்தப்போ... சடார்ன்னு ரமேஷ்கிட்ட வாங்கிட்டு வந்த போட்டோ ஞாபகத்தில் வந்தது. எனக்கும் அதில் ஒவ்வொரு பிரிண்ட் போட்டுக் கொடுத்தான்!...

அந்த விளம்பரத்திற்கு நீயும், ஜோஷிதாவும் இருந்த போட்டோ பெட்டரா வரும்ன்னு நினைத்து விளம்பரப் படுத்தினேன்!...

அந்த விளம்பரப் பலகை வைத்த அன்றே ஏகப்பட்ட போன்கால் எனக்கு வந்தது!

உன் வியாபாரமும், உனது 'விஷ்வா ஏர்லைன்ஸ்' என்ற சிறுரக விமான சேவையும் இங்கே புகழ்பெற்றது இல்லையா? உன்னைத் தெரிந்தவர்கள் சிலர் வியந்து அவரா.. அவரா விளம்பரப் படத்தில் நடித்தார் என்று கேட்டனர். சில விளம்பர கம்பெனி நிறுவனங்களும் தங்கள் விளம்பரத்திற்கு உன்னை அணுகலாமா என்று கேட்டனர்.

எல்லோரிடமும் மறுத்துக் கூறிவிட்டு.... உன் புகழைக் கெடுக்க மனமில்லாமல் அன்றே வைத்த இடங்களில் எல்லாம் இருந்த விளம்பரப் பலகையை அகற்றத் துரித நடவடிக்கை எடுத்தேன்.

அந்த விளம்பரப் பலகையால் தான் ஜோஷிதா - ஈஸ்வர் திருமணம் நின்றதுன்னு தெரியாது!

இப்போ உன் வாழ்க்கையை இப்படி புரட்டிப்போட்டு வேடிக்கை பார்க்கும்ன்னு நான் கனவில் கூட நினைக் கலே, விஷ்வா!''

''உனக்கு போட்டோவைக் கொடுத்த ரமேஷ் பயலை உண்டு இல்லேன்னு ஆக்கறேன் பார்!''

''விஷ்வஜித்தோட பர்சனல்! நான் கொடுக்கமாட் டேன்! நீயோ விளம்பரத் துறையைச்சார்ந்தவன். ஏதாவது ஒரு சந்தர்ப்பத்துல பயன்படுத்தினாலும் பயன்படுத்து வாய்! நான் கொடுக்க முடியாது என்று கூறினான், ரமேஷ்! நான் தான் கெஞ்சிக் கூத்தாடி வாங்கிட்டு வந்தேன்! அவன் மேல் எந்த தப்பும் இல்லே, விஷ்வா!''

நண்பன் கெஞ்சலோடு கூறவும்... ஆத்திரமிகுதியில் போனை கட் செய்தான், விஷ்வஜித்.

26

பஸ் ஸ்டாண்ட் வந்தது... ஜோஷிதா காரை விட்டு இறங்கினாள்.

''ஜோஷிதா... சொன்னால் கேளும்மா. விஷ்வா, உன் மாமனார், மாமியார் உன் பிரிவைத் தாங்க மாட்டார்கள்! அந்த வயதானவர்களை இப்படி வருத்தப்பட வைக்கலாமா?''

''என்னால் அவரின் துரோகத்தை மன்னித்துச் செயற்கை யாய் வாழ முடியாது! ப்ளீஸ்... என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்!

''இந்த நிகழ்ச்சியே விஷ்வாவுக்குத் தெரியாது எனும் போது... விஷ்வா எங்கே துரோகம் செய்தான்?''

''அம்னீஷியா கியூர் ஆன பிறகு அவர் என்னிடம் இந்த போட்டோ விஷயத்தைச் சொல்லியிருக்கலாம், இல்லையா?'' ஜோஷிதா கேட்டாள்.

''சொல்லியிருக்கலாம் தான்! மடையன்... உனக்குத் தெரிந் தால் அவனை நீ தப்பாக எடுத்துக் கொள்வாயோ என்று கூட சொல்லாமல் மறைத்திருக்கலாம், இல்லையா?''

''தப்புதானே, அஸ்வின் அத்தான்?''

''அவனும் இதை ரைட்டுன்னு வாதாடலையே! தப் புன்னு தானே சொல்லி... உன்னிடம் தன்னை மன்னிக் கும்படி கெஞ்சினான்!...

மனச்சாட்சியே இல்லாமல்... இப்படி கட்டிய கணவனைத் தவிக்க விட்டுட்டு வந்துட்டீயே!...

கொஞ்சமாச்சும் விஷ்வாவின் நிலைமையை நினைத் தாயா? அவன் ஏதாவது விபரீத முடிவு எடுத்துடுவா னோன்னு எனக்குப் பயமா இருக்கு!''

அஸ்வின் சொல்லி வாய் மூடவும்... அடுத்த நொடி அவனின் சொல்போன் சிணுங்கியது.

அதை ஆன் செய்து காதில் வைத்தவன்...

''என்ன? என்ன சொல்றே, தாரிகா? விஷ்வாவுக்கு ஆக்ஸிடெண்ட் ஆயிடிச்சா? ஐயோ...? எப்படி...? ஏன்...? கோபமா வண்டியை எடுத்துட்டு வெளியே போனவன்... அடுத்த ரெண்டாவது நிமிடத்திலே... பங்களா வாசலி லேயே ஆக்ஸிடெண்ட் ஆகி... இதோ... இதோ... வரேன்! டாக்டர் வந்துட்டாரா...? பங்களாவிலே ட்ரீட்மெண்ட் நடக்குதா...?'' அஸ்வின் போனை ஆன் செய்ததும்...

"ஐயோ... விஷ்வா..." என்று வீறிட்டு அழுதாள், ஜோஷிதா.

"அஸ்வின் அத்தான்... நான் உடனே என் விஷ்வாவைப் பார்க்கணும்! என்னைக் கூட்டிட்டுப் போங்க!"

ஜோஷிதா வீறிட்டழுதாள்.

"நீ எங்கோ கிளம்பறதா சொன்னியே! நீ கிளம்பும்மா! விஷ்வாவைத் தவிக்கவிட்டுட்டு வந்த உனக்கெதுக்கு அவன் மேல் பெரிய அக்கறை!"

"வார்த்தையால கொல்றீங்களே!... என் கணவர்கிட்ட என்னைக் கூட்டிட்டுப் போங்க ப்ளீஸ்..."

"உன்னால் தான் இந்த விபத்தே ஏற்பட்டது! ராட்சசி மாதிரி அவன் கெஞ்சக் கெஞ்ச கேட்காமல் வந்துட்டு... இப்போ உனக்கெதுக்கு பாசம் பொங்குது?"

"அஸ்வின் அத்தான்... ப்ளீஸ்..." அவள் அவன் கைப்பற்றிக் கதற...

அடுத்த நிமிடம் ஜோஷிதாவை காரில் ஏற்றிக் கொண்டு பங்களாவை நோக்கி வேகமாய்ச் சென்றான், அஸ்வின்.

"அஸ்வின் அத்தான்.... என் விஷ்வாவுக்கு எதுவும் ஆகியிருக்காது, இல்லையா?"

"என்னால் இப்போ எதுவும் செல்ல முடியாது! நேரில் போய் அவனுடைய கண்டிஷனைப் பார்த்துட்டுதான் எதுவும் சொல்ல முடியும்!"

"அவருக்கு மட்டும் ஏதாவது ஆகியிருந்தால் நான் உயிரோடே இருக்க மாட்டேன்! அவர் கூடவே ரஜபுத்திரப் பெண்களைப் போல உடன்கட்டை ஏறிடுவேன்."

"அவன் மேல் இவ்வளவு காதலை, நேசத்தை வைத்திருப்பவள்... ஏன் அவனைப் புரிந்து கொள்ளாமல் கஷ்டப்படுத்திட்டு வந்தாய்?"

அவன் கூற... சேலைத் தலைப்பால் வாய் பொத்திக் குலுங்கினாள்.

கார் நின்றவுடன் அந்தப் பெரிய வயிற்றைத் தூக்கிக் கொண்டு ஓடினாள், ஜோஷிதா.

"விஷ்வா... விஷ்வா... என் உயிரே..." என்று அழுது கொண்டு ஜோஷிதா ஓடி வந்தாள்.

பங்களாவில் இருந்த தாரிகா அஸ்வினின் பேச்சு புரியாமல் முழித்துக் கொண்டிருக்க...

"என் விஷ்வா எங்கே...?"

என்று அழுகையோடு கேட்ட ஜோஷிதாவிற்கு -

"மாடியில் இருக்கார்!"

தாரிகா பதில் சொல்லிவிட்டு, அவளின் அழுகை புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தாழ்போடாமல் மூடியிருந்த கதவை வேகமாய்த் தள்ளி ஜோஷிதா உள்ளே ஓட...

அங்கே விஷ்வஜித் முகம் வாடிப் படுத்திருந்தான்.

தாரிகா, விஷ்வாவின் மூலம், ஜோஷிதா அவனிடம் கோபித்துக் கொண்டு சென்றதை அறிந்தாள்.

அவளை பஸ் ஏற்றிவிட அஸ்வின் சென்றான் என்பதைத் தெரிந்து கொண்டு... அவள் போவதை நிறுத்துவதற்காக அஸ்வினுக்கு போன் செய்தாள், தாரிகா.

அந்த போனை அஸ்வின் பயன்படுத்திக் கொண்டான்.

'விஷ்வஜித்துக்கு ஆக்ஸிடெண்ட்' என்று கதை கட்ட... அடுத்த நொடி மனம் மாறி ஜோஷிதா கிளம்புவாள் என்று அஸ்வினே எதிர்பார்க்கவில்லை!

இந்த நல்ல திருப்பத்தை அவனும் வரவேற்றுச் சும்மா யிருந்து விட்டான்!

ஜோஷிதாவைக் கண்ட விஷ்வஜித் விழிவிரியப் பார்த்தான்!

அடுத்த நொடி படுக்கையிலிருந்து எழுந்து நின்றான்.

"ஜோ... ஜோஷி..."

ஆசையோடு, மிதமிஞ்சிய காதலோடு கை விரிக்க... அவளோ... விரித்த கைகளுக்குள் வந்து அவனை அணைத்துக் கொள்ளாமல்... ஆத்திரத்தோடு அருகில் வந்து கத்தினாள்.

"அப்போ... அப்போ... உங்களுக்கு ஆக்ஸிடெண்ட்ன்னு அஸ்வின் அத்தான் சொன்னது பொய்யா? நீங்கதான் அவரை அப்படிப் பொய் சொல்லச் சொன்னீங்களா?..."

"ராஸ்கல்... இடியட்... ஏன்டா என்னை இப்படி இம்சிக்கிறே?"

ஜோஷிதா பலங்கொண்ட மட்டும் அவன் நெஞ்சில் இரு கைகளாலும் குத்தினாள்.

சட்டையைக் கொத்தாய்ப் பிடித்துப் பிய்த்தாள்.

அவன் தலைமுடியைப் பிடித்து ஆட்டினாள்.

"ஜோ ஷி... ஜோஷிம்மா... வலிக்குதுடா! விடுடா! இப்போ இன்னொரு நண்பன் பொய் சொல்லி... என்னை உன்னிடம் மாட்டிவிட்டுட்டான்! விடுடாம்மா! வலி தாங்க முடியலே! அப்புறம் வலி தாங்காமல் செத்துடப்போறேன், கண்மணி."

விஷ்வஜித் கூற...

"விஷ்வா.... விஷ்வா... என்... உயிரே... ஐ லவ் யூடா...! ஐ லைக் யூடா, ராட்சசா!"

ஜோஷிதா அழுகையோடு கூற...

விஷ்வஜித் அவளை ஆசையோடு அணைத்தான்! கண்ணீர்ச் சரம் தொடுக்கும் பூ விழிகளில் அழுந்த முத்தமிட்டான்! அவளின் மேனி நொறுங்க இழுத்து இறுக்கிக் கொண்டான்! இனி அவர்களிடையே பிரிவே இருக்காது என்பது போல!

* * *

"உன்னைக் கண்டதே வரமல்லவா...!"

*

உன்னைக் கண்டதே வரமல்லவா...!

ஆர்.மகேஸ்வரி